www.padippakam.com

நவம்பர்
2004
ரூ.15

# புதிய கோடாங்கி



## ரூ.25 கோடி அன்பளிப்பு

படிப்பகம்

www.padippakam.com

# தம்பு களத்து மேடு

அரும்பாவூர் சி. கலைநாதன்

வயல் கோழிகளின் ஓயாத சத்தம்
தடுத்திடும் மாட்டுச் சலங்கையொலி.
அண்ணாந்து பார்த்தால் சூரியன் மணி சொல்லும்
நிலா சொல்லுமா?
கலப்பை சுமந்த நல்லானுக்கு
மாடுகள் வழிகாட்டி.
சலங்கையொலி நிற்க
வந்துவிடும் பெருமாள் தம்பு களம்.
மாடுகள் ரெண்டும் தூங்காணி மரத்திற்கொன்றாய்.

ஏழு வயலுக்கும் ஏரித் தண்ணீர் வீதம்
காரு காருக்கு கருக்கா நெல்லு கூலி.
வரப்பில் நடந்து வாமடை திருப்பி
நண்டு வளையடைத்து அண்டத் தளை கட்டி
மேச்சரவு பாய்ந்து கீச்சரவு பாயணும்.
கீச்சரவு பாயும்போது கொக்கரக்கோ!

இங்கேயும் கூவியது
சாணம் தெளித்து வாசல் கூட்டி
பனி நனையும் வேலிக்காத்தான் விறகெடுத்து
அடுப்பில் வைத்த புகையால்
கண்சிவக்கும்
ரேசனில் வாங்கிய செகப்பரிசி
உலை போட்டாள் ஊறவைத்து.

'அடுப்பை அணையாமல் பாத்துக்கப்பா' - பெரியவனுடன்
பட்டி சாணங் குப்பையெல்லாம்
கூட்டியள்ளிக் கொட்டினாள்.
பெரிய கோனார் புஞ்சையிலே
பறிச் செடுத்த பண்ணக்கீரை
புளி சேத்துக் கடஞ்செடுத்தா
பொழுதெல்லாம் ருசி மணக்கும்.

'பத்திரமா பாத்துக்கப்பா சின்னவன
அடுப்படியில் சோறிருக்கு ஆறினதும் சாப்பிடுங்க'
- நடுப்பயலுக்கு.

"பள்ளிக்கூடம் போகுமுன்னே செய்துவிடு
கலயத்துல வடிச்ச கஞ்சி நீர் கலந்து வச்சிருக்கேன்.
சோளத்தவிடு - சின்னக் குதிர் மேல் குடைக்குள்ள.
ஒரு புடிச்ச அள்ளிப் போட்டு
குடியோ குடியோ கூச்சு-ன்னு; ஓடிவரும்.
அடுத்தவ பன்னிய அண்ட விடாதப்பா"
- பெரியவனுக்கு
மந்திக் கவுண்டர் காடு மணியாச்சு களையெடுக்க
மாமனுக்கு சோறெடுத்தாள் மறுகையில் 'களக்காடு'
களவெட்டுக் காலமுன்னா
ரொடெல்லாம் செனம் போவும்
காடெல்லாம் கலகலக்கும்.

தம்பு களத்தோரம் மாமன்;
ஏம்புள்ள இன்னேரம்?
அம்மாசி மாரிமுத்து கருப்பையா கந்தசாமி
எல்லாரும் போயாச்சு - ஏரு புடிச்சிருப்பான்
ஏசிடுவான் சின்னப் பண்ண
போணியைக் கொடுத்துவிட்டு பறந்துவிட்டாள் செவகாமி

அண்ணாந்து பார்த்தான் அரைநேரம் போயாச்சு
முழங்காலுச் சேத்தினிலே முன்ஏரு போகையிலே
மோளியைத் திருப்பாமல் முறையாக் ஓட்ட வேணும்,
மாட்டின் கால்போனால் மனுசனுக்கு உசிர் போகும்
'வெரட்டி ஓட்டுங்கடா!'
வரப்பில் சின்னப்பண்ணை குரல் நடக்கும்.

அவிழ்த்துவிட்ட மாட்டை அயினான் குட்டையிலே
கழுவிக்குளிப்பாட்டி கரையோரம் மேயவிட்டா
காலையில் பாதிச்சோறு மதியானம் மீதிச்சோறு
கருப்பையா கந்தசாமி மத்தவங்க பக்கத்தில
வேட்டி துண்டெல்லாம் வேலியில தூங்கையில
வேப்ப மரநிழலில் மனுசரெல்லாம் அரையுறக்கம்
மாலையில்
களத்துமேட்டுக் கொட்டாயோரம் கலப்பையெல்லாம்
படுத்துறங்கும்
மாடுகள் ரெண்டுரெண்டா மனுசரெல்லாம் தொடர
நல்லானுக்கோர் கண்ணெல்லாம் எரிச்சல்
தலையெல்லாம் மதமதப்பு
ஆடி அசந்து வீடு வந்து சேந்தாச்சு

'என்ன மாமா உன் கண்ணெல்லாம் செவந்திருக்கு
காலெல்லாம் வீக்கம்
அக்கம்பக்கம் ஓடி அசலாரைக் கூட்டி வந்து
வேப்பெண்ணெய் காய்ச்சி
உள்ளங்காலும் உச்சிமுனையும்
வெரசாகத் தேய்ச்சி விட்டாள்.
ராவெல்லாம் அனத்தல்
விடிந்தபோதும் வீக்கம்!
ஆஸ்பத்திரி போகலாமா
அம்மன் கோயில் போகலாமா?
ஊரெல்லாம் ஒரே பேச்சு!
சொரக்கா மாரியாயி, சும்மா கெட புள்ள
ஊத ஓடம்பத்தூக்கி வேப்பிலையில் போடு
வேம்பு கூரையில சொருவை - வீட்டைச்
சுத்தப்பத்தமாக்கி வை.
மாரியாயிக்கு வெளக்குப் போடு - ரூபா ஒன்ணோகாலு'
மஞ்சத்துணியில் கத்திவை - வர்ர திருநாளுக்கு
அலகு குத்து அக்கினிச் சட்டி யேந்து.

கட்டிய மாடு பட்டியில் சளவன் குட்டி சந்தில்
பிள்ளைகள் மூவரும் வீதியில்
நடுவீட்டில் படுத்திருக்கும் நல்லான் மனசில்
நேத்து வரப்பில் நடக்கையில்
காலில் சுருக்கென்றது முள்ளா பாம்பா?

களவெட்டுக் கூலியில் கடையில் குருணை வாங்கி
கஞ்சி காச்ச நுழைந்தவள்
அலறித் துடித்தாள் - அவன்
அனத்தல் கேட்கவில்லை, அக்கம் பக்கம்
ஆத்தா அழைத்துக் கொண்டான்
அக்கம் பக்கத்தூரு ஆளுகூட வைக்கவில்லை
மேளம் அடிக்கவில்லை ஊதுவத்தி ஏத்தவில்லை
ஒப்பாரி வைத்தழுக ஒருவருக்கும் புரியவில்லை
பொழுது போகுமுன்னே போய்ச் சேர்ந்தான் ஆத்தோரம்
ஆத்தோரம் இடுகாடு அவசரமாய்ப் புதைத்தார்கள்

பதிமூன்று வயது மூத்தவனுக்கு
புத்தகச்சுமை நீங்கும்
களத்துமேடு
பெரிய தம்பிக்கு காத்திருக்கு.

படிப்பகம்

www.padippakam.com

புதிய கோடாங்கி

மலர் 4 - இதழ் 5
நவம்பர்- 2004

மாத இதழ்

*ஆசிரியர்*
ஆட்ரி ஜேனட் ஜோசப்

*முகப்பு ஓவியம்*
சந்ரு

*இதழ் வடிவமைப்பு*
யாக்கன்

*சந்தா*
ஆண்டுக் கட்டணம் - ரூ. 150/-
வாழ்நாள் கட்டணம்.- ரூ. 1,000/-

அயல் நாட்டினருக்கு
தனி இதழ் **US $ 2**

ஆண்டுக் கட்டணம்
**US $ 20**

*விளம்பரம்*
அரைப்பக்கம் ரூ. 5,000/-
முழுப்பக்கம் ரூ. 10,000/-
பின் அட்டை ரூ. 20,000/-

*தொடர்பு முகவரி*
705, 101-ஆவது தெரு
15-ஆவது செக்டர்
கே. கே. நகர்
சென்னை - 600 078.
Mobile : 98404 - 49204
**kodangi@hotmail.com**

## தலையங்கம்

திருக்குலம் சிந்தனையாளர்கள் மையம் சார்பாக 16.10.2004 அன்று இமேஜ் அரங்கத்தில் "பத்தாவது ஐந்தாண்டு திட்ட ஆய்வு" குறித்த கருத்தரங்கம் நடைபெற்றது. இதை சட்டமன்ற உறுப்பினர் வள்ளல்பெருமாள் ஒருங்கிணைத்தார். இதில் மத்திய நிதியமைச்சர் ப. சிதம்பரம் சிறப்பு விருந்தினராக வந்திருந்தார். மிசோரம் மாநிலத்தின் முன்னாள் ஆளுநர் பத்மநாபன் அவர்கள் தலைமை ஏற்க, கருப்பன், செல்லப்பன், சிவகாமி, கிறித்துதாஸ் காந்தி, பால்ராஜ், கண்ணகி போன்ற முன்னாள் இன்னாள் இந்திய ஆட்சிப் பணியாளர்களும், சட்டமன்ற உறுப்பினர் ஜெயக்குமார், நீதிபதி சாமித்துரை (ஓய்வு), பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் முத்துக்குமாரசாமி, Fr. மனு போன்ற பலரும், எஸ்.சி.- எஸ்.டி. அலுவலர் நலச்சங்கப் பிரதிநிதிகளும் சிறப்புரையாற்றினார்கள்.

இங்ஙனம் தமிழக தலித்துகளின் கோரிக்கைகளை தனியான ஒரு அமர்வில் மத்திய நிதியமைச்சர் கேட்பது ஒரு வரலாற்று நிகழ்வு என கருதப்படுகிறது. இக்கூட்ட அரங்கில் மத்திய அமைச்சரிடம் அளிக்கப்பட்ட கோரிக்கைகளும், நிறைவேற்றுவதாக கூறப்பட்ட உறுதிமொழியும் பிரசுரமாகிறது. அதுபோல் சிவகாமி வாசித்த இரண்டு கட்டுரைகளும் மொழியாக்கம் செய்யப்பட்டு வெளியாகியுள்ளன.

இக்கோரிக்கைகளில் பல புதிய கோடாங்கி தொடர்ந்து வலியுறுத்தி வந்தவை என்பது வாசிப்பில் புரியும். குறிப்பாக பஞ்சமி நில மீட்பு, சிறப்புக்கூறுத் திட்டம், தலித்துகளுக்கு தனி ஊராட்சிகள் போன்றவை. உறுதிமொழியை மட்டும் நம்பிக்கொண்டு காத்திராமல் அவை செயல்வடிவம் பெற தொடர்ந்து போராடுவோம்.

புதிய கோடாங்கியும் தலித் பன்னாட்டு கல்வி மய்யமும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து தேசிய அளவிலான இரு கருத்தரங்குகளை நடத்தவிருக்கின்றன. டிசம்பர் 20, 21 தேதிகளில் 'மின்னாட்சியில் பெண்களின் பங்கு' என்ற இரு நாள் கருத்தரங்கும், ஜனவரி 6, 7, 8, 2005 தேதிகளில் 'தலித் உரிமைகள் - பாதுகாப்பு எதிர்நோக்கும் சவால்களும் வாய்ப்புகளும்' என்ற தலைப்பில் மூன்று நாள் கருத்தரங்கும் நடக்கவிருக்கிறது.

செப்டம்பர் 23, 24 வேலூர் மாவட்டம் ஏலகிரி மலையில் வாழும் மலையாளி பழங்குடியினரின் வாய்மொழிப் பதிவு மேற்கொள்ளப்பட்டது. நவம்பர் 24, 25-இல் வேலூர் மாவட்டம் ஜம்னா மாத்தூர் மலையில் வாழும் மலையாளி பழங்குடிகளின் வாய்மொழிப்பதிவு மேற்கொள்ளப்படவிருக்கிறது. இப்பதிவுகள் முடிந்ததும் ஒட்டுமொத்தமாக வெளியிடப்படும்.

படிப்பகம்

திருவள்ளூர், ரெம்பலூர் மாவட்டம், வி. களத்தூர் மற்றும் ராணிப்பேட்டையில் புதிய கோடாங்கி பயிற்சி முகாம்களை நடத்தியது.

பல்வேறு மாவட்டங்களிலும் புதிய கோடாங்கி வாசகர் வட்டம் உருவாகிக் கொண்டிருக்கும் தருணத்தில் வாசகர் வட்டங்களின் செயல்பாடுகள் குறித்து கீழ்க்கண்ட சில வழிமுறைகளை கடைப் பிடிக்கலாம் என்று எண்ணுகிறோம்.

- ஒவ்வொரு மாதமும் வாசகர் வட்டம் கூட்டப்பட்டு, புதிய கோடாங்கியில் வரும் கட்டுரைகளையும் மற்றும் படைப்புகளையும் விவாதிக்கலாம்.
- வாசகர் வட்டம் இயங்குகின்ற மாவட்டம், ஒன்றியம், கிராமப் பகுதியில் இளைஞர்களுக்கான எழுச்சி முகாம்களை வாரம் ஒருமுறை நடத்தலாம். இத்தகைய எழுச்சி முகாம்களுக்கு அங்கங்கே வசிக்கும் புதிய கோடாங்கி எழுத்தாளர்களையும் மற்றும் தலித் அறிஞர் பெருமக்களையும் பயன்படுத்திக் கொள்ளலாம்.
- பகுதிவாரியான தலித் மக்களின் பிரச்சினைகளை அட்டவணைப்படுத்தி, புதிய கோடாங்கியில் பதிவு செய்யவும், அப்பிரச்சினைகளுக்கு தற்காலிக 1 மற்றும் நிரந்தரத் தீர்வு காணவும் வழிவகுக்கலாம்.
- அவ்வப் பகுதியில் இயங்கும் அம்பேத்கர் மன்றங்களுடன் இணைந்து இரவுப் பள்ளிகள் நடத்தி, பாட நூல்களுடன் அம்பேத்கர் நூல்களையும், புதிய கோடாங்கி இதழ்களையும் தொடர்ந்து வாசித்து ஆய்வுக்குட் படுத்தலாம்.
- அவரவர் பகுதியில் உள்ள தரிசு மற்றும் பஞ்சமி நிலங்களை கணக்கெடுப்பு செய்து அவற்றை தனியாக பதிவு செய்யலாம். விவசாயக் கூலிகளுக்கான சங்கங்கள் ஏற்படுத்தி நிரந்தர வேலைவாய்ப்புக்கும், முறையான கூலிக்கும் வழிவகுக்கலாம்.
- மாவட்டப் பகுதியில் இயங்கும் வாசகர் வட்டங்கள், ஒன்றிய மற்றும் கிராம அளவில் விரிந்து பரவ நடவடிக்கை எடுக்கலாம்.

  கிராமப் பகுதி மக்களுக்கு கதை, கவிதை மற்றும் கட்டுரை எழுதுவதில் பயிற்சி அளிக்கலாம்.
- அரசு நிறுவனங்களுக்கும், மக்களுக்கும் தொடர்பு பாலமாக விளங்கி, அரசின் திட்டங்கள் முழுமையாக மக்களைச் சென்றடைய நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

முதற்கட்டமாக இத்தகைய பணிகளில் ஏதேனும் ஒன்றையாவது தொடங்கி நடைமுறைப்படுத்த ஆவண செய்யவேண்டும்.

இவற்றை நடைமுறைப்படுத்துவதில் ஏதேனும் சிக்கல்கள் இருப்பின் புதிய கோடாங்கி-க்கு தயக்கமின்றி எழுதலாம்.

www.padippakam.com

# உள்ளே...


| | | |
|---|---|---|
| தலித் மொழி கொச்சையா? | பு. ஜார்ஜ் | 04 |
| பொன்னாங்கன்னி - சிறுகதை | பவானி | 08 |
| பலவந்தக் குடிபெயர்வு | வி. புகழேந்தி | 13 |
| நித்தியமல்லிகை - கவிதை | அரங்க. மல்லிகா | 14 |
| கேள்வி பதில் | முனிமா | 15 |
| இளைஞனே முன்னேறு - கவிதை | ஆ.ரா. இளங்கோ | 16 |
| புதிய பாஞ்சாலி - சிறுகதை | மு. அம்சா | 17 |
| மக்கள் அறியாத அம்பேத்கர் - தொடர் | குடியரசன் | 22 |
| விடியல் - கவிதை | தமிழ்மகன் | 23 |
| தலித் தேசியம் - தொடர் | கௌதம சன்னா | 24 |
| கிராமப் பஞ்சாயத்துக்கள் மூலம் தலித்துகளை அதிகாரப்படுத்துதல் | சிவகாமி | 26 |
| மத்திய நிதியமைச்சருக்கு அளிக்கப்பட்ட கோரிக்கைகள் | வள்ளல் பெருமான் | 30 |
| என்ன சொல்லி நாங்கள் அழ - கவிதை | குருபஞ்சராவ் | 33 |
| ஹைக்கூ | பொன்குமார் | 33 |
| நல்லபாம்பு - சிறுகதை | கா.வ. கன்னியப்பன் | 34 |
| ஆவல் - கவிதை | ஏ.மு. இராதா | 35 |
| சிறப்புக் கூறுத் திட்டம் | சிவகாமி | 36 |
| கணிதம் நம் உடைமை | குடியரசன் | 38 |
| பாரசீக வளைகுடாவிற்கு அப்பால் | பீர்முஹம்மது | 41 |
| பெரியாருக்கு முந்தைய அயோத்திதாஸர் | பெ.சு. மணி | 43 |
| குன்னூத்தி நாயம் - சிறுகதை | மு. ஹரிகிருஷ்ணன் | 44 |
| யாத்திரிகனின் உலகம் - கவிதை | தமிழ்மணவாளன் | 45 |
| ஊழியர் நலச்சங்கச் செய்திகள் | - | 46 |
| வில் கவிதை | தேவதேவன் | 46 |
| அக்டோபர் டயரி | - | 47 |
| அவனவன் என்றால் - கவிதை | அகவி | 48 |
| உடல்மொழி - தொடர் | சிவகாமி | 49 |
| கவிதையெழுதுவதெப்படி? - கவிதை | ராஜா | 52 |
| பக்கத்து இலைக்கு பாயாசம் | மா. வேலுசாமி | 53 |
| இது - சிறுகதை | ஸ்ரீதர கணேசன் | 58 |
| கறுப்புச் சிகரம் - நூல் மதிப்புரை | அன்பாதவன் | 61 |
| முகத்தில் முகம் | | 62 |
| மக்கள் பகுதி | | 64 |


Published, Printed and Owned by Audrey Jannet Joseph. Published from 2/206, Pandian Salai, Canalpuram Road, Neelangarai, Chennai - 41
Printed at Sri Lakshmi Printers, New No.20, (Old No.7) Big Street, Anakaputhur - 600 070. Editor : Audrey Jannet Joseph

படிப்பகம்

www.padippakam.com

# தலித் மொழி கொச்சையா?

■ பு. ஜார்ஜ்

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள தமிழ்ப் பேரகராதி(Tamil Lexicon)யில் பேச்சு வழக்குச் சொற்களை அதன் பதிப்பாசிரியரான வையாபுரியார் பொது நியதியின் அடிப்படையில் சேர்த்துவிட்டார். அப்படிச் சேர்த்து விட்டதற்காக தேவநேயப் பாவாணர் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்திருக்கிறார். அகராதிப் பணி முடிவடைந்து 20 ஆண்டுகள் ஆனபிறகு தேவநேயப் பாவாணர் ஆங்கிலத்திலும் தமிழிலுமாக வெளியிட்டுள்ள 'சென்னைப் பல்கலைக்கழகத் தமிழகராதியின் சீர்கேடுகள்' என்னும் புத்தகம் இதற்குச் சான்றாகத் திகழ்கிறது. மேற்குறிப்பிட்ட சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகராதியின் திருத்தப்பணி நடந்துகொண்டிருக்கும் இன்றைய நிலைமையில் வையாபுரியார் மற்றும் தேவநேயப் பாவணர் ஆகிய இருவரது நிலைப்பாடுகளையும் மதிப்பிடுதல் அவசியம்.

கொச்சை வழக்கை அகராதியில் சேர்த்துவிட்டதாக எதிர்ப்புத் தெரிவிக்கும் தேவநேயப் பாவாணர் கொச்சை என்பதற்கு ஈடாக 'Vulgar', 'Barbarism' ஆகிய ஆங்கிலச் சொற்களைத் தமது நூல்களில் பயன்படுத்துகிறார். உலக வழக்கையும் கொச்சை வழக்கையும் பிறநாட்டார் ஒன்றாகவே கருதுகிறார்கள். தமிழ் நாட்டவர்க்கு அப்படியில்லை; இரண்டும் வெவ்வேறு எனக் கருதுகிறார். சென்னைப் பல்கலைக்கழகத் தமிழகராதியின் சீர்கேடுகள் எனும் நூலில் இவ்விரு வழக்குகளையும் எடுத்து விளக்குகிறார்.

| உலக வழக்கு | கொச்சை வழக்கு |
|---|---|
| அரைஞாண் கயிறு | அரணாக் கயிறு (அண்ணாக்கயிரு) |
| அரைஞாண் கொடி | அரணாக்கொடி |
| ஆண்பிள்ளை பிள்ளை | ஆம்பிளப் பிள்ளை |
| பெண்பிள்ளை பிள்ளை | பொம்பிளப் பிள்ளை |

இந்த உதாரணத்தின் மூலம் உலக வழக்கு என அவர் கருதுவது எழுத்து வழக்கோடு ஒட்டிப்போகும் வழக்கைத்தான் எனத் தெரிகிறது. எழுத்து வழக்கோடு ஒத்துபோகக்கூடிய உலக வழக்கை செந்தமிழாகப் பார்க்கும் அவரது பார்வையை இது உறுதி செய்கிறது. பாண்டிநாட்டுத் தமிழே சிறந்தது என்கிறார். தென்னகத்தே தமிழ் திருந்தியுள்ளதாகவும் வடக்கே வரவர கொச்சைத் தன்மை கூடி வருவதாகவும் குறிப்பிடுகிறார். நீலகிரியில் வாழும் துடவர் (தோடர்) மொழியிலுள்ள சொற்களைக்கூட சுட்டிக்காட்டி, அந்த மொழியின் கொடுந்தன்மையையும் கொச்சைத் தன்மையையும் அவை காட்டுகின்றன என்கிறார்.

கொச்சை என இவர் கருதும் பேச்சு வழக்குச் சொற்களை வையாபுரியார் அகராதியில் சேர்த்துவிட்டார். அதனைக் குறிப்பிட்டு, "திருத்தமாயெழுதும் மாணவரையும் கொச்சையாய் எழுதும்படியன்றோ இவ்வடிவுகள் தூண்டுகின்றன" என்கிறார். தமிழகராதியில் மொழித்தூய்மை காக்கப்படவில்லை என்பது இவரது குற்றச்சாட்டு. (அயோத்திதாச பண்டிதரால் சேகரிக்கப் பட்ட சொற்றொகுதியும் இவ்வகராதித் தயாரிப்புக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது இங்குக் குறிப்பிடத் தக்கதாகும்) எனவே, தேவநேயப் பாவாணர் தமது செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலியில் 'கொச்சைச்' சொற்களைச் சேர்க்கவில்லை. அதன் முன்னுரையில் அவர் தெளிவாகவே இதைக் குறிப்பிட்டுள்ளார். அகராதியின் பெயரே இதனை உறுதிசெய்யும் வகையில் வைக்கப்பட்டுள்ளதையும் உணரமுடிகிறது.

பேச்சு வழக்குச் சொற்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தவர்களைப் புகழுகிறார் கமில் சுவலபில். அதற்காக கமில் சுவலபிலை 'கொச்சைத் தமிழ் நச்சியார்' எனக் கேலிசெய்கிறார் தேவநேயப் பாவாணர்.

வையாபுரியாரோ தேவநேயப் பாவாணரின் இந்த நிலைப்பாட்டுக்கு எதிரான ஆனால் ஏற்கத்தக்க கொள்கையுடையவராகச் செயல்பட்டுள்ளார்.

எழுத்து வழக்கைக் கொண்டுதான் பேச்சு வழக்கை மதிப்பிடவேண்டும் என எல்லோரும் நினைப்பார்கள். ஆனால் இது ஓரளவுக்குத்தான் உண்மை என்கிறார் வையாபுரியார். மேலும், எழுத்து மொழியைக் காட்டிலும் பேச்சுமொழி காலத்திற்கும் பருவத்திற்கும்



படிப்பகம்

www.padippakam.com

நிலைக்கும் தக்கபடி வளைந்து கொடுத்துச் செல்லும் இயல்பை உடையது; மொழி வளர்ச்சிக்கு அதுவே வழி காட்டியாய் உள்ளது என்கிறார். தமிழின் எதிர்காலம் குறித்துப் பேசுகையில் உலக வழக்கிலுள் (பேச்சு வழக்கு) தமிழ் நடையானது நூல்களில் இடம்பெறுவ தால் தமிழ்மொழிக்கு ஒரு புதிய ஜீவசக்தி தோன்று வதாய்க் குறிப்பிடுகிறார். இந்த ஜீவசக்தி உரம்பெற்று வளராதபடிக்கு சிலர் முயற்சி செய்து வந்ததையும் நக்கீரர் நடையைத் தற்கால உரைநடையாக வற்புறுத்தி வந்ததையும் தொல்காப்பியரின் ஆணையைக் கடவா மல் சங்க நூல் வழக்கைப் பின்பற்றித் தற்காலத்தில் நூல்கள் செய்ய வேண்டும் என்றும் பிரசாரம் செய்து வந்ததையும் குறிப்பிட்டு, பின்வரும் கருத்தைத் தெரிவிக்கிறார்.

> *ஆறு பெருக்கெடுத்து கரைபுரண்டு வரும் போது அதன்போக்கை ஒரு சிறு மண் அணை யால் தடுக்க முடியாது. இதுபோலவேதான் இவர்களது முயற்சியும் பயனற்றது. தமிழ் மக்களது வாழ்வின் போக்கிற்குத் தக்கபடி மாறிச் செல்லவேண்டும். தமிழ்மொழியை அதன் வாழ்வினின்றும் பிரித்துத் தனிப்பட நிறுத்தி தூர்ந்துபோன ஒரு நெறியிலே செலுத்த முயல்வது இயற்கைக்கு மாறானதாகும். மொழி யியல்பை உணராத இவர்களது செய்கை அன்னிய நாட்டினர் நகைப்பதற்கு ஏதுவாகும். மேலே குறிப்பிட்ட ஜீவசக்தியானது இவ்விடையூறு களையெல்லாம் பொருட்படுத்தாது மக்கள் வாழ்விலிருந்து உரம்பெற்று, வளம்மிகுந்து, இனி வருங்காலத்திலே பலவகையாலும் சிறந்த தொரு மொழியாய்த் தமிழை ஆக்கும் என்பதில் தடையில்லை (வையாபுரிப்பிள்ளை நூற்களஞ் சியம், தொகுதி 2:130)*

இவர் கூறுவது போலவே இன்றைக்குப் பேச்சு வழக்கில் அமைந்த நவீன இலக்கியங்கள் தமிழுக்குப் புத்துயிர் அளித்திருப்பதை யாரும் மறுக்க முடியாது. எனவே வையாபுரியாரின் கணிப்பு சரியானதாகவே இருந்திருக் கிறது. மேலும் அவர் கூறுவது கவனிக்கத் தக்கதாயுள்ளது.

> *பொது ஜனங்கள்தான் மொழிகளுக்கு உயிர் கொடுத்து அவை இயங்கும்படி செய்ய வல்லவர் கள். மொழி வளர்ச்சி நெறியை உணராத இலக் கணப் பண்டிதர்களிடத்தில் மட்டும் மொழிகள் அமைந்துவிடுமானால், அவைகளைக் காற்றில் லாத அறையில் பூட்டிவைத்துக் கொன்றே விடுவார்கள். மொழிகளுக்கு மரணம் நேர்ந்த தெல்லாம் இவ்வாறே (மேலது : 87)*

ஆனால், இந்த இயங்கியல் பார்வைக்கு மாறாகத் தமது கொள்கைகளை தேவநேயப் பாவாணர் அமைத்துக் கொள்கிறார். 'உலக வழக்கை இழிசன வழக்கு என்றும் கருதிவிட்டார்கள்' என வையாபுரியார் குறித்திருப்பது தேவநேயப் பாவாணருக்கும் பொருந்துவதாய் உள்ளது.

ஒடுக்கப்பட்டவர்களுக்குத் துப்புரவும் நாகரிகமும் இன்றேல் தீண்டாமை ஒழியாது என்கிற கருத்துடைய வராய் தேவநேயப் பாவாணர் இருந்துள்ளார். இது, புறத்தூய்மையை மட்டுமே வலியுறுத்திய நீண்ட பாரம் பரியம்மிக்க இந்துத்துவத்தின் காப்பாளர்களான காந்தியும் காங்கிரசாரும் ஒடுக்கப்பட்டவர்களுக்கு எதிராகக் கையாண்ட தூய்மை வாதத்துக்கு எந்த வகையிலும் வேறுபட்டதாகத் தெரியவில்லை.

தனித்தமிழ் இயக்க முன்னோடி எனக் கருதப் படுகிற வேதாசலம் (மறைமலையடிகள்) இதற்குச் சிறந்த சான்றாகத் திகழ்கிறார். உயர்ந்தோர் தாழ்ந் தோர் எனும் பாகுபாட்டை நிலைநிறுத்துவதற்கு இந்தக் 'கொச்சைக் கோட்பாடு' அவசியம் என்கிறார். சமஸ்கிருதவாதிகள் தமிழை நீசமொழி என்கிறார்கள் என்பதற்காக வரிந்துகட்டிக்கொண்டு நின்றதாக இப்படிப்பட்டவர்களை நம்புகிறோம். ஆனால் இத்தகையோரே தமிழையும் தமிழரையும் 'கொச்சை' என்று காட்டிக்கொடுக்கிற உன்னதமான பணியையும் செய்திருக்கிறார்கள். வேதாசலத்தின் பின்வரும் கருத்து இதற்குச் சான்று.

> *முழு முதற் கடவுளாகிய நம் சிவபெரு மானையன்றி வேறு நம்போன்ற சிற்றுயிர்களின் வடிவங்களைக் கல்லிலுஞ் செம்பிலுஞ் செய்து வைத்துக்கொண்டு அவற்றை வணங்குதலே பெரிதுங் குற்றமாவதாம். மாரி, காளி, எசக்கி, கறுப்பண்ணன், மதுரைவீரன் முதலிய ஆவிக ளெல்லாம் நம்போற் குற்றமுடைய சிற்றுயிர் களாதலின் அவற்றைத் துணையாகக் கொள்வது, ஒரு குருடன் மற்றொரு குருடனைத் துணை கூட்டிச் சென்று இருவரும் பள்ளத்தில் வீழ்தற்கே ஒப்பாம். ஈசாவசியோபநிடதத்தின் ஒன்பதாவது மந்திரமும், "அறியாமையோடு கூடிய சிற்றுயிரின் வடிவங்களை வணங்குபவர்கள் இருள் நிறைந்த நிரயத்திற்குச் செல்கிறார்கள்" என்று இங்ஙனமே கூறுகின்றது.*
>
> *கல்வியறிவும் நல்லோர் சேர்க்கையும் இரக்க மான நெஞ்சமும் இல்லாமையால் நிரம்பவுந் தாழ்ந்த நிலைமையிலுள்ள மாந்தர்கள் தாம் தாம் தமது குலதெய்வமாகக் கும்பிட்டுவருங் காளி, பிடாரி, மாரி, குரங்கனி, எசக்கி, கறுப்பண்ணன், மதுரைவீரன் முதலான சிறுதெய்வங்களுக்கு அளவிறந்த ஆடு, கோழி, எருமை முதலான குற்றமற்ற உயிர்களை வெட்டிப் பலியிடுகின்றார் கள். தாழ்ந்த நிலையில் உள்ள மக்கள் பலரும் இங்ஙனஞ் செய்து வருதலைப் பார்த்துப் 'பன்றியோடு கூடிய கன்றுஞ்' செயல் மாறு பட்ட பான்மைபோற் சைவவேளாளர் சிலரும் பார்ப்பனர் சிலரும் இச்சிறு தெய்வங்களை வணங்கப் புகுந்து இவர்களும் மேற்சொன்ன ஏழை உயிர்களின் கழுத்தை அறுத்து அவற்றைப் பலி ஊட்டுகின்றார்கள். உயிர்க் கொலையாகிய புலைத்தொழிலைச் செய்யும் தாழ்ந்த வகுப்பாரைப் போலவே உயர்ந்த வகுப்பாருஞ் செய்யத் தலைப்பட்டால் உயர்ந் தோர் இவர், தாழ்ந்தோர் இவர்கள் என எங் ஙனம் பகுத்துச் சொல்லக்கூடும்? (மறை மலையடிகள், 1979:25)*



படிப்பகம்

www.padippakam.com

இனத்தூய்மை, நாகரிகத்தூய்மை, மொழித் தூய்மை ஆகியனவற்றைப் பற்றிப் பேசுபவர்கள் அவர்களின் இலக்கணத்துக்குட்படாதவற்றை மேற்கண்டது போல் கொச்சை என்கிறார்கள். இந்தியச் சூழலில் இது சாதியத்தைக் காப்பாற்றுகிறவர்களின் பொதுப்பேச்சாக உள்ளது. தமிழ்மொழி என்று வருகிறபோது பாண்டித் தமிழே தூய்மையானது, பிற எல்லாம் கொச்சை என்பதும், புலமையாளராகத் தம்மைக் கருதிக்கொண்டு சாதாரண மக்கள் மொழியைக் கொச்சை என்பதும் சாதியக் கருத்தியலுக்கு வலுசேர்க்கும் கருத்துகளாய் அமைந்து விடுகின்றன. சாதாரண மக்கள்தான் மொழியைத் தக்கபடி வளர்க்கிறார்கள். அதனை வளர்ச்சி என்று ஒப்புக்கொள்வதற்குப் புலமை தடையாக இருக்கிறது. எனவே அந்தப்புலமை மொழி வளர்ச்சிக்குத் தடையாக அமைந்துவிடுகிறது. இப்படிப்பட்ட செயல்பாடு மொழிமீது புலமை செலுத்தும் அதிகாரமாகும். இலக்கியத்திற்குத்தான் இலக்கணம் வகுக்க வேண்டுமே தவிர இலக்கணத்துக்கு இலக்கியம் என்பதல்ல தமிழர் கண்டநெறி. மொழியின் மீதான புலமையின் இவ்வகை அதிகாரச் செயல்பாடு சாதியச் செயல்பாட்டுக்குத் துணை நிற்கிறது.

தலித் மக்கள் பேசும் மொழியை மட்டும் கொச்சை எனக்கூறுவது தமிழகத்தில் வழக்கமாயுள்ளது. அந்த மக்களின் பெரும்பான்மை கருதியே அவர்கள் வாழும் வட்டாரப் பேச்சுவழக்கும் இழிவாகக் கருதப்படுகிறது. சென்னை, காஞ்சி, செங்கற்பட்டு, வேலூர், திருவண்ணாமலை, திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களின் வழக்குகளை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம். தலித் மக்கள் பேசும் மொழியைக் கொச்சை என்று சொல்வது அந்த மொழிபேசும் மக்களைக் கொச்சையாகப் (Vulgar, Barbarism) பார்க்கும் பார்வையிலிருந்து விளைகிறது. முன்னர் குறிப்பிட்ட மறைமலையடிகளின் கருத்து இப்படிப்பட்ட பார்வையுடையது. புதுமைப்பித்தனின் "எப்போதும் முடிவிலே இன்பம்" எனும் சிறுகதையும் இதற்குச் சான்றாய் அமைந்துள்ளது. 'சென்னைத் தமிழ்' என்றால் சென்னையில் வாழும் அடித்தட்டு மக்களின் மொழியைத்தான் குறிக்கிறது. ஆனால் அவர்கள்தான் அப்பகுதியின் மைந்தர்கள் என்பது கவனிக்கத்தக்கது. நீலகிரியின் தோடர் மொழியைக் கொச்சையாகப் பார்ப்பதுகூட இதுபோன்றே அம்மக்களைக் கொச்சையாக பார்ப்பதன் விளைவே. பிற நாட்டார், உலக வழக்கையும் 'கொச்சை' வழக்கையும் ஒன்றாகப் பார்ப்பதற்குக் காரணம் அங்கு சாதியக்கொள்கை இல்லை என்பதே. தேவநேயப்பாவாணர் அவ்வாறு பார்க்க இயலாததற்குக் காரணம் அவர் சாதியக் கொள்கைக்கு ஆட்பட்டுவிட்ட நிலைமைதான் எனலாம்.

ஆரியத்தை எதிர்த்துப் பல எழுதியிருக்கும் தேவநேயப்பாவாணர் இந்த விடயத்தில் ஆரியர்க்கே, அக்கோட்பாட்டைப் பின்பற்றுபவர்களுக்கே துணை போகிறார். தொல்தமிழ் மக்களுக்கும் அவர்களது மொழிக்கும் துரோகம் செய்தவராக உள்ளார். இன்றும்கூட கற்க வாய்ப்பில்லாது இருக்கும் பெரும்பான்மை தலித் மக்களின் வாய்மொழி மரபை அவர் மறுதலிக்கிறார். பிராமணரல்லாத பிற உயர்சாதியினருக்கான கருத்தியல் போராட்டக் களத்தில் மொழிப் பிரிவின் தளபதியாக பிராமணர்களுக்கெதிராகச் செயல்பட்ட தேவநேயப்பாவாணர், பிராமணரல்லாதார் இயக்கத்தினரைப்போலவே உயர்சாதிக் கருத்துருவுக்குள் சிக்கியிருப்பதை உணரமுடிகிறது.

*உயர்சாதியினர் தம் சாதிய ஆதிக்கத்தை நிலை நாட்டக்கூடிய கருத்துருவத்தை அனைத்துச் சாதியினர்க்கும் உரிய பொதுவான கருத்துருவமாகச் சித்தரிக்க முயற்சி செய்வர். ஆளும் வர்க்கத்தினர் நலன்களுக்கான கருத்துருவம் அனைத்து வர்க்கத்தினர்க்குமான கருத்துருவமாக முன்வைக்கப்படுகிறது. இத்தகைய முயற்சிகளுக்குச் சிந்தனையளவில் ஆட்பட்ட ஒடுக்கப்பட்ட சாதியினரும் வர்க்கத்தினரும் இந்தக் கருத்துருவங்களின் செல்வாக்கில் தம்மை ஒன்றிணைத்துக் கொள்வதோடு இவற்றைத் தம் நலன்களுக்கான கருத்துருவங்கள் எனவும் தவறாகக் கருதிக்கொள்ளும் சாத்தியம் உண்டு. சமூகத்தின் முரண்பாடுகள் கூர்மையாக வெளிப்படாத பொழுதும் அல்லது முரண்பாடுகளை நீக்குவதற்கான போராட்டங்கள் மிகவும் பின்னடைந்து போயிருக்கும் காலங்களிலும் இத்தகைய மாயையான உணர்வுகளுக்கு ஒடுக்கப்படும் சாதிகள் ஆட்பட்டு இருப்பதைக் காணலாம். ஒடுக்கும் சாதிகளின் நலன்களுக்கான கருத்துருவங்களை ஒடுக்கப்படும் சக்திகள் ஏற்றுக்கொள்ள வேண்டிய சூழல் இருப்பதாலேயே இவற்றை ஒடுக்கப்படும் சக்திகட்கான கருத்துருவங்கள் எனக் கொள்ளல் இயலாது. இவற்றைக் கருத்துருவ மாயை (Ideological illusion) எனலாம்.* (கோ. கேசவன், தமிழ்மொழி, இனம், நாடு : 74)

இந்தப் பின்புலத்தை வைத்துப் பார்த்தால் தேவநேயப் பாவாணரின் கொச்சை பற்றிய கருத்துருவத்தையும் மாயை என ஒதுக்க வேண்டியது அவசியம் எனத் தெரியவருகிறது. ஆனால், தேவநேயப் பாவாணராலும் பிராமணரல்லாதார் இயக்கத்தினராலும் 'தமிழ்த்துரோகி' என்றும் 'தமிழைக் காட்டிக் கொடுத்தவன்' என்றும் திட்டப்பட்ட வையாபுரியார், பேச்சு வழக்கை 'உலக வழக்கு' என்றும் 'கொச்சை வழக்கு' என்றும் பாவாணர் போல் பாகுபடுத்திப் பார்க்கவில்லை. பேச்சு வழக்கை மொழியின் ஜீவசக்தியாக உணர்ந்தார். அவற்றைத் தமிழகராதியிலும் பதிவு செய்தார்.

இவ்வாறெல்லாம் அவர் செய்தவை பெரும்பான்மை வாய்மொழி மரபாளர்களான தலித் மக்களை நாட்டின் ஜீவசக்தியாக உணர்வதற்கும் உணர்த்துவதற்கும் தேவைப்பட்ட சிறப்பானதொரு முன்வேலைப்பாடேயாகும். •



படிப்பகம்

www.padippakam.com

# பழங்குடியின மக்களுக்கு சாதிச்சான்று மற்றும் அவர்களின் பொருளாதார வளர்ச்சி குறித்த கூட்டம்

தமிழகத்திலுள்ள பழங்குடியின மக்களின் தற்போதைய வாழ்நிலை குறித்து அறியவும், பல்வேறு வகைப்பட்ட இப்பழங்குடியின மக்களின் பிரச்சினைகளை ஒருமுகப்படுத்தி அரசின் கவனத்திற்கு செல்லும் நோக்கத்தில், கடந்த 5.10.2004 அன்று சென்னையில் எழுத்தாளர் சிவகாமி தலைமையில் நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் பழங்குடியின மக்களிடையே தொண்டாற்றும் பல்வேறு அமைப்புக்களைச் சார்ந்தவர்களும், சமூக ஆர்வலர்களும் கலந்து கொண்டனர். பழங்குடி இருளர் பாதுகாப்புச் சங்கத்தின் அமைப்பாளர் பேரா. கல்யாணி, பழங்குடி ஆய்வு மய்யத்தின் தலைவர் திரு. ஜக்கா பார்த்தசாரதி, பழங்குடி மக்களிடையே பணியாற்றும் அருட்தந்தை P.B. மார்ட்டீன், தேசிய SC/ST கமிஷனின் முன்னாள் உறுப்பினர் திரு. செல்லப்பன், இ.ஆ.ப., மற்றும் பழங்குடி இருளர் அமைப்பைச் சார்ந்த கஜேந்திரன், ஏலகிரி பழங்குடியின மக்களிடையே பணியாற்றும் எஸ். ஜீவா ஆகியோர் முக்கியமானவர்கள்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில்

● தமிழகத்திலுள்ள அனைத்து பழங்குடியின மக்களின் பிரச்சினைகளை ஒருங்கிணைத்து, தமிழக அரசின் பழங்குடியின ஆணையரை வரவழைத்து ஓர் கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய்வது, இக்கலந் துரையாடலில் பழங்குடியின பள்ளிக் குழந்தைகளுக்கு சாதிச் சான்றிதழ் வழங்குவதில் ஏற்படும் தாமதத்தினை கருத்தில்கொண்டு அதுகளைந்தெறியப்பட, சாதிச் சான்று வழங்குவதில் பிரச்சினையில்லாத இடங் களுக்கு வட்டத் தாசில்தார் மூலம் சான்றிதழ் வழங்கவும், பிரச்சினைக்குரிய இடங்களில் RDO மூலம் சான்றிதழ் வழங்கவும் முன்மொழிவது என்பதை முதல் கோரிக்கையாக்க முடிவெடுக்கப்பட்டது. இரண்டாவது கோரிக்கையாக பழங்குடியின மக்களுக்கு வரைவு திட்ட துணை மதிப்பீடு (Sub-Plan) தயார் செய்து அளிப்பது, தமிழக பழங்குடியின மக்கள் தொகைக்கு இணையாக திட்ட மதிப்பீட்டில் 1% நிதியினை ஒதுக்கக் கோருவது மற்றும் பழங்குடியின மக்களுக்காக ஒவ்வொரு வருடமும் (அரசே முன்னின்று நடத்த) கலை விழாவுக்கு நிதி ஒதுக்கீடு செய்யக் கோருவது எனவும் முடிவு செய்யப்பட்டது.

● பட்ஜெட்டில் பழங்குடியின மக்களுக்கான தனி ஒதுக்கீடு கோரி பழங்குடி மக்கள் வசிக்கும் 13 மாவட்டங்களில் மாவட்ட பழங்குடியின அதிகாரியை முன் வைத்து கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய்வது.

● பழங்குடியின மக்களுக்கான பள்ளிகளில் தகுதியுள்ள பழங்குடியினரையே தெரிவு செய்து ஆசிரிராக நியமித்தல். அதே போன்று மருத்துவ வசதி, வனப்பகுதிகளுக்கு பழங்குடியினரையே செவிலியராக, வன அலுவலராக நியமித்தல்.

● பழங்குடியின திட்ட துணை மதிப்பீட்டில் மாவட்டந்தோறும் ஒரு Animator பதவியினை நியமிக்கக் கோருதல்

● ஜனாதிபதி அவர்கள் ஒவ்வொரு வருடமும் ஆகஸ்ட் 15, ஜனவரி 26 ஆகிய தேதிகளில் பழங்குடியின அமைப்பினர் - மக்களுடன் ஒரு சந்திப்பு நிகழ்வு இருப்பது போன்று, மாநில அளவில் கவர்னர்களும் இதே மாதிரியான ஒரு சந்திப்பு நிகழ்வுக்கு ஏற்பாடு செய்ய வலியுறுத்தல்.

● ஒவ்வொரு வருடமும், பழங்குடியின மக்களுக்கான கருத்தாய்வு கூட்டத்திற்கு மாநில முதல்வர் - கவர்னர் கலந்துகொள்ள கோரிக்கை வலியுறுத்தல்

● பழங்குடியின மக்களுக்கான ஆலோசனைக் கமிட்டிக் கூட்டம் கடந்த 2001-க்குப் பிறகு கூடவில்லை என்பதை நினைவுபடுத்தி, மீண்டும் கூட்டம் நடக்க வலியுறுத்தல்.

● 1981 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தான் தற்போது பழங்குடியின மக்கள் தொகை கணக் கெடுப்பு உள்ளது. மாவட்ட அளவிலான கணக் கெடுப்பு அவசியத்தினை வலியுறுத்தல். ஏலகிரி மலையில் மலையாளிகள் தவிர்த்த பிறர் நிலங்களை வாங்குவதற்கு தடை விதித்தல்.

● ஏலகிரி - ஜவ்வாது மலைப் பகுதிகளில் பழங்குடியின மக்களுக்கான விற்பனை மையம் நிறுவ வேண்டுதல்,

● பழங்குடியின மக்களுக்கு தொகுப்பு வீடுகள் அவர்களது பாரம்பரிய வடிவமைப்போடும், நவீன வசதிகளோடும் கட்டித் தர வேண்டுவது மட்டுமின்றி பழங்குடியின மக்களில் ஒருவரையே காண்ட்ராக்டராக நியமித்து பணியை நிறைவேற்றச் செய்தல் - போன்ற கோரிக்கைகளை பழங்குடியின ஆணையரின் முன் எடுத்துவைப்பது எனவும் முடிவு செய்யப்பட்டது. ●


படிப்பகம்

www.padippakam.com

■ பவானி

# பொன்னாங்கன்னி

சர்க்குன்னு மரத்துக்கும் பின்னாலே ஓணானும் அரணையும் சடகாரன் கும்புலு போன தெசய மறஞ்சி மறஞ்சி பாத்திச்சிங்க. சூரதழ செடியோரமா தல நீட்டி அவங்க போயிட்டாங்களான்னு எட்டிப்பாத்த கௌதாரி, காடை, மணிப்பொறா, அணிப்புள்ளெ யரச்சிலு, கூச்சிலு ஒன்னும் போடல. அந்த கும்புலு போன தெசயில சத்தம் கொஞ்சம் கொறஞ்சிச்சி. செத்த நேரம் கழிஞ்ச பெறவு எல்லா ஜீவராசியும் தாம் இஷ்டத்துக்கு கத்திக்கினு இருந்திச்சி.

காட்டு உள்ள போன கும்புலு கடப்பங்கொட்(டை) ஓடக்குள்ள இறங்க, சூரியன் மலமேல வியற நேரமாச்சி. ஓடையில முட்டியளவு தண்ணிதா(ன்) போயிக்கினு கீது. கரை ஓரத்தில் லரங்குன கொக்கெல்லாம் இவங்களெ பாத்துட்டு பிச்சிலிட்டுக்கினு பறந்திச்சிங்க. அதப் பாத்து மெரண்ட கயத அந்தாண்ட கரைக்கு வராம மொரண்டு புட்சிக்கினு இருந்திச்சி. கும்புலுக்குத் தலைவன்தான் சடகாரன். அவ(ன்) கயத மேலந்து எறங்கனான். எல்லாருமா சேந்து கயதய ஈத்து அந்தாண்ட கரைக்கி ஏத்திப்புட்டாங்க. கர ஓரத்தல மூனு பேரு அணைச்சி புடிக்கிற அளவுக்கு வளந்துகீற நீர்மருத மரத்தப் பாத்து வாய பொளந்துக்கினு கயிதமேல ஏறி பாட்டெ வய்யே போனாங்க. தாதி பனமரமாட்டம் அங்க ஒன்னு, இங்க ஒன்னுமா மொளஞ்சிங்கீற குட்சில தாண்டி போனாங்க. அவங்கள பாத்த நாயெல்லாம் ஒரே யரச்சிலு போட்டுக்கினு முன்னாலே ஓட்றதும், சிறுகுஞ்சான் செடிக்குள்ள ஓடி பூந்துக்கிறதுமா இருந்திச்சி. தோட்த்து வாசல்ல வெளயாடிந்த புள்ளெங்கெல்லாம் குட்சிலுக்குள்ள பூந்து, ஈச்சந் தட்டிய சாத்திக்கிச்சிங்க. யரவானத்தோரமா சோளங் குத்திந்த பொம்பளிங்கெல்லாம் ஒலக்கிய போட்டு வூட்டு உள்ள பூந்துக்குனாங்க. அந்த யெடத்த வுட்டு கொஞ் சம் தள்ளி உள்ளப் போவ இருட்டாயிப்போச்சி. நாயிங்கெல்லாம் ஒரே கொளையா கொள்சிக்கினு இருந்திச்சி.

இருக்கிறதிலேயே தூலம் வெச்சிக் கட்ன வூடு இதுவாத்தான் இருக்கும். ஆம்பள இல்லாத வூடு. வெளிச்சம் வெளிய வீந்துக்கினு இருந்திச்சி. அம்மிக் கெல்லு மேல எரிஞ்ச வெளக்க எடுத்து சொவுத்து மாடத்துல வெச்சிச்சி கெயவி. தாவாரம் பூரா வெளிச் சம் மேஞ்சது. சானகத்துல[1] ஆக்கி எடுத்தாந்த மூங்கெ சோத்த அம்மிக்கெல்லு மேல வெச்சிச்சி. ஆவி கப கபன்னு மேல எழும்பி காத்தோட தோத்துக்கினு மடங்கி மடங்கி வெளியே போச்சி. எரவானத்துல சொருவியிருந்த சில்லிமடுக்க[2] எடுத்துக்கினு வங்கு சானகத்து மேல வெச்சி சோ... வடிச்சிச்சி. தபதபன்னு ஊத்தன (சோத்து) நீசத்தண்ணி மொடாவுல வீந்துகினு இருந்திச்சி. ஆவி மூஞ்சியில ஓரச்சிக்கினு எரவானத் துல முட்டி களஞ்சிச்சி. மூஞ்சி வேத்து கொட்டி, மூக்கு மொனையில சொட்டு சொட்டா வீந்துக்கினு இருந்தத மாராப்புத் துணியாலெ தொட்சிக்கினு, சோத்துச்சட்டிய உள்வூட்டுக்கு தூக்கினுப் போச்சி கெயவி. ஒன்ற வயசு ஆம்பள கொயந்த நடையில தூங்கினு இருந்திச்சி. அம்மாவும், இந்நிக்கியோ நாளைக்கியோன்னு புள்ள பெக்கப்போவுது. அது தோட்த்தலிந்து கைய கால கயுவிக்கின்னு உள்ள நொயஞ்சி நடையில தூங்கன புள்ளய தூக்கியாந்து பக்கத்தில ஒக்கார வெச்சிச்சி. "உங் கையும் காலும் வெச்சிக்கினு சொம்மா குந்தியிருக்க மாட்டியே... எம்புள்ளய துன்னிய போதாதா... இதுவேற போவ னுமா... வெளிய போனமா வந்தும்மான்னு இல்லாத வர்றா... இருட்டுச்சாய..." எரியிற அடுப்புல உப்புக்கல்ல போட்டாப்புள்ள வெடிச்சிச்சி கெயவி. "மொளச்சி மூனு எல உடல... அதுக்குள்ள அப்பன துன்னிச்சி... இதுங்காட்டெல்லாம் யாரு மாஞ்சிக்கீறது..." கேட்ட பொன்னாங்கன்னிக்கு மனசு தாங்கல. அருகாலு மேல சாஞ்சிகின்னு அயிந்திச்சி.

"யம்மா நீ ஏந்தாயி அயிவுற... வவுத்து புள்ளக் காரிக்கு எதன்னா ஆச்சின்னா ஏஜென்மந் தாங்கா துடியம்மா..."ன்னு சொல்லும்போதுதான் காட்டுவா மரத்துங்கள தாண்டி கீயிச்சிக்கினு தமக்குச் சத்தம் வந்திச்சி. தமக்குச் சத்தம் கேட்டு ஜனமெல்லாம் தட்டியச் சாத்திக்கினு எரவானத்துச் சந்துல இருந்து, வெளிய என்னா சொல்றாங்குன்னு கேட்டுக்கினு இருந் திச்சிங்க. கோயிங்க்ளெ மடிக்காரபோன புள்ளெங்க ரெண்டும் ஒரே ஓட்டமா ஊடுவந்து சேர்ந்துச்சிங்க. கப்சிப்புன்னு மூலையில மொடங்கிக்கிச்சிங்க.

"இதனால சகலமானவங்களுக்கும் சொல்றது என்னான்னா... நாளையிலந்து மேற்காண்ட கீற மரத்த வெட்றதுக்கு, இன்னிக்கு வராத சனமெல்லாம், நாளைக்கு ஒன்னா வந்து, மரவெட்டனுமாம்... அப்படி வராதவங்களுக்கு போன மாசத்துல தலய வெட்டன கூத்துக்காரன்னாட்டம் சாவ நேரும்... இது சடகார ஐயா உத்தரவு..." டங்கு டக்கிடி... டமக்கு டக்டி... டங்குடக்கிடி... டமக்கு டக்கிடி... தமக்குச் சத்தம் காடு அதிர கேட்டிச்சி. தமக்குக்காரன் முன்னெ போவ சடகாரனும் அவன்(ன்) கும்புலும் வந்த வயியே திரும்பி கடப்பங்கொட்(டை) ஓடையில எறங்கி அந்தாண்...

1. சோறாக்கும் பானை
2. தென்னம் பாலை குறுத்தால் செய்யப்பட்ட வடிக்கும் தட்டு



படிப்பகம்

www.padippakam.com

கரைக்குப் போயி சேர்ந்தாங்க. இந்த தடவ கயத மொறண்டு புடிக்கல. மெதுவா அந்தாண்ட கரைக்குப் போயிச்சி.

சடகாரன் ஆளுங்க போன பெறவு கூட, வூட்ட வுட்டு ஒரு ஜனமும் வெளிய வரல. அது அதுங்க அடபட்ட கோயிங்களாட்டும் ஊட்டுக்குள்ள அடங் கிங்கந்திச்சிங்க. வீங்கன கல உருவிக்கினு இருந்த பொன்னாங்கன்னிக்கு மூஞ்செல்லாம் பொத பொதன்னு வீங்கி போயிருந்திச்சி. மக்க மனுசார்ன்னு இல்லாத ஒன்டிக்கட்டெ வூடு இதுவாத்தான் இருக்கும். அக்கம் பக்கமுன்னு, அடிச்சி போட்டா கேக்க நாதி இல்லெ. அவசரத்துக்கு தண்ணி கேட்டா கூட குடுக்க திக்கில் லாத எடமா கீது. ஊட்டுக்காரு செத்த நாள்ளெந்து குண்டி ஒடெஞ்சி குந்திங்கீது பொன்னாங்கன்னி. வூட்டுக்கு கூடமாடெ ஒத்தாசெ பண்ண கெயவிய வுட்டா வேற ஆளு இல்ல. இருக்கிற ரெண்டு பெரிய புள்ளெங்களும் கயலவராத புள்ளெங்களா கீதுங்க. ஆயாவுக்கு ஒத்தாச பண்ணா சுள்ளிப் பொறிக்காந்து குடுக்கும். மத்தபடி வேறு ஒரு யெயவும் தெரியாம வளந்திச்சிங்க. பக்கத்து கொட்டாவுக்காப் போயிச்சிங் கின்னா, தயப்பஞ்செத்த புள்ளங்கின்னு கம்பு, சோள முன்னு நும்மிட்டிக் குடுப்பாங்க. துன்னுட்டு வூடு வந்து சேருங்க.

பொயுது வெடிஞ்சா அங்க வொன்னுமா, இங்க வொன்னுமா குட்செ போட்டு காலந்தள்ளன ஜன மெல்லாம் மரவெட்டப் போவுனும். வெட்ன வெறவ தலசொமயா தூக்கினு ஓடைக்கி அந்தாண்ட கீற கரைக்கு கொண்டாந்து சேக்கனும். நாளு மாசமா தெக்கால நடந்த வேல, இப்ப மேற்காண்ட அழிக்க ஆம்பிளயும் பொம்பளயுமா போயாவனும். போவாத வூட்டுக்கு ஆளு வரும். பெரிய மனுசன்னா பாத்து தலைய வெட்றதா இவங்க வேலெ. இப்ப இதுக்கு என்னா பன்றது? எது பன்றதுன்னு தெரியல. ஆக்கி வெச்ச மூங்கெ சோத்த தட்சிப்பில கொட்டி அதல கொஞ்சம் கொட்டிக் கெயங்கு கொயம்ப ஊத்தி, நசிய பெயிஞ்சி கை கொயந்திக்கு ஊட்டிக்கினு இருந்திச்சி கெயவி சப்புக்கொட்டிக்கினு வாய் ஒயுவ துன்னுக் கினு இருந்த கொயந்தய அம்மா பாத்துக்கினு இருந் திச்சி. மத்த ரெண்டு புள்ளங்களும் அது அதுங்க சோத்த போட்டுத் துன்னுக்கினு இருந்திச்சிங்க.

"ஏந்தாயி... நீ ஒரு வா துன்னுட்டு வீந்துக்கியெ(ன்). என்னாரப்பட்டாலும் மூஞ்சிய தூக்கி வச்சிக்கினு இருந்தா எப்படி?"ன்னு கேட்டிச்சி கெயவி. அது நாளு வாயி சோத்த துன்னுபுட்டு ஈச்சம்பாய விரிச்சி போட்டு, மூனு பேரப்புள்ளெங்களோட தூங்கிச்சி.

மாடத்தில இருந்த வெளக்க உள்வூட்டுக்கு எடுத்துக்கினுப் போயி வச்சிச்சி பொன்னாங்கன்னி. அது பாட்டுக்கு எரிஞ்சிக்கினு இருந்திச்சி. வெளக்கு எரிய எரிய அது மனகம் எரிய ஆரம்பிச்சிச்சி. கொஞ்ச கொஞ்சமா வெளக்கு வெளிச்சத்தில அது ரேகம் கூடேற வவுத்துல கீற கொயந்த நெளியறத நெனச்சி அழுதுகினு இருந்திச்சி. தமக்கு வேற அடிச்சிட்டு போயி கீறானுங்க. வெடிஞ்சா வேலைக்குப் போயாவனும். புள்தாட்சின்னாலும் பாக்க மாட்டானுங்க.

தமக்கு அடிக்கிறதெல்லாம் இப்பதான். அதுக்கும் முன்னெல்லாம் அடிக்கிறதில்லெ. வூடு வூடா வந்து காட்டெ அழிக்கக் கூப்பிட்டுப் போவாங்க. அப்டிதான் ஒரு நாளு பொன்னாங்கன்னி வூட்டுக்கு போயி புருசன் கூத்துக்காரன்ன கூப்டாங்க.

"யாரு வூட்ல... வரிங்களா... இல்ல... நாங்க வரட்டும்மா..."ன்னு கேட்டானுங்க. உள்ள கெயவி, பொன்னாங்கன்னி, கூத்துக்காரன், புள்ளயுங்களுமா இருந்திச்சிங்க. எந்த சத்தமும் இல்லெ. உள்ள போன சடகாரனுக்கு முன்னத்த பின்னத்தெ வெட்டு. அலறி அடிச்சிக்குன்னு வெளியே வந்து கத்தனான். வெளி யிந்த ஆளுங்கல்லாம் ஊடு பூந்து கூத்துக்காரன்ன வெட்டிச் சாய்ச்சிட்டு போயிட்டாங்க. அதிலிந்து ஊடு வூடா ஆளு கூப்பிட்றதில்லெ. ஒரு யெடத்திலிருந்து தமக்கு அடிச்சி சொன்னா எல்லாம் வந்து சேர்ந்துரு வாங்க. கூத்துக்காரன் செத்ததிலிருந்து எதித்துக் கேக்க ஒரு பையனும் முன் வர்ரதில்லெ. அதனால சடகார னுக்கு அனுகூலமா போச்சி.

அவரு சாவும் போதெல்லாம் ஏழு மாசம் குளியாம இருந்துச்சி பொன்னாங்கன்னி. கடக்குட்டி புள்ள தத்தி தத்தி நடந்துகின்னு இருந்திச்சி. இதெல்லா நெனச்சி அயுதுகினே தூங்கிப்புட்ச்சி. காட்ல கீற எல்லா உசுரும் அது அது அந்தந்த வேலெய பாத்துக் கினு இருந்திச்சி. குள்நரி கத்தன சத்தம் மல அடிவாரம் வரைக்கும் கேட்டுக்கினு இருந்திச்சி. ஊட்டுக்கும் பின்னால கீறமூங்க மரமும் மலாரும் காத்துல கிருக்கு முருக்குன்னு ஆடி சத்தம் போட்டிச்சி. ஒட்டுத்திண்ண ஓரமா கீற கூண்டிலிருந்த கோயிய நரி தூக்கினுப் போயிடுச்சி. சத்தம் கேட்டு, அட்சிகினு புட்சிகினு ஏந்த கெயவிக்கு வெவரம் அறிஞ்சி, தொறந்து வுட்டிருந்த கூண்டுல, எந்திர கெல்ல உருட்டியாந்து சாத்தி வெச் சிச்சி. அதல ரெண்டு பொட்டக் கோயி இருந்திச்சி. ஆனா சேவலத்தான் நரி தூக்கினுப் போச்சி.

பொயுது பலபலன்னு வெடிஞ்சிச்சி. கெயவி இரும்புலி கொம்ப வெட்டிடிச்சீவி, கோயி கூண்டு வாசலு ரெண்டு பக்கமும் கூட்ட அட்சிக்கின்னு இருந்திச்சி. பேரப்பசங்க ரெண்டு பேரும் மூங்கெ அரசி கொன்னாற கெளம்பிச்சிங்க. "பெரியவன, தம்பிய பத்தரமா கூப்பிட்டுக்கினு போயி வா... பத்தரம்... பத்தரம்... மதியானமா வந்தா கோயி கூண்டுல கீற முட்டைய எடுத்து சோளப் பானயில வையி... முன்னியாட்டம் தெள்ளாவாரியா இருக்காதெ. இன்னிக்கு மட்டும் எடுக்காத இருந்திங்கின்னா வூட்ல குந்த வுடமாட்டேன்." அம்மா சொல்லிட்டு, கை கொய்ந்திய மாராப்புல தொங்க வுட்டுக்கினு மாமியா கிட்டெ போயி நின்னுச்சி.

"ஏ மொவள உனக்கு வந்த வாவு பாத்தியா... ஏ ஊட்ல வந்து வயித்த வாய கயவுனுமுன்னு எய்தி வெச்சிட்டுக் கீது. இப்டி நெசாதனையா வந்து நிக்கிறியே... உன்ன இந்தக் கோலத்தில பாத்தாலே ஏ(ன்) வவுறு பத்தி எரிது... அந்தப் பாவிங்க எவத்திருந்து வந்தாங்களோ மரத்தத்தான் வெட்றானுவுனுப் பாத்தா... மனுசனயும் வெட்றானுங்குளே... இவங்களுக்கு சாவு


படிப்பகம்

www.padippakam.com

வாவு வராதா..."ன்னு மனவொடிஞ்சி கண்ண நுமிட்டிச்சி.

"இரு தாயி... கூண்டுல கீற கோயி சாணிய பெறிக் கித்தள்ளிட்டு வர்ரேன்..."ன்னு சொல்லிக்கினு, தொடப் பத்த எடுத்தார எரவானத்துக்காப் போச்சி. அத்தாந் தாம்சம். கொடிவயில போயிக்கினு கீற ஆளுங்க, கொடுவா, கோடாலின்னு எடுத்தும் போறத பாக்கும் போதே சடகாரன் கெயவி வூட்டுக்கு கயத மேல ஒக்காந்துக்கினு வந்து நின்னான். அதுக்கு கையும் ஓடலெ, காலும் ஓடல. வெளவெளத்து நின்னிச்சி கெயவி. "உம்புள்ள போன மாரி நீயும் போனமா... இல்லெ. உன் குடும்பமும் போனமா... ஜனமே ஊட்ட வுட்டுக்கெளம்பி ரொம்ப தூரம் போச்சி... நீ என்னாநா மாமியாவும் மெருமொவளுமா... கத அளந்துக்கீறிங் களா..."ன்னு நாயாட்டம் கத்தனான். பேச்சி மூச்சில் லாம வேலைக்கு கெளம்பிட்டாங்க. கோயி கூண்டுல கீற சாணிய பெருக்காம கொள்ளாம தொறந்து வுட்டுப்போன கெயவிக்கு அதுமேலேயே ஞாபகம் அட்ச்சிகிச்சி. சாந்தரத்துக்குள்ள பெருக்கிலனா நாத்தம் அடிக்குமேனு கவலையா இருந்திச்சி கெய விக்கு. மெருமொவளுக்கு அடிவயிறு முட்ட முட்ட வலி வந்துக்கினு இருந்திச்சி.

ஜனமெல்லாம் மரம் வெட்டிக்கினு கீதுங்க. இவங்க எப்பவும் பச்ச மரத்தெல்லாம் கை வெக்கிறது இல்லெ. ஊடுகட்டக் கூட காஞ்ச மரத்தத்தான் வெட்டுவாங்க. அப்பிடியாப்பட்ட ஆளுங்கல மடக்கிப் போட்டுக் கினான் சடகாரன். அடந்துக்கீற மரமும் செடியும் அம்மா அயவா இருக்கும். கருங்காலி, இரும்புலி, உடுப்ப, களரிவிதி மண்டெ, பெரம்பு, தேத்தா, எட்டி நரிந்சான், ஆடுதுன்னாபாலெ, மரிகாலான், சிறு குஞ்சான், சிறுகலா, நாவ, பொரிச்ச, பலா, வில்வம், மூங்கில்ன்னு அடந்துகினு இருக்கும். செடி கொடின்னு பாத்தா வெள்ளேரி, தரணி, சிம்பிலிச்சான், முசட்டை, பாசெ, சூர, நன்னாரி, ஆட்லாங்கொடி, கலிம்பிளி யாம், தொடப்பம் இம்மாவும் வளந்து இருக்கும். இப்ப இதுக்கெல்லாம் நாளு குறிச்சிட்டான் சடகாரன்.

அவங்கவங்க வெட்டிப் போட்ட மரத்த பொம்ப ளிங்கெல்லாம் ஓடைக்கு அந்தாண்ட தூக்கிக்கினுப் போயிகிறாங்க. கெயவி, கெயவனுங்கல்லாம், கெய்சி போட்டெ மலாறு, செடி, கொடி எல்லாத்தையும் ஒன்னா உருட்டி தீ வெச்சிக் கொளுத்திக்கினு கீதுங்க. அது படார் படார்ன்னு வெட்ச்சிக் கொயுந்து வுட்டு எரியுது. ஆம்பள ஆளுங்கெல்லாம் பெரிய பெரிய மரத்த கோடாலியால வெட்டி துண்டு போட்டுக்கினு கீதுங்க. வெய்யிலு, தாங்க முடியாத வெய்யிலு. வேத்துக்கொட்டி ஜனம் ததும்பி நிக்கிதுங்க. மலாறு எரியற எடத்திலிருந்து ஓட்ற எலி, பாம்பு, பூச்சிய துன்றதுக்கினு மேலெ கோட்டானும் காக்காவும் பறக்குதுங்க. சடகாரன் அவங்க ஆளுங்கலெ ஓடை ஓரத்தில நிக்க வெச்சிட்டான். அதனால ஒரு ஜனமும் தண்ணி குடிக்க வரமுடியாம போச்சி.

பொன்னாங்கன்னிக்கு ஒன்னும் முடியில. நாக்கு வறண்டு போச்சி. தூக்கினு போன வெறவ போட்டு சுடப்பங்கொட்டை ஓடையில நாளு வா தண்ணிக் குடிக்க குனிஞ்சிச்சி. ஓட்ற தண்ணியில பச்ச கயத சாணி கலந்துகினு போவுது. நாத்தந் தாங்காம தண்ணி வர்ர தெசப்பக்கமா நிமிந்து பாத்திச்சி. சடகாரன் தண்ணில கெயத சாணிய கலந்துகினு பொன்னாங் கன்னிய பாத்தான்.

"என்னா மொறக்கீற... உனக்கொரு நாயம், உங்க ஆளுங்களுக்கொரு நாயம் இல்ல... இன்னும் கொஞ் சம் நேரம் பொருத்துக்க. நீ புள்ளதாட்சியா இருந் தாலும் எனக்கு கவலை இல்லெ... இன்னிக்கு இந்த தண்ணிய குட்சிட்டு, உங்கொயந்த வளந்திச்சின்னா... நாளைக்கு என்னதான் கொல்லும்... அதுக்கு முன்ன யாவுது கொஞ்சம் வதஞ்சி இருக்கனும்ன்னு ஆசப்பட றவன் நான்... கரையேறு..."

வவுத்துல ஒரு கையும், வாயில ஒரு கையும் வெச்சிக்கினு கரையேறனத, தூரத்தலிந்து பாத்துகினு இருந்திச்சி கெயவி. ஜனமெல்லாம் மரத்த வெட்டிக் கினே முசட்டை தழைய பச்ச பச்சயா உருவித்துன்னு கினு இருந்தாங்க. கெயவியும் முசட்டை தழைய பெரிச்சிக்கினு வந்து மெருமொவளுக்கு குடுத்து துன்ன சொல்லி குடுத்திச்சி. தண்ணி தண்ணியா இருந்த தழைய துன்னமுன்னா தாகம் தீர்ந்து போவும், காட்ல தண்ணி வெண்ணி இல்லாத எடத்தில இந்த தழையத் துன்னு தாகத்த அடச்சிக்கலாம். புளியாம் மரத்தில யானை கெட்டி கொயந்தய தூங்க வெச்சிருந்தத, கெயவி பாத்துட்டு வந்திச்சி. பெரிய பெரிய மரமெல் லாம் மண்ட மண்டையா சாய்ஞ்சிக்கினு கீது. எல்லாத் தையும் வெட்டி, கெய்சிக்கினு கீறாங்க. ஓணான், உடும்பு, காடை, கௌதாரி, முசலுன்னு எடத்த வுட்டு எடம் மாரி போயிக்கினு கீதுங்க.

பேரப்புள்ளங்க ரெண்டு பேரும் மூங்கெ நெல்லு கொண்டாந்து ஊட்டு வாசல்ல கொட்டித் தேவுனாங்க. காக்காவும், குருவியும் நெல்லு கொத்த வந்ததெ சின்னபையன் சொவுத்துல மாட்டியிருந்த மோளத்த எடுத்து டொங்கு... டொங்குன்னு தட்டிக்கினு இருந் தான். நெல்லு மேல இருந்த காக்காவும் குருவியும் ஓடிப்போச்சி. ஆனா கூண்டு மேல கீற கோயும், அதுக் குப் பக்கத்துல மைனாவும், தவுட்டுக் குருவியும், அணிலும் ஒரே யரச்சலும், கூச்சிலுமா போட்டுக்கினு இருந்திச்சி. அந்நேரம் பாத்துதான் சின்ன பையனுக்கு கோயிமுட்டை ஞாபகம் வந்து கிட்டெப்போவ எல்லாம் அப்பாலெ பறந்து கத்துச்சிங்க. கூண்டு உள்ள கைய வுட்டு நாளா பக்கமும் தேடனான். ஒன்னும் கையிக்குத் தெம்புடல. வெடுக்கினு புடுங்குற மாதிரி இருந்த கைய எடுத்துக்கினான். "யென்னா... என்ன கோயி கொத்துதுடா... நீயே எட்றா..."ன்னு சொன்னான். அண்ணங்காரன் கைய வுள்ள வுட்டுத் தேட, அவனையும் வெடுக்கினு புடிங்கிச்சி. படுக்கினு கைய வெளிய எடுத்துக்கினான். என்னையும் கோயி கொத்துதுடா... அம்மாவே வந்தாங்கனா முட்டைய எடுத்துக்குவாங்கடா... "வூட்ட நொயஞ்சி நடெ சொவுத்துல மோளத்த மாட்ட எக்கனான் தம்பி. கொஞ்ச நேரத்தில மயக்கம் வந்து வீந்தான். உள்ள ஓடன அண்ணனும் தம்பியப் பாத்தான். நொப்பையும் நொறையும. தள்ளி மயங்கிறத பாத்த அண்ணனுக்கும்



படிப்பகம்

www.padippakam.com

மயக்கம். ரெண்டு பேரு வாயில நொற வெளியத் தள்ளிக்கினு கண்ண சொருவி ஒன்னு மேல ஒன்னா வீந்துகந்தத பக்கத்துக் கொட்டாக்காரப் பசங்க பாத்துட்டு, வெறவு வெட்ற எடத்துக்கு ஓடிப் போயி சொன்னாங்க. சொன்னதுதான் தாம்சம். வெட்றத வுட்டுப்புட்டு யெல்லாருமா ஓடியாந்தாங்க புய்தி கௌம்ப.

"அய்யோ ரெண்டும் ஆம்பள புள்ளையாச்சே..."

"யாரு என்னா மாய வெச்சாங்களோ..."

"யாரு மந்திரம் வெச்சாங்களோ..."

"ரெண்டும் இப்படி வெறாக்கண்ணாட்டம் வெறச்சிக்கினு கீதே..."

முன்ன வந்தவங்க அயவ, கோயி கூண்டிலிருந்து பெருத்த கருநாகம் சரசரன்னு வெள்ளேரிச்செடி பொதருக்குள்ள தலெ சொருவி போநத ஜெனமெல் லாம் பாத்துக்கினு இருந்திச்சே ஒழிய, யாரும் அடிக்க போவல. காட்லகீற எந்த உசுரையும் கொல்லாத ஆளுங்க.

பொன்னாங்கன்னியும் கெயவியும் கூட்டத்தை வெலக்கினு பாத்தாங்க. கண்ணு நட்டுக்கினு வாயில நொப்பையும் நொறையுமா வெறச்சிக்கினுகீறத பாத்து பொறண்டு பொர்றண்டு அயுவுது கெயவி. வவுத்திலியும் வாயிலியும் அட்சிக்கினு அய்த புள்தாட்சி பொன்னாங் கன்னிக்கு பேச்சிமூச்சி இல்லாம போச்சி. ஜனமெல் லாந் தூக்கி மூஞ்சில தண்ணி அடிச்சி, ஒரு வா தண்ணி குடிக்க வெச்சி கெடுத்தனாங்க. கெயவி ஜனத்தெல் லாம் பாத்து அயிவுது.

"நாங்க யாருக்கு என்னா தீங்கு செஞ்சோம்..."

"நா ஒரு பாவமும் அறியலியே..."

கதற கதற அயிதிச்சி கெயவி. ஜனமெல்லாம் கெயவிய தூக்கி அப்பால குந்த வைச்சாங்க.

ஊட்டுக்கும் பின்னாலிந்த மூங்கிலு கொம்ப. வெட்டியாந்து ரெண்டு பாடயில வெச்சி தூக்கினுப் போயி பொதச்சிகிட்டு வூடு வந்து சேந்தாங்க. பொன்னாங்கன்னிக்கு அப்பதான் கொயந்த ஞாபகம் வந்து கேட்டுச்சி. சுத்தும் முத்தும் தேட்னாங்க. கெடைக்கில.

"வேல செஞ்ச எடத்தில வுட்டு வந்துட்டேன்... நான் கொயந்தெய எட்த்தார்லெ..."ன்னு அலறி அட்சிக்கினு அயிந்திச்சி.

"ஐயோ... மெருமொவ எடுத்தார்வாளுன்னு நானும் வுட்டு வந்துட்டேன்... அதெ புளியாம் மரத்துல யானெ கட்டி வச்சிக்கிறேன்..."ன்னு கத்தி கதறுச்சி கெயவி. வாலிப பசங்களாம் புளியாம் மரத்துல கட்டி வெச்சிகீற ஊஞ்சலப் பாக்க ஓட்னாங்க. பொயுது சாயர நேரமாச்சி.

கொத்து கொத்தா சிலிப்பிக்கினு நிக்கிற எலும் பும், நாலாப்பக்கமும் யரஞ்சிக்கீற கொல்லும் இலுஇலுன்னு இருந்திச்சி. கொயந்த தலைய சுரண்டிக் கினு இருந்த ஓநாயிங்களும் கொராதமை பொதருக் குள்ள புகுந்து ஓடிச்சிங்க. பச்செ ரெத்தம் தேங்கி இருந்திச்சி. யரஞ்சியிருந்த எலும்பையும் கொல்லை யும் ஒன்னா சேத்து, தேக்கு எலையாலெ மறச்சி வெச் சாங்க.

"இத வூட்டுக்கெல்லாந் தூக்கினு போவ முடியா துப்பா... வெட்டி வெச்சிக்கீற வெறவ எடுத்து தலை தெரியிறா மாதிரி அடுக்கிடுவோம். யார்னா ஒருத்துரு போயி எல்லாரையும் கூப்டாங்க. இங்கெயே கொளுத் திட வேண்டியந்தா..." பெரிய மனுசரு பேச்ச தட்டாம கொள்ளாம ஊட்டுக்கு ஓட்னா ஒருத்தன்.

சாவுக்கு வந்த ஜனமெல்லாம் கடப்பாங் கொட்டை ஓடையில குளிச்சிக்கினு யிருந்திச்சிங்க. கொயந்த செத்துப்போன சமாச்சாரத்த கேட்டு லபோ லபோன்னு அட்சிக்கினு, கொயந்த கீற எட்துக்கு ஓட்னாங்க. கெயவியாலெ ஓட முடியில.

"ஏங்கண்ணு... உனக்கு என்ன ஆச்சிப்பா..."

"நா சாவறதா... இருக்கிறதா..."

"ஐயோ... நா என்ன பண்ணுவேன்..."

"ஏ ஊமப் புள்ளயும் போச்சே..."

ரெத்தமும் சதையுமா கீஞ்சி போன மூஞ்சிய பாத்த கெயவி, கெல்லு எடுத்து மூஞ்சிய குத்திக்கிச்சி. எல்லா சேந்து புட்சிக்கினாங்க. புள்தாட்சி பொன்னாங் கன்னிய ரெண்டு பொம்பளிங்க தோள்புட்டய தாங்கி புட்சிக்கினாங்க. அதுக்கு கண்ணுந்தெரியல, காதுங் கேக்கல. எல்லாம் ஒரு கனவு மேரி தெரிஞ்சிச்சி அதுக்கு. அந்த எடத்தில ஓலமிட்டாப்பல கத்தி அயிந்திச்சி. ஒரு சத்தமும் தொண்டயிலிந்து வர்ல. அதுக்கு பறக்கிறாப்பல ஆச்சி. கட்டையில கொல்லி வெச்சிச்சி பொன்னாங்கன்னி. நாளா பக்கமும் திபு திபுன்னு தீ புடிச்சிகிச்சி. கெயவியும் மெருமொவளும் திரும்பி பாக்காம வூடு வந்து சேந்தாங்க. சொந்த பந்தமுன்னு கூட வந்த மக்க மனுசால்லாம் வூட்டுக்குப் போவ இருட்டாச்சி.

பேச்சிமூச்சி ஒன்னுமில்லாம இருந்த பொன்னாங் கன்னி வெறிக்க வெறிக்க வூட்டப்பாத்திச்சி. நடையில எலும்பு துருத்தி, வவுறு ஒட்டிக்கினு மொனவிகந்த கெயவி, அவித்தியே ஒரங்கிப்புட்ச்சி.

பொன்னாங்கன்னி உள் வூட்டுக்குப் போயி மல் லாந்து படுத்துக்கினு மோட்டு வளைய பாத்துக்கினு இருந்திச்சி. வவுத்து நோவ தாங்கல. நாக்கும், தொண்டயும் காஞ்சி ஒனந்த போச்சி. பின்னாலியே நவுந்து நவுந்து சொவத்தல சாஞ்சி உருகி உருகி அயிதிச்சி. மூனு மாசத்துக்கு முன்னால வூட்டுக்காரை யும், ஒரே நாள்ள மூனு புள்ளங்களையும் துன்னு தண்ணி குடிச்சிட்டு நொந்துங்கீது. நெருப்பு மேல குந்திங்கிற மேலி நெலிஞ்சி, இப்படியும் அப்பிடியும்மா சொவத்த புச்சி ஏந்து, அடுப்பு மோட்ல நின்னுச்சி. மாடத்தில கீற வெளக்கு தககதன்னு எரிய, கரும் பொ(ற)கெ சரஞ்சரமா சொவத்த கரியாக்கிச்சி.



படிப்பகம்

www.padippakam.com

**பொன்னாங்கன்னியும்**
**கெயவியும் கூட்டத்தை**
**வெலக்கினு பாத்தாங்க.**
**கண்ணு நட்டுக்கினு வாயில**
**நொப்பையும் நொறையுமா**
**வெறச்சிக்கினுகீறத பாத்து**
**பொறண்டு பொறண்டு**
**அயுவுது கெயவி.**
**வவுத்திலியும் வாயிலியும்**
**அட்சிக்கினு அய்த புள்தாட்சி**
**பொன்னாங்கன்னிக்கு**
**பேச்சிமூச்சி இல்லாம போச்சி.**

நெடுங்காலு கொம்புல தூக்குப் போட்டுக்னு தொங்கிச்சி. கயித்து இருக்க மூத்திரயும் பீயுமா பேள தொபாக்குன்னு தொப்புள் கொடி அரத்துக்குனு கொயந்த வீந்து கத்திச்சி. எங்கியோ அழுவற சத்தம் கேக்கிறாப்பல திடுக்கின்னு ஏந்த கெயவிக்கு உள் வூட்ல கொயந்த அயவரத கேட்டு உள்ளப் போயி பாத்திச்சி. வெளக்கு வெளிச்சத்தில கண்ணு பிதிங்கி நாக்கு கட்சிக்கின்னு தொங்கன ஒடம்பக்கண்டு தொண்ட கிழிய கத்தி கெயிஞ்க்கிச்சி. ஒடம்பு நடு நடுங்கிப் போச்சி. வாய பொத்திக்கினு அயுவுற கொயந்தய லபுக்குன்னு தூக்கிச்சி... கையிலிருந்து நூல் நூலா ரெத்தமும் அயுக்கும் நாற் நாறா ஒழுவுது. கௌசி வாடெ குப்புன்னு அடிக்குது. கொயந்திய துணி மேல கெடத்திப்புட்டு வெளிய ஓடியாந்து ரெண்டு வாசலையும் தட்டி வெச்சி அடச்சிபுட்டு உள்ள ஓட்ச்சி. ரெத்த வாடக்கி காத்து, கருப்பு, நாயி, கீறின்னு உள்ள ஓடியாறும்முனு தட்டி வெச்சி அடைச்சிச்சி. உள்ளபோயி கொய்ந்திய தூக்கி வெளக்குப்பக்கமா பாத்தா பொம்பள புள்ள. கத்தோ கத்துன்னு கத்திக்கினு இருந்திச்சி. வாயிலியும் மூஞ்சிலியும் இருந்த ரெத்தத்தியும், அயுக்கியும் சுத்த பத்தமா தொடச்சி எடுத்து கெடத்துச்சி. அறுவாவால தொப்புலு கொடிய அறுத்து முடிச்சி போட்டுட்டு, தேங்கியிருந்த ரெத்தத்தையும், கல்முசத்தையும் தொடச்சி வாரி சுருட்டி ஓரமா வெச்சிச்சி. இந்த ராவு வேலையில பக்கத்துலகீற கொட்டாக்கார ஆளுங்கல கூப்டார முடியாது. ரெத்த வாடெக்கி ஓநாயிங்க கொயந்திய தூக்கினு பூடும்னு மனசில நெனக்கிறப்ப சில்லுன்னு காதுல ஏதோ வீந்துச்சி. தொட்டு தடவி எடுத்துப் பாத்தா ரெத்தம். அலண்டு மேலப் பாத்திச்சி. கண்ணும் நாக்கும் பிதுங்கினு சொட்டு சொட்டா காலாண்ட இருந்து ரெத்தம் வழிஞ்சிக்கினு இருந்திச்சி. மனச தேத்தி அடக்கிச்சி கெயவி.

கொயந்த அயுவுறது நிக்கெல. நெத்தி வீங்கி போயி இருந்திச்சி. மூக்குல தேங்கியிருந்த சளிய வாய்வெச்சி உறிஞ்சி ஈத்து கொழ கொழன்னு துப்பிச்சி. எடது கையி சுண்டு வெரல கொயந்த சூத்தல சொருவி எடுத்து, வவுத்த கொஞ்ச அயித்தர வேகத்தல நாத்த மடிச்சிகினு காடீ பீ வெளிவந்து வீந்திச்சி.

கொயந்த அயுவறது அப்பவும் நிக்கெல. கொயந்திய நடைக்குத் தூக்கினு வந்து கெடத்திபுட்டு, வெளக்க எடுத்து நடையில வெச்சிச்சி. சொவுத்தல தொங்க வுட்டு இருந்த பெரிய பலவைய (தப்பு) எடுத்துகினு கொயந்த காது ஓரமா தட்டுச்சி. அப்பவும் நிக்கல. மோளத்த கவுத்து வெச்சி அதுமேல கொயந்திய கெடத்தி வெச்சிட்டு, சொப்புல பனவெல்லந் தண்ணிய கலக்கி உள்ளாமூக்கு வெக்க வாய்கிட்ட எடுத்துக்கினு போயி திடுக்கினு கைய மேல எடுத்துக்கிச்சி.

அதும்புள்ள கூத்துக்காரன், சடகாரன்ன வெட்ன கத்தி பான ஓரத்தல இருந்திச்சி. அத எடுத்தாந்து பனவெல்லந்த தண்ணில கத்தி மொனைய தொட்டு வாயில வெச்சிச்சி. அயிந்துக்கினு இருந்த கொயந்த கருப்பு ஓதட்ட காமிச்சிக்கினு சிரிச்சி சிரிச்சி சப்புச்சி. மறுபிடியும் மறுபிடியும் வெல்லந் தண்ணிய கத்தி மொனையில தொட்டு வெக்க சப்பிக்கினு கைய கால ஓதற மோளத்திலிருந்து சத்தம் வந்திச்சி, சத்தத்திலேயே கெயவி பாட்ன பாட்டு காடு பூரா கேட்டு மரமுழுக்க நனைஞ்சி வெள்ளம் பூரா கடப்பங்கொட்டை ஓடயில கலந்திச்சி.

வவுத்த கட்டி வாய கட்டி
வளத்து வச்ச'குஞ்சுகள...
நோவாம கொள்ளாம
கொத்திக்கின கோட்டானே - நான்
வவுரு வலிக்கிதுன்னு
வாந்தி எடுத்து நக்கிங்கிறேன் - நீ
வம்சம் அழிஞ்சிச்சினு
வக்கிரமா நிக்கிறியே...

கொத்து கொட மொளகா - என்
கொடல எரிச்ச மொளகா - நீ
அம்மியில ஒட்ட அரச்சி - என்
கண்ணுலியே கட்டிப்புட்டே...
அடப்பாவி மொவன - நீ
பாடயில போவப்போற - உன்
சேன அழியப் போவுது - என்
சாபம் பலிக்கப் போவுது...

கோட்ட கொடியிம்மா
கேக்குது எஞ்சனம்...
தோட்டம் தொறவும்மா
கேக்குது எஞ்சனம்...
காட்டெ அழிக்காதுனு
கேட்ட எஞ்சனத்த...
கொத்துசுரும் கொலயுசுரும்
கொத்து கொத்தா வாங்குறியே - உன்
கொட்டய அறுக்கிறதுக்கு - என்
பொட்டபுள்ள வாராடா...
என் பொட்ட புள்ள வாராடா
மாடறுக்கும் கத்தியோடெ....



படிப்பகம்

www.padippakam.com

*தமிழில் :* மருத்துவர் வீ. புகழேந்தி

# பலவந்தக் குடிபெயர்வு

**"அரசு நிலத்தை அத்துமீறி ஆக்கிரமித்தவர்களுக்கு இலவசமாக மாற்று இடம் என்பது ஜேப்படி திருடர்களுக்கு வழங்கப்படும் வெகு மானம் என்பதாகும்." – *நீதிமன்றம்.***

2004-இல் பிப்ரவரி 14 முதல் ஏப்ரல் மாதம் வரை இடைபட்ட காலத்தில் மட்டும் யமுனை ஆற்றங்கரையிலுள்ள 13,000-க்கும் மேற்பட்ட குடிசைகள் அழிக்கப் பட்டுள்ளன. பத்திரிக்கைகள் பலவும் இதனை "மக்களே அமைதியான முறையில் மனமுவந்து மாற்று இடத்தைத் தேடிச் சென்றுள்ளனர்" என சித்தரித்தாலும் உண்மை அதுவல்ல. காவல் துறையினரின் அடிகளுக்கும், தொல்லைகளுக்கும் பயந்தே அவர்கள் இடம் பெயர்ந் துள்ளனர். யார், யாரெல்லாம் முன்னின்று எதிர்த்தார் களோ அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இக்குடிசைகளை இடிக்கும்போது 5 பேர் உயிரிழந்து உள்ளனர். 2 பேர் தற்கொலை செய்துகொண்டனர். குடிசைகளை அழித்தொழிக்கும் இப்பணி ராஜ்காட் பின்புறத் திலிருந்து பழைய யமுனா நதி மேலுள்ள பாலம்வரை தினமும் தொடர்ந்த வண்ணம் உள்ளது.

மாற்று நிலங்கள் 25-35 கி.மீ. தொலைவில் உள்ள ஹோலாம்பி கலானா, பாவனா போன்ற இடங்களில் வழங்கப்பட்டுள்ளன. சமீபத்திய ஆய்வில் இவ்விடங் களில் மின்சார வசதி, பள்ளி வசதி மற்றும் மருத்துவ வசதி இல்லை எனத் தெரியவந்துள்ளது. தேவையான கழிப்பிட வசதி, குடிநீர் வசதி அங்கு இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஏறக்குறைய 50 ஆயிரம் மக்கள், இருந்த இடங்களிலிருந்து துரத்தி அடிக்கப்பட்டுள்ளனர்.

தொடரும் குடிசை அழித்தொழிப்பு நடவடிக்கைகளால், ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட (20,000 குடும்பங்களின்) மக்களின் வாழ்வு பாதிக்கப்படப் போவதாக அஞ்சப்படுகிறது. மார்ச் 3, 2003 அன்றைய தில்லி உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பில் "இந்த ஆக்கிரமிப் பாளர்கள் யமுனை ஆற்றை அசுத்தப் படுத்துகின் றார்கள்" எனக் கூறியதன் காரணமாகவே குடிசை அழித்தொழிக்கும் பணி அதிவேகமாக நடைபெற்று சாதாரண மக்களின் வீடும், வாழ்வும் கேள்விக் குறியாகியுள்ளது. 'ஆக்கிரமிப்பாளர்கள்,' 'அசுத்தப் படுத்துகின்றார்கள்' என்ற சொல்லாடல்களை இங்கு கூர்ந்து கவனிக்கவேண்டிய தேவையுள்ளது. இது போன்ற வாசகங்கள், அரசின் அங்கங்கள் ஏழைமக்களின் மீது தொடுக்கும் கருத்தியல் வன்முறையாக பல வருடங்களாக இருந்து வருகிறது. Hazards Centre on Yamuna Pollution and Pushta எனும் நிறுவனம் சமீபத்தில் செய்த ஆய்வில், தில்லியிலுள்ள மொத்தம் 3600 மில்லியன் லிட்டர் கழிவு நீரில் யமுனை ஆற்றங்கரையில் வாழும் மக்களால் ஏற்படும் பங்கு மிக, மிகச் சொற்பமே எனத் தெரியவந்துள்ளது. ஒருவருக்கு தண்ணீர் எவ்வளவு கிடைக்கிறது என் பதைக் கொண்டே, அவர் அதை எந்த அளவிற்கு அசுத்தப்படுத்த முடியும் என்ற தொடர்பை புரிந்து கொள்ள முடியும். அரசின் கணக்குப்படி குடிசைவாழ் நபர் ஒருவருக்கு ஒரு நாளுக்கு 40 லிட்டர் தண்ணீர் வழங்கப்படுவதாக தெரிவிக்கிறது. உண்மையில், நபர் ஒருவருக்கு 16-18 லிட்டர் (2 வாளி) தண்ணீர்தான் கிடைக்கிறது. ஆனால் மத்தியத்தர வர்க்கத்திற்கும், மேட்டுக்குடி மக்களுக்கும் நாள் ஒன்றுக்கு ஒரு நபருக்கு 450 லிட்டர் தண்ணீர் கிடைப்பதாக தகவல் வெளியாகி இருப்பதிலிருந்து ஏழைமக்கள்தான் அசுத்தப்படுத்துவதற்குக் காரணம் என்பது திட்ட மிட்ட பொய் என்பது சொல்லாமலே விளங்கும். அசுத்தம் செய்வதில் ஆலைகளின் பங்கு குறித்து தெளிவாகத் தெரியவில்லை.

இக்குடிசைகள் அழித்தொழிக்கப்படுவதற்கு உண்மைக் காரணம்தான் என்ன? அவர்கள் விட்டுச்செல்லும் பெருமளவு நிலத்தில், மேட்டுக்குடி மக்களின் பொழுது போக்கிற்காக நிறுவப்படும் மையங்கள் (clubs), சுற்றுலா தளங்கள், பொதுநிகழ்ச்சிகள், கலந்துரையாடல் மையங்கள், வணிக, நிதி மையங்கள் ஆகியவற்றை உருவாக்கவே. புஷ்டா எனும் இடம் மட்டும் 100 ஏக்கர் பரப்பளவைக் கொண்டது. தில்லியின் வளர்ச்சிக்கான நிறுவனங்கள் (Delhi Master Plan 2001 of Delhi Development Authority) தில்லியை மேம்படுத்த பல திட்டங் களை கையில் வைத்துள்ளன. தனியார் நிறுவனங் களும் ஆற்றங்கரை அருகில் உள்ள 24,250 ஏக்கர் நிலத்தை மேம்படுத்த பல திட்டங்களை வகுத்துள்ளன.



படிப்பகம்

www.padippakam.com

இந்த இடத்தை மேம்படுத்த 1 சதுர மீட்டருக்கு ரூ. 800 செலவாகும். அதன் வணிக விலையோ 1 சதுர மீட்டருக்கு ரூ. 2660 என இருந்து ரூ. 15,960 என முடிவெடுக்கப்பட்டு வணிக நிறுவனங்களுக்கு தாரை வார்க்கப்படும். பிப்ரவரி 16 2000-இல் 'அல்மித்ரா படேல் எதிர் இந்திய அரசு' எனும் வழக்கின் நீதிமன்ற தீர்ப்பின் சாரம் இதோ. "அரசு நிலத்தை அத்துமீறி ஆக்கிரமித்தவர்களுக்கு இலவசமாக மாற்று இடம் என்பது ஜேப்படி திருடர்களுக்கு வழங்கப்படும் வெகுமானம் என்பதாகும்." மத்தியதர வர்க்கமும், மேட்டுக்குடி மக்களும், குடிசைவாழ் மக்கள் மீது கொண்டுள்ள பகை உணர்வை வெளிப்படுத்துவதாகவே இது உள்ளது.

நம்மூரில் கொடைக்கானல், பிற மாநிலங்களில் கேரளா (மாதுங்கா), கர்னாடகா (நாகர்ஹோல்) ஆகிய இடங்களில் வன வாழ் (பாதுகாப்பு) சட்டம் (Wild Life Protection Act 1972) துணையோடு விரட்டியடிக்கப் பட்டது அனைவரது நினைவிற்கும் வரட்டும். மேல்சாதி வர்க்கங்கள் நிலத்தை சட்டத்திற்குப் புறம்பாய் ஆக்கிரமித்ததில் அவர்கள் மீது வழக்குக் கிடையாது. தாழ்த்தப்பட்ட மக்கள் நில உரிமை கோரினால் ஆக்கிரமிப்பாளர்கள் எனப்படுவர். முன்னவர் அடிப்படை வசதிகள் கிடைத்தும் கொள்ளைக்காக நிலத்தை கையகப்படுத்துகிறார்கள். பின்னவரோ அடிப்படை வசதிகள் ஏதும் அற்ற நிலையில் நில உரிமை கோரி நிலத்தைப் பயன்படுத்துகின்றனர். இதனால் பொதுமக்கள் யார் என்ற கேள்வியும், ஆக்கிரமிப்பாளர்கள் யார் என்ற கேள்வியும் எழுகின்றது.

புஷ்டா இடத்தை சேர்ந்த 3 லட்சம் மக்களும் இந்த நகரத்தின் வளர்ச்சிக்கென தங்களது கடின உடலுழைப்பை செலுத்தி வருகிறார்கள். அப்பகுதியில் வாழும் 10,000 மக்கள் தொழிற் சங்கங்கள் அமைத்து ரிக்ஷா வண்டி இழுப்பவர்களாகவும், கழிவுப் பொருட்களை சுமப்பவர்களாகவும், துப்புறவுப் பணியாளர்களாகவும் உள்ளனர். இப்பகுதியின் பெண்கள் அருகிலுள்ள மத்தியதர வர்க்கத்தினரின் குடும்பத்தினருக்கு பலவகையிலும் வீட்டு வேலை செய்து உதவி வருகின்றனர். பலர் கைவண்டிகளில் மக்களுக்குத் தேவையானவற்றை விற்று பிழைப்பு நடத்தி வருகின்றனர். பலர் தினக்கூலி தொழிலாளர்களாகப் பணி செய்து வருகின்றனர். இவர்களில் சிலர் 3 தலைமுறைகளாக அதே பகுதியில் வசித்து வருகின்றனர். ஆக உனக்கும், எனக்கும் கிடைக்கும் நில உரிமை (Right to stay) அவர்களுக்கு கிடைப்பது எந்த விதத்தில் தாழ்வானது? ஏழை மக்களுக்குக் கிடைக்க வேண்டிய (அரசுமூலம்) அடிப்படைத் தேவையான குறைந்த அளவு வீட்டு நிலம் பற்றிய உணர்வு அரசு/சமூகத்தில் இல்லாதது போலவே இவ்வணிக உலகில், வணிக நலன்களுக்கு, ஏழை மக்களுக்கான குறைந்த பட்ச வீட்டு வசதி உரிமை புறந்தள்ளப்பட்டுப் போனது.

தில்லி நகர மொத்த நிலப்பரப்பில் மிகச் சிறிய இடத்திலேயே 35 லட்ச மக்கள் மாற்று வழிகள் ஏதுமின்றி அடைந்துகிடக்கின்றார்கள். அதனால் தான் 3 தலைமுறைகளாக வாழ்ந்தும் புஷ்டா இடத்தைப் போன்று, நிரந்தர நிலஉரிமை கோரமுடியாத கோரச் சூழலில் தள்ளப்பட்டுள்ளனர். தில்லி நகரை மேம்படுத்த விரும்பும் திட்ட ஆய்வாளர்கள், அரசியல்வாதியான ஜக்மோகன் போன்றோர்கள் இதை சிங்கப்பூராக மாற்றுவோம், தேம்ஸ் நதிக்கரைக்கு இணையாக யமுனை ஆற்றங்கரையை உருவாக்குவோம் எனக் கூறும்போது இவர்களின் பார்வையில் தில்லி நகர வளர்ச்சிக்காக தினமும் கடின உடலுழைப்பில் ஈடுபடும் ஏழைக் குடிசைவாழ் மக்களின் பணி/பங்கு படுவதில்லை. வளர்ச்சித் திட்டங்களில் அவர்களுக்கென சிறிதளவு கூட இடம் இல்லை. ஒரு நகரின்/நாட்டின் வளர்ச்சி என்பது அர்த்தமுள்ளதாக இருக்க வேண்டுமெனில் அதன் தொடக்கம் சாதாரண ஏழை மக்களையும் உள்ளடக்கி அவர்களின் வளர்ச்சிக்கான ஒன்றாகவும் இருத்தல் அவசியம். இந்தியா ஒளிர்கிறதோ இல்லையோ, நாம் சிறிது நேரமாவது மின் விளக்குகளை தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள ஏழை/தாழ்த்தப்பட்ட/மிகவும்பிற்படுத்தப்பட்ட சிறுபான்மையினர் குறித்து சிந்திப்போமாக.

- உதவி : Saheli (Stop Eviction) சனவரி - ஏப்ரல் 2004)

## நித்திய மல்லிகை

■ அரங்க. மல்லிகா

அது ஒரு மழைக்காலம்
நித்திய மல்லிகைக்கு
சுண்டுவிரல் தேவை
பெரிதாய் சிரிக்கிறது
நிமிடத்து இறப்பை எதிர்கொண்டு

உப்பள மேட்டில் ஏறி இறங்கும் நிலா
ஊடுருவும்
நித்திய மல்லிகைக்குள்ளும்
நினைவுகளில்
கொடிகளின் நெளிவு
உள்நுழையும் நான்.

சிப்பிக்குள் திரளும் முத்து
நங்கூரக் கப்பல் மீது
வெறிச்சிடும் பார்வை
நெற்றியில் புடைத்திடும்
வியர்வைத்துளிகள்
அதிரும் காடுகள்
ஒவ்வொரு முறையும்
மழையில் நனைந்த
உடல் வியர்க்கிறது.

அப்பிக் கொள்ளும் இருள்
குப்பி உடைய பீறிடும் சோடா மழை
கலையும் உறக்கம்
இப்பொழுதும்
நித்திய மல்லிகையை
ஊடுருவும் கண்கள்



படிப்பகம்

www.padippakam.com

■ முனிமா

# கேள்வி பதில்

✉ 'அப்னா பஞ்சாயத்து' என்று தனிக் கோரிக்கை வைப்பதற்கான அவசியம் என்ன?

*- பு. ஜார்ஜ், தாம்பரம் கிறித்துவக் கல்லூரி.*

அப்னா என்றால் நமது, பஞ்சாயத்து என்றால் ஊராட்சி. நாமே நம்மை ஆளவேண்டும் என்பதுதான் இதன் அடிப்படை. நாகரிகமடைந்த எந்த சமுதாயமும் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறை.

'நாம்' என்று ஈ.வெ. ராமசாமி பேசியபோதெல்லாம் தலித்துகளைத் தவிர்த்துவிட்டார்

ஊர் என்பது சேரியிலிருந்து வேறுபட்டது. சேரி என்பது ஊரா இல்லையா என்பது நம் கேள்வி.

உ.பி. மாநிலத்தில் 1965-இல் 250 ஜனத்தொகைக் கொண்ட கிராமங்கள் தனி ஊராட்சிகளாக இருந்துள்ளன. ஊர் என்பதற்கு நிலப்பகுதி, மக்கள் தொகைதான் அடிப்படை என்றால், சேரி ஒரு தனி நிலப்பகுதியாக, 250 அல்லது 500 ஜனத்தொகையாகக் கொண்டிருந்தால் அது ஏன் தனி ஊராட்சியாக மாறமுடியாது? அவர்களே அவர்கள் முன்னேற்றத்தை ஏன் தீர்மானிக்கக்கூடாது அல்லது செயல்படுத்தக் கூடாது? ஆகவே, அப்னா பஞ்சாயத்தின் அடிப்படை இதுதான். சேரிகள் தனி ஊராட்சிகளாக வேண்டும். மேலும் விபரங்களுக்கு சிவகாமியின் அப்னா பஞ்சாயத்து நூலைப் படியுங்கள்.

✉ தலித் என்றால் கல்வி, பொருளாதாரம், சாதி, பால் ஆகிய அனைத்து நிலைகளிலும் ஒடுக்கப்பட்டவர்களைக் குறிக்கும். ஆனால் தாங்கள் சாதியை மட்டும் மையப்படுத்தி ஒடுக்கப்பட்டவர்களைக் கட்டமைப்பது ஏன்?

*- மைக்கேல் ஃபாரடே, சென்னை கிறித்துவக் கல்லூரி.*

எல்லாத் தளங்களிலும் ஒடுக்கப்பட்டவர்கள் உள்ளார்கள் என்பது உண்மை எனினும் நாங்கள் பொருளாதார ரீதியாக ஒடுக்கப்படுகிறோம் என்று குரல்கொடுக்கின்ற பிற்பட்ட சமூகத்தினர், அவர்தம் பெண்கள், சாதியினால் பெறப்படும் அரசியல், சமூக அதிகாரங்களை விட்டுக்கொடுக்கத் தயங்குவதோடு, தலித்துகள் வாயில் மலம் திணிப்பவர்களாக, சிறுநீர் கழிக்கும் ஒடுக்குமுறையாளர்களாக உள்ளார்கள். ஆகையால் சாதியை மய்யப்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது.

✉ தலித் மக்கள் வளர்ச்சிக்காக எவ்விதமான களப் பணிகளை மேற்கொள்கின்றீர்கள்?

*- அருள்மொழி, சென்னை கிறித்துவக் கல்லூரி*

கல்வி அறிவில்லாத எந்த சமூகமும் முன்னேற முடியாது. கல்வி என்பது வேலை வாய்ப்பபற்ற அல்லது வேலை வாய்ப்புக்கான பள்ளி, கல்லூரிப் படிப்பு மட்டுமல்ல. ஏன் தனது சமூகம் தாழ்த்தப்பட்டுள்ளது, கல்வி பொருளாதார நிலையில் பின்தங்கியுள்ளது என்பது குறித்த விழிப்புணர்வுதான் அம்பேத்கரின் 'கற்பி' எனும் பதத்தில் அடங்கியுள்ளது. ஆகவே அத்தகைய விழிப்புணர்வை கிராமப்புற மக்களுக்கு ஊட்டும் மிக முக்கியமான பணியை மேற்கொண்டுள்ளது புதிய கோடாங்கி. பல்வேறு அரசியல் கட்சிகளும், இயக்கங்களும் இன்று தலித் அரசியல் பேசிவரும் சூழலில் எம்மாதிரியான இயக்கம் அவர்கள் முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது அல்லது மக்கள் எவ்வாறு இயக்கத்தை வழிநடத்தவேண்டும் போன்ற விவாதங்களும் நடைபெறுகின்றன.

தற்காலிகமாக, அவர்களது பிரச்சினைகளுக்கு (நிலப்பட்டா, வீட்டு மனை, கல்வி உதவி, வேலை வாய்ப்பு) அரசு நிறுவனங்களுடன் தொடர்பும் ஏற்படுத்தித் தரப்படுகிறது.

இதுவன்றி தலித்துகளுக்கு வேலைவாய்ப்பு குறித்த செய்திகள், வழிகாட்டுதலுக்கான சில அமைப்புகள் ஏற்படுத்த எதிர்காலத் திட்டம் உள்ளது.

✉ தமிழக அரசு நடத்தும் தொழிற்படிப்பான மருத்துவம், பொறியியல் போன்ற பிரிவுகளில் 69% இட ஒதுக்கீடு அமல் படுத்தப்படுகிறது. மீதமுள்ள 31% பொதுபிரிவாக அறிவிக்கப்படுகிறது. Merit-இல் தேறிவரும் தாழ்த்தப்பட்ட மாணவர்கள் பொதுப்பிரிவான 31%-இல் சேர்க்கப்படு கிறார்களா? அல்லது SC பிரிவில் சேர்க்கப்படுகிறார்களா? இதில் அரசு பின்பற்றும் நிலை என்ன?

*- C. கெங்காதரன், அரண்வாயல், திருவள்ளூர்.*

ஒதுக்கீடு விதிகள் படி (General Rules 22-A) Merit-இல் வரும் தாழ்த்தப்பட்ட மாணவர்களை 31 சதவிகிதத்தில்தான் சேர்க்க வேண்டுமேயன்றி, தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கான 18 சதவிகிதத்தில் (69% சதவிகிதத்தில் அடக்கம்) சேர்க்கக்கூடாது. இது அரசின் நிலைப்பாடு. எனினும் கல்வி நிறுவனங்கள் இம்முறையைப் பின்பற்றுகின்றனவா என்பது தெரியவில்லை. அரசுத் துறையினர் எங்களுக்கு இது பற்றி

www.padippakam.com

புகார் வந்தால் நடவடிக்கை எடுப்போம் என்கிறார்கள். புகார்களை எதிர்பார்க்காது அரசு கல்வி நிறுவனங்களைக் கண்காணிக்க வேண்டும்.

**வன்கொடுமை தடுப்பு சட்டம் ஏற்படுத்தி இன்றுவரை லட்சக்கணக்கான புகார் மனுக்கள் பதிவு செய்யப்பட்டும் தீர்ப்புகள் தலித்துகளுக்குச் சாதகமாக இல்லையே. ஏன்?**

*- S. வகுளா பர்ணன், தேர்வாய், திருவள்ளூர்.*

இப்புகார் மனுக்களை விசாரிக்கவும், சட்டத்தை அமல்படுத்தவும் கூடுதல் டி.ஜி.பி. அளவில் உயரதிகாரி ஒருவர் உள்ளார். அவரது தலைமையில் ஒரு தனிப் போலீஸ் படையே உள்ளது. இச்சட்டத்தின் கீழ் குற்றங்களை விசாரிக்க ஆறு மாவட்டங்களில் தனி நீதி மன்றங்கள் இயங்குகின்றன. எனினும் இச்சட்டத்தின் கீழ் தண்டனை பெற்றவர்கள் விகிதாச்சாரம் ஏழு சதவிகிதம்தான்.

இதற்குக் காரணங்கள் பல. அவற்றில் முதன்மையானது,

● தலித் மக்கள் நிலமற்றவர்களாக இருப்பதுதான். நிலமற்ற, வறுமையிலுள்ள கூலி விவசாயிகள்தான் வன்முறைக்கு அதிகம் உள்ளாக்கப்படுகிறார்கள் என்று ஆய்வு கூறுகிறது. அவர்கள் வழக்கை எப்படி நடத்த முடியும்? வழக்கை நடத்திக் கொண்டே, எவன் உதைத்தானோ அவனிடம் வேலைக்குச் செல்ல வேண்டியுள்ளதே! ஆகவே தலித்துகள் நிலத்தை கெட்டியாகப் பிடித்துக் கொள்ள வேண்டியுள்ளது வன்கொடுமை தடுப்பு என்பது பஞ்சமி நிலப் போராட்டத்தோடும், நிலப்பங்கீடு முறைமையோடும் தொடர்புடையது என்பதை நாம் முதற்கட்டமாகப் புரிந்துகொள்ள வேண்டியுள்ளது.

● வழக்கறிஞர்கள் சமுதாயமாகட்டும், போலீஸாகட்டும், நீதிமன்றமாகட்டும் - பணமில்லாது இயங்காது. மேலும் இந்த நிறுவனங்களில் சாதியம் உள்ளது. ஆகையால் இத்துறையில் பணிபுரியும் அனைத்துத் தரப்பினருக்கும் சமூகப் புரிதல் ஏற்படவும், ஆரோக்கியமான விவாதங்களில் ஈடுபடவும் பயிற்சி தர வேண்டிய அவசியமுள்ளது.

● வன்கொடுமை தடுப்பு சட்டத்தை அமல்படுத்தவும், வன்கொடுமைகளை தடுக்கவும் மேற்கண்ட செயல்பாடுகளில் தலித் இயக்கங்கள் தங்களை முழுமூச்சாக அர்ப்பணித்துக்கொள்ள வேண்டிய அவசியமுள்ளது.

**அதிகாரத்திலிருந்து கொண்டிருப்பவர்களால் இலக்கியம் படைக்க முடியுமா?**

*பாரதி, சென்னை.*

உடுத்திக்கொள்ள வெள்ளை வேட்டி, நல்ல வேலை, ஒரு காதலி - இதில் ஏதேனும் ஒன்று கிடைத்தாலும் பல தமிழ் எழுத்தாளர்கள் எழுதுவதை நிறுத்தி விடுவார்கள் என்று எங்கோ படித்தது ஞாபகம் வருகிறது. இலக்கியம் பிச்சைக்காரர்களின் மடமோ, அல்லது வசதிபடைத்தவர்களின் கேளிக்கை மண்டபமோ அல்ல. எழுதுபவர்கள் வரையும் வாழ்க்கைப் பதிவுகள் அவை. எழுத்தாளர்கள் அருபமானவர்கள் இல்லை. எனவே அவரவர்களின் வாழ் சூழல், சமூகப் புரிதல், அனுபவம் இவை சார்ந்து படைப்புக்கள் வருகின்றன. யார், யாருக்காக, எதற்காக, ஏன், எப்படி ஒரு விஷயத்தை கையாளுகிறார்கள் என்பதைப் பொறுத்து எழுதுபவர்களின் அரசியலும் வெளிப்படுகிறது. ஒரு கலைப்படைப்பு என்பது சக மனிதனுடனான சமூக உறவை முன்னிறுத்தி சகலத்தையும் கேள்விக்குள்ளாக்க வேண்டும். அதிகாரத்திலிருப்பவர்களின் செயல்பாடுகளையும், அவர்களின் படைப்புகளையும் முன்னிறுத்தி அவர்களது எழுத்து அரசியலைக் கட்டுடைக்க வேண்டிய அவசியமுள்ளது.

## இளைஞனே முன்னேறு!

■ ஆ.ரா. இளங்கோ

தாயின் கருவறையிலிருந்து பிறந்து
அன்பெனும் பாசங்களின்று மலர்ந்து
இளமை யென்னும் ஊஞ்சலில் ஆடிபாடி
மனமெனும் கோயிலில் குடிகொண்டு
உயிரெனும் வாழ்நாள் முழுவதும் வாழ்வதுபோல்,

இளைஞனே நாம்
இளமை யென்னும் பயிர் செய்தால்தான்
முதுமை யெனும் வேலியை அடைய முடியும்

விழித்திரு இளைஞனே
கல்வி கற்று வளம் பெற வாழ்ந்திடு
உழைப்பெனும் கடலில் முத்தெடுக்க வேண்டும்
வியர்வை சிந்தி பாராட்டு நன்மதிப்பு பெற வேண்டும்
தரணியிலே புகழ்மாலை சூடி வாழ வேண்டும்

இளைஞனே இளைஞனே போராடு
வாழும் வரை போராடு
தேசத்திற்காக போராடு
நம் நாட்டுக்காக பாடுபடு இளைஞனே

உலக மக்கள் அனைவரும்
நன்மதிப்போடு வாழ
உறுதுணையாக இருந்திரு

தமிழன் போர்க்களத்தில்
பொங்கி எழு இளைஞனே
முன்னேறு இளைஞனே
பாடுபடு இளைஞனே
அன்பின் நட்புக்கு வாழ
வழி தந்திடு இளைஞனே! ●



படிப்பகம்

www.padippakam.com

# புதிய பாஞ்சாலி

■ மு. அம்சா

"ஏலேய் குமாரு... இங்க இன்னும் ரெண்டு பாத்திதான் இருக்கு, அடுத்த சரவுக்கு தண்ணிய திருப்பி வுடு. மண்ணு கொஞ்சமாவது இளக வேணாமா. பதமா இருந்தாத்தானே பயிரை நல்லா ஊனி மண்ணை அணைச்சுவிட முடியும்... சீக்கிரமா வந்து திருப்பி வுடு..." நடவு நட்டுக் கொண்டிருந்த பெண்கள் சத்தமிட மணியக்காரரின் மகன் குமார் கையில் பிடித்திருந்த மண்வெட்டியுடன் அடுத்த வரிசை பாத்திகளை நோக்கி ஓடினான்.

"ஏண்டி பொண்டுகளா.. கையிதான் ஆரிய நாத்து நடுது... வாயி என்னா பண்ணுது... எவளாச்சும் ஒரு பாட்டு பாடுங்களேண்டி..." வயதில் மூத்த குண்டுப் பாட்டி கூறவும் வெள்ளச்சி நொடித்தாள்.

"ஆமா கெழவி... பாட்டு ஒன்னுத்தான் கொறைச்ச..! நமக்கு நேந்துக்கற பொழப்புக்கு பாட்டுத் தானா வரும்... ஆட்டமும் சேர்ந்துள்ள வரும்." இரவு அவள் புருஷனிடம் வாங்கிய அடி அப்படி பேச வைத்தது.

"ஏண்டிம்மா இம்புட்டு சலிச்சுக்கற... இராக்கால பூசைநடந்துச்சா...? சத்தம் கேட்டுக்கிட்டேயில்ல இருந்தது..." மாரியம்மா வெள்ளச்சியின் வாயைக்கிண்ட,

"பூசைக்கெல்லாம் என்னா கொறைச்சலு. என்னைக்கு இவனுக்கு தாலியறுத்தனோ... அன்னையிலிருந்து அன்னாடும் பூசைதான. ஒரு வா சோறு நல்லாத் திங்க உடறானா... பொட்டா பொழுதன்னிக்கும் வெய்யில்ல இடுப்பு ஒடிய பாடுபட்டுட்டு போறம், செத்த நேரம் இராவுல நிம்மதியா தூங்க வுடறானா... பாவிப்பய தெனமும் குடிச்சிட்டு வந்து கண்ணு மண்ணு பாக்காம அடிக்கறான். வுட்டுத் தொலைச்சிட்டு போயிடலா முன்னு பாத்தா... எங்கன்னு போறது...? எந்த சொந்த பந்தம் செல்வாக்குல இருக்குது.. 'சீலை இல்லைன்னு சின்னாயி வூட்டுக்குப் போனா... ஈச்சம்பாய சுத்திக்கிட்டு எதுக்க வந்தாளாம் சின்னாயிக் காரி...'ங்கற கதையா... நமக்கு ஒண்டத்தான் எடமிருக்கா... ஒதுங் கத்தான் எடமிருக்கா..." வெள்ளச்சி அழுதவளாய் கூறினாள்.

வெள்ளச்சியின் கணவன் பழனி லாடப்பட்டறைக்கு சம்மட்டி அடிக்க செல்பவன். நாள் முழுக்க சம்மட்டி அடித்துவரும் காசில் ஒரு ரூபாய் மிச்சமில்லாமல் சாராயமாய் மாறி அவன் வயிற்றை சாப்பிட ஆரம்பித்துவிடும். சந்தைப்பேட்டை புதியமரத்தடியில் சாராயம் விற்கும் மாரக்காளிடம் தன் கூலிப்பணத்தையெல்லாம் கொடுத்து தீர்த்துவிட்டு வெறும் ஆளாகத்தான் வீடு வந்து சேருவான். வெள்ளச்சி பொறுக்க முடியாமல் ஏதாவது கேட்டுவிட்டால் அடி உதைதான். அவள் அன்றாடம் வாங்கும் அடி உதைகளைத் தான் 'பூசை' என்று சக பெண்கள் கேலி செய்தனர்.

"அட அழுவாதடி வெள்ளச்சி, நம்ப புருசன்மாரு யோக்கியதய இன்னைக்கு நேத்தா பாக்கறம். கட்டை காடு போயி சேர்ற வரைக்கும் இதைவுட்டா நமக்கு வேற வழியில்ல. ஒம் புருசன் குடியில அழிக்கிறான், எம் புருசன் லாட்டரி சீட்டுல அழிக்கறான்... வள்ளி புருசன் கூத்தியாளுங்களுக்குகுடுத்தே அழிக்கிறான்... வேலாயி புருசன் தர்மராசா மாதிரி சூதாடியே தோக்கறான். நம்மளுக்கு வாச்சவன் நல்லாருந்தா நாம ஏண்டி இப்படி காட்டுலயும் மேட்டுலயும் நாயாட்டம் சின்னப் படனும். இருந்த தோப்பு தொரவை யெல்லாம் தோத்துப்புட்டு குந்தக் குடிசை கூட இல்லாம பரதேசிகணக்கா இருக்கறம்... எல்லாம் நம்ம மண்டை ஓட்டுல எழுதுன மாதிரி தான் புள்ள நடக்கும். அழுவாம வேலையப் பாரு..." வெள்ளச்சிக்கு ஆறுதல் கூறினாள் குப்பாயி.

எத்தனை சுலபமான அணுகுமுறை. 'இப்படி ஆயிடுச்சே என்று அழுது அரற்றி கவலைப்படுவதை விட இதுதான் விதிக்கப்பட்டது' என்று ஏற்றுக்கொண்டு வாழும் மன தைரியமா... இல்லை காலங் காலமாய் அடிமைப்பட்டுக் கிடந்த பெண்ணடிமைத்தனத்தின் இயலாமையை விதியின்மீது போட்டு விட்டு விலகிக் கொள்கி றார்களா...?

"ஏண்டி... வேலாயி கொஞ்சம் வெரசா நட்டுக்கிட்டு வாடிபுள்ள... பூச்சி புடிக்கிறவளாட்டம் அங்கியே என்னா பண்ற... பொழுது எறங்கறதுக்குள்ள இந்த வயலை முடிச்சுப் புட்டம்னா மிச்சத்த நாளைக்கு பாத்துக்கலாம்ல..." குண்டுப்பாட்டி கடைசி பாத்தியில் குனிந்துகொண்டிருந்த வேலாயியை நோக்கி சத்தமிட "இந்தா வந்துட்டேன் பாட்டி" என்றவளாய் சேற்றில் புதைத்திருந்த காலை லாவகமாக இழுத்து அடுத்த பாத்தியில் வைத் தாள். இன்னொரு காலையும் உருவ முயல.. கண்கள் இருட்டிக் கொண்டு வந்து பாத்தியிலேயே சொத்தென்று விழுந்து மயக்க மானாள்.

"அடியே... என்னடி ஆச்சு...?" என்றவர்களாய் பதைத்து ஓடிவந்து அவளை இழுத்து வரப்பில் போட்ட பெண்கள் வாய்க்காலில் வந்து கொண்டிருந்த தண்ணீரை அள்ளி அவள் முகத்தில் அடித்தனர். வேலாயி கண்திறக்க சிறிது நேரம் ஆனது. கண் விழித்ததும் சைகையால் தண்ணீர் கேட்டு வாங்கி ஒரு சொம்பு தண்ணீரை ஒரு சொட்டு இல்லாமல் குடித்தாள். மீண்டும் களைப்பு கண்களை அசத்த மெல்ல இமை மூடினாள்.

"ஏண்டி வரும்போது ஏதாவது வவுத்துக்கு போட்டுக்கிட்டு வந்தியா இல்லையா...?" வேலாயி



படிப்பகம்

www.padippakam.com

இல்லை என்று தலையசைக்க பதைப்புடன் கேட்டுக்கொண்டிருந்த குமார் தன் கைகளில் இருந்த மண்வெட்டியை போட்டுவிட்டு வீட்டுக்கு ஓடினான். அடுத்த ஐந்தாவது நிமிடத்தில் குமாரின் அம்மா ராசாத்தி ஒரு தூக்கு போசினி நிறைய கரைத்த களியோடு ஓடிவந்தாள்.

"இந்தா புள்ள வேலாயி... இந்த களியை குடிச்சிப்புட்டு அப்புறமா செத்த படுத்துக்க தாயி..." என்றவளாய் வேலாயிடம் கொடுக்க ஆவலாய் அதை வாங்கி கண்கள் பளிச்சிட வேகமாய் குடித்தாள். பசித்தவன் சோத்துப் பானையை கண்ட நிலை இதுதானோ...!

எண்ணெய் காணாது வரண்ட செம்பட்டை தலையும், கிழிந்து போன ரவிக்கையும், சாயம்போன சேலையும், சேற்றில் விழுந்ததால் ஏற்பட்ட சகதியும் அவளை பரிதாபமாகக் காட்டியது. வறுமையின் கொடிய கரங்கள் அவள் மேனியெங்கும் மூர்க்கமாய் விளையாடியிருந்தது.

"வரும்போது சோறு திங்க நேரமில்லைன்னா ரவைப்போல போட்டு எடுத்துக்கிட்டு வந்துட்டா இங்க வந்து குடிச்சிக்கலாமில்ல..." ராசாத்தி பரிவாய் சொல்ல...

"வூட்டுல சோறாக்கி மூனு நா ஆச்சிக்கா. ஒரு மணி தானியம் இல்ல. கையில காசுமில்ல. எனக்கு கூலிக்காசு வந்திருந்தா ஒரு கிலோ நொய்யரிசி வாங்கி பொங்கியிருப்பேன். இங்க நடவு முடிஞ்சாத்தானே கூலி கெடைக்கும்னு நேத்து போயிட் டேன்..." வேலாயி மெல்ல பேசினாள். வழிந்த கண்ணீரை புறங்கையில் துடைத்துக் கொண்டாள்.

"ஒம்புள்ள வேலைக்கு போவாளே... அவ எதுங்கொண்டாரலியா...? ஒம்புருசன் சோத்துக்கு எதுந்தர மாட்டானா..."

"புள்ள பாஞ்சாலி ரெண்டு நாளா ஒடம்புக்கு முடியாம படுத்திருக்கா. எம் புருசன் கதைதான் தெரியுமே-சோத்துக்குன்னு கேட்டா அடி ஒதைதான். ஒரு துண்டோ ரெண்டு துண்டோ ஜமக்காளம் அடிச்சா, அதை கொண்டுபோயி தாய ஆட்டத்திலியே உட்டுப்புட்டு வந்துடுது. வயசுக்கு வந்த புள்ளைய வூட்டுல வச்சிக்கிட்டு நாளைக்கு ஒரு கண்ணாலங் காச்சின்னா... தோடு மூக்குத்தியாவது போடுனுமில்ல. நம்மள மாதிரி கூலிக்காரங்களே அஞ்சு பவுனு, பத்து பவுனுன்னு கேக்கறாங்க... ப்ச் எதை சொல்லியும் மண்டையிலே ஏற மாட்டங்குதுக்கா... என்னால அந்தாளை திருத்த முடியல..." வேலாயி புலம்பினாள். குடித்த களி கொஞ்சம் தெம்பை கொடுத்திருந்தது.

"சரி... சரி... சும்மா மனசை போட்டு கசக்காத. இந்த பொறம்போக்கு ஆம்பளைங்கள நம்பறத விட அந்த ஆண்டவனை நம்பலாம். மரம் வச்சவன் தண்ணி ஊத்தாமலா போயிடுவான். போறப்ப ஒங்கூலிய கேட்டு வாங்கிட்டுப்போ..."

பாஞ்சாலி எழுந்து உட்கார்ந்தாள். காய்ச்சல் கொஞ்சம் பரவாயில்லை போலிருந்தது. காலையில் வேலாயி எட்டணா பண்ணு ரெண்டும், ஒரு டீயும் மாத்திரையும் கணேசன் கடையில கடனுக்கு வாங்கிக் கொடுத்துவிட்டு சென்றிருந்தாள். அதை சாப்பிட்டுவிட்டு படுத்தவள் இப்போதுதான் எழுந்தாள். வெளிப்பானையில் தண்ணி இல்லை. மெதுவாக போய் ஒரு குடம் கொண்டு வந்தால் ஆகும் என்று எண்ணியவளாய் தலைமுடியை அள்ளிச் செருகிக்கொண்டு குடத்தை எடுத்துக்கொண்டு கிணற்றடிக்குச் சென்றாள். அங்கே வேலாயி பசியால் மயக்கமாகி விழுந்தது செய்தியாய் இருக்க தண்ணீர் எடுத்துக்கொண்டு வீட்டிற்கு ஓடி வந்தாள். வேலாயி இன்னும் வந்திருக்கவில்லை. காத்திருந்தாள்.

பாஞ்சாலிக்கு பதினெட்டு வயதாகிவிட்டது. நாளைக்கே திருமணத்திற்கு தயாரென்று நிற்பவள். ஆனாலும் அவள் அப்பன் கந்தனின் பொறுப்பற்ற தன்மையால் அவளும் கிடைக்கும் கூலி வேலைக்கு ஓடிக்கொண்டிருக்கிறாள். கந்தனின் போக்கு பிடிக்காமல் எத்தனையோ முறை சொல்லிப்பார்த்தாயிற்று. அவன் பணம் வைத்து தாயம் ஆடுவதை நிறுத்தவில்லை. நெசவு செய்து அவன் சம்பாதிக்கும் காசு சூதாட்டத்திலேயே போய் விட இவர்களின் சம்பாத்யமே உலையில் வேகும். சமயத்தில் அவர்களையும் அடித்து உதைத்து பணத்தை பிடுங்கிச் சென்று விடுவான். தான் ஆண்பிள்ளை என்ற வெட்டி வீராப்பு அவனிடம் நிறைந்து கிடக்கும்.

"ஏங்கண்ணு... இன்னும் ஒங்கம்மா வரலை...?" கேட்டவாறு வீட்டினுள் நுழைந்தான் கந்தன்.

"இன்னும் இல்லப்பா..."

"சரி... சரி... வந்துடுவா... நா கடைப்பக்கம் போயிட்டு வந்திடறேன்" என்றவனாய் மீண்டும் வெளியே கிளம்பினான்.

"நில்லுப்பா...!" பாஞ்சாலியின் குரல் கோபமாய் வந்தது.

"என்ன புள்ள..."

"இன்னைக்கு அம்மா வேலைக் காட்டுல மயங்கி உளுந்துட்டாளாம்..."

"அட...! ஏனாம்..."

"பசி மயக்கந்தான்..."

"பசியா... ஏன் சோறு தின்னுப்புட்டு போவ வேண்டியதுதான... சோறு தண்ணியில்லாம எதுக்கு அப்படி வேலைக்கு போறா..." கந்தன் அசைட்டையாக கேட்டான்.

"எல்லாம் சம்பாரிச்சுப் போடத்தான்..."

"பாஞ்சாலி..." கந்தனின் குரல் அதட்டலாய்.

"எதுக்குப்பா மெரட்டுற? கட்டுன பொண்டாட்டி சோறு தண்ணியில்லாம மயங்கிக் கெடக்கறா... பெத்த புள்ளை காச்சலோட ஒரு மருந்து மாத்திரைக்கு வழியில்லாம கெடக்கறேன். வந்ததும் என்னா ஏதுன்னு கேக்காம நீ பாட்டுக்கு சந்தைப்பேட்டைக்கு கௌம்புறியே, இது ஒனக்கே நல்லாருக்கா..."

"பொட்டப் புள்ளைக்கு வாயப்பாத்தியா... அடிச்சி பல்லு கில்லெல்லாம் பேத்துடுவேன். ஒழுங்கா இருந்துக்க... எதுத்தா பேசற..."

"போதும்பா... இப்படியே



படிப்பகம்

www.padippakam.com

அடக்கி அடக்கித்தான் அம்மாவை ஒன்னுமே இல்லாத வாயில்லாத பூச்சியா உக்கார வச்சிருக்க. இன்ன மேலும் ஒன்னோட அடிக்கும் ஒதைக்கும் பயந்துக்கிட்டு இப்படியே இருப்போம்னு நெனைக்காத..."

"என்னா பண்ணுவிங்க..."

"ஊரக் கூட்டறம்...! ஒம் பங்காளியெல்லாம் பஞ்சாயத்துக்கு வரட்டும். எங்களுக்கு ஒரு நாயஞ்சொல்லட்டும். பொண்டாட்டி புள்ளைக்கு சோறு போட முடியாதவனுக்கு குடும்பம் எதுக்குன்னு கேட்கறோம். சூதாட்டம்... சூதாட்டன்னு சந்தைப்பேட்டைய சுத்தறவனுக்கு பொண்டாட்டி புள்ளை எதுக்குன்னு கேட்கறோம். சந்தைப்பேட்டையிலேயே ஒரு புளிய மரத்தடிய பாத்து படுத்துக்கச் சொல்லுங்கன்னு சொல்றம்..." பாஞ்சாலி படபடத்தாள். தன்னை பெற்றவளின் பசி மயக்கம் அவளை உக்கிரம் கொண்டவளாக்கியது.

பாஞ்சாலியின் பேச்சு கந்தனை உசுப்பிவிட, "நா சொல்லிக்கிட்டே இருக்கன், நீ பாட்டுக்கு பேசிக்கிட்டே போற... திங்கற திமிரா...? வேலைக்கு போயி நாலு காசு சம்பாதிக்கறம்ங்கற தெனாவெட்டுல இப்படி பேசிறியா...? பொட்டைக் கழுதை... கையை காலை ஒடைச்சி மூலைல போட்டுடுவேன்..." என்றவனாய் பாஞ்சாலியின் முடியை பிடித்து முதுகில் அறைந்தான்.

"அடி... நல்லா அடி... சோறு போட கையாலாவன்னாலும் இதுக்கொன்னும் கொறைச்சலில்ல. பெத்துப்போட்ட நாளிலேருந்து ஒரு துணி எடுத்துக் குடுத்திருப்பியா? நீயா சம்பாதிச்சு ஒரு வேளை சோறு போட்டிருப்பியா...? என்னை தொட்டு அடிக்க ஒனக்கு வெக்கமாயில்ல..." பாஞ்சாலி பேசப் பேச இன்னும் அடி விழுந்தது. காய்ச்சலில் கிடந்தவள் என்று கூடப் பாராமல் அடித்தான் கந்தன். உடல் வலிமையால் ஒரு ஆணின் ஆதிக்கம் அங்கே வெற்றி பெற்றது. வயது வந்த பெண்ணை கை நீட்டி அடிக்கக்கூடாது என்ற நியதி மீறப்பட்டது. பெற்றவனின் கடமையை சுட்டிக்காட்டிய பெண் சிறுமைப் படுத்தப்பட்டாள். பெண் என்றுமே அடிமைதான் என்று அங்கே நிரூபணமாகிக் கொண்டிருந்தது.

மகளாய்... மனைவியாய்... தாயாய்... பருவத்திற்கேற்றாற்போல் பட்டம் மட்டும் மாறும் நிரந்தர அடிமையாய்.

மறுநாள்!

பாஞ்சாலி வேலைக்குச் செல்லவில்லை. அவளுக்குள் புயலடித்துக் கொண்டிருந்தது.

"ஒங்கப்பங்கிட்ட எதும் வாய் பேசாதடி பாஞ்சாலி. ஆம்பிள்ளைங்க அப்படித்தான் இருப்பாங்க. நாமதான் அனுசரிச்சிக்கிட்டுப் போவனும். இன்னைக்கு நேத்தா பாக்கறோம். அந்நாளுக்கு கழுத்து நீட்டினதலிருந்து இதே கதைதான். இனிமேலயா திருந்திடப்போவுது. எப்படியோ கெட்டு ஒழியட்டும். நமக்கென்ன கை காலு மொண்டி மொடமாவா போச்சு. ஒடம்புல தெம்பு இருக்கறவரைக்கும் ஒழைச்சு திங்கலாம்... அதுக்குமேல ஒரு அரளி வெதையோ... ஒடுவந்தலையோ இல்லாமயா போயிடுது..." வேலாயி மகளை சமாதானப் படுத்தினாள்.

"இல்லம்மா... ஆரம்பத்துலர்ந்து நீ எடங்கொடுத்திட்ட அப்பனுக்கு. தான் ஆம்பிளை, எப்படி வேணும்னா இருக்கலாமுன்னு நெனைப்பு அந்தாளு மனசுல. இவரு சூதாடப் போறதுனால நம்மள எத்தனை பேர் எகத்தாளம் பேசறாங்கன்னு தெரியுமில்ல. ஒரு ஆம்பிளை வெட்டித்தனமா மெரட்டறதுலயும், பொம்பளைய அடக்கி ஆளறதுலயும் மட்டும் இல்லம்மா. எல்லா விதத்துலயும் ஆம்பிளையா இருக்கனும். நீ போ... சாயங்காலம் வரும்போது நமக்கும் விடிஞ்சிருக்கும்..." என்றவளாய் தாயை அனுப்பி வைத்துவிட்டு பாத்திரங்களை தேய்ப்பதற்கு எடுத்து வெளியில் போட்டாள். ஆம்பிளைங்க எந்த தப்பு வேணா செய்யலாம், பொம்பளை கேட்கக் கூடாதுங்கற எண்ணத்தை அடித்து நொறுக்க அவளுள் ஆவேசம் மூண்டது.

சந்தைப்பேட்டை மரங்களால் நிறைந்திருந்தது. ஒவ்வொரு புளிய மரத்திற்கடியிலும் திட்டு கட்டப் பட்டு அதன் மீதே கடைகள் பரப்பி வியாபாரம் நடைபெறும். சந்தை நாள் தவிர மற்ற நேரங்களில் தாயம் ஆடறதும், ஆடுபுலி ஆடுவதுமாக கிடக்கும் சந்தைப் பேட்டை. பொழுது போக்குக்கு என்று ஆடுவார்கள். ஒரு ஆட்டம் ஆடிவிட்டு போகலாம் என்று உட்காருபவர்கள் ஆட்ட விறுவிறுப்பில் தங்களை மறந்து கடனுக்கும் ஆடுவார்கள். கொஞ்சம் மரியாதைக்கு பயந்தவர்கள் சந்தையை ஒட்டியுள்ள சுடுகாட்டிற்கு போய்விடுவார்கள். விவசாய முள் நிறைந்த புதர்களுக்கு இடையில் சிமெண்ட் காரை போடப்பட்டிருக்கும் சமாதிகளில் கரம் போட்டு விளையாடுவார்கள். ஆட்டம் முடிந்ததும் நல்ல பிள்ளைகளாக வெளியேறிவிடுவார்கள். அவர்களில் கந்தனும் ஒருவன்.

பாஞ்சாலி ஒரு தீர்க்கமான முடிவோடு சுடுகாட்டை நோக்கி சென்று கொண்டிருந்தாள். கந்தன் மத்தியானமே நெசவுக்கொட்டாயிலிருந்து வந்துவிட்டதை தெரிந்து கொண்டுதான் வந்திருந்தாள்.

ஒரு சமாதியில் தாயக்கரம் வரையப்பட்டு கற்கள் எல்லாம் தயாராக வைக்கப்பட்டிருந்தது. மூன்றுபேர் யாருக்காகவோ காத்திருந்தனர். இன்னும் ஒருத்தன் வந்துவிட்டால் ஆட்டத்தை துவக்கி விடலாம்... என்ற ஆவலில் எட்டிப் பார்த்துக்கொண்டிருந்தனர். அங்கே பாஞ்சாலி வரவும் வியப்புடன் ஒருத்தருக்கொருத்தர் பார்த்துக் கொண்டனர்.

"என்னடா... கந்தமூட்டுப் பிள்ளை இங்க வந்துக்கிட்டு இருக்குது..." என்றான் ஒருத்தன் ஆச்சரியமாய். சுடுகாட்டுப் பகுதிக்கு பெண்கள் யாரும் வருவதில்லை. வெளிக்காட்டுக்குபோவது என்றால் கூட ஏரிக்குத்தான் போவார்கள். ஆம்பிள்ளைகள் மட்டுமே இங்கே வருவார்கள். பாஞ்சாலியின் வருகை அவர்களை வியக்க வைத்ததில் வியப்பில்லை.

"அவங்கப்பன தேடி வருதோ



படிப்பகம்

www.padippakam.com

என்னமோ..." என்றான் மற்றவன்.

பாஞ்சாலியும் அவர்களை நெருங்கிவிட்டாள். "என்ன புள்ள பாஞ்சாலி, இந்தப் பக்கம் எதுக்கு வந்த..? ஒங்கப்பனை பாக்கனும்னா யார்ட்டயாவது சொல்லி அனுப் பக்கூடாது...?" கண்டிப்புடன் பேசி னான் ஒருவன்.

"ஏன்... எங்கப்பன பாக்கத்தான் வாணுமா...? நாங்கள்ளாம் தாயம் ஆடமாட்டமா...?" பாஞ்சாலி கேட்க மூவரும் சட்டென்று எழுந்துவிட்டனர்.

"இவள் என்ன சொல்கிறாள்... தாயம் ஆடவா... இங்கேயா..." நம்ப முடியாமல் அவளைப் பார்த்தனர்.

"அட ஒக்காருப்பா... எதுக்கு இப்படி பேயடிச்சமாதிரி நிக்க றிங்க...? என்ன ரெட்டாளு ஆட்டமா... ஒத்தாளு ஆட்டமா...?" சமாதிமேல் ஜிங்கென்று ஏறி உட்கார்ந்தாள்.

"ஏ... புள்ள பாஞ்சாலி... ஒனக் கென்ன பைத்தியங்கியித்தியம் புடிச்சிப்போச்சா..."

"என்றாப்பா இது...? பையித்தி யம் புடிச்சித்தானா தெனத்துக்கும் நீங்க இங்க வந்து ஆடுறிங்க...? எங்கப்பன் வந்து ஆடுது...? அதெல் லாம் ஒன்னுமில்ல... நா நல்லாத் தான் இருக்கேன்... போடுங்க... ம்... யார் மொதல்ல ஆரம்பிக்கிறது? சும்மா மசமசன்னு நிக்காம தொடங்குங்க. என்னா வைச்சிருக் கிங்க... தாயக் கட்டையா... புளியங் கொட்டையா... இல்ல பலவரையா... ம்... எதானாலும் பரவாயில்லை. சரி... சரி... யார் யாரு செட்டு...? முத்தண்ணா நீயும் நானும் ஒரு செட்டு. மாதையனும் கருப்பனும் ஒரு செட்டு. என்னா சரியா..." பாஞ்சாலி பேசிக்கொண்டே போக அந்த மூவரும் பிரமை பிடித்து நின்று கொண்டிருந்தனர்.

அவர்களை நிமிர்ந்து பார்த்த பாஞ்சாலி, "அட என்னப்பா இது நின்னுக்கிட்டே இருக்கிங்க... நா இன்னைக்கு இருபத்தைஞ்சு ரூபா கொண்டு வந்திருக்கேன்... எப்படி யும் ஒரு ஐம்பது ரூபாயோட வூட்டுக்குப் போவனும்... ஒக்கா ருங்க." சமாதியை தட்டிக்காட்டி அவர்களை அமரச் சொன்னாள்.

அதற்குள் விளையாடுவதற்கு தாமதமாக வந்த கணேசன் நிலைமை யை உணர்ந்து சுடுகாட்டின் நடுப் பகுதியில் தாயம் விளையாடிக் கொண்டிருந்த கந்தனிடம் விசயத்தை ஓடிப்போய் கூற அவன் அடித்துப் பிடித்து ஓடிவந்தான்.

"பாஞ்சாலி..." என்று அலறிய வன் எட்டி அவள் முடியைப் பிடிக்கத் தாவ சுற்றி இருந்தவர்கள் இழுத்துப் பிடித்துக்கொண்டனர்.

"விடுங்கப்பா... என்னை. இந்த அடங்காப்பிடாரி நாயி எங்குடும் பத்து பேரையே கெடுத்துடு வாளாட்டங்குது. என்னா தகிரியம் இருந்தா அவ இங்க வந்துருப்பா...! அட விடுங்கப்பா என்னை... அவ ளுக்கு இங்கியே சமாதி கட்டிப் புடறேன்..." என்றவனாய் திமிறி னான்.

"விடுங்க... அந்தாளை... என்ன செய்றாருன்னு பாக்கலாம். மேல என்னத்துக்கு கை வைப்பாரு...? அவரு தாயம் ஆட வரலாம், நா வரக்கூடாதா...? சூதாட்டத்துல சம்பாதிக்கலாமுன்னுதானே வந்திருக்காரு... என்னாலயும் இதே ஆட்டத்துல சம்பாதிக்க முடியும். குடும்ப மானமாமே குடும்ப மானம். இவரு ஆடறப்போ போவாத மானம் இப்பா போவுதாங்காட்டி யும். இது தப்பு இல்லன்னுதான இவுரு தெனமும் இங்க வர்றாரு. தப்பே இல்லாத ஒரு காரியத்தை மக செஞ்சா என்ன... பொண் டாட்டி செஞ்சா என்ன... எதுக்கு இவுரு இப்படி குதிக்கறாரு...?

குடும்ப மானங்கறது பொம்ப ளைக்கு மட்டும் எழுதிக் குடுக்கலே. ஆம்பளைக்குந்தான் இருக்குது. பொதிமாடு கணக்கா எங்க தலை யில மானம் மரியாதை, கௌரவம் னு சொமைய மேல ஏத்திவுட்டுட்டு நீங்க அவுத்து விட்ட கழுதை கணக்கா சுத்துவிங்க. ஏமாளி பொம்பளைங்க ஒங்க ஆட்டத்தை பாத்துக்கிட்டு சும்மா இருப்பமா...?" சாட்டையடியாய் கந்தனுக்கு வார்த்தையடி விழுந்தது.

"ஆம்பளைங்கன்னா அப்படி இப்படி இருக்கத்தான் செய்வாங்க அதுக்கு இங்க வந்து இப்படி ராவுடி பண்ணனுமா பாஞ்சாலி..." கந்தனின் கூட்டாளிகளில் ஒருவன் அதட்டலாய் கேட்க...

பாஞ்சாலி மேலும் கொதித் துப் போனாள். "தூத்தெறி... இப் படி பேச வெக்கமாயில்ல ஒனக்கு போயி ஒம்பொண்டாட்டிய பாரு ஏழு எடத்துல கிழிச்சுப் போன சேலய இழுத்து இழுத்து மூடி மறைச்சிக்கிட்டு காட்டு வேலைக்கு போறா. ஒம்பையன பாரு... இளங் குருத்தாட்டம்... படிக்கற வயசுல கவுத்து மெசினுக்கு போயி கையெல் லாம் கொப்புளம் போட போட கவுரு உடறான். அதுங்களுக்கு ஒழுங்கா சவரட்னை பண்ண முடி யல... அதுங்க ஒழைப்புல தின்னுக் கிட்டு வாய் பேச வந்துட்டான் வாய். ஆம்பளை ஒடம்புல மட்டு மில்லய்யா... அவன் செய்ற செய்கை யிலயும் இருக்கனும்..." பரிந்து வந்தவனுக்கு அபிசேகம் கிடைத் தது.

"பாஞ்சாலி... நீ இப்ப வூட் டுக்கு போவப் போறியா இல் லையா...?" கந்தன் கத்தினான். அவ மானத்தில் அவன் உடல் கிடுகிடு வென்று ஆடியது.

"சும்மா கத்தாதப்பா... நா போவமாட்டேன். நீ போயி ஒன் ஆட்டத்தப் பாரு. இவங்க எங்கூட ஆட வரலைன்னா போறாங்க. வெரலசைச்சா ஒன்னாட்டம் எத் தனைபேரு. ஆம்பளைகூட வெளை யாடி ஜெயிக்கறதவிட பொம்பளைக் கிட்ட வெளையாடி ஜெயிக்கறது சுலபமுன்னு நெறையப் பேரு வருவாங்க. ஒன்னைவிட பந்தாவா ஆடிக்காட்டறன் போ. வூட்டுக்குப் போவும்போது ரெண்டுபேரும் கை நிறைய சம்பாதிச்சிக்கிட்டுப் போலாம் போப்பா..." பாஞ்சாலி அமைதியாக கூறியவளாய் மீண்டும் சமாதியின் மீது அமர்ந்து கலைந்திருந்த காய் களை ஒழுங்காக அடுக்கினாள்.

"பாஞ்சாலி..." கந்தன் கதறி னான். அவளது முடிவை மாற்ற முடியாது என்பதை உணர்ந்த போது அழுகை வெடித்தது. அவ னது தவறு நெஞ்சை சுட்டது. குடி மட்டும்தான் குடியை கெடுப்ப தல்ல. சூதாட்டமும் குடும்பத்தை



படிப்பகம்

www.padippakam.com

அழிக்கும் என்பதை உணர்ந்து கூனிக்குறுகினான். தன்னுடைய இந்த நிலைதானே தன் மகளை வரக்கூடாத இடத்திற்கெல்லாம் வரவைத்துவிட்டது என்று வெட்கிப்போனான்.

"எதுக்குப்பா அழுவுற...? இது ஒரு வெளையாட்டு. சும்மா வெளையாடறத காசு வைச்சு வெளையாடறம். வந்தா நமக்கு லாபந்தானேன்னு நீதானே சொல்லுவ. இதுவும் சம்பாத்தியம் தான்னு அடிக்கடி சொல்லுவியே... அதை நா தொடர்ந்து செய்யறதுல என்னப்பா தப்பு. ஒனக்கு வாரிசு நான்தானே... நீ செய்யறத நா செய்யறதுலே என்னப்பா தப்பு..."

"பாஞ்சாலி... போதும்புள்ள... போதும். இன்னமே பேசாத..." என்று அரற்றியவனாய் ஓடிவந்து அவளது கைகளை பிடித்துக் கொண்டான். "குடும்ப மானமே பொம்பளைங்க கையிலதான் தாயி இருக்குது. ஒரு ஆம்பளை கெட்டுப்போனா அதை ஊரு ஒலகம் மறந்துடும். பொம்பளை கெட்டுப் போனா அவளை பொழைக்கவே வுடாது கண்ணு..."

"இல்லப்பா மறுபடியும் தப்பா பேசற. ஆம்பளை, பொம்பளை ரெண்டு பேத்துக்கும் நியாயம் பொதுவாத்தாம்பா இருந்துச்சி. அதை ஒங்களுக்கு சாதகமா எடுத்துக்கிட்டு எங்களை தலை நிமிரவுடாம செஞ்சிட்டிங்க. செய்யற தப்பையெல்லாம் செய்துட்டு ஆம்பிளை அப்படித்தான் செய்வான்னு நீங்க செய்யற தப்புக்கு நியாயந்தேடிக்கிறிங்க. ஆம்பிளை பத்து பேத்துக்கிட்ட போவான்... பொம்பளை அப்படி இருக்க முடியுமான்னு கேப்பிங்க. நீங்க செய்யற தப்பை அப்படியே நாங்க திருப்பி செய்யனும்னு ஒன்னு மில்ல. பத்து பேருகிட்ட போற ஒங்களை ஒதுக்கி வைக்க முடியுமில்ல. அடங்கி கெடக்கற பொம்பளை ஆவேசப் பட்டு நிமிர்ந்து நின்னா ஒருத்தரும் அவளை ஒன்னும் செய்ய முடியாது. தெரிஞ்சுக்கங்க. நம்ம வூட்டுல என்னைக்கோ அம்மா பொங்கி எழுந்திருக்க வேண்டியவ. கோழைத் தனத்தால குனிஞ்சிருந்தே குடியை கெடுத்துக்கிட்டா. எனக்கு ஒங்கிட்ட ஒன்னும் பயமில்ல... நீ திருந்தனும். குடும்பம், புள்ளைக் குட்டின்னு உணரனும்... இல்லே... நா அழிஞ்சு போறதை உங்கண்ணால பாக்கனும்... நீயே முடிவு செஞ்சுக்க..."

எந்த தகப்பன் தன் பெண் அழிவதை பார்க்க நினைப்பான். கந்தனும் மனிதன்தானே. ஒரு தகப்பனாய் அவன் உள்ளம் பதறியது. மனைவின் கெஞ்சலை மதிக்காதவன் மகளின் மிரட்டலுக்கு பணிந்தான்.

"இல்ல கண்ணு... இதுக்கு மேலயும் நா திருந்தலண்ணா மனுசனேயில்ல. ஒந்தலைமேல அடிச்சி சொல்றன்... இனிமே தாயக்கட்டையன்னு கைல தொட மாட்டேன். சத்தியமா சந்தைப்பேட்டை பக்கமே வரமாட்டேன்... வா... போகலாம்..." அழுது அரற்றிய கந்தனை கண்ணீர் துடைத்து கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு சுடுகாட்டை விட்டு வெளியேறினாள். அவர்களின் பின்னால் அந்த சூதாட்டக் கும்பலும். நாளை அவர்கள் மகளும் ஒரு பாஞ்சாலியானால் தாங்க மாட்டார்கள். அந்த எண்ணம் பிடறியைப் பிடித்து உலுக்க தாயக்கட்டைகளை தூக்கி வீசிவிட்டு திருந்திய மனிதர்களாய் நடந்தார்கள்.

துரியோதனின் குடல் பிடுங்கி சபதம் முடித்த அன்றைய பாஞ்சாலியைப் போல் தன் தந்தையின் மனதில் வேரோடிப்போயிருந்த சூதாட்டம் என்னும் அரக்கனை அழித்துவிட்டு அமைதியாக திரும்பிக்கொண்டிருந்தாள் பாஞ்சாலி. ●

# அறிவிப்பு

தென்னிந்திய தலித் எழுத்தாளர் மற்றும் கலைஞர் பேரவையின் கிளை திருவள்ளூர் மாவட்டத்தில் 17.10.2004 ஞாயிறு அன்று துவங்கப்பெற்றது.

| | | |
|---|---|---|
| ஆலோசகர் | : | திரு. K. முருகேசன் |
| தலைவர் | : | திரு. காகன் |
| செயலாளர் | : | திரு. K.M. சேகர் |
| பொருளாளர் | : | திரு. K.M. சித்தார்த்தன் |
| இணைச் செயலாளர்கள் | : | திரு. D.M. குணா |
| | | திரு. திராவிடச் செல்வன் |

ஆகியோர் பங்கேற்று, அலுவலகம் ஒன்றை ஏற்படுத்தி கிராமப்புறங்களில் முகாம்கள் நடத்த உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.

பெரம்பலூர் மாவட்ட V. களத்தூரில் 23.10.2004 அன்று நடைபெற்ற எழுச்சி முகாமின்போது, புதிய கோடாங்கி வாசகர் வட்டம் துவங்கப்பெற்றது.

அமைப்பின் நிர்வாகிகள்

| | | |
|---|---|---|
| தலைவர் | : | திரு. ப. குமாரவேல் |
| செயலாளர் | : | திரு. R. சீனிவாசரா |
| பொருளாளர் | : | திரு. K. காசிராஜா |
| துணைத்தலைவர் | : | திரு. D. பழனிமுத்து |
| துணைச் செயலர் | : | திரு. S. பச்சமுத்து |
| ஆலோசகர் | : | திரு. மு. கண்ணன் |


படிப்பகம்

www.padippakam.com

■ குடியரசன்

# மக்கள் அறியாத அம்பேத்கர்

மரணத்தின் முழுப்பிடியில் சிக்கித்தவித்த கன்றுக் குட்டியை கொன்றுவிடச் சொன்னதாக காந்தியைப் பற்றி இந்த உலகம் கேள்விப்பட்டிருக்கிறது. மற்றவர்கள் படும் துன்பத்தைக் கண்டபோதெல்லாம் தன் மனம் புதிய முடிவுகளை எடுத்து மகாத்மாவாக தன்னை காட்டிக் கொண்டவர் காந்தி.

பதினான்கு வயதுடைய ஒரு பெண்ணை பாலியல் வல்லுறவு (rape) மூலம் சிதைத்துவிடுகிறான் ஒரு கொடூரன். அந்த குற்றவாளிக்கு இரண்டாண்டு கழித்து மூன்றாண்டு கடுங்காவல் தண்டனையை உயர்நீதிமன்றம், மத்திய மாகாணங்கள் விதிக்கிறது. அவனுக்கு ஓராண்டு தண்டனை பூர்த்தியானவுடன், அவனுடைய மீதமிருந்த இரண்டாண்டு தண்டனை காலத்தை உள்துறை அமைச்சர் பீம்பாய் ரத்து செய்கிறார்.

ஒரு பெண்ணை சீரழித்தவனுக்கு மூன்றாண்டு கடுங்காவல் தண்டனை மிகவும் குறைவானது. அதிலும் இரண்டாண்டு தண்டனையை ரத்து செய்து உள்துறை அமைச்சர் ஆணை பிறப்பித்திருப்பது மிகவும் கொடூரமானது.

காரணம், அந்தப் பெண் தாழ்த்தப்பட்ட சமூகத்தின் ஒரு பிரிவான சம்பார் இனத்தைச் சார்ந்தவள். சம்பந்தப்பட்ட குற்றவாளியின் பின்னணி, காங்கிரசு கட்சியுடன் ஆழத் தொடர்புடையது.

இந்த நிகழ்வு 1936-இல் அன்றைய மத்திய மாகாணங்களில் நடந்தது. குற்றவாளியின் பின்னணி காங்கிரசு கட்சியுடன் ஆழத் தொடர்பிருந்ததால் காங்கிரசு கட்சியின் அரசு மத்திய மாகாணத்தில் அதிகாரத்திலிருந்ததால் காந்தியின் ஆதரவு, காங்கிரசு கட்சியின் விருப்பம் செல்லுபடியானது.

உள்துறை அமைச்சரின் இந்த முடிவை எதிர்த்து பெரிய பத்திரிக்கைகள் ஏதும் எதிர்ப்பு கருத்துக்கள் தெரிவிக்கவில்லை. கன்றுக்குட்டியை கருணைக் கொலை செய்த காந்தி, நாட்டில் இப்படி ஒரு நிகழ்வு நடந்ததாகக் கூட காட்டிக்கொள்ளவில்லை. தனக்கு ஏதும் தெரியாது என்ற அப்பாவியாக அவருடைய ஹரிஜன் பத்திரிக்கை இந்தக் கொடூரத்தை தவிர்த்த செய்திப் பத்திரிக்கையாகவே வெளிவந்தது. காந்தியின் அமைதியில் வழக்கம் போலவே சாதி இந்துக்கள் அமைதியைக் கண்டனர்.

அம்பேத்கர் இந்த நிகழ்வை வன்மையாக எதிர்த்தார். சாதி இந்துக்கள் காங்கிரசு கட்சியும் காந்தியும் செய்வதெல்லாம் சரி என்று நம்புகின்றனர். சாதி இந்துக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வது தங்களது பிரதான கடமை என்று காங்கிரசு கட்சியும், காந்தியும் செயல்படுகின்றனர். ஆனால் தாழ்த்தப்பட்ட சமூக மக்களுக்கு மட்டும் தொடர்ந்து அநீதி இழைக்கப் படுகிறது. எண்ணற்ற அளவில் எங்களால் உங்களின் கொடுமைகளை எதிர்த்துப் போராடும் குழுக்களாகவே நாங்கள் தொடர்ந்து காட்டப்பட்டு வந்துள்ளோம். நாங்கள் வலிமை மிகுந்த உங்களை கட்டுப்படுத்தும் அளவிற்கு பலம் பெறுவது தற்போதைக்கு சாத்தியமில்லை.

பாலியல் வல்லுறவு மேற்கொண்ட கொடூரன் செயலை விட கொடுமையானதாகவே உள்துறை அமைச்சரின் செயலை நான் காண்கிறேன். உள்துறை அமைச்சரின் உத்தரவை கையொப்பமிட்டு நடைமுறைப்படுத்திய பிரதம மந்திரியின் செயல் நீதியின் மீது நிகழ்த்தப்பட்ட வன்முறை. இவையெல்லாம் தன் கண்முன்னே நடந்தும், நடக்கும் அரசின் உச்ச அதிகாரத்தை கையில் குவித்து வைத்திருக்கும் காந்தி, ஏதும் கருத்து கூட தெரிவிக்காது அமைதியாக இருந்தது இந்த நாட்டைத் தவிர உலகத்தின் வேறெந்த பகுதியிலும் நடக்காது. வெறெந்த நாட்டிலாவது இந்தக் கொடுமை நடந்திருந்தால், சாமான்ய மனிதன் வரை போராடி தன் எதிர்ப்பைத் தெரிவித்திருப்பான்.

கீழ்சாதி மனிதர்களுக்கு நடந்துவிட்ட ஒன்றாக இதை சாதி இந்துக்கள் பார்க்கின்றனர். சாதி என்ற பிரிவு "நீதி" என்பதை கேலிக்குரியதாக்கியுள்ளது. சராசரி மனிதனுக்கு ஏற்பட்டிருக்க வேண்டிய நியாய உணர்வு கூட உள்துறை அமைச்சர் மற்றும் பிரதம மந்திரிக்கு ஏற்படவில்லை. காங்கிரசு கட்சி, ஆட்சி அதிகாரம் இரண்டையும் தன் கையில் வைத்திருக்கும் மகாத்மா(?), சராசரியான மனிதனாகக் கூட நடக்கவில்லை. இவையெல்லாம் சாதியின் பெயரால் நியாயப் படுத்தப்படும் உச்சபட்ச கொடூரங்கள். இந்த கொடூரத்தை கண்டுகொள்ளாமல் விடுவது "இந்த நாட்டின் இயல்பான" ஒன்றாகவே அனைவரும் உள்ளத்தளவில் நம்பினர்.

அம்பேத்கர் இந்த வழக்கை எடுத்து அரசிற்கு எதிராக வாதாடினார். டைம்ஸ் ஆப் இந்தியா பத்திரிக்கைக்கு இந்த வழக்கில் நிகழ்த்தப்பட்ட அநீதியை பதிவு செய்யும் படி "To the editor" பகுதிக்கு எழுதினார். சூழல் காரணமாக அப்பத்திரிக்கையும், பம்பாய் குரோனிக்கல் பத்திரிக்கையும் இந்த அறிக்கையை வெளியிட்டன.

இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட குற்றவாளிக்கு இரண்டாண்டு தண்டனை நீட்டிக்கப்பட்டதாகவும் வாய்வழிச் செய்தியாகவே திரு நானக் சந்த் ரட்டு மூலம் நான் தெரிந்துகொண்டேன். திரு. ரட்டுவின் கூற்றை ஆதாரத்துடன் உறுதி செய்வதற்கான எத்தகைய



படிப்பகம்

www.padippakam.com

பத்திரிக்கைக் குறிப்பையோ, நீதிமன்ற உத்தரவின் படிகளையோ நான் பார்க்கவில்லை. எழுத்துப்பூர்வ மான ஆதாரம் ஏதும் இல்லை.

அம்பேத்கரின் எழுத்தும் பேச்சும் என்று மத்திய அரசின் 18 ஆங்கிலத் தொகுதிகளையும், அதன் நேர் தமிழ் தொகுதிகளை மட்டுமே ஆதாரமாகக் கொண்டு தமிழக அளவில் அம்பேத்கரின் தத்துவம் வலுப்படு கிறது. இந்த வரையறையைப் பெரிதாக்கி அம்பேத்கர் பற்றி பிற தமிழ்நூல்களை ஆதாரமாக்கி ஓர் ஒப் பாய்வை நம்மால் படைக்க இயலவில்லை. காரணம் அம்பேத்கர் பற்றிய முழுமையான நூல் தமிழில் இணைகாலத்தில் படைக்கப்படாமல் இருப்பதுதான். ஒரு நூல் வரவேண்டிய அவசியம் மேலாகும் தேவை யில்லாதபோது அல்லது, வாய்ப்பு தவிர்க்கப்பட்ட போது, அதற்கு உகந்த அரசியல் தேவைகள் எப்படி யிருந்திருக்க இயலும் என்பதை நாம் நீட்டித்து அறிந்து கொள்ள இயலுகிறது.

பார்வைக்காக வட மாநிலங்களில் வால்மீகி ராமா யணம்; இங்கு தமிழில் மிகுந்த முனைப்புடன் கம்ப ராமாயணம். அதை விமர்சனம் செய்தே வளர்ந்திட்ட அண்ணாதுரை, முன்னாள் முதல்வர் துவக்கமாக இன்றைய கம்பன் கழகங்கள் வரை. கம்பன் கழகங்கள் என்ற வடிவில் தமிழ் வளர்ப்பதாகக் கூறிக்கொண்டு, ராமாயணப் பொய்யை விரிவாக்குகின்றனர். இதை நன்கு உணர்ந்தே கம்பரை விமர்சனம் செய்வதாகவும், அவர் தமிழை நேசிப்பதாகவும் கூறிக்கொண்டே மூடப் பழக்கவழக்கங்களை விரிவுபடுத்தினர்.

அடுத்ததாக வடபகுதியில் நீட்டித்துப் பேசப்படும் மகாபாரதம். இதை வியாசர் எழுதியுள்ளார். இது எல்லா வட்டார மொழிகளிலும் பெயர்க்கப்பட் டுள்ளது. தமிழில் வில்லிப்புத்தூர் ஆழ்வார் பெயர்த் ததை, ராஜாஜி வரை வியாசர் விடுவதாகவும் தொலைக் காட்சியில் எல்லாத் தளங்களிலும் இதன் ஆதிக்கம். இதை விமர்சனம் என்ற பார்வையில் அதிதமாக தமிழ் அறிஞர்கள் மாணவர்களின் சிந்தனையில் நுழைத்து விட்டனர்.

இதை விமர்சனம் செய்வதால் மீண்டும் மீண்டும் தளம் வளர்த்து பரவும் என்பதை பாரதியார் வரை புரிந்திருந்த காரணத்தால் தான்,

மொழியாக கவிதைகள், பற்றி அதித முனைப்பு காட்டியுள்ளார்.

ஆனால் பூர்வகுடிகளின் அரசியல் கருத்தை வரையறை செய்த அம்பேத்கரின் தொகுதிகளை கடந்த ஆண்டுகளாக மொழியாக்கம் அரசின் தயவு இன்றி செய்திட யாரும் அல்லது எந்த இயக்கமும் முன்வர வில்லை என்பது நமக்கு குறையான ஒன்றாகும்.

தாழ்த்தப்பட்டோர் என்ற சொல் விரிந்த ஜம்பு தீபக் கண்டத்தையும் தாண்டியது. இங்கு வாழும் பூர்வகுடிகளின் நாகரீகம், கலாச்சாரம் என்பது உண்மையைப் பாதுகாக்க நிகழ்ந்த போராட்டங் களின் தொடர்ச்சியேயாகும்.

*1. சைமன் குழு, 2. நாணயத்தின் சிக்கல், 3. இந்திய பாகிஸ்தானம் பிரிவினை, 4. காந்தி - காங்கிரசு தீண்டத் தகாத மக்களுக்குச் செய்தது என்ன, 5. புத்தரும் அவர் தம்மமும், 6. இந்து மசோதா I, II*

போன்ற தொகுதிகள் இருப்பதாகக் கூட நமக்குக் காட்டப்படாமல் மறைத்து வைத்திருந்த தமிழகத்தில் முற்போக்கு தலித் அல்லாத இயக்கங்களின் நோக்கம் என்னவாக இருந்திருக்கும்?

அம்பேத்கர் என்ற களப்போராளியை நாம் அறிந்துகொள்ள இயலாது திரையிட்ட திராவிடக் கட்சிகளின் நோக்கம் இன்று வெளிச்சமாக உள்ளது. இந்த கருத்தியல் வெளிச்சத்தை வெட்கத்தோடு நம்மிடம் பதிப்பதற்காக தங்களை அர்பணித்து செயலாற்றும் சரியானவர்கள் நமக்கு நம்பிக்கை தருகின்றனர்.

இதை ஒட்டி பத்திரிக்கைகள், கருத்து நிகழ்வுகள் நடத்தும் இன்றைய சிந்தனையாளர்கள் வாழ்த்திற் குரியவர்கள்.

1956-க்குப் பிறகு ஆதிக்குடிகளின் மீது நிகழ்த்தப் படும் கருத்தியல் அழுத்தத்தை அதற்கு முன்னர் நடந்த நிகழ்வுகளோடு ஒப்பிட்டு நமக்குத் தருபவர்கள் வரலாற்றை நமக்கு சரியான வகையில் பதிவு செய்யும் போராளிகள். இவர்கள்தான் அம்பேத்கரியத்தை மக்களிடம் கொண்டுசெல்லும் நல் ஊடகங்கள்.

தனக்கென தனியாக சம்பளம் வாங்கும் அரசு ஊழியர், அதன்பொருட்டு தனிக்கடமை உள்ளதை உணரா அரசு ஊழியன் செயல்கள் நம் மக்களின் நிமிர்தலை மட்டுப்படுத்தும் என்பதை சாமான்ய மனிதன் உணர்ந்து கொண்டுள்ளான். அவ்வன் உணர்தலை அரசு ஊழியன் உணரும் காலம் விரைவில் நிகழ்த்தப்பட வேண்டும். இது வாய்ப்புக்குறைவான ஒன்று. எனினும் அதை நோக்கியே நம் பயணம்.

ஓர் அரசு ஊழியர் நான் கேள்விப்படும்போதெல் லாம் எங்காவது அம்பேத்கரின் தத்துவங்களை மக்களிடம் கொண்டுசெல்ல முனைப்புடன் உள்ளார். ஒத்த கருத்துடையவர்களின் துணையோடு தங்களின் புரிதலை மக்களிடம் பத்திரிக்கை, வாய்மொழி வாயி லாக விரிவாக்கம் செய்கிறார். இது பொதுமைப்படும் போது வெளிச்சம் சாத்தியப்படும்.

- தொடரும்.

■ தமிழ்மகன்

## விடியல்

உணர்வின்
வெப்பத்தில்
சொற்கள்
கடைநிலை

சமய
சாயங்களை
கழுவு

அரசியல்
அழுக்கை
வெளு

தூக்கத்தை
சுருட்டு
விழி
விடியும். ●



படிப்பகம்

www.padippakam.com



# தமிழ்த் தேச நிலம்

■ கௌதம சன்னா

ஒரு தேசிய இனத்தின் ஆன்மாவாக கருதப் படுவது பொதுவான பரந்த நிலப்பரப்பு. அது இல்லை யெனில் உடலற்ற ஆவியைப் போல தேசிய இனம் அலைந்து கொண்டிருக்கும் என்பது பழைய கொள்கை. ஆனால் சொந்த நிலப்பரப்பு குறித்து இக்கருத்துகளில் ஏற்பட்டுள்ள கருத்தியல் மாற்றங்களையும், வரலாற் றுச் சான்றுகளையும் ஏற்கனவே பார்த்துள்ளோம். நமது மக்களோ பழமை விரும்பிகள். காலாவதியாகிப் போன பலவற்றுக்கு இன்னும் பெருமை கொண் டாடும் மரபுக்குச் சொந்தக்காரர்கள். "மாற்றம்" என்பதை கிஞ்சித்தும் விரும்பாமல், அதேவேளை மாற்றத்தினால் வரும் அனுகூலத்தையும் விடாமல் கமுக்கமாய் நுகர்ந்து வரும் குடிகள். இந்த வகையின் அரசியல் நீட்சியாகத்தான் தேசிகர்கள் இருக்கின்றனர். எனினும் உருவாகியுள்ள புதிய கருத்துகளின் ஒளியில் இந்தப் பழைமைக் கூறுகளைக் காணவேண்டும்.

தமிழ் இனத்தின் நிலம், தென்குமரி - வடவேங்க டம். வழக்கமான தொன்மத் தமிழ் எல்லை. இது தவிர முன்பு இருந்ததாகக் கருதப்படும் லெமூரியா கண்டம். தமிழ் நிலத்தின் அகண்ட நிலத்தொன்மை இன்னும் உயிர் அளித்துவரும் மனநிலப்பகுதி. கடல்கொண்ட லெமூரியா கண்டமும், குமரிப் பேறாலும் ஒரு வரலாற் றுப் புதுமையாக இருந்து வரும் நிலையில், இலங்கைத் தீவிற்கு தமிழ்த் தொன்மையை கற்பித்து வருவதற்கு இந்த லெமூரியா கண்டக் கோட்பாடு ஒரு காரணம். எனினும், ஓர் அகண்ட தமிழ் நிலம் என்பதற்கு இந்த கோட்பாடு அரசியல் அடிப்படையில் எந்த உதவி யையும் செய்யவில்லை. ஆனால் காலனி ஆட்சிக் காலத்தில் சென்னை மாகாணமாய் இருந்தபோது அகண்ட தமிழ்த்தேச எல்லை வடிவமிருந்தது. தெற்கே இலங்கை துவங்கி, விந்திய - சாத்பூரா மலை வரை அரசியல் ரீதியான ஓர் எல்லை அமைந்திருந்தது. ஆங்கிலேயரின் நிர்வாக வசதி கருதி உருவாக்கப்பட்ட சென்னை மாகாணம் தோற்றத்தால் ஓர் அகண்ட தமிழ் தேச எல்லைதான். ஆனால் நிர்வாக வசதிக்கான இந்த அகண்ட எல்லை, தமிழ் தேசியத்திற்கு எந்தவித உதவியையும் அல்லது ஆர்வ உந்துதலையும் செய்து விடவில்லை. மாறாக தமிழ் மொழி பேசுபவர்களின் அரசியல் அதிகார ஆர்வத்திற்கு மாபெரும் குறுக் கீடாக வந்து நின்றுவிட்டது.

விடுதலை நிகழ்விற்குப் பிறகு, மாநில மறுசீர மைப்புக் குழுவின் பரிந்துரைப்படி தமிழகத்தின் அகண்ட நிலப்பரப்பு குறுகிப் போனது. பழைய சேரநாடு மூவேந்தரில் வில்வேந்தர் கொண்ட பெருமை மிகுப் பகுதி கேரளமாகி, குமரி நிலப் பகுதிகளை அபகரித்துக் கொண்டது. நாஞ்சில் நாடு, பீர் மேடு உட்பட பலபகுதிகள் கேரளத்தில் விழுந்தபோதும், வட தமிழகத்தின் பண்டை எல்லையாகக் கருதப்படும் வடவேங்கிடம் தெலுங்கு ஆந்திராவில் சேர்ந்ததுடன், சத்தியவேடு, நாராயணபுரம் குன்றுத் தொடர்கள் தொடங்கி நெல்லூர் வரையிலான தமிழ் பேசும் நிலப்பகுதிகளும் ஆந்திராவில் விழுந்தது. கர்நாடகத் தால் சேலம், தருமபுரியை ஒட்டிய பகுதிகள் குப்பம் வரை மிலானவை அதில் சேர்க்கப்பட்டது. இவ்வளவு நடந்தபோதும் தமிழ் மக்கள் சொல்லுமளவிற்கு எதிர்ப்பு இன்றி அடிமையாக இருந்தனர். சில தமிழ் தேச ஆர்வலர்களின் எதிர்ப்புகள் தவிர, பதிவானதாக சான்றுகளைக் காணோம். இப்பிரச்சினையில் காம ராசரைக் குற்றம் சுமத்தும் அளவிற்கு மக்களிடம் எழாத தமிழ் நில உணர்வு குறித்து குற்றம் காண்பவர் எவரும் இல்லை.

அதேபோல, சென்னை மாகாணத்திலிருந்து தெலுங்குதேசப் பகுதியை அதற்கு ஆந்திரம் எனும் பெயரை வைக்கவேண்டும் என்பதுடன், சென்னை யையும் அதனுடன் இணைக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்து சாகும்வரை உண்ணா நோன் பிருந்து உயிர்நீத்த பொட்டி ஸ்ரீ ராமுலுவின் தியா கத்தைத் தொடர்ந்து ஆந்திரத்திற்குள் ஓர் எழுச்சியும் மக்களின் பேராதரவும் கொந்தளித்து எழுந்தது. ஆனால், தமிழகத்தில் சென்னை மாநிலம் என்ற பெயரை நீக்கித் தமிழ்நாடு எனப் பெயரிட வேண்டும் என்று சாகும்வரை உண்ணாவிரதம் இருந்த சௌந் திரபாண்டியன் சொன்னபடியே செத்துப் போன போதுகூட பொட்டி ஸ்ரீராமுலுக்காக எழுந்தது போல் ஓர் ஆர்வ உத்வேகம் இங்கு இல்லாமல் இருந்தது.

மாநில மறுசீரமைப்புக் குழுவின் முக்கிய அங்கத் தினரான திருவாளர் மேனன் தன் மாநிலமான கேரளத் திற்கு தமிழகத்தின் பகுதிகளை அபகரிக்க பரிந் துரைத்த போதும்கூட பச்சைத் தமிழரான காம ராசரின் தேசிய காங்கிரஸ் பற்று அதை எதிர்க்காமல் அடக்கிவிட்டது என்பது ஒருபுறமிருக்கட்டும். நேசமணி போன்றவர்களின் குறிப்பிடத்தக்க போராட் டங்களைத் தவிர ஓர் இன எழுச்சியாக ஏதும் இங்கு நிகழவில்லை. ஏன்,



படிப்பகம்

www.padippakam.com

மாநில மறுசீரமைப்புக் குழுவிற்கு அம்பேத்கர் அளித்த பரிந்துரையில் முதன்முறையாக சென்னை மாநிலத்திற்கு 'தமிழ்நாடு' எனப் பெயரிடவேண்டும் என்று பரிந்துரைத்தபோது அந்த வல்லிய ஆதரவைக் கூட தமிழகம் கவனிக்காமல் விட்டிருந்தது. தனித் தமிழ்நாடு கோரிக்கை வைத்துக்கொண்டிருந்த தி.க மற்றும் பிற இயக்கங்கள் கூட இவற்றைப் பயன் படுத்திக்கொள்ளவில்லை என்பது கவனிக்க வேண்டிய செய்தி. அண்மைக்கால பிரச்சினைகளுள் ஒன்றான கச்சத்தீவுப் பிரச்சினைகூட இதில் ஒன்றுதான். இப்படி நிலம் அபகரிக்கப்பட்டபோது தமிழ் உணர்வு எழ வில்லை. ஆனால் இந்தி மொழி திணிக்கப்பட்ட போது (உண்மையில் முதல் இந்தி மொழி திணிப்பு ராஜாஜி அரசால் கொண்டுவரப்பட்டபோது எழுந் தது. இரண்டாம் முறையாக இப்படி ஒரு நேரடியான திணிப்புக் கூட இல்லை) மாபெரும் கொந்தளிப்பு எழுந்தது ஆச்சர்யமான விஷயம். மாணவர்களின் தன்னிச்சையான எழுச்சி என அதை குறிப்பிட்டாலும், இதில் அறுவடை செய்த திராவிட அமைப்புகள். இந்த அமைப்புகளோ இப்பிரச்சினையில் எப்போதும் நழுவியே வந்துள்ளன.

எப்படி இருப்பினும் தங்களின் நிலப்பகுதி குறித்த ஓர் உணர்வு தமிழ் மக்களிடையே சொல்லும்படியாக இல்லை. சங்ககாலச் சான்று துவங்கி, அண்மைக் கால சான்று வரை தமிழர்களுக்கான நிலப்பகுதி என்பது கண்கூடானது. ஆனால் இந்த நிலப்பரப்பு தமிழர் ஒரு தேசிய இனமாக எழக்கூடிய வாய்ப்பினை அளித்தால் கூட அதை பயன்படுத்திக்கொள்ளும் அளவிற்கு இல்லை என்றே சொல்லமுடியும். ஏன்?

உண்மையில் தமிழ் நிலப்பகுதி மேற்பார்வைக்கு ஒரு பரந்த நிலப்பரப்பாக இருக்கிறதே ஒழிய, உட் கட்டுமானத்தால் பலவகையில் சிதறியிருக்கிறது. தென்னாப்பிரிக்காவில், அமெரிக்காவில், சில ஐரோப் பிய நாடுகளில் கருப்பர்களுக்கு இருந்த கேட்டோக் (Ghettos)கள், ஜெர்மனியில் யூதர்களுக்கு இருந்த கெட்டோக்கள் போன்று தீண்டத்தகாதவர்களுக்கு என ஒதுக்கப்பட்ட சேரிகள் கேட்டாக்களைவிட மோசமாக இருக்கிறது. ஏனெனில் கெட்டோக்கள் வெளித் தோற் றத்தால் கூட ஒதுக்கப்பட்ட இடமாக காணமுடியும். ஆனால் தீண்டத்தகாதவர்களின் பகுதிகளோ பார்வைக்கு அப்படி தெரிவதில்லை. ஆனால், பொதுநிலப் பரப்பில் ஒதுக்கப்பட்ட பரப் பாக அது இருந்து வருகிறது. தமிழ்நிலப்பரப்பில் தீண்டத்தகாத நிலப்பரப்பாக சேரிகள் இருப்பதைக் குறித்து எந்தத் தமிழனுக்கும் உறுத்தல் இல்லை. பண்டைப் பெருமை பேசும் தமிழர்களுக்கு சேரி என்பது பொதுவான குடியிருப்புப் பகுதி என்பது தெரியும். பார்ப்பனச் சேரி, வெள்ளாளர் சேரி, பரத் தையர் வீதி என அறியப்பட்டிருந்தாலும் இன்றைக்கு சேரி என்பதற்கு உள்ள பொருள் ஒதுக்கப்பட்ட வர்களுக்கான, தீண்டத்தகாதவர்களுக்கான பகுதி என்பதைத் தவிர வேறு எந்தப் பொருளையும் தமிழர் களிடத்தில் காணமுடியாது. பண்ணையாளர்க ளுக்கோ அல்லது பிற தலித் அல்லாத சாதியின ருக்கோ தங்கள் குடியிருப்பும் ஒரு சேரிதான் என்பதை ஏற்றுக்கொள்ள முடியுமா? ஒரு பொது நிலப்பரப்பில் பண்டைப் பொதுப்பெயரை இன்று சூட்டினால் அது எத்தனை எதிர்ப்புக்குள்ளாகும் என்பதை யூகிப்பது கடினமல்ல,

இதுமட்டுமல்ல, நிலப்பரப்பின் உடைமை என்பது தமிழ் தேசிய ஆர்வலர்களுக்கு கண்ணில் படாமல் இன்னும் இருக்கிறது. விவசாய நிலங்கள் பெருவாரியாக இன்றும் ஆதிக்க சாதியினர் கையி லேயே குவிந்திருக்கிறது. அவர்களோ நிலத்தைப் பகிர்வதில் எவ்வித சமரசமும் செய்துக்கொள்ளப் போவதில்லை. வெகுமக்கள் கையில் நிலவுடைமை இல்லை. ஆனால், வெகுமக்களை ஒடுக்கும் ஆதிக்கர் களின் கையிலோ உற்பத்திக்கான நிலங்கள் குவிந்து கிடக்கிறது. இந்நிலையில் பெருவாரியான மக்களிடம் நிலத்தின்மீதான பற்றுதல் எப்படி வரும். தேசியத் திற்கான பொதுவான நிலப்பகுதி என்பது அதன் ஒட்டுமொத்த பரப்பை மட்டுமே தகுதியாகக் கொண்ட தல்ல. அப்படி ஏற்றுக் கொள்வது சாராம்சத்தில் அது நிலவுடைமை சமுதாய தேசியக் கோட்பாடாகும். அதற்கு எவ்விதத்திலும் சோஷலிசச் சாயம் பூச முடி யாது. ஏனெனில் பொது நிலப் பரப்பென்பது பல் லாயிர தனியுடைமை அலகுகளாகப் பிரிக்கப்பட்டிருக் கிறது. இந்த அலகுகளை ஒழித்து பொதுநிலமாக மாற்றப்படாத வரை அது பொதுத் தகுதியைப் பெறு வது சாத்தியப்படாத கூறாகும். அதற்கான செயல் திட்டமும், அதை நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகள் ஏதுமின்றி வெறும் வறட்டுக் கோட் பாட்டால் தேசியத்தை வாழவைத்துவிட முடியாது.

எனவே, தமிழ்த் தேசப் பகுதி ஒரு பொதுவான நிலப்பரப்பாக பரிணமிக்க வேண்டுவதற்கான முன் நிபந்தனைகளாக இவை இருக்கின்றன. இதற்கு எதிராக விதி வழிவிடும் எனபதற்கு வாய்ப்புகள் மிகக்குறைவு.

வடவர்களின் ஆதிக்கம், வடுகர்களின் அபகரிப்பு எனத் தமிழ்நில அரிப்புகளை எவ்வளவுதான் முன்வைத்தாலும் பெருவாரியான மக்களிடம் இந்த அரிப்புகள் எவ்வித கோபத்தையும் ஏற்படுத்தாது. ஏனெனில் தங்களது காலுக்கு அடியிலிருந்த நிலம்கூட தன் சொந்த மொழிபேசும் தமிழனால் ஏற்கனவே அரிக்கப்பட்டுள்ள போது புதிய எதிரியைக் குறித்த விழிப்புணர்வை எதிர்பார்ப்பது கடினம்.

எனவே, பொதுவான தமிழ் நிலப்பரப்பு என்பது எவ்வளவு உண்மையோ அதைவிட வலுவான உண்மை, அது இருகூறாய் பிரிந்திருக்கிறது என்பது தான். முன்னதைவிட பின்னது வலிமையானது. இந்த இருகூறு, ஊர்-சேரி பிரிவினைதான் இதற்கு இடையி லான இணக்கும், பிணக்கமும்தான் பொதுநில எல்லை யின் வருங்கால பரிணாமத்தைச் சாத்தியப்படுத்தும். அல்லவெனில், கோட்பாடுகளின் பக்கங்களிலும் நிலப்பட அடுக்கங்களிலும் மட்டுமே அது வாழும். நிலத்தில் அது என்றைக்கும் கால்பதிக்காது - வரலாற்று மாற்றங்கள் புதிய வடிவமெடுத்து நல்வாய்ப்பை உருவாக்கினால் தவிர. ●


படிப்பகம்

www.padippakam.com

■ ஆங்கில மூலம் - சிவகாமி

■ தமிழில் - ராஜா

# கிராமப் பஞ்சாயத்துக்கள் மூலம் தலித்துகளை அதிகாரப்படுத்துதல்

**அறிமுகம்**

இந்திய அரசியல் சாசனத்தின் வரைவில் கிராமங்களைப் பற்றி எந்த ஒரு குறிப்பும் இல்லை என்றும், அதன் எந்த ஒரு பகுதியிலும் இந்தியாவின் பண்டைய அரசியல் பிரதிநிதித்துவப் படுத்தப்படவில்லை என்றும் குறைகூறப்பட்டது.

அரசியல் சாசனத்தின் தலைமைச் சிற்பியான டாக்டர் அம்பேத்கர் வரைவு சாசனத்தில் கிராமங்கள் விடுபட்டிருத்தல் பற்றிக் கூறுகையில் "இந்த கிராம குடியரசுகள் அனைத்தும் இந்தியாவின் சிதைவுகளே... கிராமம் என்பது என்ன? அது அறியாமை, குறுகிய மனப்பான்மை, வகுப்பு வாதங்களைக் கொண்ட ஓர் இருட்குகை" என்றுள்ளார்.

ஆனாலும் அரசியல் சாசனம் உருவாக்கப் பெறுகையில், அதில் கிராமங்கள் சார்ந்த அரசின் நேரடிக்கொள்கைகள் இருக்கத்தான் செய்தன.

கிராமப் பஞ்சாயத்துக்களை மாற்றி வடிவமைப்பதற்கும், சுயாட்சி நிறுவனங்களாக அவை செயல்படுவதற்கு தேவையான அதிகாரங்களை அளிப்பதற்குமான முயற்சிகள் எடுக்க வேண்டியதை ஆர்டிக்கிள் 40 கட்டாயமாக்கியுள்ளது.

அரசியல் சாசனம் அமலாக்கம் செய்யப்பட்ட நாளிலிருந்து ஜனநாயகப் பரவலாக்கத்திற்கான முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு அதிகாரமளித்தல், சுய ஆளுமை இரண்டுமே பஞ்சாயத்ராஜின் இரு வழிகாட்டிக் கொள்கைகளாக இருந்து வருகின்றன.

**டாக்டர் அம்பேத்கர் கூறிய கிராமங்களின் தோற்றம் இன்று மாறிவிட்டதா?**

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், கிராமங்களில் சாதிக் காழ்ப்புணர்ச்சிகள் அதிகரித்துதான் வருகின்றன. இதற்கு எடுத்துக்காட்டாக பல சமீபகால நிகழ்வுகளைக் கூறலாம்.

மதுரை மாவட்டத்தின் மேலவளவு பஞ்சாயத்துத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டவரும், தலித்துமாகிய முருகேசனும், அவரைச் சார்ந்த ஐந்து பேரும் குரூரமான முறையில் கொலைசெய்யப்பட்டனர். காரணம், தலித் தலைமையைத் தாங்கிக் கொள்ளாத சாதி இந்துக்களை எதிர்த்து அவர் பஞ்சாயத்துத் தலைவராக பொறுப்பேற்றுக் கொண்டதுதான்.

அதே மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த, தலித்துகளுக்கென ஒதுக்கப்பட்ட தொகுதிகளான பாப்பாபட்டியிலும், கீரிப்பட்டியிலும் சாதி இந்துக்களின் எதிர்ப்பு காரணமாக தேர்தல்களை நடத்த முடியவில்லை. இந்தியாவின் தீண்டாமைச் சின்னங்களாக அவை இன்றும் இருந்து வருகின்றன.

கடலூர் மாவட்டத்தின் விருத்தாசலத்திற்கு அருகில், சாதி இந்துவான பஞ்சாயத்துத் தலைவர் பஞ்சாயத்தின் இதர உறுப்பினர்களோடு சேர்ந்து தன் சொந்த மகளுக்கும், தலித் இளைஞர் ஒருவருக்கும் விஷம் கொடுத்து கொன்றிருக்கிறார். தன் மகள் தலித் ஒருவரை திருமணம் செய்து கொண்டுள்ளதை அவரால் தாங்கிக்கொள்ள இயலவில்லை.

திருச்சி மாவட்டம் மலையம்பட்டி கிராமத்தில் சுகந்தி என்ற தலித் பெண்ணொருவர் விவாகரத்திற்கெதிராக வழக்குரைஞர் மூலம் காரணம் கேட்டு அறிக்கை அனுப்பினார். விளைவு - ஒரு இரவு முழுவதும் தொடர்ந்து மன்னிப்புக் கேட்க வேண்டியிருந்ததோடு, பஞ்சாயத்து அவருக்கு ரூ.48,000 அபராதமும் விதித்தது.

திருச்சியின் சகம்பட்டி கிராமத்தில் தன் 17 வயது மகளை சாதி இந்து ஒருவர் அடித்துக் கொடுமைப் படுத்தியதற்கெதிராக நியாயம் கேட்டதற்கு அந்த தலித் பெண்மணி பஞ்சாயத்தாரின் கால்களில் நூறுமுறை விழுந்து மன்னிப்புக் கேட்க வேண்டியதாகியது.

தேர்தல் விவகாரத்தில் திருச்சி மாவட்டத்தின் சீக்காம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த அமுதவல்லி என்ற தலித் பெண்ணை சாதி இந்துக்கள் கொடூரமாகத் தாக்கியுள்ளார்கள்.

மதுரை மாவட்டத்தில் அருந்ததியர் இனத்தைச் சேர்ந்த பஞ்சாயத்துத் தலைவி ஒருவரால் இன்னும்கூட தெருவில் செருப்புப் போட்டுக்கொண்டு நடக்கமுடியவில்லை.

16.10.2003 அன்று புதுப்புத்தூர் அருந்ததியப் பெண்கள் கிராமப் பொதுக்கிணற்றில் தண்ணீர் எடுக்க முயற்சிக்கையில் சாதி இந்துக்கள் அவர்களை மானபங்கப்படுத்தியுள்ளனர்.



படிப்பகம்

www.padippakam.com

பெரம்பலூர் மாவட்டத்தின் மாதங்கியில் கோயிலுக்குள் நுழைய முற்பட்ட தலித்துகளை சாதி இந்துப் பெண்கள் விளக்குமாற்றால் அடித்துள்ளார் கள்.

ஆண்டிப்பட்டி தொகுதியின்கீழ் வரும் வி.கே. புரத்தில் இரட்டைக் குவளை முறை இன்றும் நடைமுறையில் உள்ளது என்று திரு. பாலபாரதி MLA (CPM) ஏற்கனவே புகார் கொடுத்துள்ளார்.

ஆகஸ்டு 15, 2003 அன்று சொட்டதட்டி பஞ்சாயத்தில் தலித் தலைவர் தேசியக் கொடியை ஏற்றுகையில் சாதி இந்துக்கள் அவர் மேல் செருப்புக் களை எறிந்துள்ளனர்.

தலித் இனத்தைச் சேர்ந்த பஞ்சாயத்துத் தலைவர் கள் வெற்றுக் காசோலைகளில் கையெழுத்திட்டு சாதி, இந்துக்களான துணைத் தலைவர்களிடம் கொடுத்து விட வேண்டும் என்பது எழுதப்படாத சட்டமாக மதுரை மாவட்டத்தின் உசிலம்பட்டியிலும், அதைச் சுற்றியுள்ள கிராமப் பஞ்சாயத்துக்களிலும் பின்பற்றப் பட்டு வருகிறது.

பொள்ளாச்சியில் தலித் இனத்தைச் சேர்ந்த தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்து உறுப்பினர்கள் கிராமசபைக் கூட்டங்களை நின்று கொண்டேதான் நடத்தவேண்டும்.

மேற்கூறியவை அல்லாமல் தலித்துகள் மீதான கற்பழிப்பு, பாலியல் பலாத்காரம், மனித மலத்தை வாயில் திணித்தல் போன்ற அத்துமீறல்கள் தமிழ் நாட்டில் சமீப காலத்தில் அதிகரித்துள்ளன.

இவ்வுண்மைகள் 1948-இல் டாக்டர் அம்பேத்கர் விவரித்த அளவிலேயே கிராமங்கள் இன்றும் தொடர்ந்து இருந்து வருகின்றன என்பதை நிரூபிக் கின்றன.

**கிராமங்களின் அதிகாரங்களை சேரிகளுக்கு பிரித்தளித்தல்**

இந்திய அரசியல் சாசனத்திலேயே ஆர்டிக்கிள் 40-தான் அதிக வீரியத்துடன் செயல்படுத்தப்படும் பிரிவாகும். 1949-50 இல் கிராமப் பஞ்சாயத்துக்களை உருவாக்கி, அவைகள் சுய ஆட்சிப் பிரிவுகளாக செயல்படும் விதத்தில் அதிகாரமளிப்பதற்கு முக்கியத் துவம் கொடுக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து 1959-62 இல் பஞ்சாயத்ராஜ் அமைப்பு அறிமுகப்படுத்தப் பட்டது. ஜனநாயகப் பரவலாக்கம் பற்றிய பல்வந்த்ரே மேதா குழு அறிக்கையின் (1958) அமலாக்கம் பஞ்சாயத்து ராஜ்-இன் மூன்றடுக்கு முறையை உரு வாக்கியது. இம்முறையில் கிராமப் பஞ்சாயத்து, பஞ்சாயத் சமிதி (வட்டம்), ஜில்லா பரிஷத் (மாவட்டம்) என்ற மூன்று அரசு நிலைகள் ஏற்பட்டன.

மத்திய அரசிடமிருந்து மாநில அரசுக்கும், மாநிலத்திலிருந்து மாவட்டங்களுக்கும், மாவட்டங் களிலிருந்து வட்டம், கிராமங்களுக்கும் அதிகாரத் தைப் பகிர்ந்தளிப்பதில் ஆர்வம் காட்டும் அரசியல் வாதிகளும் கோட்பாட்டாளர்களும், கிராமத்தின் அதிகாரத்தை சேரிக்குப் பிரித்துக் கொடுப்பதில் அக்கறை காட்டுவதில்லை. ஒன்று அவர்கள் கிராமத் தினுள்ளேயே சேரியும் அடக்கம் என்று நினைத் திருக்கவேண்டும் அல்லது சேரி என்ற ஒன்று இருப் பதையே வசதியாக மறந்திருக்க வேண்டும். பல தலித் குடியிருப்புகள் 500-க்கும் மேலான மக்கட் தொகை யைக் கொண்டுள்ளன. கிராம சபை ஆரம்பிப்பதற்கு இதுவே போதுமானது. ஆனாலும் இவை சாதி இந்துக்கள் வாழும் கிராமத்தின் ஒரு பகுதியாகவே கருதப்படுகின்றன. உதாரணமாக, திருவள்ளூர் மாவட் டத்தில் உள்ள பள்ளிப்பட்டு வட்டத்தினுள் கார்லம் பாக்கம் பஞ்சாயத்து வருகிறது. இது தலித்துகளுக்காக ஒதுக்கப்பட்ட பஞ்சாயத்துத் தொகுதி. இதன் தலித் மக்கட்தொகை (கார்லம்பாக்கம் சேரி, வெங்கடாபுரம் சேரி, தாங்கல்) 1667. ஆனால் இந்த பஞ்சாயத்தோ 1234 சாதி இந்துக்களை மட்டுமே உடைய கார்லம்பாக்கம், வெங்கடாபுரம் இந்துக் கிராமங்களுடன் இணைக் கப்பட்டுள்ளது. சில இடங்களில் சேரிக்கென்று தனிப்பெயர்கூட இருக்கிறது. (உ-ம்) கார்லம்பாக்கம் பஞ்சாயத்தில் உள்ள தாங்கல்.

இங்கு ஒன்றை நாம் கவனிக்க வேண்டும். 1965-இல், வெறும் 250 பேரைக்கொண்ட கிராமம் கூட பஞ்சாயத்தாகக் கருதப்பட்டது. இதே அடிப் படையைப் பின்பற்றினால் அனைத்து சேரிகளுமே தனிப் பஞ்சாயத்தாக திகழ தகுதிபடைத்தவையாகும்.

தேசிய அபிவிருத்தி கவுன்சிலினால் பஞ்சாயத் ராஜ் முறையின் செயல்பாட்டினை ஆராய்வதற்காக 1993-இல் நியமிக்கப்பட்ட எல்.சி. ஜெயின் குழு "அதிகாரத் தைப் பரவலாக்கி, போதுமான நிதியினைக் கொடுத்து விட்டால் மட்டும் ஜனநாயகப் பரவலாக்கம் வெற்றி பெற்று விடாது. அக்கிராம மக்களின் ஒருமனப்பட்ட ஒப்புதலும் அவசியமானது" என்று தெரிவித்துள்ளது.

வரைவு பஞ்சாயத்து சட்டம் ராஜ்யசபாவில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, கிராமங்கள் பொதுவாக அமைதியாக இருப்பதாலும், கிராம மக்கள் ஒன்றிணைந்து வேலை செய்வதற்கு தயாராக இருப்பதாலும், பஞ்சாயத்துச் சட்டத்தைச் செயல்படுத்துவதற்கு அதுவே சரியான நேரம் என்று அப்போதிருந்த சம்பந்தப்பட்ட துறையின் மத்திய அமைச்சர் கூறினார். ஆனால் பஞ்சாயத் ராஜ் செயலாக்கத்திற்கு முன்தேவையாகக் கருதப்பட்ட இச்சூழல் உருவாக்கப்படவேயில்லை என்பது நமக்குத் தெரிந்ததே.

தமிழ்நாட்டில் பஞ்சாயத்து அமைப்பின் மூன்று அடுக்குகளிலும் மொத்தம் 20,121 தேர்ந்தெடுக்கப் பட்ட தமிழ் பிரதிநிதிகள் இருக்கின்றார்கள். அதிகார அரசியல் பிரச்சினைகள், நிதிப் பற்றாக்குறைப் பிரச்சினைகள் போன்றவற்றை பஞ்சாயத்துக்கள் எதிர்கொள்கையில், தலித் பஞ்சாயத்து உறுப்பினர்கள் சாதித்துவம், வேற்றுமை பாராட்டுதல், ஒடுக்கப்படுதல் முதலியவற்றையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. அதிகாரம் இன்றும் சாதி இந்துக்களின் கைகளில்தான் இருக்கிறது.

கார்லம்பாக்கம் பஞ்சாயத்தில் ஆறு ஒடுகிறது, ஏரி


படிப்பகம்

www.padippakam.com

ஒன்று இருக்கிறது. ஆனால் தலித்துகளால் அங்கே செல்ல முடியாது. அவர்களுக்கென்று உள்ளதெல்லாம் ஒரு சிறு குட்டையே. தலித்துகளில் 3.5 சதவிகிதத்தினருக்கு மட்டுமே தனிப்பட்ட குடிநீர்க் குழாய்கள் இருக்கின்றன. ஆனால் சாதி இந்துக்களிலோ 22.6 சதவிகிதத்தினர் குழாய் இணைப்பைப் பெற்றுள்ளனர். 1234 நபர்களைக் கொண்ட சாதி இந்துக்களின் கிராமத்திற்கும் 20 பொது குடிநீர் குழாய் இணைப்புகள்; 1667 நபர்களைக் கொண்ட சேரிக்கும் 20 இணைப்புகளே. சாதி இந்துக்களைவிட தலித்துகள் அதிகமாகயிருக்கும், தலித்துகளுக்கென ஒதுக்கப்பட்ட தலித் பஞ்சாயத்துக்களிலும் பஞ்சாயத்து நிதி சாதி இந்துக்களுக்கே அதிக அளவில் செலவிடப்படுகிறது.

**கிராம அளவில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் தலித்துகளுக்குப் பொருந்துமா?**

தமிழ்நாடு பஞ்சாயத்து சட்டம் 1994, பிரிவு 257, அட்டவணை 5-இன் கிராமப் பஞ்சாயத்துக்களின் திட்டங்கள் 29 துறைகள் மூலம் செயல்படுத்தப்படுகின்றன. ஆனால் இந்த 29 துறைகள் செயல்படுத்தும் திட்டங்களில் மிகக் குறைந்த அளவு திட்டங்கள்தான் தலித்துகளுக்குப் பொருந்தும். பெரும்பான்மையானவை பொதுச் சொத்துக்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டிருக்கின்றன. தலித்துகளால் இந்த பொதுச்சொத்துக்களை நெருங்க முடியாது.

- 2001 கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டு தலித்துகளில் 6.6 சதவிகிதத்தினர்தான் நிலச் சொந்தக்காரர்களாக இருக்கிறார்கள். பெரும்பான்மையான பஞ்சமி நிலங்கள் சாதி இந்துக்களிடம் இருக்கின்றன.

- தலித்துகள் குறைந்த அளவிலேயே கால்நடைகளை வைத்திருக்கிறார்கள். அதுவும் அவர்கள் மக்கட்தொகை விகிதாச்சாரத்திற்கேற்ற வகையில் இல்லை. கால்நடை மருத்துவமனைகளும், செயற்கை முறை கருத்தரிப்பு மையங்களும் சாதி இந்துக்கள் வாழும் பகுதிகளில்தான் இருக்கின்றன.

பால் பண்ணைகளும், பால் சேகரிப்பு மையங்களும் சேரிகளில் கிடையாது. ஏரிகளில் மீன் பிடிக்கும் உரிமையும் பொதுவாக சாதி இந்துக்களால் மட்டுமே ஏலத்தில் எடுக்கப்படுகின்றன.

பெரும்பான்மையான இடங்களில் உயர்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் சாதி இந்துக்கள் வாழும் பகுதிகளிலேயே கட்டப்படுகின்றன. இதன் காரணமாக வால் பகுதியில் வசிக்கும் சேரிமக்களுக்கு தண்ணீர் கிடைப்பது அரிதாகிறது. சாலைகள், சிறு பாலங்கள், கிராமப்புற மின்சாரம், மரபு சாரா எரிசக்தி போன்ற வசதிகள் தலித்துகளுக்குக் கிடைப்பதே யில்லை. பொது விநியோக அமைப்பில் பங்கீட்டுக் கடைகள் பெரும்பாலும் கிராமத்தின் முக்கியப் பகுதிகளிலேயே அமைக்கப்படுகின்றன;

தலித்துகள் வாழும் சேரிகளில் அவை இருப்பதில்லை. 29 துறைத் திட்டங்களில் ஏழ்மை ஒழிப்புத் திட்டங்கள், கல்வி, சுகாதாரம், குடும்ப நலம், ST/ST நலம் போன்ற பிரிவுகளிலிருந்து மட்டும் தலித்துகளுக்கு ஓரளவு சலுகைகள் கிடைத்துள்ளன.

தொழில் - வாழ்தொழில் பயிற்சி, முதியோர் கல்வி, நூலகங்கள், பொழுதுபோக்கு/கலாச்சார வசதிகள் முதலிய திட்டங்களினால் தலித்துகளுக்கு எந்தவிதப் பயனும் இல்லை.

29 துறைத் திட்டங்களில் அனைத்தும் தலித்துகளுடன் தொடர்புடையது கிடையாது என்பது இதிலிருந்து தெரியவருகிறது. ஏனென்றால் பெரும்பான்மையான திட்டங்கள் பொதுச்சொத்துக்களை அடிப்படையாகக் கொண்டவை. இந்த பொதுச் சொத்துக்களோ பெரும்பாலும் சாதி இந்துக்கள் வாழும் பகுதிகளிலேயே அமைக்கப்பட்டுள்ளன. எனவே இத்திட்டங்களுக்காக ஒதுக்கப்படும் தகுதிகள் நிதிகள் சாதி இந்துக்களுக்கே பயன் கொடுப்பவையாக இருக்கின்றன.

**தலித்துகளும், கிராம சபைகளும்**

29 துறைத் திட்டங்களினால் தலித்துகளுக்கு அதிக அளவில் பயன் எதுவும் கிடையாது என்ற முடிவிற்கு வந்த பிற்பாடு, கிராம சபைகளின் செயல்பாடுகளை ஆராய்வதும் அவசியமாகிறது.

500 நபர் மக்கட் தொகையைக் கொண்ட ஒரு கிராமம், கிராமப் பஞ்சாயத்து என்று அறிவிக்கப்படுவதற்கான தகுதியைப் பெறுகிறது. இப்பஞ்சாயத்திற்காக 5 முதல் 15 பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஓட்டுப்போடத் தகுதியுள்ள அனைவரும் கிராம சபையின் அங்கத்தினர்கள். நிர்வாகம் பஞ்சாயத்துத் தலைவர், துணைத் தலைவர், உறுப்பினர் குழு ஆகியோரிடம் இருக்கிறது. அட்டவணைச் சாதியினர் மற்றும் பழங்குடியினருக்கான ஒதுக்கீடு அவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் கொடுக்கப்படுகிறது. மொத்த உறுப்பினர் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கு பெண்களுக்காக ஒதுக்கப்படுகிறது.

அதிக அளவு பஞ்சாயத்துக்களில், தலித்துகள் பெரும்பான்மையில் இல்லை. எனவே அவர்களுக்குச் சாதகமாக தீர்மானங்களை நிறைவேற்றுவது சிரமமாகிறது. அரசியல் மற்றும் இதர காரணங்களினால் தலித்துகள் பெரும்பான்மை பெற்றிருந்தாலும், அவர்களால் சுயமாகச் செயல்பட முடிவில்லை.

கிராமசபைத் தீர்மானங்கள் பொதுவாக கிராம சபைக் கூட்டங்களில் நிறைவேறுவதில்லை. அவை சாதி இந்துக்களால் சுற்றறிக்கைகளாக அனுப்பப்பட்டு, தலித் உறுப்பினர்கள் மேல் திணிக்கப்படும் நிர்ப்பந்தக்கினால் கையெழுத்தாகின்றன.

தற்போதைய அமைப்பில் தலித் உறுப்பினர்கள் இல்லாமலேயே கிராம சபையைக் கூட்டமுடியும்.

**கிராமப்பஞ்சாயத்துக்கள் மூலம் தலித்துகளை அதிகாரப்படுத்துதல்**

கிராம நிர்வாக அமைப்பில் நலிந்த பிரிவினரை சாதி இந்துக்களின் தயவில் இருக்குமாறு செய்து,



படிப்பகம்

www.padippakam.com

தங்களுடைய சலுகைகளைப் பெற காத்திருக்கச் செய்வது நியாயமற்ற செயலாகும். எனவே தலித்துகளுக்கென தனியான பஞ்சாயத்துக்கள் உருவாக்கப்பட வேண்டும். பஞ்சாயத்துக்களை சாதி அடிப்படையில் பிரிக்கும் முறை என்று சிலர் குற்றஞ்சொல்லக்கூடும். பிறப்பிற்குப் பின் தாயும் சேயும் நலமுடன் இருக்க வேண்டுமென்றால் எப்படி தொப்புள் கொடியை அறுத்தெறிதல் அவசியமோ, அப்படியே மொத்த சமுதாயமும் பலனடைய வேண்டுமென்றால் தலித்துகள் அடிமைத்தளையிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும்.

இருப்பிடம், மக்கட்தொகையை வைத்துப் பார்க்கையில், சேரிகள் தனக்கே சொந்தமான தனிப்பட்ட இருப்பைக் கொண்ட அடிமட்ட அலகைக் கொண்டவை. எனவே ஜனநாயகப் பரவலாக்கம் சேரியிலிருந்துதான் தொடங்கப்பட வேண்டும். இதன் முதல் நடவடிக்கையாக, கிராமங்களின் பெயருக்குப் பின்னால் 'சேரி' என்ற அடைமொழி சேர்க்கப்பட்டு அழைக்கப்படும் தலித்துகளின் வாழ்விடங்களுக்கு தனிப்பெயர் இட வேண்டும். 500-க்கும் அதிகமான தலித் மக்கட் தொகையைக் கொண்டு இவ்வாறு உருவாக்கப்பட்ட புதிய கிராமங்கள் கிராமப் பஞ்சாயத்துக்களாக அறிவிக்கப்பட வேண்டும். தலித் மக்கட்தொகை 500-க்கும் குறைவாக இருக்கும் பட்சத்தில், அருகிலுள்ள சேரியை இணைத்து புதிய கிராமம் உருவாக்கப்பட வேண்டும்.

பாப்பாபட்டி, கீரிப்பட்டி, நாட்டார் மங்கலம் கிராமப் பஞ்சாயத்துக்களைப் பொறுத்த அளவில், சாதி இந்துக்களை நீக்கி, தலித் குடியிருப்புக்களை இணைத்து, சுய ஆட்சி செய்ய ஏதுவாகும் வகையில் கிராமப் பஞ்சாயத்தினை உருவாக்கலாம்.

இவ்வகை கிராமப் பஞ்சாயத்துக்கள் சமர்ப்பிக்கும் கிராமத் திட்டத்தின் அடிப்படையில் நிதி ஆதாரம் தலித் பஞ்சாயத்துக்களுக்கு நேரடியாகக் கொடுக்கப்பட வேண்டும். திட்டங்களை உடனடியாகத் தயாரிக்கும் சூழ்நிலையில் இப்பஞ்சாயத்துக்கள் இல்லாது இருக்குமானால், நிலம், கல்வி, அடிப்படை வசதிகளை முன்னுரிமைப்படுத்தி ஒட்டுமொத்தமாக நிதியினை வழங்கலாம்.

நீர், நில வள ஆதாரங்கள், பாசன வசதிகள் போன்ற பொதுச் சொத்துக்களைப் பொறுத்தவரை, அவற்றை உருவாக்குவதற்கென நிதியினை தனியாக தலித் பஞ்சாயத்துக்களுக்கு வழங்கலாம்.

இம்மாற்றங்களுக்கு தனிப்பட்ட சட்டங்கள் இயற்றவேண்டிய அவசியமில்லை. தற்போது இருக்கும் பஞ்சாயத்து சட்டத்தில் சில திருத்தங்களைக் கொண்டு வந்தே இம்மாற்றங்களைச் செயல்படுத்தலாம். பஞ்சாயத்ராஜின் மூன்றாமடுக்கு முறைக்கே இவ்வாலோசனைகள் கூறப்படுகின்றன. மற்ற இரண்டு அடுக்குகளில் தற்சமயத்திற்கு மாற்றமேதும் அவசியமில்லை.

இம்மாற்றங்களைச் செயல்படுத்தினால், தலித்துகளின் சமூக-பொருளாதார நிலை நிச்சயம் மேம்பாடு அடையும். மேலும் அவை தலித்துகளுக்கும், சாதி இந்துக்களுக்குமிடையே சுமூகமான உறவை உருவாக்கும். ●

## கொத்தடிமை முறை ஒழிப்பு சட்டம் 1976 - குற்றங்கள்

- முன் பணத்திற்காக வேலை செய்ய கட்டாயப்படுத்துவது.
- சமூக கட்டுப்பாட்டின் காரணமாகவோ, பரம்பரையாகவோ, தாழ்ந்த சாதியில் பிறந்ததற்காகவோ, குறிப்பிட்ட இடத்தில் வேலை செய்யக் கட்டாயப்படுத்துவது.
- குடும்பத்தினர்பட்ட கடனுக்காக, குடும்பத்தின் பிற உறுப்பினர்களையோ, குழந்தைகளையோ வேலை செய்ய கட்டாயப்படுத்துவது.
- முன்பணத்திற்காக எவ்வித சுதந்திரமின்றி, விரும்பும் இடத்திற்கு செல்ல இயலாமல் வேலைசெய்ய கட்டாயப்படுத்துவது.
- முன்பணத்திற்காக தொழில்செய்ய தேவையான மூலப்பொருட்களை குறிப்பிட்டவரிடமே அதிக விலைக்கு வாங்க கட்டாயப்படுத்துவது.
- முன்பணத்திற்காக உற்பத்திசெய்யும் பொருட்களை குறிப்பிட்டவரிடமே குறைந்த விலைக்கு விற்க கட்டாயப்படுத்துவது.
- கொத்தடிமை முறையை ஊக்கப்படுத்துவது, அதற்கு உறுதுணையாயிருப்பது.
- அரசு கொடுத்த மறுவாழ்வு உதவிகளை பறித்துக் கொள்வது.
- கொத்தடிமை விடுதலை கோரும் புகார்மீது நடவடிக்கை எடுக்காதிருப்பது.

மேலும் விவரங்களுக்கு தொடர்புகொள்ள

"DEW" Development and Education for Workers (Phone: 0431-2473694)
"FEBLSTN" Forum for Elimination of Bonded Labour System in Tamilnadu (Cell: 94432-10605)
"AREDS" Association of Rural Education and Development Service (Phone: 04324-250617)


படிப்பகம்

www.padippakam.com

மத்திய நிதி அமைச்சர் ப. சிதம்பரம் அவர்களின் வருகையையொட்டி
16-10-2004 அன்று சென்னையில் நடைபெற்ற

# "இந்திய நிதிநிலை அறிக்கையும் ST/SC மக்களின் சமூக பொருளாதார வளர்ச்சியும் மற்றும் பயன்பாடும்"

சிறப்பு மாநாட்டில் அளிக்கப்பட்ட கோரிக்கைகள்

■ ப. வள்ளல்பெருமான்

இந்தியா சுதந்திரம் அடைந்த 57 ஆண்டுகளுக்கு பிறகும் நாட்டின் மக்கள் தொகையில் 25 கோடி சதவிகிதம் உள்ள பட்டியலினத்தவர்கள் மற்றும் பழங்குடியின மக்களின் சமூக பொருளாதார வளர்ச்சியில் குறிப்பிடத் தகுந்த மாற்றம் ஏற்படவில்லை என்பதே நிதர்சனமான உண்மை. பல ஐந்தாண்டுத் திட்டங்கள் மூலமாகவும், ஒவ்வொரு ஆண்டின் நிதி நிலை அறிக்கைகள் மூலமாகவும் பல்லாயிரம் கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டும், இன்றளவிலும் பட்டியலின மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்படவில்லை என்பதை கீழ்க்கண்ட புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

| | | |
|---|---|---|
| 48% | - | வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழ்கின்றார்கள் |
| 49.35% | - | பள்ளிக் கல்வியை பாதியில் நிறுத்துபவர்கள் (Drop outs) |
| 69% | - | தலித் குடியிருப்புகளில் மின் வசதி இல்லாதவர்கள் |
| 85% | - | கிராமங்களில் வசிக்கின்றார்கள் |
| 50% | - | விவசாயத் தொழிலாளர்கள் |
| 70% | - | நிலமற்றவர்கள் |
| 63 % | - | படிப்பறிவில்லாதவர்கள் |
| 92% | - | நிரந்தரப் பணி இல்லாதவர்கள் |
| 90% | - | வீடுகளில் கழிப்பிட சுகாதார வசதி இல்லாதவர்கள் |

மற்றும் ஒவ்வொரு ஆண்டும்

500-க்கு மேற்பட்டோர் கொலைக்கும்

1500-க்கு மேற்பட்டோர் கற்பழிப்பிற்கும்

4000 வரை படுகாயத் தாக்குதலுக்கும் உள்ளாகிறார்கள்.



ப. சிதம்பரம், காந்தி, வள்ளல் பெருமான்
(இடமிருந்து வலம்)

இந்த அவல நிலைகளை, தங்களைப் போன்ற நடுநிலை பார்வைகொண்ட, சமூக நீதியில் பொறுப்புணர்வு கொண்டுள்ள, திறமைமிக்க ஒருவரால்தான் களையமுடியும், திட்டங்கள் தீட்டமுடியும்.

எனவே கீழ்க்கண்ட கோரிக்கைகளை மத்திய நிதி அமைச்சராகிய தங்கள் மேலான பார்வைக்கு சமர்ப்பிக்கின்றோம்.

**1. நிலம் வழங்கும் திட்டம்**

ஒரு குடும்பத்துக்கு குறைந்தபட்சம் 2 ஏக்கர் நஞ்சை நிலம், 5 ஏக்கர் புஞ்சை நிலம் மற்றும் விவசாயம் செய்வதற்கு அரசு வங்கி, தனியார் வங்கி அல்லது மத்திய அரசோ நேரிடையாக நிதிவசதி ஏற்படுத்திட நிதி அமைச்சர் உறுதி செய்து மானியத்துடன் கூடிய கடன் வழங்க வேண்டுகிறோம். மேலும் இந்தியா முழுவதும் கண்டறியப்பட்டுள்ள 85 மில்லியன் ஹெக்டேர் தரிசு நிலத்தை விளைநிலமாக மாற்றி பிரித்து அளிக்க வேண்டும். (50 : 50 மானியம் மற்றும் கடனாக).

இம்மக்கள் நில உடைமையாளர் ஆவதன் மூலமாக சமூக மரியாதை, உணவு பாதுகாப்பு, சட்டரீதியான சொத்துரிமை, வேலைவாய்ப்பு மற்றும் வறுமை ஒழிப்பு போன்ற பிரச்சினைகள் தீர்க்கப்படும்.



படிப்பகம்

www.padippakam.com

### 2. தொழில் முதலீடு

தேசிய அளவில் பட்டியலின சமூகத்தைச் சார்ந்த 25 கோடி மக்களில் பெரும் தொழிலதிபர் ஒருவர்கூட இதுவரையில் உருவாகவில்லை. இச்சமூகத்திலும் தொழிலதிபர்களை உருவாக்கிட IDBI, HUIDCO, SIDBI மற்றும் வங்கிகள், இதர நிதி நிறுவனங்களின் மூலமாக புதிய மூலதனத் திட்டங்கள் (உயர்மட்டம் மற்றும் மத்திய அளவிலான திட்டங்கள்) வகுக்கப்பட வேண்டும்.

புதிய தொழில் அதிபர்களை ஊக்குவிக்கும்போது, வருமான வரி மற்றும் இதர வரிகளை நீக்கம் செய்வதினால் ஆதி திராவிடர்களில் தொழில் துறையில் நிதி நம்பகத்துவம் (Credibility) படைத்த ஒரு புதிய தலைமுறையினரை உருவாக்கலாம்.

### 3. கல்வி

கல்வி ஒன்றினால் மட்டும்தான் பட்டியலின மக்களிடம் சமூக மாற்றத்தை ஏற்படுத்த முடியும். இன்றுவரை பட்டியலின மக்களில் 37 சதவிகிதத்தினரே படிப்பறிவு பெற்றுள்ளனர். கல்வி நிறுவனங்கள் தனியார் மயமாக்கப்பட்டுள்ள நிலையில் பெரும் பணம் செலவு செய்து உயர்கல்வி பெறமுடியாத சூழ்நிலையில் இவர்கள் உள்ளனர். எனவே, பட்டியலினத்தைச் சார்ந்த மக்களும் கல்வி நிறுவனங்களை நிறுவுவதற்குத் தேவையான மான்யங்களும், கடன்களும் கொண்ட ஒரு சிறப்பு நிதியினை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றோம். பல்வேறு உயர்மட்ட கல்விக்கான ஒரு சிறிய செயல்திட்டத்தினை மத்திய அரசு அளிக்கவேண்டும். இதற்காக சிறப்புக் கூறு திட்டத்தில் (Special Component Plan) ரூ. 2000 கோடியை ஒவ்வொரு ஐந்து ஆண்டு திட்டத்

## தனியார் துறையில் பங்கு

### சிதம்பரத்தின் உறுதிமொழி

தனியார் துறையில் தலித்துகளுக்கும் , இதர ஒதுக்கப்பட்ட பிரிவினருக்குமான ஒதுக்கீட்டை அமலாக்கும் பிரச்சினையை ஐக்கிய முற்போக்குக் கூட்டணி சமூகமான முறையில் தீர்த்துவைக்கும் என்று மத்திய நிதியமைச்சர் ப. சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

"இந்திய நிதிநிலை அறிக்கையும், SC/ST மக்களின் சமூக பொருளாதார வளர்ச்சியும் மற்றும் பயன்பாடும்" என்ற மாநாட்டில் பேசிய நிதியமைச்சர், பிரதம மந்திரி மன்மோகன் சிங்கே இது தொடர்பான விவாதத்தைத் துவக்கி வைத்திருப்பதால் அதை ஒரு ஆரோக்கியமான, ஜனநாயக வழியில் தொடர்ந்து எடுத்துச் செல்ல வேண்டும் என்று கூறினார்.

"தனியார் துறையில் ஒதுக்கீடு சம்பந்தமான கோட்பாட்டினை ஆதரிப்பவர்களும், எதிர்ப்பவர்களும், அதீத இறுதி நிலைக்குச் சென்றுவிடக்கூடாது. அப்படியென்றால்தான் விவாதங்கள்/ பேச்சுவார்த்தைகளின் முடிவில் அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு சமூகமான முடிவை அடையமுடியும்" என்றும் அவர் பேசினார்.

1988-இல் அட்டவணைச் சாதியினர் மற்றும் பழங்குடியினருக்கென ஒதுக்கப்பட்ட 50,000 காலியிடங்களை நிரப்புவதற்கு ராஜீவ் காந்தி அரசு மேற்கொண்ட முயற்சியினை நினைவு கூர்ந்த அவர், அதேபோன்று அரசுத்துறைகளில் காலியாகவிருக்கும் இடங்களை கண்டறிவதற்கான ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்படும் என்று அறிவித்தார். தலித்துகளின் கோரிக்கைகளை டாக்டர் சிங்கின் கவனத்திற்கு தான் எடுத்துச் செல்வதாகவும் அவர் தெரிவித்தார்.

தலித்துகள் தங்கள் கல்வித் தகுதியினை அதிகரித்துக்கொள்வதற்காக கடன் வசதி, ஊக்குதவித் தொகைகளை வழங்குவதன் அவசியத்தை வலியுறுத்திப் பேசிய நிதியமைச்சர், தலித்துகள் கல்வி நிறுவனங்களை தாங்களே உருவாக்கும் வகையில் கடனையும் உள்ளடக்கிய இதர அனைத்து உதவிகளையும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி செய்துகொடுக்கும் என்று தெரிவித்தார்.

சிறப்புக்கூறுத் திட்டத்தின்கீழ் அரசால் ஒதுக்கப்படும் நிதி முறையாகப் பயன்படுத்தப்பட வேண்டும் என்ற தலித் பிரதிநிதிகளின் கோரிக்கை பற்றி பேசுகையில், அடுத்த பட்ஜெட்டில் சிறப்புக்கூறுத் திட்டத்தின் வடிவத்தை மாற்றியமைப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்படும் என்றும், அவை மாநிலங்கள் இந்நிதியினை வேறு திட்டங்களுக்கு உபயோகப்படுத்துவதிலிருந்து பாதுகாப்பளிக்கும் என்றும் கூறினார்.

திருக்குளம் சிந்தனையாளர்கள் மையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இம்மாநாட்டிற்கு முன்னாள் மிசோரம் ஆளுநர் ஏ. பத்மநாபன் தலைமை வகித்தார். - தி இந்து (ஆங்கில நாளிதழ்)

17.10.2004.


படிப்பகம்

www.padippakam.com

திலும் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். 2000 கோடி என்பது சிறப்புக் கூறு திட்டத்தின் கீழ் பட்டியல் சாதியினர்க்கு வந்து சேர வேண்டிய தொகையில் வெறும் 10 சதவிகிதம்தான் என்பதை அரசு ஏற்றுக் கொள்ளும் என நம்புகிறோம்.

500 மக்கள் தொகை கொண்ட ஒவ்வொரு பட்டியலினத்தவர்கள் வாழும் குடியிருப்புகளில் கட்டாயம் ஒரு ஆரம்பப் பள்ளி துவக்கப்பட வேண்டும்.

கல்வியை இடையில் கைவிடுபவர்களின் (Drop out) எண்ணிக்கையில் இம்மக்களே அதிக சதவிகிதம் உள்ளனர். இதனால் குழந்தைத் தொழிலாளர்கள், (Child Labour) அதிகமாக உருவாகின்றனர். இதைத் தடுத்திட அகில இந்திய அளவில் சிறப்பு செயல் திட்டம் ஒன்றினை வகுக்கவேண்டும்.

### 4. சிறப்புக் கூறு திட்டம் (Special Component Plan)


சிறப்புக் கூறு திட்டத்தை (Special Component Plan) மத்திய அரசும் மாநில அரசுகளும் முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும். இதுவரை கடந்த 20 ஆண்டுகளுக்கு மேல் இந்த நிதி நிலைத்திட்டம் சரிவர நிறைவேற்றப்படாமையால் ஒன்பதாவது ஐந்தாண்டு திட்டத்தில் மட்டுமே பட்டியல் இனத்தோருக்கு மாநில பட்ஜெட்களில் 20,000 கோடி ரூபாய் மற்றும் மத்திய பட்ஜெட்டில் வந்துசேர வேண்டிய ரூபாய் 1 லட்சம் கோடிக்கும் மேலான தொகை இவர்களுக்குக் கிட்டாமல் போயுள்ளது.

ஆகவே, மத்திய, மாநில திட்டக் குழுக்களில் சிறப்புக்கூறுத் திட்டத்திற்கென தனியான பிரிவை உருவாக்கி சென்னை, மும்பை, டில்லி, கல்கத்தா போன்ற இடங்களில் கருத்தரங்குகள் நடத்த வேண்டும். இந்த நடைமுறையை வலுப்படுத்த வேண்டுமென்றால் மத்திய நிதியமைச்சர், அந்தந்த மாநில நிதியமைச்சர்களோடு ஆண்டுதோறும் நிதி நிலை அறிக்கைக்கு முன்னர் பலதரப்பட்ட பட்டியலினப் பிரதிகளுடன் ஒரு . கலந்துரையாடல் நடத்திட வேண்டும்.

தனிமனித / குடும்ப வருமானம் அளிக்கும் திட்டங்கள் 'பிரித்தரியும் திட்டங்கள்' (Divisible Schemes) என்றும், கூட்டு மொத்த சமூக சேவை, அடிப்படை ஆதார வளங்கள் போன்ற வசதிகளைச் செய்து தரும் திட்டங்கள் 'பிரித்தரியாத் திட்டங்கள்' (Indivisible Schemes) என்றும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. சிறப்பு உட்கூறுத் திட்டங்கள் மொத்த ஒதுக்கீட்டில் 30% பிரித்தறியாத் திட்டங்களுக்காக வழங்கப்பட்டு பல் வேறு துறைகளுக்கு பிரித்தளிக்கப்படவேண்டும். மீதமுள்ள 70% நிதி, பட்டியலினத்துறைக்கு வழங்கப் பட வேண்டும். இந்நிதியைக் கொண்டு பட்டியலின சமுதாய மேம்பாட்டிற்கு உகந்த பிரித்தறியும் திட்டங்களை முன்னுரிமை அடிப்படையில் அத்துறையே வகுத்துக்கொள்ளும்.

### 5. தனியார் துறையில் இடஒதுக்கீடு

தனியார் துறையில் வேலைவாய்ப்புகளில் இட



கருத்தரங்கில் பங்கேற்றோர்

ஒதுக்கீட்டினை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் எடுக்கும் பெருமுயற்சியை பாராட்டுகிறோம். இதற்காக அரசு விரைவில் ஒரு சட்டத்தை இயற்றிட வேண்டும். இதன்மூலம் கீழ்நிலை பணியிடங்களிலிருந்து மேல்நிலை பொறுப்புகள் வரை (இயக்குனர்) இச்சமூகத்தினருக்கு பிரதிநிதித்துவம் உறுதி செய்யப்படவேண்டும்.

### 6. சட்டமன்ற உறுப்பினர்கள் குழு (Legislative Committee on SC/ST)

பாராளுமன்ற நடவடிக்கையில் உள்ள Parliamentary Committee on SC/ST-ஐப்போல அந்தந்த மாநில சட்டமன்றங்களிலும் சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய கமிட்டியை அமைத்து அனைத்துத் துறை களிலும் அவர்களின் சம்பந்தமான திட்ட செயலாக்கத்தை ஆராய்ந்து சட்டமன்றத்தில் ஆண்டுதோறும் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மத்திய மாநில அரசுகளில் செயல்படுத்தப்படும் பட்டியலினத் தவருக்கான அனைத்து திட்டங்களை உருவாக்குவதிலும், அமலாக்குவதிலும், கண்காணிப் பதிலும் பங்கேற்பு செய்வதை சட்டரீதியாகவும், திட்டரீதியாகவும் உறுதிசெய்ய வேண்டும்.

### 7. SC/ST குடியிருப்புகளை தனி ஊராட்சியாக அடையாளம் காணல்

அடித்தள மக்கள் சாதிப் பிடியிலிருந்து விடுதலை பெற்று சுதந்திரமான தன்னாண்மை உள்ளவராக வரவேண்டுமென்றால் பொது கிராமத்தில் அல்லது பொது ஊராட்சியில் ஒட்டுண்ணியாக கருதப்படும் சேரிகள் தனி ஊராட்சிகளாக அடையாளம் காணப்பட வேண்டும். 500 பேர்களைக் கொண்ட இத்தகைய ஊர் அமைப்பு கிராம ஊராட்சிகளாக அறிவிக்கப்படலாம். இவற்றிற்கு மத்திய அரசு நேரடியாக நிதி வழங்கலாம்.

அடித்தள பட்டியலின மக்கள் 'திட்டமிடுதல்', 'நிர்வகித்தல்' மற்றும் 'செயலாக்குதல்' ஆகியவற்றில் சுதந்திரமான நேரடிப் பங்களிப்பை அப்போதுதான் பெறுவார்கள். இதன்மூலம் நாட்டின் ஒட்டுமொத்த சமூகப் பொருளாதார நிலை உயர்வதுடன், பட்டியலின மக்களுக்கும் பிற சாதி மக்களுக்கும் இடையே ஏற்படும் பூசலும் களையப்படும்.



படிப்பகம்

www.padippakam.com

8. **தனி அமைச்சரகம் அமைத்தல் (Minister for Scheduled Caste Welfare)**

மத்திய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளிக்கும் துறையின் கீழ் பட்டியலினத்தவரோடு, ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சிறுபான்மையினர், உடல் ஊனமுற்றோர், கால்நடை - விலங்குகள் பராமரிப்பு மற்றும் சமூக பாதுகாப்பு போன்ற இதர 9-க்கும் மேற்பட்ட துறைகளை இணைத்து ஒரே அமைச்சகத்தின் கீழ் வைத்திருப்பதன் மூலம் பட்டியலினத்தவர் மீதான கவனம் சிதறுகிறது.

பட்டியலின பழங்குடியினருக்கென தனியாக அமைச்சகம், துறை களை ஏற்படுத்தியுள்ளதைப் போல பட்டியலினத்த வருக்கென தனி அமைச்சகம் உடனடியாக ஏற்படுத்த வேண்டும்.

சிறப்புக் கூறு திட்டத்தின் நிதி பட்டியலினத்த வருக்கு முழுமையாகச் சென்று அடைவதை உறுதி செய்ய இந்நிதியை கையாளும் பொறுப்பு முழுமையும் ஆதி திராவிட நலத் துறையிடம் விடுவதே சிறந்ததாகும். இந்நிதிக்கான வரவு செலவு திட்டத்தில் நிதி ஒதுக்குதல், துறை முன்னுரிமைகளை வகுத்தல், திட்டங்களை வகுத்தல், திட்ட நடப்புகளை மேற்கொள்ளுதல், கண்காணித்தல் ஆகிய அனைத்து செயல்பாடுகளுக்கும் ஆதி திராவிட நலத்துறையே இணைப்புத் துறையாக (Nodal Agency) செயல்பட்டு பட்டியலின மக்களுக்கான திட்டங்களை மாநிலத்தின் ஏனைய துறைகள் மூலம் செயல்படுத்தப்படுவதை கண்காணிக்க வேண்டும்.

9. **உயர்நிலை கமிட்டி அமைத்தல்**

நம் நாட்டில், விஞ்ஞான வளர்ச்சியினால் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஆனால் இருபத்து ஐந்து கோடிக்கு மேலான மக்கள் தொகை கொண்ட பட்டியலினத்தவர்களுடைய சமூகப் பொருளாதார வளர்ச்சியில் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய அளவில் மாற்றம் ஏதும் இல்லை.

காரணம் பட்டியலினத்த வருக்கான திட்டங்களுக்கு ஒதுக்கப்படும் மத்திய மாநில அரசுகளின் நிதி முறையாக செலவிடப்படவில்லை. எனவே ஒதுக்கப்படும் நிதியினை முறையாக திட்டங்கள் தீட்டவும், நடைமுறைப்படுத்தவும், திட்டப்பணிகளை கண்காணிக்கவும் உயர்நிலை கமிட்டி ஒன்றினை அமைத்து ஒழுங்குபடுத்திட வேண்டுமென கேட்டுக்கொள்கிறோம்.

உயர்நிலைக் குழுவில் சட்ட மன்ற உறுப்பினர்கள், தலித் ஆர்வலர் கள், அறிஞர்கள், கல்வியாளர்கள், பொறியாளர்கள், கணக்கர்கள் அங்கத்தினராக இருக்கவேண்டும். இந்த உயர்மட்டக் குழு ஆறு மாதத்திற்கு ஒரு முறை கட்டாயமாக கூட்டப்பட வேண்டும். ●

## ஹைக்கூ

■ பொன். குமார்

மதிய உணவிற்காக
உழவர் கையில் தட்டு
உழவர் திருநாள்.

●

அலறுகிறது
ஆலைச் சங்கு
ஓய்வுத் தேவை.

●

தலைவர் பிறந்தநாள்
தீக்குளித்த படியுள்ளது
மெழுகுவர்த்தி

## என்ன சொல்லி நாங்கள் அழ...

■ ந. குருபஞ்சராவ்

மாண்டுபோன மனித உடல்கள்
பறவைகள், மிருகங்கள்
அழுகாமல் காப்பதுதான் ஆர்.எஸ். பவுடர்
விஞ்ஞான உலகில் - அது
நல்ல விந்தைகள் புரிகிறது
அதனை நீரில் கலக்கி
அடைத்து விட்டால் எரிசாராயம்.

உலகை மறந்திருக்க, உயர்ந்த மயக்கம் பெற
உறையினில் நிரப்பிய அந்த உன்னத சரக்கை
குடிக்கத் துவங்கிவிட்டால் கூத்தும் பாட்டும்தான்.
மணக்கின்ற காரமான மாட்டிறைச்சி மசாலா
உனக்கு எனக்கு என போட்டியிட்டு சாப்பிடுவர்.

முதல் ரவுண்டே தனி ரவுண்டு!
அடுத்தடுத்து ஊற்றுவதோ
சமரசத்தின் பல ரவுண்டு
பாசமழை பொங்கி எழும்!
பறச்சேரி வீதிகளில் பட்டென்று சுருண்டிடுவர்
பல்லெல்லாம் இளித்திருக்க
பக்கவாய் பிளந்திருக்கும்
வேட்டி அவிழ்ந்திருக்க
விவேகம் உள்ள ரெட்டிமார்கள்
வீதி சாக்கடையில் வீழ்ந்து கிடப்பார்கள்.
தெளியாத இவனைத் தெளியவைக்க
குடத்து தண்ணீரை கொட்டி எழுப்பிவிட்டால்
தெளிந்து எழுந்தவுடன்
எம்சேரி மக்களை
ஏண்டா பறப்பயலே?
என்மீது தண்ணீர் விட்டாய்
என்றேதான் ஏசுகின்றான்.
என்னசொல்லி நாங்கள் அழ? ●


படிப்பகம்

www.padippakam.com

• சிறுகதை

■ கா.வ. கன்னியப்பன்

# நல்ல பாம்பு

மணி மூணு இருக்கும்.

"டேய்! கார்த்தி... கல்யான நாலு கிட்ட நெருங்குது. அந்த வெருவு எல்லாம் அடுக்காம அப்படியே கெடக்குது. அதை எல்லாம் கொட்டாவுல எடுத்து அடிக்கி வெக்கணும்.

மழை வேற வர மாதிரி மானம் மப்பும் மந்தாரமா கெடக்கு. மழையில நனைஞ்சா தொல்லையா போயிடும்டா"

"செரி... செரி..."

எடுத்து கொஞ்சம் கொஞ்சமா உள்ளே வைத்துக் கொண்டு இருந்தனர்.

"எப்பா! பாத்து எடுப்பா அடியில. எதனா கெடக்க போவுது. அடிக்கட்ட வேற."

கட்டையை எடுத்தார். அந்த கட்டை தவறி கீழே இருந்த கட்டை மேல் விழுந்தது.

"புஸ்" "புஸ்" என்று ஒரு பெரிய சீறல். கோபாவேசமான உக்கிரச் சீறல்.

"ஐய்யோ... மொரட்டுப் பாம்புடா!" என்று சொல்லிக் கொண்டே தலை தெறிக்க ஓடத் துவங்க...

"ஐய்யோ! ஐய்யய்யோ! ஊட்டு உள்ள போவுதுடா... ஏய்! லட்சுமி, வெளியே ஓடியாந்துருடி!"

"எப்பா! பாட்டி திண்ணையில ஒக்காந்து கீதுப்பா!"

"ஓடுடா, சீக்கரமா வெளியே இழுத்துகினு வாடா..."

கார்த்தி உள்ளே ஓடி தன் பாட்டியை தர... தர...வென்று இழுத்துக் கொண்டு வெளியே வந்தான்.

"அட! இன்னாடா! என்ன உடுடா! உடுடா..."

"பா...ம்...பு ஆயா"

"இன்னா? பாம்பா"

வீட்டில் இருந்த அனைவரும் தெருவிற்கு ஓடிவந்து நின்றார்கள். ஊர் மக்களே கூடியது.

"டேய்... கார்த்தி! இருள குடிசைக்கு போயி காத்தராயன கூட்டாடா! அவன் வந்தாத்தான் பாம்ப அடிப்பான், போயி சீக்கிரமா வாடா..."

சைக்கிளை எடுத்து மிதியாய் மிதித்து புறப்பட்டான்.

வழிப்போக்கன் ஒருவன் கேட்டான் "இன்னாப்பா இங்கே கூட்டம்."

"பாம்புங்க..."

"இன்னா... பாம்பா?"

"இங்க அந்த வெருவு எடுத்துகினு இருந்தம். அடியில கெடந்த கட்டய எடுத்தோம். 'புஸ்' 'புஸ்' ன்னு படம் எடுத்து எகிறி வந்துச்சி. இப்ப ஊட்டு உள்ள போயிடிச்சே..."

"கொம்ப எடுத்து அப்படியே அடிக்கிறது இல்ல..." என்றார் ஒருவர். "அட இன்னிக்கு வெள்ளி கெழமை. நல்ல பாம்ப அடிக்க கூடாதுப்பா" என்றார் இன்னொருத்தர்.

லட்சுமி "பாம்ப பாத்ததும் கல்புரம் கொளுத்தி இருந்தா கம்முனு ஊட்டு உள்ள போவாம வேற எங்கனா போயி இருக்குங்க" என்றாள்.

"ஆளு... ஆளுக்கு பேசிக்கினு இருந்தா இன்னாப்பா... நடக்கரதப் பாருங்கப்பா" என்றார் மற்றொருவர்.

"பசங்க பள்ளி கொடத்துல இருந்து வந்துட்டானுங்களா" என்று கேட்டபடி உள்ளே நுழைந்து திண்ணையில் உக்கார்ந்தான் காத்தவராயன். "ஒரே பில்லிடி. நாத்து தேடி.... தேடி.... புடுங்கரதுக்குள்ள மனிச்சம் தாக்கு அருந்து போச்சி புள்ள."

"பசங்க எங்கடி!"

"புளியாம் மரத்தாண்ட குண்டு வெளையாடுரானுங்க."

"காத்தராயா! காத்தராயா!"

"யாரு..."

வெளியே வந்து பார்த்தான் காத்தவராயன்.

"ஊட்டுல... ஊட்டுல... பாம்பு... பாம்பு" என்று மூச்சி வாங்கி கொண்டு பதட்டத்தோடு சொன்னான் கார்த்திக். "செரி. நீ போப்பா. நான் நடந்து வரேன்."



படிப்பகம்

www.padippakam.com

"இல்ல. காத்தராயா. சைக்களிலே ஒக்காரு"

"செத்த நில்லு. தே வரன்" என்று சொல்லிவிட்டு உள்ளே சென்று சில்லாக்கோலை எடுத்துக் கொண்டு வெளியே வந்தான்.

"ஒக்காரு... காத்தராயா"

ஏறி ஒக்காந்ததும் சைக்கிள் மேடு, பள்ளம் பாராமல் உருண்டு ஓடியது மெதித்த மெதியில்... மின்னல் வேகத்தில்.

வீட்டு வாசலில் ஊரே கூடி இருந்தது. அவர்களை எல்லாம் ஒதுங்கச் சொல்லி கார்த்திக்கின் அப்பாவை கேட்டான் காத்தவராயன்.

"எங்கே இருக்கு பாம்பு?"

"உள்ளதான் போச்சி. ஆனா எங்க இருக்குதுனு தெரியிலேயே."

"உள்ளதானே இருக்கீது" என்று கேட்டபடி சில்லாக் கோலை எடுத்துக் கொண்டு உள்ளே சென்றான். "உள்ளே ஒரே இருட்டா கீது. பேட்டரி இருக்கா!"

"இருக்குதுப்பா. இந்தா வந்து வாங்கினு போ."

பேட்டரியை வாங்கிக் கொண்டு உள்ளே சென்றான் காத்தவராயன்.

"ஏம்பா! யாருனா கூட போங்கப்பா."

ஐய்யோ! நான் போவ மாட்டன் நீ போவ மாட்டனு ஒரே புலம்பல்.

பழங்கந்தையெல்லாம் அடித்துப் பார்த்தான்.

"பானைய எல்லாம் எறக்கி கீழ வெச்சிட்டு கூட பாருப்பா..." அடுக்கி வைச்சி இருந்த பானைகளை எறக்கி ஒவ்வொன்றாகப் பார்த்தான். பிருமனையில் சுருட்டி படுத்து கிடந்தது.

சில்லா கோலால் ஒரே குத்து பாம்பின் தலையில் குத்தினான். வெளியே எடுத்துக் கொண்டு வந்தான். வெளியே நின்ற கூட்டமே நடுங்கியது. சில்லா கோலில் இருந்து உருவி கையால் எடுத்தான் காத்தவராயன்.

"வழியில கொளுத்தி போட்டுட்டுப் போயிடு இன்னா..." என்றாள் லட்சுமி.

கார்த்திக்கின் ஆயா

"எம் மொவராசன் நீ நல்லா இருக்கனும். ஒம் பொண்டாட்டி புள்ளைங்களும் நல்லா இருக்கனும்.

உங்க அப்பனும் இப்படித்தான். ஊருல முருகன் பொண்டாட்டி அலமேலு சாக்கடையில குளிச்சிகீனு இருக்கும் போது அவள பாம்பு கடிச்சிட்டு பக்கத்துல இருந்த ஆட்டுக்கல்லியில பூந்துகிச்சி. அப்போ ஒங்க அப்பா வந்து பாம்ப புடிச்சி அடிச்சாரு.

அது குஞ்சிங்க நெறைய வைச்சி இருந்ததால எல்லாத்தையும் ஒருத்தனால அடிக்க முடியில. நல்ல பாம்பு ஒங்க அப்பாவ கடிச்சிடிச்சி. எல்லா பாம்பையும் அடிச்சிட்டு ஊட்டுக்கு போனவருதான். காலையிலே செத்துட்டாருனு சொன்னாங்க ராசா. பாம்பு புடிக்க போவும்போது நீ மறக்காம மருந்தும் எடுத்துட்டுப் போ ராசா.

ஒங்க அப்பா தொழில அப்படியே செய்யர. நீ இல்லனா இந்த காட்டுல கெடக்கிற பாம்பால ஊரு சனமே செத்து போயி இருக்கும். ஒங்க செனத்தால தான் இந்த ஊரே உயிரோட கீது ராசா. இல்லனா ஊரு சனமே செத்து போயி இருக்கும்."

பாம்பை எடுத்துக் கொண்டு தன் வீட்டை நோக்கி நடந்தான் காத்தவராயன்.

●

## ஆவல்

■ எ.மு. இராதா

என் சகோதரிகளின்
கரிசல் தலையில்
எண்ணெய் நீரிட்டு
சீப்புக் கலப்பையால் உழுது
நேராய் ஒதுக்கிய
வாய்க்கால் கோடியில்
குஞ்ஜமாய்த் தொங்கும்
ரிப்பன் செடியில்
எப்பொழுது பூக்கும்
பூ?

●

## புதிர்

உன் பார்வை
'அய்ஸ்க்'கட்டி
என் பார்வை
'கேஸ்க்' கட்டிங்
யாருடைய இதயம்
முதலில் உருகும்?

●



படிப்பகம்

www.padippakam.com

# சிறப்பு கூறுத் திட்டம்

■ ஆங்கில மூலம் - சிவகாமி

■ தமிழில் - ராஜா

அட்டவணைச் சாதியினரின் பொருளாதார, கல்வி, சமூக முன்னேற்றம் ஆகியவற்றின் மேம்பாட்டினை முற்றிலும் உள்ளடக்கிய சிறப்புக் கூறுத் திட்டம் நாட்டின் திட்டமிடும் முயற்சியில் ஒரு சிறப்பம்சமாக விளங்குகிறது. அட்டவணைச் சாதியினரின் சமூக - பொருளாதார நிலைகளை வளர்ச்சி பெறச்செய்வதில் அதற்கு முந்தைய ஐந்தாண்டுத் திட்டங்கள் தோல்வியடைந்த காரணத்தால், 1980-81 இல் ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இத்திட்டம் உருவாக்கப்பட்டது.

அட்டவணைச் சாதியினரின் முன்னேற்றத்திற்காக நிதியும், சலுகைகளும் மாநிலத் திட்டத்திலிருந்து சரிவிகிதத்தில் சென்றடைவதை உறுதிசெய்யும் நோக்கில் உருவாக்கப்பட்டதுதான் சிறப்புக் கூறுத் திட்டம். சிறப்பு கூறுத் திட்டத்தின் கீழான செயல்திட்டங்கள் ஏழ்மைக் கோட்டிற்குக் கீழிருக்கும் அட்டவணைச் சாதியினர் பயன்பெறும் வகையிலும், விவசாயத் தொழிலாளிகள், சிறு விளிம்புநிலை விவசாயிகள், பெருக்குபவர் மற்றும் துப்புரவுத் தொழிலாளிகள், முறைப்படுத்தப்படாத தொழிலாளிகள் ஆகியோரைக் கொண்ட அட்டவணைச் சாதித் தொழில் குழுக்கள் பயன்பெறும் வகையிலும் திட்டமிடப்பட வேண்டும். மேலும் குடிநீர் விநியோகம், இணைப்புச் சாலைகள், வீடு, வீடு கட்டுமிடங்கள், ஆரம்பப்பள்ளிகள், சுகாதார மையங்கள் மற்றும் இதர அடிப்படை வசதிகளை அளிப்பதின் மூலம் அட்டவணைச் சாதியினரின் வாழ்சூழல் மேம்பாடு அடையும் வகையிலும் அவை இருக்கவேண்டும். சிறப்பு கூறுத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்கள் பகிர்ந்தளிக்கக்கூடியவை, பகிர்ந்தளிக்க முடியாதவை என இரு வகைப்படும். குடும்பம் சார்ந்த மற்றும் தனிநபர் வருமான உருவாக்கத் திட்டங்களின் மூலம் வள ஆதாரங்கள் பயன்பெறுவோரை நேரடியாகச் சென்றடைவது பகிர்ந்தளிக்கக்கூடிய திட்டமாகும். சமூக சேவை வசதிகள், அடிப்படை வசதி அபிவிருத்தி மற்றும் இதர பயன்கள் மூலம் வள ஆதாரங்கள் சென்றடைவது பகிர்ந்தளிக்க முடியாதவை.

இது சம்பந்தமாக மத்திய அரசு வெளியிட்டுள்ள பல்வேறு வழிகாட்டுதல்களில் 'சிறப்புக் கூறுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்படும் நிதிகள் அட்டவணைச் சாதியினரின் மக்கட்தொகை விகிதாச்சாரத்திற்கு ஏற்றவகையில் இருக்கவேண்டும்' என்று குறிப்பிட்டுள்ளது. ஆனால் திட்டங்களுக்குள்ளே பகிர்ந்தளிக்கக்கூடியது, பகிர்ந்தளிக்க முடியாதது என்று எவ்வாறு பங்கு வைப்பது என்ற குழப்பம் தீர்க்கப்படாமலேயே இருக்கிறது. இதைப்பற்றி மாநில அரசு ஒரு தெளிவான கருத்தை உருவாக்க வேண்டும்.

தற்போது, அடுத்த நிதியாண்டிற்கான பகுதி-1 திட்ட மதிப்பீடுகளை முடிவு செய்யும்பொழுது, நிதித்துறையானது, சிறப்புக் கூறுத் திட்ட மற்றும் சிறப்பு கூறல்லா திட்ட துணைக்கணக்குத் தலைப்புகளுக்கிடையேயான சம்பந்தப்பட்ட திட்டங்களுக்கு சரிசம விகித்தில் நிதிகளை ஒதுக்கி வருகிறது. பிற்பாடு இது ஒவ்வொரு வருடமும் வெளியிடப்படும் மஞ்சள் புத்தகத்தில் (அதாவது திட்ட பட்ஜெட் இணைப்புப் புத்தகம்) சிறப்புக் கூறுத் திட்டத்திற்கான ஒதுக்கீடாக பிரதிபலிக்கிறது. இப்படியாக, ஆதி திராவிடர் நலத்துறைக்கென ஒதுக்கீட்டை முடிவுசெய்வதில் ஒரு முற்றிலும் தற்காலிகமான நடைமுறை இருக்கிறது.

**தற்போதுள்ள நிதி ஒதுக்கீட்டு முறையில் உள்ள தவறு என்ன?**

2003-04 ஆம் ஆண்டிற்கான மொத்த பட்ஜெட் முதலீடு ரூ. 7000.19 கோடி. இதில் சிறப்புக் கூறுத் திட்டத்தின் பங்கு ரூ. 1519.50 கோடியாக இருக்க வேண்டும். ஆனால் மஞ்சள் புத்தகத்தில் இதன் அளவு ரூ. 349.90 கோடி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இது எவ்வாறு நிகழ்ந்தது?

அனைத்துத் துறைகளும் அதனதன் நடப்புத் திட்டங்கள் அட்டவணைச் சாதி பயனாளிகளை தன்னகத்தே உள்ளடக்கியிள்ளதாக அனுமானிக்கின்றன. எனவே அவை அட்டவணைச் சாதியினருக்கென திட்டங்களை எதிர்நோக்கி தனியாக உருவாக்குவதில்லை. ஆதலால் அவை மக்கட் தொகையின் அடிப்படையில் நிதிப்பங்கீடு செய்யும் கருத்தியல் கணக்குகளையே காண்பிக்கின்றன. அட்டவணைச் சாதியினருக்கென பிரத்தியேகமாகக் குறிக்கப்பட்ட திட்டங்களின் செலவுகள் மட்டுமே மஞ்சள் புத்தகத்தில் பிரதிபலிக்கின்றன.

அனைத்துத் திட்டங்களும் அட்டவணைச் சாதி பயனாளிகளை உள்ளடக்குகின்றனவா, இல்லையா என்பதை சோதனை செய்ய கண்காணிப்புப் பிரிவு எதுவும் அரசுத் துறைகளிடம் இல்லை. உதாரணமாக, நன்செய் விவசாயிகளுக்கு சிறு பைகளில் விதை, உரம் விநியோகிக்கும் திட்டம் அட்டவணைச் சாதி விவசாயிகளுக்கும் பொருந்தும் என விவசாயத்துறை எண்ணுகிறது. அட்டவணைச் சாதி விவசாயிகளுக்கு விநியோகிப்பது சம்பந்தப்பட்ட ஆவணங்களை அத்துறையின் அலுவலரோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட வேறு ஒரு பிரிவோ பரிசோதிப்பதுமில்லை, மதிப்பாய்வு செய்வதுமில்லை. மேலும், அட்டவணைச் சாதியினரில் பெரும்பங்கு வகிக்கும் புன்செய் விவசாயிகள் மற்றும் விவசாயக் கூலிகளுக்கான திட்டங்கள் எதுவும் இத்துறையிடம் இல்லை.

இதுபோன்று, கால்நடை பராமரிப்புத் துறையும், மீன்வளத் துறையும், செல்லப் பிராணிகளை வளர்ப்பதற்காகவும், குதிரை வளர்பிற்காகவும், சிறப்புக்கூறுத்



படிப்பகம்

www.padippakam.com

திட்டத்தின் கீழ் விகிதாச்சார அளவில் நிதிகளை ஒதுக்குகின்றன. இவ்வாறு, திட்டங்கள் அட்டவணைச் சாதியினரின் தேவைக்கேற்ற வகையில் இருப்பதில்லை. இவையெல்லாம் ஒருசில உதாரணங்களே. ஒவ்வொரு துறையும் கீழ்வரும் பல்வேறு திட்டங்களை கவனமாக பகுப்பாய்ந்தால், பெரும்பான்மையான ஒதுக்கீடுகள் கர்கித அளவிலேயே நின்றுவிடுகின்றன; அவை அட்டவணைச் சாதியினரை சென்றடைவதே இல்லை என்பது புரியும்.

**தலித்துகளின் முன்னேற்றத்திற்கு மிகப்பெரிய நிதி ஆதாரமாக இன்றும் திகழும் சிறப்புக்கூறு திட்டத்தினை பயனுள்ளதாக ஆக்குவதெப்படி?**

பகிர்ந்தளிக்கக்கூடிய திட்டங்களையும், பகிர்ந்தளிக்ககூடாத திட்டங்களையும் துல்லியமாகப் பிரித்துக்காட்டுவது சிரமமான காரியம். எனவே சிறப்புக்கூறுத் திட்டத்தின் 30 சதவிகிதத்தை பகிர்ந்தளிக்க முடியாத திட்டங்களுக்கென ஒதுக்கி, பல்வேறு துறைகளுக்கு சமவிகித அடிப்படையில் ஒதுக்கீடு செய்யலாம். சிறப்புக்கூறு திட்டத்தின் மீதமுள்ள 70 சதவிகிதத்தில் சிறப்புக்கூறு திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்கு அட்டவணைச் சாதியினரின் தேவை, முக்கியத்துவம் குறித்து அளிக்கலாம்.

இதற்கு திட்டக்குழுவில் ஒரு தனியான திட்டப் பிரிவு அமைக்கப்பட வேண்டும். திட்டங்கள் தயாரிப்பதிலும், முதன்மைத் தேவைகளை முடிவு செய்வதிலும் பல்வேறு பிரிவுகளில் உள்ள வல்லுனர்கள், ரிசர்வ் தொகுதிகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், தலித் பேரறிவாளர்கள், தலித் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் சேர்த்துக்கொள்ளப்படலாம். திட்டங்களை பார்வையிட்டு, அவற்றின் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்வதற்கும் இதே குழுவிற்கு அதிகாரமுமளிக்கலாம்.

**மத்திய அரசின் தலையீடு**

மத்திய நிதியமைச்சர் தலையிட்டு சம்பந்தப்பட்ட மாநில அரசுகளுக்கு கீழ்க்கண்ட உத்தரவுகளை/அறிவுறுத்தல்களை அனுப்புமாறு மத்திய அரசை நிர்ப்பந்திக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்:

1. மாநில அரசுகள் அந்தந்த மாநிலத்தின் தலித் மக்கட் தொகைக்கேற்ற விகிதாச்சாரத்தில் நிதியினை மாநில ஒதுக்கீட்டிலிருந்து சிறப்புக் கூறு திட்டத்திற்குக் கொடுக்கும்.

2. சிறப்புக் கூறு திட்டத்தின் கீழ்வரும் பகிர்ந்தளிக்கக்கூடிய திட்டங்கள் மற்றும் பகிர்ந்தளிக்க முடியாத திட்டங்களுக்கிடையேயான 30:70 என்ற விகிதாச்சாரத்தை மாநில அரசுகள் மீறலின்றி பின்பற்ற வேண்டும்.

3. பகிர்ந்தளிக்க முடியாத திட்டங்களின் கீழான நிதியை (30 %), நிதித்துறை, நடப்புத் திட்டங்களினால் பயனடைபவர்களை உள்ளடக்கும் விதமான அனைத்துத் துறைகளுக்கும் சரிசமவிகித அளவில் ஒதுக்கீடு செய்யவேண்டும்.

4. பகிர்ந்தளிக்கக்கூடிய திட்டங்கள் கீழான விதி (70%) மாநிலத்தின் அட்டவணைச் சாதியினர் மற்றும் பழங்குடி நலத்துறைக்கு ஒதுக்கப்படவேண்டும். மாநிலங்கள் தன் பங்கிற்கு அட்டவ்ணைச் சாதியினரின் முன்னேற்றங்களை முதன்மைப்படுத்தி, திட்டங்கள் தீட்டி, பல்வேறு அரசுத்துறைகள் மூலம் அவற்றை செயல்படுத்தி, கண்காணித்து, மதிப்பீடு செய்யவேண்டும்.

5. மாநிலத் திட்டக்குழுவில் தனியான திட்டப் பிரிவு ஒன்றை ஏற்படுத்தி திட்டமிடும் பிரிவில் அட்டவணைச் சாதி மற்றும் பழங்குடி நலத்துறைக்கு உதவிட வேண்டும்.

6. திட்டப்பிரிவில் பல்வேறு துறைகளின் வல்லுனர்களின், ரிசர்வ் தொகுதி மற்றும் பஞ்சாயத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், தலித் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், தலித் பேரறிவாளர்கள் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும். இதே குழு அதிகாரப்பூர்வ கண்காணிப்புக் குழுப்பிரிவாக மட்டும் இராமல் மற்றும் திட்டங்களை பார்வையிட்டு மதிப்பீடும் செய்யவேண்டும்.

7. சிறப்புக் கூறுத் திட்டத்தை கண்காணித்து, மதிப்பீடு செய்வதற்காக வாழ்தொழில் வல்லுநர்களைக் கொண்ட மாநில அளவு கண்காணிப்புப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்படவேண்டும்.

8. சிறப்புக்கூறுத் திட்டத்தில் 5% சிறப்புக்கூறு திட்டத்தின் செயல்பாடுகளை விளம்பரப்படுத்துவதற்காக செலவிடப்படவேண்டும்.

## காலனி

■ வாசு

காலனி என்றால் என்ன - என்று
கால்சட்டை பையன் ஒருவன் கேட்டான்
காலனி என்றால் - ஒரு நாட்டின்
காலனி ஆதிக்கத்தைக் குறிக்கும் என்றேன்
ஆங்கில ஏகாதிபத்தியம் இந்தியாவை
ஆண்டதுதான் காலனி ஆதிக்கம் என்றேன்
காலனி என்று நம்மை நாமே அழைத்தால்- என்றான்
கல்விகற்கும் சிறுவன் - உண்மைதான்
மேல்சாதியினர் அடிமைப்படுத்தும்
கீழ் சாதியினரை காலனி என்பதில் தவறு உண்டோ
காலனி என்றால் ஆங்கிலத்தில் இன்னும் - உண்டு
விலங்குகள் கூட்டமாக வாழக்கூடிய பகுதியை
காலனி என்று அழைப்பர்
செந்தமிழிலும் விளக்கம் உண்டு - காலனிக்கு
செருப்பு என்று - செருப்பை
வெளியே விடுவது ஏன் என்றால் - நம்மை
வெளியே நிற்கவைப்பது ஏன் என்று தெரியும்.
●


படிப்பகம்


www.padippakam.com

■ குடியரசன்

# கணிதம் நம் உடைமை -3

சென்ற இரண்டு கட்டுரையில் கணக்கின் பொது மையைக் கண்டோம். பெரும்பான்மையான வாசகர் களும், நண்பர்களும் கணக்கின் தத்துவத்தை நோக்கிய பார்வையை விரிவுபடுத்தி எழுதும்படி கேட்கின்றனர். கணக்கின் தத்துவம் Problem & Solution, அதாவது புதிர் & தீர்வு ஆகிய இரண்டு செயல்களை துவக்கம் மற்றும் இறுதியின் எல்லைகளாக கொண்டுள்ளதாக பவுத்தம் தவிர்த்த பிற தத்துவவாதிகள் நம்புகின்றனர்.


பவுத்தம் துவக்கம் மற்றும் இறுதி ஆகிய இரண்டு சொற்களின் உட்பொருளையே மறுதலிக்கின்றது. துவக்கம் ஒன்று இருப்பின் அதன் ஆதிக்கு முன்னர் இருப்பது இறுதி என்ற பொருளை ஈட்டுத் தந்துவிடும் என்பது மகாயான பவுத்தர்களின் கருத்து. துவக்கமும் இறுதியும் இரு அடுத்தடுத்த புள்ளிகள். இவை ஒரு வட்டத்தின் முழு வில்லின் இரண்டு புள்ளிகள். கருத்துப் பிழையால் இவ்விரு புள்ளிகளை ஒரே புள்ளியாய் குறிப்பாரும் உண்டு.




மேல் உள்ள வட்டத்தில் A என்ற புள்ளி துவக்கப் புள்ளியாகவும் அப்புள்ளியே இறுதி புள்ளியாகவும் நமக்கு தென்படுகிறது. இது ஒரு மாயை வட்டத்தில் மேல் தோற்றம் நன்கு வளைக்கப்பட்ட வில்லாக காட்சி தந்தாலும், வில் என்பது தொடர்ச்சியான புள்ளிகளாகவே கதை உலகம் நம்புகிறது. நேர்கோடு என்பதும் தொடர்ச்சியான புள்ளிகளையே குறிக்கிறது.




PQ என்ற கோட்டுத் துண்டில் P & Q ஆகிய இரண்டு புள்ளிகள் முதல், இறுதி புள்ளிகளாகத் தெரிகின்றன. இப்புள்ளிகளை இணைத்து ஒரு வட்டம் உருவாக்கினால்,




P&Q ஆகிய இரண்டு புள்ளிகளும் இணைந்து நமக்கு ஒரு வட்ட வெளிப்பரப்பை காட்சிக்குத் தருகிறது. இதில் P-யும் Q-வும் இரண்டு புள்ளிகளா? அல்லது இரண்டு புள்ளிக்கும் சேர்ந்து ஒரே புள்ளியா? அல்லது இரண்டு புள்ளிகள் சேரும் ஒரே இடத்தில் தோன்றும் ஒரு புதுப் புள்ளியா? என்ற மூன்று கோட்பாடுகளை நாம் பெறுகின்றோம்.

(அ) வட்டத்தின் P & Q இரண்டு புள்ளிகளும் இரு புள்ளிகளாக தோன்றும்போது இரண்டு புள்ளிக ளிடத்து இடைத்தூரம் சிறிது இருக்கும் என்ற வாய்ப்பு உருவாகின்றது. இந்த இடைத் தூரத்தில் வட்டம் என்பது முழுமை பெறாத வடிவம் என்ப தாகிறது. எனவே இரண்டு புள்ளிகள் வட்டத்தின் மீது துவக்கம் மற்றும் இறுதி என்ற நிலைகள் சாத்தியமல்ல என்பது மகாயீன பவுத்தத்தின் கேள்வி.

(ஆ) இரண்டு புள்ளிகளும் சேர்ந்து ஒரே புள்ளியை உருவாக்குகின்றது என்பது உண்மையாக இருப்பின், நேர்கோட்டின் மீதுள்ள தொடர்புள்ளிகள் அனைத் தும் சேர்ந்து ஒரே புள்ளியாக தங்களை சுருக்கிக் கொள்ளலாமேயன்றி தொடர்கோட்டை சமைப்பது வாய்ப்பற்ற ஒன்றாகிவிடும். எனவே இரண்டு புள்ளிகள் சேர்ந்து ஒரே புள்ளியை வாய்ப்பாக்குவது என்பது அளவியலின் நீட்டித்தக் கோட்பாட்டையே கேள்விக் குள்ளாக்கிவிடும். புள்ளி மீது புள்ளியை ஏற்றுவ தென்பது இரண்டு பரிமாணங்களைத் தாண்டி முப்பரிமாணத்தில் மட்டுமே சாத்தியம் என்பதும் அது வட்டத்தின் முப்பரிமாணத்தை கோளமாக அமைத்து விடும் என்பது தெளிவு.

(இ) இரண்டு புள்ளிகளும் இணையும் இடத்தில் ஒரு புதுப்புள்ளி தோன்றி, அப்புள்ளி இரு புள்ளி களையும் இணைக்கும் என்ற தத்துவம், வட்டத்தின் சுற்றளவு மற்றும் நேர்க்கோட்டின் நீளம் ஆகிய இரண்டும் வெவ்வேறு அளவுகளைக் கொண்டிருக் கும் என்ற நிலைக்கு நம்மை அழைத்துச் செல்கிறது. இது கணக்கின் அடிப்படையை கேள்விக்குட்படுத்தி விடுகிறது. எனவே, இம்மூன்றாம் நிலை சாத்தியமற்ற தாகி விடுகிறது.

இந்த மூன்று நிலைகளும் சாத்தியமில்லாதபோது, நேர்க்கோட்டை வட்டமாக்க இயலுதல் என்பதும் கேள்விக்குட்படுத்தப்படும். இதற்கான வடிவக் கணிதக் காரணங்களாக,

வட்டத்தின் சுற்றளவு $2\pi$ என்பதும் இதில் என்ற எண்ணின் இறுதி இலக்கம் அறியப்படாதது மாகும் என்பது பொதுவான வாதம். இக்கருத்தை பொதுமைப்படுத்தும்கால் வட்டம் என்ற அளவியல் உருவை ஏதேனும் ஒரு புள்ளியில் வெட்டி, வளை நீளத்தை நேர்க்கோடாக்க இயலாததாக வாதம் நம்மை நினைக்க வைக்கிறது. நாம் கைகளில் அணியும் காப்பு - அதை ஒரு புள்ளியில் வெட்டி - அதன் மீது விசை செலுத்தி நேர்க்கோடாக பரிமாற்றம் செய்ய முனைவோமானால் நேர்கோடு கிடைக்கும் என்பது சாத்தியமே. கழுத்தில் அணியும் ஆபரணம் தேவை ஏற்படின் நீள் கோடாக மாற்றம் பெற சாத்தியம் உண்டுதானே?



படிப்பகம்

www.padippakam.com

(அ) ஆனால் மூல உரு வட்டமா?

(ஆ) மாற்றம் செய்யப்பட்ட உரு நேர்கோடா?

என்ற இரண்டு வினாக்கள் தவிர்க்க இயலாத ஒன்றாகிறது. இந்த தத்துவார்த்த உருக்களை எப்படி கணிதம் அணுகுகிறது? பவுத்தம் தன் கருத்தை எப்படி பிரதிபலிக்கின்றது என்பது அவசியமான கேள்விகள்.

எடுத்துக்காட்டாக, 1 என்ற எண்ணை சரியாக இரண்டாகப் பகுத்தால் 0.5 மற்றும் 0.5 கிடைக்கிறது. இதில் 0.5 சரிபாதி 0.25. 0.25-இன் சரிபாதி 0.125 ஆகும். இப்பயிற்சி தொடர்ந்து நிகழ்த்தப்பட்டால் கிடைக்கும் தொகையின் எண்ணிக்கை குறைந்து கொண்டே போகும். கோடிக்கணக்கான முறை ஏன் இவ்வாறு பகுக்கப்பட்டும் நமக்கு மீச்சிறு தசம எண் குறிப்பாக மீதம் கிடைக்கிறது. கோடான கோடி முறை வகுத்தல் நடத்தப்பட்டாலும் நாம் பெறும் எண் ஒரு மிகச்சிறிய எண்ணாக இருக்குமே தவிர பூஜ்ஜியம் அல்ல. அதாவது எண்கள் கோடான கோடி முறை சிதைவுகளைப் பெற்றாலும் நமக்குத் தீர்வாக ஓர் எண்ணை வழங்குகிறது. இதை கணிதம் நமக்கு கண்முன்னே எண்களின் துணைமையோடு நிகழ்த்திக் காட்டுகிறது.

மனிதனின் உள்நம்பிக்கையும் அப்படித்தான். அவன் திறமை மீது நிகழ்த்தப்படும் தாக்குதல்கள் அவனின் நம்பிக்கையை சிதைக்கின்றது. அவன் தன் நம்பிக்கை தொடர்ந்து சிதைக்கப்பட்டாலும் உள் திறனற்று பூஜ்ஜியத்திற்கு அவனுடைய நெஞ்சம் சென்றடைவ தில்லை.அளவில் சிறிதேனும் நம் பிக்கை தன் இருத்தலை உறுதி செய்துகொண்டு உவப்பான வாய்ப்பை எதிர்நோக்கி இருக்கும்.

எடுத்துக்காட்டாக, 0.125-இன் இருமடியாக்கம் 0.250 ஆகும். இதன் இரு மடங்கு 0.5 ஆகும். இதன் இரு மடங்கு 1 ஆகும். இங்கு நான்கு முறை சிதைக்கப்பட்ட 0.125 தன் தொடர் மடங்காக்குதல் மூலமாக தன் பழைய 1-இன் தன்னுருவை அடைகிறதைக் காணலாம்.

இது மனிதனின் மனதிற்கும் அவன் உள்ள வலிமைக்கும் பொருந்துவதாகும் என்பது பௌத்தத்தின் சூன்யவாதமாகும். சூன்யம் என்பது ஏதுமற்ற நிலை அல்ல. காரணம் ஏதுமற்ற நிலை என்பது சாத்தியமே இல்லை. ஆனால் ஏதுமற்ற நிலையின் அருகாமை என்பது சூன்யவாதமாகும். சிதைவு என்பதை பவுத்தம் அங்கீகரிக்கிறது. சிதைவின் மாற்று நிகழ்வாக மீள் உருவாக்கமும் பவுத்தம் ஏற்று கொண்ட தத்துவமே. இத்தத்துவங்களை கணிதத்தின் வகுத்தலுக்கும், பெருக்கலுக்கும் ஒப்பிடலாம்.

ஒரு வாதத்திற்காக பின்வரும் சாத்தியமற்ற கோட்பாட்டை காணும்போது;

"ஒரு பொருள் சிதைந்து ஏதுமற்ற நிலை அடைகிறது. அது மீண்டும் மீள் உருவாக்கம் பெற்று வேறு ஒரு பொருளாக பரிமளிக்கிறது."

இந்தக் கோட்பாடு மேலெழுந்தவாரியாக சாத்தியம் போலத் தென்படினும், உண்மையில் ஒரு கணிதப் பிழையே இஃது ஆகும்.

புத்தர் மற்றும் சோபகன் ஆகிய இருவருக்கும் இடையில் நடந்த ஓர் உரையாடலை இங்கு குறிப்பிடுவது அவசியமாகிறது. சோபகன் பிறப்பால் பறையர் இனத்தவர். அவரை வளர்த்தவர் ஒரு வெட்டியான். சோபகன் பறையர் என்பதை மறைத்தே அவரின் வளர்ப்புத் தந்தை வெட்டியான் வளர்த்து வருகிறார். சோபகன் புத்தரை சந்தித்தபோது, அவரின் வளர்ப்புத் தந்தையால் தான் பறையர் என்பதை உணர்கிறார். தன்னை உணர்ந்த உணர்வோடு அவர் புத்தரோடு உரையாடுவது நமக்கு கவனக்குறைப்பு தேவையான ஒன்றாகிறது.

சோபகனின் தாய் நிறைமாத கர்ப்பிணியாக இருந்த போதே இறந்துவிட்டதாக நினைத்து அவரை இடுகாட்டில் புதைக்க கொண்டு செல்கிறார்கள். இடுகாட்டில் பலத்த புயல் மற்றும் மழை ஏற்படுவதன் காரணமாக இறுதிச் சடங்கிற்கு வந்தவர்கள் அனைவரும் கலைந்து சென்று விடுகின்றனர். இடுகாட்டில் பணியில் இருந்த வெட்டியான் இக்காட்சியைக் காண்கிறார். சிறிது நேரத்தில் சோபகனின் தாயார் "சோபகனை" என்று உடனடியாக மரணமடைகிறார். சோபகனை வெட்டியான் எடுத்து வளர்க்கிறார். சோபகன் ஒரு பறையர் என்பது வெட்டியான் ஒருவருக்கு மட்டுமே தெரிந்த இரகசிய உண்மையாக உள்ளது. சோபகன் வெட்டியானாகவே வாழ்வியல் கோட்பாட்டில் வளர்க்கப்படுகிறார். அவர் தன்னை வெட்டியான் என்றே புத்தரை சந்திக்கும் வரை ஏற்றுக் கொண்டிருக்கிறார். புத்தரின் முன் தான் பறையர் என்பதை உணர்ந்த சோபகன் பறையர்களுக்கான அரசியலை முன்வைக்கிறார்.

நாம் முன்வைக்கும் கேள்வி இதுதான். சோபகனின் வளர்ப்பால் 20 ஆண்டுகள் பிறந்த குழந்தை பருவத்து நினைவு முதல் வெட்டியான் என்ற உணர்வினால் உருவாக்கம் பெற்றிருப்பினும், திடீரென பறையர் என்பதை அறிந்தவுடன் அதற்கான அரசியலை அவரால் பேசுதல் சாத்தியமா?

சாத்தியமாக இருப்பின் பிறந்த குழந்தையின் மனதில் உள்ள இன உணர்வு தொடர்ந்து சூழல் காரணமாக சிதைக்கப்பட்டும் அவ்வுணர்வு அற்ற நிலைக்கு கொண்டு செல்லுதல் சாத்தியமா? நிச்சயமாக இல்லை. உணர்வின் தசம திவளைகள் உறுதியாக நிலைத்திருந்ததே, அவரின் உண்மைத் தேவையை அவர் இன்னார் எனவும் அவரின் அரசியல் நகர்வு இது எனவும் வெளிப்பட்டது. சூழல் காரணமாக, தொடர்ந்து சிதைத்தல் காரணமாக ஓர் உணர்வை மட்டுப்படுத்த இயலுமே தவிர ஒருபோதும் துடைத்தெறியப் படாது என்ற சோபகனின் ஒருநாள் நிகழ்வு நம்மை விழிப்படையச் செய்கிறது.

பிறக்கும்போது சமமாய் பிறக்கிறோம். பின்னர் ஏன் இந்த சமனற்ற போக்கு என்று பலர் சமத்துவம் பற்றி தங்கள் கருத்தாய் முன்வைக்கின்றனர். புத்தரின் கூற்றுப்படி, எந்த இரண்டு மனிதனும் அனைத்து வகையிலும் சமமானவர்கள் இல்லை. ஒரு மனிதனுக்கு


படிப்பகம்

www.padippakam.com

இன்னொரு மனிதன் அனைத்து வகையிலும் சமமான வனாக இருந்திட சாத்தியமே இல்லை.

Men are born unequal. Some are robust, others are weaklings என்பது புத்தரின் வார்த்தைகள்.

எண்களில் ஒரு எண் இன்னொரு எண்ணிற்கு சமமில்லையோ அதுபோலவே உயிரினங்களுக்கும். இரண்டு எண்கள் சமமாக இருப்பின், அந்த இரண்டு எண்களும் ஒரே எண்ணே. சமான இரண்டு எண்கள் இருப்பின், அவற்றில் ஒரு எண்ணின் தேவை அழிந்து விடும். இது மனித சமூகத்திற்கும் பொருந்தும். சாமான்ய மனிதன் தன்னை உயர்த்தி புத்தரின் நிலைக்கு கொண்டு செல்கிறான். மனிதனுக்கு உணர்வும், பகுத்தறிவும் உள்ளதால் புத்தரின் நிலை சாத்தியப்படுகிறது.

சோபகன் தான் யார் என்பதை உணர்ந்த பின் தன் பறையர் வழியாக நின்று புத்தரிடம் உரையாடுவதாய் தீக நிதாயம் குறிப்பிடுகிறது. சோபகனின் உள்ளத்தி லிருந்த சிறுபுள்ளி உணர்வு, தேவையின் வீரியத்தால் பெருகி வெளிப்பட்டுள்ளது என புத்த குருமார்கள் தெரிவிக்கின்றனர். அம்பேத்கரும் சோபகனை பறையர் என்றே குறிப்பிடுகிறார். தாயின் வயிற்றிலிருந்து வெளிவந்தவுடன் வளர்க்கப்பட்ட வெட்டியான், அவரின் தாயார், தந்தையார் பறையர் என்பதால் அவ்வுணர்வு வெளிப்படவே வாழ்வான் எனவும் அதை தருணமே தீர்மானிக்கும் என்பதாக பவுத்த காவியங்கள் கூறுகின்றன.


இதை சாதி உணர்வுக்கான புள்ளி என்பதைவிட அதிகாரத்தின் மையப்புள்ளி என்பதே பொருத்தமாக இருக்கும். மனிதன் ஒரு சமூகப்பிராணி. தான் சார்ந்து வாழும் சமூகமே அவனுக்கு அதிகாரத்தின் திறவு கோலாயுள்ளது. சோபகன் பறையன் என்று அறிந்ததும், பறையரின் அரசியலைப் பேசுவது இயல்பே. மேலும் பறையரின் அன்றைய வாழ்சூழலைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கான அரசியலைப் பேசுவது மனிதாபிமான அடிப்படை என்றும் கொள்ளலாம்.

நிலை இவ்வாறிருக்க, தங்கள் சாதி உணர்வில் குடும்பம், உறவு நடத்தும் தலித் அல்லாதவர்கள் சுயசாதி சிந்தனை உவப்பின்றி முழுமையாக இருந்திட சாத்தியமாகுமா? உணர்வுகளை வென்று கட்டுக்குள் நிறுத்தி இயங்குதல் சாத்தியமே. சூழ்நிலைகளில் மாற்றம் இல்லையெனில் அவ்வுணர்வுகளே அற்று, தன்னை இழந்து இயங்குவது நடவாத ஒன்றேயாகும்.

அளவியல் உருவங்கள் மிகச் சரியான கணிதத் தேவைகளோடு மட்டுமே கட்டமைக்கப்படும். வட்டம் என்ற அளவியல் உருவம் தன் மூல உண்மைகளாக,

(அ) மையம்

(ஆ) ஆரம் (மையம் - விளிம்பு தூரம் சமம்) கொண்டுள்ளது. ஆரத்தின் ஒரு புள்ளி வட்டத்தின் மையமாகவும்




'O' மற்ற புள்ளி வட்டத்தில் ஏதேனும் ஒரு புள்ளியாகவும் இருக்கும். வட்டத்தின் மேலுள்ள புள்ளி கோடிக்கணக்கான புள்ளிகளாக இருப்பினும், ஆரம் ஒரே அளவினதாக இருக்கிறது. ஆரத்தின் இருமடங்கு விட்டம் எனப்படுகிறது. பரவலாக கணித கோட்பாடு வட்டத்தின் சுற்றளவு 2¶r என்பதை வட்டத்தின் விட்டம் 2r - ஆல் வகுத்தால் ¶ யின் மதிப்பு கிடைக்கிறது.

$$¶ = \frac{2¶r}{2r}$$

இதை புத்தர் காலத்திற்கு முன்னரே வண்டிச் சக்கரம் செய்யும் முறைமையில் பயன்படுத்தி யிருந்தனர்.

பவுத்த துறவிகள் தங்களது கருத்தியலாக சக்கரங் கள் முழுமையான உள்ளீடு உடைய வட்டமாக இருப்பதற்குப் பதிலாக எட்டு ஆரங்கள் கொண்டு அமைக்கப்பட்டால் வண்டியின் வேகம் கூடும் என்பதை நடைமுறையில் கையாண்டிருந்தனர். ஆரங்களை உடைய வண்டியின் சக்கரம் பவுத்தர் தந்த கொடை. பொதுவாக வட்டத்தின் சுற்றளவை அதன் விட்டத்தால் வகுக்கும் முறையில் நமக்கு ¶ என்பதின் அளவு கிடைக்கும் என்பதை உலகின் பல்வேறு பகுதிகளில் ஆய்வு நடந்திருந்தாலும், பவுத்தர்களின் செயலாக்கம் மிகுந்த உண்மையும் எளிமையும் உடையதாக உள்ளது.

இக்கட்டுரையில் நம்மால் உபயோகத்தில் கிடத்தப்பட்ட

*(1)* புள்ளி

*(2)* சிதைவு & மடங்கு

*(3)* பை

*(4)* வட்டவில் & ஆரம்

ஆகியன பற்றி உலக அறிஞர்களின் ஆய்வுக்கு முன்னர் பவுத்தர்களின் பங்களிப்பு மனித சமூகத்தின் பயனை விரிவாக்கம் செய்துள்ளது.

மனித உடலில் ஒவ்வொரு நொடியும் லட்சக் கணக்கான இயங்கு செல்கள் வேலை செய்து மடிகின் றன. அதே மடங்கு செல்கள் புதிதாக உருவாகின்றன. இவையிரண்டு செயலும் இணைந்து மனித உடலின் மொத்த செல்களைக் குறித்த ஒரு நொடியில் மாறிலி யாய் வைத்துள்ளது. இந்த மாறிலி நிரந்தரமாகத் தென்படினும் உள்ளே மாறிலிக்கு எதிரான தொடர் மாறுதல்களை மனித உடல் செல்களின் மூலம் பெற்றுவருகின்றது. இந்த மாறுதல்களே நீடித்த மாறிலியை உருவாக்கம் செய்கிறது. தென்படும் ஒவ்வொரு மாறிலியிலும் பல மாறுதல்கள் உள்நிகழ் கின்றன என்பது புத்தரின் கோட்பாடு. வெளித்தோற்ற மாறிலியை, உள்நிகழும் மாறுதல்களோடு ஒப்பிட்டு உணர்தல் அநிக்கா தத்துவத்தின் வெளிப்பாடு. அநிக்கா தத்துவத்தின் கணித விளக்கம் கூடுதல் பொருளோடு பின்வரும் இதழில். - தொடரும்



படிப்பகம்

www.padippakam.com

சென்ற இதழ் தொடர்ச்சி...

■ எச். பீர்முஹம்மது, ழீன் கிறிஸ்டோப்

# பாரசீக வளைகுடாவுக்கு அப்பால்

**எச்.பீர்முஹம்மது:** பிரான்சின் மாணவர் புரட்சியைப் பற்றியும் அதில் கம்யூனிஸ்ட் கட்சிகளின் எதிர்வினை பற்றியும் குறிப்பிட்டீர்கள். இந்நிலையில் இந்தியாவின் இடதுசாரி இயக்கங்கள் பற்றி குறிப்பிட வேண்டியிருக்கிறது. இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சி எங்கே ஆரம்பிக்கப்பட்டது என்பதே இன்னும் சந்தேகமாக இருக்கிறது. இந்தியாவிலா அல்லது சோவியத் ரசியாவிலா என்ற மாறுபட்ட அபிப்ராயங்கள் நிலவுகின்றன. இந்திய சுதந்திர போராட்டத்தில் பெரும் பங்களிப்பை செலுத்திய அக்கட்சியால் இந்தியாவை வென்றெடுக்க முடியவில்லை. 1952-ஆம் ஆண்டு வரை ஆயுதப் புரட்சியே புரட்சிக்கான வழி என்ற நம்பிக்கொண்டிருந்தது. 1952-க்குப் பிறகே அது பாராளுமன்ற ஜனநாயகத்திற்கு திரும்பியது. அதன் ஐம்பது ஆண்டுகால வரலாற்றை எடுத்துக் கொண்டால் பாராளுமன்ற ஜனநாயக முறையிலும் அது தோல்வியே அடைந்திருக்கிறது எனலாம். நீங்கள் முன்சொன்ன வர்க்கம் பற்றிய மார்க்ஸின் கோட்பாட்டை தவறாக புரிந்துகொண்டார்கள். வரலாறு வர்க்க போராட்டங்களின் வரலாறு என்பதை இன்னமும் இறுகப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். இதனை ஒட்டியே அவர்களின் நிலச்சீர்திருத்தப் போராட்டங்கள் நடைபெற்றன. இந்தியாவின் சமூக-பொருளாதார அமைப்பைப் பற்றிய தெளிவான, ஆழமான பார்வை இல்லாததே இதற்குக் காரணம். இன்னொரு புறத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சோவியத்தின் கிளை மாதிரியே செயல்பட்டது. பல மாநாட்டுத் தீர்மானங்கள் கூட சோவியத்தில் எடுக்கப்பட்டன. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தவறான நடத்தைகளின் கீழ் அஜய்குமார் கோச், பி.சி. ஜோஷி உட்பட ஐந்துபேர்கள் மீது நடவடிக்கை எடுத்து அவர்களை கட்சியை விட்டு நீக்கியது. இறுதியில் ஸ்டாலின் தலையீட்டின் பேரில்தான் அவர்கள் மீண்டும் கட்சியில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். இங்கிருந்து அடிக்கடி அரசுப் பிரதிநிதிகள் மாதிரி கட்சிப்பிரமுகர்கள் சோவியத் சென்று வருவார்கள். இந்தியாவின் எமர்ஜென்சி பற்றி நீங்கள் கேள்விப் பட்டிருக்கலாம். அதை முதலில் ஆதரித்தார்கள். பின்னர் எதிர்த்தார்கள். (மாணவர் புரட்சியில் பிரான்சு கம்யூனிஸ்ட் கட்சியின் நிலைப்பா[illegible] ஒப்பிடத் தகுந்தது) அதற்குக் காரணம் எமர்ஜென்சி கொண்டு வந்த இந்திராவின் அரசு சோவியத் ஆதரவு அரசாக விளங்கியதுதான். தேர்தல் நேரத்தில் அவர்கள் கூட்டணி அமைப்பதே விநோதமாக இருக்கும். தங்கள் எதிரி யார் என்றே முடிவு செய்வதில் குழப்பம் நீடிக்கும். அதற்கு எல்லை தாண்டிய கூட்டணி (Border across alliance) என்று பெயர். இதனுடைய போக்கானது 1964-இல் சீன ஆதரவு மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சியின் பிளவுக்கு வழிவகுத்தது. கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்த பார்ப்பன தலைவர்கள் எல்லாம் அதற்கு தாவினார்கள். பிளவுக்கு காரணம் சீனா பற்றிய பார்வைதான். கட்சிக்குள்ளே சோவியத்-சீனா ஆதரவு தலைவர்கள் இருந்தார்கள். இந்நிலையில் 1962-இல் சீனா இந்தியா மீது படையெடுத்தது.

இதில் தாங்கள் எந்தப் பக்கம் என்று தீர்மானிப்பதில் அவர்களுக்கு குழப்பம் இருந்தது. அதிலிருந்து குறிப்பிட்ட எண்ணிக்கையிலானவர்கள் பிரிந்து தனியாக மாநாடு நடத்தினார்கள். இதனைத் தொடர்ந்து 1964-இல் தங்களை தனிக் கட்சியாக அறிவித்தார்கள். இவர்களிடையேயும் புரட்சி பற்றிய விசயங்களில் முரண்பாடு ஏற்பட்டு 1969-இல் மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட் (CPI-ML) என்ற அமைப்பு ஏற்பட்டது. கிறிஸ்டோப், நீங்கள் முக்கியமான ஒரு விசயத்தை தெரிந்துகொள்ள வேண்டும். நாம் பணிபுரியும் இந்த மத்திய கிழக்கில் இந்தியாவின் கேரளாவைச் சேர்ந்தவர்களே அதிகம் பணிபுரிகிறார்கள். இதில் வேடிக்கை என்னவென்றால் அம்மாநிலத்தை ஆள்வதும் நான் மேற்சொன்ன சீனஆதரவு கம்யூனிஸ்ட் கட்சிதான்.

1957-ஆம் ஆண்டு கேரளாவில் முதன்முதலாக கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சியை கைப்பற்றியது. இ.எம்.எஸ். நம்பூதிரிபாடுதான் அதன் முதலமைச்சர். ஜனநாயக முறைப்படி அமைந்த முதல் அரசு என்றெல்லாம் பெயர் வாங்கியது. அங்கு 28 ஆண்டு காலம் கம்யூனிஸ்ட் கட்சி ஆண்டிருக்கிறது. லெனின் காலத்து சிண்டிகேடிசத்தை தவறாகப் புரிந்து கொண்டதன் விளைவு அம்மாநில மக்களை இங்கு அனுப்பி வைத்திருக்கிறது. அங்கு கம்யூனிஸ்ட் கட்சி என்றாலே தொழிற்சங்கவாதம்தான். "உங்களை உள்நாட்டு முதலாளிகள் சுரண்டுவதற்கு நாங்கள் அனுமதியோம். நீங்கள் எல்லாம் வெளிநாட்டிற்குச் செல்லுங்கள். அங்கு அவர்கள் [illegible]ங்களை சுரண்டட்டும். உலகத் தொழிலாளர்[illegible]ள, ஒன்று சேருங்கள். எங்கள் சீனா வாழ்கவே." அதன் ஸ்தாபன அறிக்கையே சமச்சீரான, சுரண்[illegible]லற்ற சமூகத்தை கட்டமைப்பதுதான் (பார்[illegible] CPM-இன் ஸ்தாபன அறிக்கை) தங்களின் அதிகாரத்தனமான செயல்திட்டம் மூலம் மாநிலத்தை பின்னுக்குக் கொண்டு சென்றிருக்கிறார்கள். இதைப் பற்றி நான் ஊரில் இருக்கும்போது CPM பிரமுகர் ஒருவரிடம் விமர்சித்தேன். இதைச் சொன்னதும் அவருக்கு ஆவேசம் வந்துவிட்டது. கண்கள் இரண்டும் கபாலக் குழியிலிருந்து கீழிறிங்க துடித்தன. துடி. துடித்தவராக கேரளாவில் நாங்கள் பெரும் சாதனைகளை நிகழ்த்திவிட்டோம். வெளிநாடு செல்வது என்பது அவர்களின் திறமையைப் பொறுத்தது என்றார். அந்த



படிப்பகம்

www.padippakam.com

தொண்டரை இப்போது நினைத்து நான் பரிதாபப்படுகிறேன். நிச்சயமாக அவருக்கு அகில இந்திய பொதுச்செயலாளர் பதவி அளிக்கப்பட வேண்டும். (C.P.M. தன் தொண்டர்களின் மூளைகளில் EMULSION அடிப்பது இதன்மூலம் தெளிவாகிறது).

கிறிஸ்டோப், நீங்கள் பொறியாளராக இங்கு பணிபுரிவதால் உங்களுக்கு நன்றாகத் தெரியும் - இங்கு கட்டிடத் தொழிலாளர் படும் துயரம். தங்கள் நாட்டில் சிவப்புத் துணியை போர்த்திக்கொண்டு சாலையில் படுத்து மறியல் செய்தவர்கள் கூட இங்கு வந்து தாபூக் (சிமெண்ட், செங்கல்) தூக்கும் காட்சி தத்ரூபமானது. உச்சியைப் பிளக்கும் வெயிலில் உடல் இயந்திரம் தேய்ந்து தாபூக் தூக்கும் போது அதில் புரட்சி குத்திட்டு நிற்கிறது. அந்த செங்கலின் இரு பக்கங்களிலும் இ.எம்.எஸ். நம்பூதிரிபாடு, அச்சுத மேனன், ஈ.கே. நாயனார், கருணாகரன், ஏ.கே. அந்தோணி ஆகியோர் ஒளிந்திருக்கிறார்கள். மேலும் கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு என்று ரெடிமேட் அறிவு ஜீவிகள் இருக்கிறார்கள். கம்யூனிஸ்ட் கட்சியானது இம்மாதிரி அறிவுஜீவிகளை தேர்தல் நேரத்தில் பயன்படுத்திக் கொள்கிறது. தங்களின் தகிடுதத்தங்களை நியாயப்படுத்துவதற்கு மூலதனத்திலிருந்து வெட்டியெடுக்கப்பட்ட பகுதிகளை தொண்டர்களின் மூளைகளில் ஒட்டுவார்கள். அப்போது கட்சி பத்திரிக்கைகள் மற்றும் அதன் சார்பான பத்திரிக்கைகள் அனைத்தும் அவசரகதியாய் இருக்கும். பத்து பக்கத்துக்கு குறையாமல் 'மதச்சார்பின்மை என்றால் என்ன?' 'உலகமயமாக்கல் என்றால் என்ன?' 'தாராளமயமாக்கல் என்றால் என்ன?' போன்ற தலைப்புகளில் வெளிவரும் அக்கட்டுரைகளில் தங்கள் மீதான நியாயங்கள் இருக்கும். இந்த வகையில் சோவியத் ரசியாவின் வீழ்ச்சிக்குப் பிறகு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தன்னை மறுபரிசீலனைக்கு உட்படுத்திக் கொண்டது. ஆனால் சி.பி.எம் எதைப்பற்றியும் கவலைப் படாமல் இன்னமும் சீன புராணம் பாடிக்கொண்டிருக்கிறது. ஈராக் விசயத்தில் அமெரிக்க ஏகாதிபத்திய நடவடிக்கைக்கு ஐ.நா.வின் பாதுகாப்பு சபையில் உங்கள் நாடு எதிர்த்த அளவுக்குக்கூட சீனா எதிர்க்க வில்லை. அது தன்னை பாதுகாப்பதில் உறுதியாக இருந்தது. இவர்களின் சுயமுரண்பாட்டுக்கு அளவே இல்லை. (இது பற்றி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தோழர் ஒருவரிடம் கேட்டேன். அவர் ஒப்புக்கொண்டார். இருந்தும் கட்சிக் கூட்டத்தில் வெளிப்படுத்த முடியாத வருத்தம் அவருக்கு இருந்தது).

அடுத்ததாக சி.பி.எம் ஆண்டு வெள்ளிவிழா கண்ட மாநிலம் மேற்கு வங்காளம். சமீபத்தில் ஆளும் சி.பி.எம். அரசு மாநில மனிதவள அறிக்கையை வெளியிட்டிருக்கிறது. அதில் 26 ஆண்டுகால ஆட்சியின் நெளிவு சுழிவுகள் சுட்டிக் காட்டப்பட்டிருக்கின்றன. 26 ஆண்டு காலம் ஆட்சி செய்த பிறகும் அதனால் அம்மாநிலத்தில் வறுமையை ஒழிக்கமுடிய வில்லை. அங்கு நிலச் சீர்திருத்தத்தை நாங்கள் வெற்றிகரமாக செயல்படுத்தி விட்டோம் என்கிறது. இன்னமும் 1.5 லட்சம் ஏக்கர் நிலம் பகிர்ந்தளிக்கப்படவில்லை. அதன் அறிக்கை நிலமற்றவர்களின் எண்ணிக்கை உயர்ந்துள்ளதைக் காட்டுகிறது. (1980-89இல் 39.6%, 1990-2000இல் 49.8%) ஆண் - பெண் சம்பள விகிதங்களில் மாறுபாடு காணப்படுகிறது. வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துள்ளது. இன்னமும் சுமார் 50% பேர் வேலையில்லாமல் உள்ளனர். நகரமயமாக்கல் அதிகரித்து வருகிறது. சுற்றுச்சூழல் சீர்கேட்டில் சிறந்து விளங்குகிறது. அடிப்படை வசதிகள் இன்னும் முழுமையடைய வில்லை. அந்நிய முதலீட்டுக்கான கதவுகள் திறந்து விடப்பட்டிருக்கின்றன. அங்கு பட்டினிச் சாவுகள் நடந்ததை முதலமைச்சரே ஒப்புக்கொண்டிருக்கிறார். மேற்கு வங்க அரசு நக்சல்பாரிகளை கடுமையாக ஒடுக்கியது. அரசு இயந்திரத்தின் கொடூர தாக்குதலில் அதன் தலைவர் மஜூம்தார் படுகாயமடைந்து பின்னர் உயிரிழந்தார். (மஜூம்தார் மேற்கு வங்காளத்தில் இடதுசாரிகள் வேரூன்றுவதற்கு மிக முக்கிய காரணமாக விளங்கினார்.) இன்னமும் ஸ்டாலினிசத்தை நியாயப்படுத்தும் ஒரே கட்சி இதுதான். அது ஸ்டாலினிசம் பற்றி வகுப்புகள் எடுப்பதாக கேள்விப்பட்டேன். ஸ்டாலின் மாதிரியே சர்வாதிகாரத்தின் ஒட்டுமொத்தமாக தன்னை உருவகப்படுத்திக் கொள்கிறது. அதன் அந்நிய முதலீட்டு எதிர்ப்புக்கும் அந்நிய செலவாணிக்கும் இடையே வித்தியாசத்தைப் பார்க்க முடியவில்லை. இதற்கிடையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியோ தன்னுடைய தொண்டர்களுக்கு 'நம் சோவியத் மீண்டும் வரும்' என்று நம்பிக்கை ஊட்டிக் கொண்டிருக்கிறது. (நாமும் அவ்வாறு நம்புவோமாக) மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியோ எங்கள் சீனா வாழ்கவே. உலகமயமாக்கல், தாராளமயமாக்கல் என்பதாக நகர்ந்து கொண்டிருக்கிறது. (அதன் அரசியல் தீர்மானங்களை பார்க்க). ஆயுதப் புரட்சியை கைவிட்டு பாராளுமன்ற ஜனநாயகத்திற்குத் திரும்பியவர்கள் அதில் முழுமையாக தோல்வியடைந்து விட்டார்கள். இனி மாற்று வழியை காண்பது அவசியம். இந்தியா போன்ற ஜனநாயக நாட்டில் இடதுசாரிகளால் புர்ட்சியை முன்னரே ஏற்படுத்தி இருக்க முடியும். ஆனால் சோவியத் - சீனா புராணம் அவர்களை சறுக்க வைத்துவிட்டது. இவர்களுடைய செயல்பாடானது பி.ஜே.பி. என்ற பாசிச சக்தியை இந்தியாவில் நிசப்தமாக வளர வைத்து விட்டது. சோவியத் தகர்வுக்கு பின்னர் சி.பி.ஐ-யின் ஒரு தலைவர் எங்களுக்கு சோவியத் ரசியா தகர்வது முன்னரே தெரியும் என்றார்.

கிறிஸ்டோப், என்னவென்றே தெரியவில்லை. இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் என்ற பெயரை உச்சரிக்கும்போதே சில அறிவு ஜீவிகளுக்கு உடம்பு வியர்த்து விடுகிறது. இதயத்துடிப்பின் வேகம் அதிகரிக்கிறது. கட்சி மீது அவர்களுக்கு இருக்கும் ஆழ்ந்த பற்றுதலை நாம் பாராட்டுவோம். (விதிவிலக்காக இதில் தடுமாறுபவர்களும் உண்டு). இதற்கிடையில் எங்கள் மாநிலத்தில் சி.பி.எம் திரை மூலம் புரட்சியை ஏற்படுத்தலாம் என்று நம்புகிறது. (விவேக், கவுண்டமணி, செந்தில், வடிவேலு, திண்டுக்கல் லியோனி, லூஸ்மோகன், வெண்ணிற ஆடை மூர்த்தி). அதன் முடிவு அதற்கு நன்மையைத் தரட்டும். இவர்



படிப்பகம்

www.padippakam.com

களின் தலைமையிடமான சீனாவில் பங்லூன் இனமக்கள் இன்னமும் ஒடுக்கப்பட்டு வருகிறார்கள். அது முசோலினி காலத்து கார்பரேட் சோசலிசத்துக்கு மாறிவிட்டது. இந்தியாவில் தலித்துகளின் துயரம் இன்னமும் மாறவில்லை. பீகார் இன்னும் அதிகமாக அதை பிரதிபலித்துக் கொண்டிருக்கிறது.

ஈராக்கின் கதை உங்களுக்குத் தெரியும். ஈராக் போரின்போது இந்திய மீடியாக்களில் மலையாள மீடியாக்களே முக்கியத்துவம் கொடுத்து போர்ச்செய்திகளை வெளியிட்டன. போர் முடிந்தவுடன் அந்த பத்திரிக்கைகள் ஈராக் மறுசீரமைப்பு குறித்த கட்டுரைகளை வெளியிட்டன. அவை நகைப்புக்குரியனவாக இருந்தன. "முதல் கட்டமாக பத்தாயிரம் பேர் தேவைப்படுவர். அதில் நம் மலையாளிகள் பெரும்பாலானவர்களுக்கு வாய்ப்பு கிடைக்கும். "தீ மூட்டி குளிர்காயும் நடவடிக்கை இது. (இந்த உரையாடல் கட்டுரை வடிவம் பெறும் நேரத்தில் ஈராக்கில் 3 இந்தியர்களை பிணைக்கைதிகளாகப் பிடித்து வைத்திருக்கும் செய்தி வெளியாகிறது. அதனை இதனோடு இணைத்துப் பார்க்கிறேன்) கிறிஸ்டோப், எனக்கு அடிமைகள் காலம்தான் நினைவுக்கு வருகிறது. ஒருவேளை நாம் இப்போதுதான் புராதன - கூட்டு குழுவிலிருந்து அடுத்த நிலைக்கு வந்திருக்கிறோமா? என்று எண்ணத் தோன்றுகிறது. அது வளைகுடாவில் எங்காவது போர் நடக்காதா? நாம் குளிர் காயலாமே என்று நினைக்கிறது. மினரல் வாட்டர்களை குடித்துக் கொண்டே உலகமயமாக்கல், தாராளமயமாக்கல் குறித்துப் பேசும் மனிதர்களின் காட்சி அரங்கில் இவை எல்லாம் சதாரண நடவடிக்கைகளே. - தொடரும்

## பெரியாருக்கு முந்தைய அயோத்திதாஸர் - பிராமணரல்லாதார் இயக்கத்தின் ஆதிகர்த்தா

■ பெ.சு. மணி

அக்டோபர் 2004 இதழில் மா. வேலுசாமியின் ஆய்வுக்கட்டுரையைப் படித்தேன். வா நத்திறமையும், சான்றுகளின் அணிவகுப்பும் கட்டுரையின் ஆய்வுத் திறனை வெளிப்படுத்தியுள்ளன. 1986-இல் இதன் தொடர்பாக நான் எழுதிய "பகுத்தறிவு இயக்கச் செம்மல் பண்டிதர் க. அயோத்திதாஸ்" எனும் கட்டுரையில் இடம் பெற்றுள்ள சில செய்தியை தெரிவிக்க விரும்புகின்றேன்.

1. "தமிழகத்தில் ஆதிதிராவிடர் இயக்கம், பகுத்தறிவு இயக்கம், பிராமணரல்லாதார் இயக்கம் முதலான இயக்கங்களுக்கு சக்தி வாய்ந்த ஒரு முன்னோடியாகத் திகழ்ந்தவர் அயோத்திதாஸ் அவர்கள். இந்த வரலாற்று உண்மை முற்கூறிய இரண்டாவது, மூன்றாவது இயக்கங்களைப் பற்றிய தமிழக வரலாற்று ஆய்வுகளில் எடுத்துரைக்கப்படாமல் இருந்துவருகின்றது. 'பார்ப்பனர் அல்லாத உணர்ச்சி'யை மூலதனமாகக் கொண்டு எழுதப்பெறும் ஆய்வுகளில் அயோத்திதாஸ் அவர்களின் வரலாற்றுப் பாத்திரம் ஓரிரு சொற்றொடர்களில் கூட இடம்பெறாமல் உள்ள அவலம் நீடித்து வருகின்றது."

2. "பகுத்தறிவு இலக்கியங்களை, இலக்கியப் படைப்பாளிகளைத் திட்டமிட்டு ஒதுக்கிவைத்த இலக்கிய வரலாற்றுப் போக்கைக் கண்டித்து குரல் கொடுத்துள்ள தமிழ் விரிவுரையாளர் கு. வணங்காமுடி அவர்கள் தமது 'பகுத்தறிவு இலக்கிய வரலாறு' என்னும் நூலில் 'சிங்காரவேலர்' என்பவர் ஒருவர் இருந்ததாகக் கூட குறிப்பிடத்தவறிய அதே தவறை பண்டிதர் க. அயோத்திதாஸ் தொடர்பாகவும் செய்திருக்கிறார். முற்கூறிய அயோத்திதாஸர் கருத்துகள் பகுத்தறிவு இலக்கியத்தில் இடம்பெறவில்லை என்றால் அந்த இலக்கிய வரலாறு குறைபட்ட வரலாறே ஆகும். இந்த குறைப்பாட்டை அணிந்துரை எழுதிய பேராசிரியர் க. அன்பழகனும், பாராட்டுரை எழுதிய திராவிடக் கழக பொதுச்செயலாளர் கி. வீரமணியும் சுட்டிக் காட்டியிருக்கவேண்டும்."

20.6.1992-இல் தினமணிச் சுடர் இதழில் 'பண்டிதர் க. அயோத்திதாஸ்' எனும் கட்டுரையில் எழுதப்பெற்ற பின்வரும் செய்திகளையும் குறிப்பிட விரும்புகின்றேன்.

1. "தமிழில் தலித் இலக்கியத்தின் ஆதி கர்த்தாவாக பண்டிதர் க. அயோத்திதாஸைக் குறிப்பிடலாம். இத்துடன் பகுத்தறிவு இலக்கியத்தின் ஆதி கர்த்தாவாகவும் பண்டிதர் க. அயோத்திதாஸ் விளங்குவது விவாதத்திற்கு அப்பாற்பட்டது."

2. "... இவையாவும் ஈ.வெ. ராமசாமி பெரியாரின் பகுத்தறிவு இயக்கப் பயணத்திற்கு முற்பட்ட அயோத்திதாஸரின் பங்களிப்பை விளக்கவல்லன. அனைத்திந்திய அளவில் மராட்டிய மாநில சமூகப் புரட்சித் தலைவரான மகாத்மா ஜோதிராவ் பூலேவுடன் (1828 - 1890) அயோத்திதாஸ் ஒப்பாய்வுக்கு உரியவர்"

பெரியாருக்கு முந்தைய பண்டிதர் க. அயோத்திதாசர்' என்ற சொற்றொடரில் 'முந்தைய' எனும் சொற்பிரயோகத்தை ஏற்க மறுத்து என்னிடம் சீறிய வரும் உண்டு.

காலஞ்சென்ற எனதருமை நண்பர் அன்பு பொன்னோவியம் தொடங்கி வைத்த பண்டிதர் க. அயோத்திதாஸ் வாழ்க்கை வரலாற்றாய்வு எவ்வாறெல்லாம் வளர்ச்சி பெற்று வருகின்றது என்பதும் தனி ஆய்வுக் குரியது ■


படிப்பகம்

www.padippakam.com

■ மு. ஹரிகிருஷ்ணன்

# குன்னூத்தி நாயம்

‘எத்தன நாளா நடக்குது இந்தக் கூத்து? ஊருக்கவுண்டமூட்டுக் கொட்டாயில உள்றப்பூந்து இந்த மாதர திருட்டுப் பண்ணயம் பண்றவங் குண்டியில மசுரு மொளச்சவனாத்தான் இருக்கனும்! கண்டுக்கிட்டனா இல்லத் தெரியுஞ்சேதி. அவங்கோயால வனவாசி பெரும் பறயம்போவ... அப்பிடியே கொத்தோட மூணயும் வட்டம்போட்டு கீசு கீசுன்னு அறுத்துக் கூறு வெச்சிரமாட்டன்.’ நெனைக்க நெனைக்க, வரதப்பக்கவுண்டருக்கு கோவங் கொப்புளிச்சிக்கிட்டு வந்தது. நெஞ்சில அறி கொடிப்பம் ஆராயிருக்கும்? ஆராயிருக்கும்னு? ரெண்டு நாளா அவராலத் திங்க முடியல, உங்க முடியல, இராவுலப்படுத்தா கண்ண மூடித் தூங்க முடியல. மாடு மேய்ச்சிக் களச்சிப்போனா, மத்யான வெய்யில்ல நெவுலு ஒணக்கயாச் செத்த நேரம் படுத்து தல சாயலாம், ஒரு காத்து மடிக்காலத்தல மாடு கன்னப்புடுச்சிக் கட்டிக்கலாம், எதாச்சும் தவசம் தானியமடிச்சி ராசிப் பண்ணுனா செத்த நேரம் உள்றக் கொட்டி ஒணத்திக்கலாம்னு களத்தச் சேத்தி ஊரு ஓரமா ஒருக்கொட்டாயக் கட்டிப்புட்டு மனுசம் படற ஒவு தனியங் கொஞ்சமா? நஞ்சமா?

‘பாலக்குட்டையிலக் கெடந்த சக்கிலிப்பசங்களக் கொண்டாந்து ஊரோரமாக் குடிவெச்சி இந்த முன்சீப்பு நாராயணம்பிள்ளச் செஞ்சக்கோளாறு தோப்புல ஒரு தேங்காக் காய்க்கிறதுக்கில்ல, ஒரு மாங்காக் காய்கிறதுக்கில்ல, ஒரு வெள்ளாமப் பண்றதுக்கில்ல, ஆரியம் நட்டுருந்தா என்னா? அடவொரு கல்லக்காயிப் போட்டுருந்தாதான் என்னா? பரதேசிக் கண்டார ஓலியூட்டுதுங்க பேண்டு நொப்ப காட்ட நாசம் பண்ணி வெச்சிருதுங்க. பத்தும் பத்தாததுக்கு கொட்டாயிலக் கட்லப் போட்டு வெச்சிருந்தா அதுலப் படுக்கப்போட்டு டொக்கு வேற போடுதுங்க. இந்த சமாச்சாரம் இத்தன நாளாத் தெரியில. சனியம் புடிச்ச எலவு முந்தா நேத்து தாங் கண்லப்பட்டுது. பொழுதோட கெழக்க நிக்க வெச்சிருந்த கட்லு காத்தால மேக்க படுத்துக் கிட்டிருக்குது. அப்பறந்தா இந்தப் பாழாப்போன மண்டைக்கிப் பொறி தட்டிச்சி, ஆகா அதுல என்னமோ வில்லங்கமிருக்குது! ஆரோ நம்புளுக்கு இனுப்புக் குடுக்கறாங்க. மிச்சத்துல அவங்கள வுடறதா? ரெண்டுல ஒண்ணுப் பாக்கலாம்னு நேத்து அந்தியோட பட்டிய அடச்சிப்புட்டு போவக்குள்ள கட்லபெடுத்து அட்டாலி மேலக் கமுத்தி வெச்சிட்டுப் போனன். விடிஞ்சி வந்துப் பாத்தாச் சனிமூலையிலக் கட்லு காலக் கெளப்பிக்கிட்டுக் கெடக்குது. மாட்டுக்கறியத் தின்னுப்புட்டு மாப்ளைங்களுக்கு கோலு மோளம் அடிக்குது. நேத்துதா ஏமாந்துப் போயிட்டேன். இன்னிக்கு மட்லும் எங்கைலச் சிக்குட்டும். திருட்டுத் தேவுடியாப் பசங்களப் புடிச்சி, நுனுக்கி ரசம் புளியல நானு எங்க அப்பனுக்கேப் பொறக்கலன்னு கிழிஞ்ச டவுசரு எல்லாத்தையும் குச்சிப்போட்டுத் தூக்கி தூர வீசுனாரு. கட்ல ஒடச்சவங்களக் கையுங் களவுமாப்புடிக்க அந்த நிமுசமே தொரசங்கட்டிக் கிட்டாரு. அந்த ஊருக்கே நாட்டுக்கவுண்டரு அவரு! ' அவரு நாயமென்னா? நெகாருயென்னா? லேவாதேவ என்னா? கந்துவட்டிக்கி காசக் குடுத்துச் சனத்துக்கிட்ட காட்ட எழுதிவாங்கற நொப்பம் என்னா? அவருப் பேரச் சொன்னா அழுதப்புள்ள வாய மூடும். ஆளுத் தாட்ரீகம் அப்படி!

போனப் பொதங்கெழம போரிங் பைப்பு ஒடஞ்சிப்போயி. காலனி சனங்க குடி தண்ணிக்கி தடுமாறி, காடு கண்டப்பக்கம், கெணறுக் கண்டப் பக்கம் பாழுந் தண்ணிக்கி கெஞ்சி கெதறி, கெட்டலைஞ்சிச் சுத்திச் சோந்துப் போனாங்க. பாவத்தப் பாக்கமுடியாம மேட்டூருத் தண்ணி டேங்குல மேலுத்தெருவுக்குப் போற கேட்டு வால்வச் செத்தநேரம் மூடிப்புட்டு, சக்கிலித் தெருவு கேட்டு வால்வத் தொறந்து தண்ணிய திருப்பிவுட்டான்னுப்புட்டு தெல்லமங்கலத்தா மூட்டு மணியக்காரரு மேல, ஊரே முச்சூடும் ஒண்ணாச்சேந்து வரதப்பங்கிட்ட நாயஞ்சொல்லும்படி கேட்டுது. மவராசனுக்கு வந்ததுப் பாரு நேப்பாளம். சண்டாளன், பையன டேங் குலக் கட்டிப் போட்டு வேணுங்க மட்டும் வெளு, வெளுன்னு வெளுத்துப் பீத் தோலப் பிச்சிப் புட்டான். அந்தியூரு சாட்டம் பிஞ்சி பஞ்சா பெறப்பி பட்டு போயாச்சி. “ஏண்டாச் சக்கிலி, உனக்கு எவ்ள நீரேத்தமிருந்தா டேங்கு மேல ஏறித் தண்ணியத் திலுப்புவ? ங்கொம்மாத் தெங்கி எழுதி வெச்சாளா? டேங்க ஆர்ரா உனக்குப்பட்டா எழுதி வெச்சது? தாயோலிப் பையனே... ஒரே மிதிதாங்... கொடலுக் குண்டா மணியெல்லாம் வெளிய வந்துருஞ் சாக்கிரத! குடியானவங்களுக்கேக் குடிக்க தண்ணியில்ல. அந்தர் சாதி நாயிங்களுக்கு கெட்டக்கேடு ஆத்துத் தண்ணி கேட்குதா. இந்த ஒணத்தி அப்பவே இருந்துருக்கணும் பைப்புப்போட பிரசடெண்டுக்கு ரெண்டாயிர ரூவாய் பணங்குடுக்கனும்னு கேட்டதுக்கு டேசன்ல போயிச் சொன்னீங்க இல்ல. இப்பப்போயி அவங்க மூத்தரத்தக் குடிங்கடா.”

அல்ல வவுத்துல வதக்கு, வதக்குன்னு மிதிச்சாறு. பையன் அட்டையாட்டஞ் சுருண்டுக்கிட்டான். அதோட வுட்டாரா கவுண்டரு, உருவா எர நூறக் குத்தம் வெச்சி அந்தப் பணத்துல பித்தளப்பூட்டு வாங்கி கேட் வால்வ தொறப்புப் போட்டப்ப றந்தான் மனுசனுக்கு மனசாறிச்சி. அப்பேருகந்தத் தில்லாலங்கிடி கவுண்டருக்கே



படிப்பகம்

www.padippakam.com

கங்கட்டி வித்தக் காட்டிக் கொட்டாயில கும்மாளம் போட்டா கம்முனு இருப்பாரா? வேட்டப் புடிக்கிற முசுவுல என்னிக்கும் பட்டிப் பக்கம் எட்டிப் பாக்காத கவுண்டரு அன்னிக்கிங்க ஆளுக் காரப் பசங்களுக்கூட ரீவு வுட்டுட்டு பொழுது எறங்கற நேரத்திலியே பொறப்பட்டு பட்டிக் காவலுக்குப் போயிட்டாரு. பட்டி குடிசயிலக் கெடந்த கட்ல கொட்டாயப் பாத்தமாதிரி மறப்பாப் போட்டு, கிருக்க முருக்குன்னு துளிச்சத்தமில்லாம கப்பு-சிப்புன்னு படுத்துக்கிட்டாரு. காமாட்ல கை சோட்டுத் தொன்ன. தலமாட்ல மூணுசெல்லு பேட்ரி. நொம்ப உனுப்பா எதுத்தாப்ல ஆராச்சும் கொட்டாயிக்குள்ள பூதங்களான்னு முழிச்ச கண்ணு மடாம கொட்டாப் புளியாட்டம் பாத்துக்கிட்டேயிருந்தாரு. மணிப்பத்தாச்சி, பதனொன்னு, பன்னண்டு, விடியாலம் நாலாச்சி... ஊ... ஹூம் ஒருக் குஞ்சான குஞ்சு கொட்டாயிப் பக்கம் வரல, மனுசருன்ற நாத்தமே இல்ல.

"ஹூம் வந்தாச் சமாதின்னு தெரிஞ்சிக்குட்டாங்கூ பயந்தாங்கொள்ளிப் பசங்க. ஆருக்கிட்ட ஒளிக் கண்டு வெளயாண்டுப் பாக்கறாங்க? எங்கிட்டயேவா. ஹூம் வரதப்பங்கிட்ட வேலைக்கு ஆவுமா?"ன்னு மீசய முறுக்கு முறுக்குன்னு முறுக்கிவுட்டுக்கிட்டாரு! 'ச்சேரி எந்நேர மட்டும் பட்டியிலக் கெடந்துச் சாவறது, ஆட்டுப் புழுக்க, மூத்ர நாத்தம் தாங்க முடியல. பொழுதே விடிஞ்சி போச்சி. பாலாச்சும் பீச்சலாம்'னு போவுணி எடுத்தார ஊட்டுக்கு திலும்புனாரு. போறப் போக்குல அப்பிடியேக் குச்சி இடிச்சி பல்ல வெளக்கிக்கிட்டுச் சலவாதிக்கும் போயிட்டு வந்தாரு. ஊட்டச் சுத்திக்கிட்டு பொடக் காலிக்கு பொச்சி கழுவப்போன வரு, வாத்துரும்புச் சாத்தியிருக்கும் பிடிக் கைலத்தள்ளி மெதுவா கதவத்தொறந்தாரு. எடுத்து ஒரு அடிக்கூட வெக்கல. காலு எட்றிக் கவுந்து வுழுந்துருப்பாரு. சுதாரிச் சிக்கிட்டு இருட்டுல இதென் னாடா எலவுன்னு பட்டுனு லைட் டப்போட்டாரு பாரு கவுண்டரு கண்ணு ரெண்டுங் கூசிப்பேச்சி! அங்க, உள்ளார தண்ணி காய வெக்கிற அடுப்பு மேல மணிப் பையன கீழத்தள்ளி, மேலக்குந்தி கவுண்டச்சி பிசுறக் கெளப்பிக் கிட்டிருந்தா. அதப்பாத்ததும் பண்ணாடிக்கி பத-பதன்னு வந்திரிச்சி. எறிஞ்ச வன ஏன்னுக் கேட்கத் துப்புக் கெட்டு அம்ப ஓடிச்சி முறிச்சக் கணக்கா, ஏறிக்கிட்டிருந்த வக்கிட்ட வாயிப்பேச யோக்கிதி இல்லாமப் படுத்துக்கிட்டிருந்த பையன, கவுண்டரு 'அடுங் கோயான்னு' அடிக்க கைய நோக்கும்பிடி அவம்பாஞ்ச வெசயில அவருப் பாச்சியப் புடிச்சி நற-நறன்னுக் கடிச்சி துடிக்க துடிக்க இடிச்சித் தள்ளிப்புட்டு எட்டிக் குதிச்சி ஓடியேப் போயிட்டான். மக்யாநாளு மண்டயிலக் கட்டும், மாருல பத்துமா ஊருக்குள்ள திரிஞ்சவர, "என்னாங்க கட்டுன்னு கேட்டவங்களுக்கு கவுண்டரு வதுலேச் சொல்லல, வாயவுந் தொறக்கல.

# யாத்ரீகனின் உலகம்

■ தமிழ்மளவாளன்

யாத்ரீகனின் கைப்பையென
எல்லாவற்றையும் போட்டு வைக்க வேண்டியுள்ளது
இந்த மனசுக்குள்.

பயண வெளியின் வெறுமை நிறைந்த
பொழுதுகளை ஈடுசெய்ய
பயன்படுகின்றன பல வேலைகளில்.

எல்லா விதமான அரிதாரங்களையும்
பூசிக்கொள்ள வேண்டியிருக்கிறது
தேவைக்கேற்ற வேடமேற்பதற்காக

குழந்தைகளிடம் பிறுபிள்ளையெனவும்,
மனைவியிடம்
இவனைப் போல அப்பாவி எங்கேயும்
கண்டதில்லை
என்பதைப் போலவுமாக.

உடனிருப்பவர்களிடம் காப்பாற்ற வேண்டும்
உருவாக்கி வைத்திருந்தும்
மேதமைக் கட்டமைப்பை மேலும்
இருக்கத்தான் வேண்டியுள்ளது ஒருவனே
நானாக, நீயாக, அவனாகவென

திசையெங்கும்
நெரிசலோடும்
இடர்பாடுகளோடும் இருக்கின்றன.

குறுக்கீடுகள் மிக்க வழிநெடுகிலும்
யாத்ரீகனின் உலகம்
அத்தனை உற்சாகமானதில்லை.

அதிலும்,
வலிமை மிக்கவரை எதிரகொள்ளும்
பலமின்றி
ஒரு முட்டாளைப் போல
மௌனம் காக்க நேரும்போது தான்
யாத்ரீகனின் வலி
இன்னும் அதிகமாகிறது.

●


படிப்பகம்

www.padippakam.com

# SC/ST ஊழியர்க சங்கச் செய்திகள்

### தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்
### ஒதுக்கீட்டுக் கொள்கை புறக்கணிப்பு

மைய மாநில அரசுகளால் அங்கீகரிக்கப்பட்ட SC/ST-களுக்கான 19% ஒதுக்கீட்டுக் கொள்கையை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் செயலாக்கம் செய்திடாமல் கிடப்பில் போட்டு அங்கு பணிபுரியும் SC/ST பணியாளர்களின் உரிமைக் கோரிக்கையை தொடர்ந்து புறக்கணித்து வருகிறது. 2000-வது ஆண்டில் இந்நிறுவனத்தில், ஒதுக்கப்பட்ட 19 சதவிகிதத்திற்குப் பதில், 2% SC/ST ஊழியர்களே பணியிலிருந்தனர். அரசின் சமீபத்திய விருப்ப ஓய்வுத் திட்டத்தின் அமலாக்கத்திற்குப் பின்னால், அவர்கள் 1 % அளவிற்கு குறைந்துவிட்டனர். இது சம்பந்தமாக SC/ST. நலச்சங்கம் தொடர்ந்து விடுத்து வரும் கோரிக்கைகளுக்கு நிர்வாகமும், அரசும் கொஞ்சம் கூட செவி சாய்க்கவில்லை. 2002-இல் கண்துடைப் பிற்காக ஒதுக்கீட்டுக் கொள்கையை பின்பற்றுவதற் கான குழு ஒன்று நியமிக்கப்பட்டாலும், அது இன்றுவரை செயல்படாமல், செயல்படாததற்கான காரணத்தை நிர்வாகம் அரசின் மீதும், அரசு நிர்வாகத்தின் மீதும் சுமத்தி SC/STஊழியர்களை ஏமாற்றி வருகிறது.

இவன்
TNSC (SC/ST) டாக்டர்
அம்பேத்கர் பணியாளர் நலச்சங்கம்.

### BSNL ஊழியர் நலச் சங்கம்

BSNL நிர்வாகத்தில் நடைபெறும் ஒதுக்கீட்டுக் கொள்கை புறக்கணிப்பு, கல்பாக்கம், செங்கல்பட்டு பகுதிகளில் நடைபெறும் கேபிள் திருட்டுகளுக்கு உடந்தையாயிருத்தல், SC/ST-களுக்கான தேசிய ஆணையத்திற்கு புகார்களை எடுத்துச் சென்றதால் CGM தமிழ்நாடு வட்டாரத்தின் ஊழியர் குறை புறக்கணிப்பு மற்றும் தீர்வு காண்பதில் மெத்தனம் முதலிய நிர்வாகத்தின் SC/ST விரோதப் போக்கினைக் கண்டித்து அகில இந்திய SC/ST டெலிகாம் ஊழியர் நலச்சங்கம் 14.10.2004 அன்று செங்கல்பட்டு SSA, BSNL பொது மேலாளர் அலுவலக வளாகத்தில் உண்ணா விரதப் போராட்டத்தை நடத்தியது.

### இருளர் பாதுகாப்புச் சங்கம்

18.10.2004 அன்று நடைபெற்ற பழங்குடி இருளர் பாதுகாப்புச் சங்க பொதுக் கூட்டத்தில் மேற் கொள்ளப்பட்ட தீர்மானங்கள்

எஸ்.சி/எஸ்.டி., வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் 1989 மற்றும் விதிகள் 1955-ஐ சரியாக அமல்படுத்துதல், சாதிச்சான்று விரைவில் கிடைக்க பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் கோ. தன்ராஜ் அவர்களின் உதவியை நாடுதல், பழங்குடி இருளர் பாதுகாப்புச் சங்கம் சார்பில் மாதஇதழ் தொடங்க தீர்மானித்தல், பெண்களை ஊக்குவிக்க பெண்கள் விழிப்புணர்வுக் குழு ஏற்படுத்துதல், பழங்குடியினர் கல்வி முன்னேற்றத் திற்கு ஒரு கள ஆய்வு மேற்கொள்ளுதல், 400 குழந்தைகள் கல்வி பயிலும் விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் நேரு வீதியில் உள்ள வேதவல்லி அம்மாள் அறக்கட்டளைக்குச் சொந்தமான கட்டிடம் இடிந்து விழும் நிலையில் உள்ளதால் இக் குழந்தைகளை ஆபத்திலிருந்து காப்பாற்ற நடவடிக்கை எடுத்தல், என்.எஸ்.சி. பள்ளிகளுக்கு சி. துரைக்கண்ணு அவர்களையே தொடர்ந்து கல்விச் செயலாளராக நியமனம் செய்ய வேண்டுதல் மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர், காவல் கண் காணிப்பாளருக்கு பாரர்ட்டு தெரிவித்தல் போன்ற தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

பேரா. கல்விமனி
பணி ஒருங்கிணைப்பாளர்
பழங்குடி இருளர் பாதுகாப்புச் சங்கம்

---

■ தேவதேவன்

## வில்

பாய்ந்து வந்த அம்பைப் பற்றி
ஒன்றுக்குப் பத்தாய் முறித்துக்
காலின் கீழ் போட்டு
மிதி மிதி என்று மிதித்துப்
பொடிப் பொடியாக்கித் தீர்த்தும்
தீராக் கொந்தளிப்பின் மூச்சிரைப்பு.

"எய்தவனிருக்க
அம்பை நோவதென்ன?"

கையில் வில்லுடன்
விதிர் விதிர்த்து நின்றவனை நோக்கிச்
சிறுத்தையெனப் பாய்ந்தது கொந்தளிப்பு.

"வேண்டாம் வேண்டாம் வேண்டாம்
அவ்வில்லினைப் பிடுங்கிப்
பூஜ்தி செய்திட்டாற் போதுமே." ●



படிப்பகம்

www.padippakam.com

# புதிய கோடாங்கியின் அக்டோபர் டயரி

அக்டோபர் மாதம் முழுதும் பல்வேறு நிகழ்வுகள்! அம்பேத்கரியச் சிந்தனைகளை மையப்படுத்தியே அனைத்து நிகழ்வுகளும் நடந்தேறின. தேதிவாரியான சில முக்கியக் குறிப்புகளை மட்டும் வாசகர்களுக்கு வைக்கிறோம்.

அக். 1 : அக்டோபர் 2-ஆம் தேதி ராணிப் பேட்டை பெல் ஊழியர்களுக்கான பயிற்சி முகாம் குறித்து திட்டமிடப்பட்டது. சன்னா, சந்ரு, நிகழ் மற்றும் சிவகாமி திட்டமிடலில் கலந்துகொண்டனர்.

இன்பக்குமாருடன் வேலுச்சாமி இணைந்து அக்டோபர் 8, 9, 10 தேதிகளில் திருவள்ளூர் மாவட்டத் தில் தலித்துகளுக்கு தனிப் பஞ்சாயத்து குறித்து கள ஆய்வு செய்வது எனத்திட்டமிடப்பட்டது.

புதுக்கோட்டை முகாம் குறித்து பல் டாக்டர் ஜெயராமன் அவர்கள் எழுதிய கடிதம் விவாதிக்கப் பட்டு முகாமை டிசம்பர் 4, 5 தேதிக்கு தள்ளி வைப்ப தென முடிவெடுக்கப்பட்டது.

அக். 2 : லெனின், சன்னா, நிகழ், சிவகாமி தேனாவங்கி ஜெய்சன் ஆகியோர் ராணிப்பேட்டை பெல் நிறுவன ஊழியருக்கான முகாமில் கலந்து கொண்டனர். ஊழியர் சங்கத்தலைவர் லோகநாதன், மகாலிங்கம், செ.கு. தமிழரசன், பள்ளிகொண்டா தளபதி கிருஷ்ணசாமியின் மகன் கிருஷ்ணகுமார் ஆகி யோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

அக். 5 : பழங்குடி மக்களுக்கு ஜாதிச்சான்று வழங்குவதில் உள்ள சிக்கல்களைத் தீர்க்கும் பொருட்டு கூட்டம் நடத்தப்பட்டது. கல்யாணி, பி.பி. மார்ட்டின் ஜீவா, கஜேந்திரன், லோகநாதன், துப்புரவு தொழி லாளர் சங்க உறுப்பினர்கள், ஜக்கா பார்த்தசாரதி ஆகியோர் கலந்துகொண்டு சில தீர்மானங்களை நிறைவேற்றினர்.

அக். 6 : அப்னா பஞ்சாயத்து குறித்த கள ஆய்வுக்கு வேண்டிய பணிகள் துவங்குவது குறித்து இன்பக்குமார் விவரித்தார். கேள்விப் படிவங்கள் விவாதித்து இறுதியாக்கப்பட்டன.

அக். 7 : பு. ஜார்ஜ் மற்றும் சென்னை கிறித்துவக் கல்லூரி தமிழ்த்துறை தலைவர் மைக்கேல் ஃபாரடே அவர்களின் ஏற்பாட்டின்படி எழுத்தாளர் சிவகாமி அவர்கள் தமிழ் துறை மாணவர்களுக்கு 'தலித்தும் என் எழுத்தும்' என்ற தலைப்பில் உரையாற்றி மாணவர்க ளோடு அம்பேத்கரியச் சிந்தனைகள், தலித் பிரச்சினை கள் குறித்து கலந்துரையாடல் நிகழ்த்தினார்.

அக். 8 : செங்கல்பட்டு CRDS தலித் மகளிர் சுயஉதவிக் குழுவின் மாதாந்திரக் கூட்டத்தில் தாமஸ் மாத்யூ அவர்களும் எழுத்தாளர் சிவகாமியும் கலந்து கொண்டு 'தலித் பெண்ணியம்' என்ற தலைப்பில் உரையாற்றினர். புதிய கோடாங்கி இதழ்களை ரூ. 5 விலைக்கு மகளிர் குழுக்களுக்கு அனுப்ப உறுதியளிக் கப்பட்டது.

அக். 10 : பஞ்சமி நிலமீட்பு போராட்டத்தில் உயிர்துறந்த ஜான் தாமஸின் ஊரான பாப்பா நல்லூரில் ஜான் தாமஸ் மற்றும் ஏழுமலைக்கு வீர வணக்கம் செலுத்தி அக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்த Fr. ஜான் சுரேஷ் அவர்கள் தலைமையில் பெருமாள், அப்பாதுரை, குமார், குடியரசு, சிவகாமி உரையாற்றினர். பஞ்சமி நிலத்தை மீட்டெடுப்போம் என உறுதிமொழி எடுத்துக்கொண்டனர். அதே ஊர் வன்னியர்களுக்கும் தலித்துகளுக்கும் உள்ள தற் போதைய பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வழிவகுக்கப் 1பட்டது.

அக். 14 : ஜீவா, ஜேகப் பெல்லி இவர்களுடன் அரவாணிகள் முன்னேற்றத்திற்கான செயல்திட்டங்கள், பழங்குடிப் பெண்களின் தலைமைத்துவ பயிற்சி முகாம்கள் ஆகியவை குறித்து விவாதிக்கப்பட்டன. நவம்பர், டிசம்பரில் பல நிகழ்வுகளை நடத்தத் திட்ட மிடப்பட்டது.

அக். 16 : பத்தாவது ஐந்தாண்டு திட்டம் குறித்து வள்ளல் பெருமான் ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் கலந்துகொண்டு எழுத்தாளர் சிவகாமி உரையாற்றி னார். ப்ரதிபா ஜெயச்சந்திரன், நிகழ், ராஜ்குமார், சன்னா, குடியரசு, வேலுச்சாமி ஆகியோர் அங்கு வந்திருந்த ஏராளமானோருடன் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

அக். 17 : திருவள்ளூர் சுப்பிரமணியம், ரவி - சித்தார்த்தன் ஏற்பாடு செய்திருந்த எழுச்சி முகாமில் ஓவியர் சந்ரு, சன்னா, குடியரசு, வேலுச்சாமி, நிகழ், சிவகாமி, ஆதி திராவிடன், மணி, DRO லோகநாதன், மற்றும் பலர் கலந்துகொண்டு உரையாற்றினர். புதிய கோடாங்கி வாசகர் வட்டம் உருவாக்கப்பட்டது.

அக். 19 : சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக் கழகத்தின் செய்தி விஞ்ஞானத் துறையுடன் புதிய கோடாங்கியும், தலித் பன்னாட்டுக் கல்வி மய்யமும் இணைந்து மின்னாட்சியில் பெண்களின் பங்கு (Women's prticipation in e-governance) என்ற தேசிய அளவிலான கருத்தரங்கு நடத்துவது குறித்து விவாதிக்கப்பட்டு டிசம்பர் 20, 21-இல் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் நடத்துவதென முடிவெடுக்கப் பட்டது. விவாதத்தில் செய்தி விஞ்ஞானத் துறையின் தலைவர் (அண்ணாமலை பல்கலைக்கழகம்) திருமதி. சூர்யா உடனிருந்தனர்.


படிப்பகம்

www.padippakam.com

அக். 21 : கொத்தடிமை முறைக்கு நிரந்தரத் தீர்வு காண சந்திரசேகரன் ஏற்பாடு செய்த கூட்டத்தில் கருப்பன், அந்தோணி ராஜ், சிவகாமி கலந்துகொண்டு தங்கள் கருத்துக்களை வழங்கினர்.

அக். 23 : பெரம்பலூர் மாவட்டம் வி. களத்தூரில் புதிய கோடாங்கியின் எழுச்சி முகாம் நடைபெற்றது. பொன். ஆனந்தராசு, சீனிவாச ராவ், ஆடல், அகவி, ராமர், சங்கர், குடியரசு, சன்னா, சிவகாமி, நிகழ் போன்ற எழுத்தாளர்களும் தங்கராஜ், வரதராசன் போன்ற ஊர்ப் பெரியவர்களும் கலந்துகொண்டு உரையாற்றினர். புதிய கோடாங்கி வாசகர் வட்டம் துவக்கப்பட்டது.

அக். 26 : சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக் கழகத்தின், அரசியல் விஞ்ஞானம் மற்றும் பொது நிர்வாகத் துறையுடன் புதிய கோடாங்கி மற்றும் தலித் பன்னாட்டுக் கல்வி மய்யமும் இணைந்து "தலித்துகளின் உரிமையும் பாதுகாப்பும் குறித்து எதிர்கொள்ளும் சவால்களும் வாய்ப்புகளும்" (National Level Seminar on Rights and Privileges of Dalits : The challanges and opportunitives) என்ற தலைப்பில் தேசிய அளவிலான கருத்தரங்கு ஒன்றை ஜனவரி 6-8, 2005 நடத்துவதென விவாதித்து முடிவெடுக்கப்பட்டது. விவாதத்தின்போது அண்ணாமலை பல்கலைக் கழகத்தின் மேற்படித் துறையின் தலைவர் பேரா. தணிக்கொடி உடனிருந்தார்.

அக். 27 : சக்திவேல் மகாலட்சுமி அவர்களின் சாதி மறுப்புத் திருமணம். சன்னா, கல்யாணி, சிவகாமி சிறப்புரை.

அக். 28 : பஞ்சமி நில மீட்பு குறித்த கூட்டம் நடத்தப்பட்டது. ஆஸி பெர்னான்டஸ், பிபி மார்ட்டின், கிறிஸ்துதாஸ் காந்தி, சிவகாமி, கு. செல்லப்பன், இ.ஆ.ப. (ஓய்வு) இன்பக்குமார், கருணாகரன் மற்றும் SAM நிறுவனத்தின் பிரதிநிதிகள் பலர் கலந்துகொண்டனர். பஞ்சமி நிலக் கணக்கெடுப்புக்கு அரசை வலியுறுத்துவது முதல் நடவடிக்கையெனத் தீர்மானிக்கப்பட்டது. தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ள தலித் இயக்கங்கள், தலித் அறிவாளர்கள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் அடங்கிய காரியக்குழுவை நியமிப்பது குறித்து நவம்பர் 9-ஆம் தேதி நடக்கும் கூட்டத்தில் முடிவெடுக்கலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது. ●

# அவனிவன் என்றால்...

■ அகவி

பள்ளிக் கூடத்தைப்
பிரியமுடன்
மூடுவதும் திறப்பதும்
பெரிய வாத்தியார்தான்

சாவிக் கொத்தாய்
சொருகி வைத்திருப்பார்
மாணவர்களின் குடும்பக் கொத்தை

வார்த்தைகளின் கைவீசலில்
சந்ததிகளின்
சத்தங் கேட்கும்

விசாரிப்புகளிலேயே
பெருசுகளின் அறிவில்
பூத்தாவி
ஒருபடி உயர்வார் மதிப்பில்

உள்ளூருக்கு மாற்றல் ஆக
எண்ணியதில்லை
ஒரு நாளும்...

பேருந்தில்லாத
ஊரென்றாலும் பரவாயில்லை
வெளியூரில்
வேலை செய்யவே விருப்பம்

அரச மரத்தடிக் கல்லிலமர்ந்து
சட்டதிட்டத்தை

எத்தனை சப்பு சப்பினாலும்
ஒன்பதரைப் பேருந்து
வந்தால்தான் ஆச்சு

போனால் போகட்டும்
பொறம்போக்குப் பயல்களென
பொழுதுசாய ஒரு வண்டி வரும்

நசுங்கிப் பணி பார்க்கும்
நல்லுசாமி வாத்தியாருக்கு
பெட்ரோல் செலவோடு
இப்படியொரு ஊரா?

உள்ளூருக்கு மாற்றல் ஆக
உள்ளூரச் சொன்னார்
அதிகாரி ஒரு நாள்

சாதி வெறி
மூத்திரம் பெய்ய
காலைத் தூக்கி அலையும்
கிராமத்தின்
கிழட்டு நாய்கள்
அவன் இவன்
என்றால்
அவன் நாக்கை
அறுப்பது யார்?

நல்லுசாமி வாத்தியார்
கேள்விச் சூட்டில்
கருத்துப் போனது
அதிகாரி முகம்! ●



படிப்பகம்

www.padippakam.com

# உடல்மொழி

■ சிவகாமி

தன்னார்வத் தொண்டு நிறுவனங்களைப் பற்றிய நமது விமரிசனங்கள் இப்படியிருப்பினும், தலித்துகளுக்கான முன்னேற்றத் திட்டங்களை செயல்படுத்த மூன்று வகையான நிறுவன முறைகளே உள்ள நிலையில், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் அதில் ஒன்றாக இருப்பதை நாம் மறுக்க முடியாது. மூன்று வகையில் உள்ளது அரசு.

**அரசு**

அரசு இன்று மத - சாதியின் பிணைப்பில் இயங்கிக் கொண்டிருக்கும் இயந்திரம். சாதி துவேஷம் மற்றும் தலித் வெறுப்பு கொண்டவர்களால் மேலிருந்து கீழ் வரை நிரப்பப்பட்டிருக்கிறது. இவர்களிடமிருந்து பெரிதாக எதிர்பார்ப்பதற்கு ஒன்றுமில்லை என்பது கடந்த நாற்பதாண்டு காலம் உணர்த்தும் உண்மை. தவிரவும் அரசு என்பது ஊழலின் ஊற்றுக் கண்ணாக விளங்குகின்றது. தலித்துகளுக்கான மாநில அரசுகளின் ஒதுக்கீடு செலவு செய்யப்படுவதாக கணக்குக் காட்டப்பட்டாலும், கீழ்மட்டத்திலுள்ள தலித்துகளைச் சென்றடைவதில்லை என்பதை வறுமைக்கோட்டின் கீழ்வாழும் தலித்துகள் பற்றிய புள்ளி விவரங்கள் உறுதி செய்கின்றன. மேலும் இத்திட்டங்கள் யாவும் தலித்துகளின் தேவையறிந்து தீட்டப்பட்டவை அல்ல. இந்தக் காரணங்களினால் அரசைப் புறக்கணித்து விடமுடியும் என்று சொல்வதற்கில்லை. தலித்துகளைப் பொறுத்தளவில் அரசுதான் அவர்களுக்கான நிதி ஆதாரம். ஆகையால் அரசு அமைப்பில் அதிகாரம் பெற தலித்துகள் தொடர்ந்து போராடி வருகிறார்கள்.

**தலித் இயக்கங்கள் / தலித் அரசியல் கட்சிகள்**

பெரும்பாலும் இவை தேர்தலை அடிப்படையாகக் கொண்ட அமைப்புக் கட்டுவதிலும், அரசியல் பேரங்களிலும் கவனம் செலுத்தி வருகின்றன. தலித் முன்னேற்றத்திற்கான தூரப்பார்வையோ, அதையொட்டிய கருத்துப் பரிமாற்றம், கட்சி உறுப்பினர் பயிற்சியோ இன்றி தலித்தல்லாத அரசியல் கட்சிகளுடன் இணைந்து அரசியல் பதவிகள் பெறுவதிலேயே கவனம் செலுத்தி வருகின்றன. மக்களை குழுக்களாக அணுகி அவர்களை இயக்கப்படுத்தும் செயல் குறைவாகவே நடைபெறுகின்றது. வலுமிக்க அரசியல் கட்சிக்கு, தள அளவில்/கிராம அளவில் கிளை தொடங்கி கட்சிக் கொடி கட்டுவது, பொறுப்பாளர்களை நியமனம் செய்வதோடு இவைகளின் பணிகள் தேக்கம் அடைந்துள்ளன. பிரச்சினையை ஒட்டி விழித்துக்கொண்டு சிறு கூச்சல் நிகழ்த்துவதே இவைகளின் செயல்பாடுகள். ஏதேனும் ஒரு சில கிளைகள் விதிவிலக்காக இருக்கலாம். இவ்வியக்கங்களால் தலித் பெண்கள் முன்னேற்றத்திற்கான செயல் திட்டங்களை வகுத்து முறையாகச் செயல்படக் கூடுமா என்பது அய்யமே! ஆனால் அத்தகைய செயல்திட்டங்களை முழுமையாக ஏற்று நடைமுறைப்படுத்த முன் வந்தால் அது பாராட்டுக்குரியது.

**தொண்டு நிறுவனங்கள்**

இன்று தொண்டு நிறுவனங்கள் தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும், அனைத்துச் செயல்பாடுகளிலும் ஊடுருவியுள்ளன. தலித் தொண்டு நிறுவனங்களும் எண்ணிக்கையில் பெருகியுள்ளன. இவை பெரும்பாலும் கிறித்தவத் தொண்டு நிறுவனங்களே. இவைகள் கொண்டுள்ள தலித் விடுதலைக் கருத்தியல் என்பது கிறித்துவ இறையியலோடு நெருக்கமாகப் பின்னப்பட்டுள்ளது. இவர்கள் கிராமங்களுக்கு பைபிளோடு செல்வார்களே அன்றி அம்பேத்கர் நூலோடு செல்வதில்லை. பெரும்பாலும் இவர்கள் கிறித்துவ தலித்துகள் மத்தியில்தான் வேலை செய்து வந்தார்கள். சமீப காலமாக கிறித்துவரல்லாத தலித்துகளையும் இணைத்து வேலை செய்து வருகிறார்கள். பல கிறித்துவ தலித்துகள் பெயர் மாற்றங்கள் செய்து கொண்டு கிறித்துவத்தில் இல்லாதது போல் காட்டிக் கொண்டாலும், கிறித்தவரல்லாத தலித்துகளை வேறுபடுத்தி தனிமைப்படுத்தும் அளவில் அவர்களூடே ஒரு இணக்கமான இழை ஊடுபாவியுள்ளது. விடுதலைக் கருத்தியல் தலித் கிறித்துவர்களையும் இணைத்தது என்றாலும் இவர்களின் இறையியல் நீரோட்டம் அவர்களுக்கான தனி அடையாளங்களையும் வழங்கி அம்பேத்கரியத்தை மழுங்கடிப்பதாக உள்ளது. இவ்வளவு குறைபாடுகள் இருப்பினும், அரசு மற்றும் தலித் இயக்கங்களின் போதாமையைக் கணக்கில் கொண்டு, தொண்டு நிறுவனங்களுக்கான சில குறைந்தபட்ச செயல்பாடுகளை வகுக்கலாம்.

தலித் பன்னாட்டுக் கல்வி மய்யம் முதன் முதலாக குடியரசன் அவர்களை இயக்குநராகக் கொண்டு அம்பேத்கர் பட்டயப் படிப்பைத் துவங்கியது. அதைப் பின்பற்றி மதுரை தலித் ஆதார மய்யம் (கிறித்துவ நிறுவனம்) மதுரைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து அம்பேத்கர் பட்டயப் படிப்பை அறிமுகப்படுத்தியிருப்பது பாராட்டுக்குரியது. இதைத் தொடர்ந்து கிறித்துவ தேவாலயங்களிலும் அம்பேத்கரை அறிமுகப்படுத்தி அவரது கருத்துக்கள் பரப்ப கிறித்துவ நிறுவனங்கள் முன்வரவேண்டும்.

www.padippakam.com

இனி அரசு, தலித் அரசியல் இயக்கங்கள், தலித் பெண் அமைப்புகள், தொண்டு நிறுவனங்கள், தலித் குடும்பங்கள் என ஒவ்வொன்றிற்குமான தலித் பெண்ணிய செயல்திட்டங்கள் பற்றி பார்ப்போம். இச்செயல் திட்டங்களை மேலும் நுட்பமாக பகுக்கவும், விரிக்கவும் பல்வேறு அமைப்புகளோடு இணைந்து செயலாற்றும் வகையில் ஒருங்கிணைக்கவும் கூடும்.

**I. அரசை நிர்ப்பந்திக்க**

- தலித் பெண் போராளிகள் மீனாம்பாள் சிவராஜ், சத்தியவாணிமுத்து, மரகதம் சந்திரசேகரன் இவர்களின் வாழ்க்கை வரலாறைத் தொகுத்து சாகித்ய அகாதமி, தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத் துறை மூலம் வெளியிடச் செய்தல்.
- தலித் பெண்ணியம் என்பதை ஏற்று அதற்கான பாடத் திட்டங்கள் வகுக்குமாறு கோருதல்
- தலித் பெண்களுக்கு, பெண்களுக்கான இடஒதுக்கீட்டிலும், தலித்துகளுக்கான இட ஒதுக்கீட்டிலும் உள்ஒதுக்கீடு செய்யக் கோரி போராடுதல்.
- சிறப்புக் கூறு திட்டத்தில் தலித் பெண்களுக்கான தனித் திட்டங்களை உருவாக்கி அமல்படுத்தக்கோருதல்.
- பஞ்சாயத்துகளில் இப்போதுள்ள ஒதுக்கீட்டு முறையில் பெண் தலைவர்கள், உறுப்பினர்கள் உண்டு எனினும் பஞ்சாயத்தளவில் தலித் பெண்களுக்கான தனி ஆலோசனைக் குழு ஒன்றை உருவாக்கி, அவற்றின் தீர்மானங்களை பஞ்சாயத்து ஏற்று நடைமுறைப்படுத்த ஆவன செய்தல்.
- நகர்ப்புற தலித் பெண்களின் தேவைகளுக்கேற்ப திட்டங்களை அவர்களுக்கான, அவர்களை உள்ளடக்கிய ஆலோசனைக் குழுமூலம் வகுத்து, ஒப்பளித்து, நிறைவேற்றுதல்.
- தலித் பெண்கள் வளர்ச்சிக்கான திட்டங்களை உருவாக்க மாநில அளவில் தலித் பெண்களை உள்ளடக்கிய ஆலோசனைக்குழு உருவாக்குதல்.

மேற்கண்ட கோரிக்கைகள் அரசு சார்பானவை. எனவே அரசை இக்கோரிக்கைகளை நிறைவேற்ற தொடர்ந்து போராட வேண்டியுள்ளது.

**II. அரசியல் இயக்கங்களுக்கான செயல்திட்டங்கள்**

**பெண் தலைவர்கள்**

ஒவ்வொரு இயக்கமும் மாவட்டந்தோறும், கிராமந்தோறும் கிளைகளைத் துவக்கும்போது மாவட்ட அளவில் தலைவராக ஒரு பெண்ணையும், உபதலைவராக ஒரு ஆணையும் நியமிக்கலாம். செயற்குழுவில் முப்பது சதவிகிதமாவது பெண்கள் இருக்கவேண்டும். கிராம அளவிலும் தலைவராக பெண்ணையும் உபதலைவராக ஆணையும் நியமிக்கலாம். இத்தலைமைத் துவம் பெண்களுக்கு அரசியல் பயிற்சியாகவும், பெரும்பாலான பெண்கள் இயக்கங்களில் சேரவும் வாய்ப்பளிக்கும்.

**பெண் அமைப்பு**

மேற்கூறியதன்றி, பெண்கள் தங்கள் பிரத்யேகப் பிரச்சினைகளை விவாதிக்கவும், முன்னெடுக்கவும் தனியான பெண்கள் அமைப்பு அவசியமானது. நடைமுறையில் நாம் காண்பது ஒவ்வொரு இயக்கத்திலும் பெண்களுக்கான தனியான கொட்டடி மட்டும்தான். தலித் இயக்கங்கள் ஆண்களுக்கு இணையாக பெண்கள் இயக்கத்திற்கு போராட முன்வர வேண்டுமெனில் இப்போதுள்ள பெண்கள் பிரிவை அவர்களது பிரத்யேகப் பிரச்சினைகளுக்கு மட்டுமானதாக்கி, கட்சியில்/இயக்கத்தில் ஐம்பது சதவிகிதமாவது பெண் தலைவர்கள் உருவாக வழி வகுக்கவேண்டும்.

பெண்கள் அரசியலில் பங்கெடுப்பதில் ஆர்வமாக இல்லை. போதிய அறிவும் அனுபவமும் அவர்களுக்கில்லை என்ற வாதங்களை இயக்கங்கள் முன்வைக்கலாம். இன்று அரசுத் துறையில், ஒதுக்கீட்டில் ஆறாயிரம் பின்னடைவு காலியிடங்கள் பூர்த்தி செய்யப்படாததற்கு தகுதிவாய்ந்த நபர்கள் கிடைக்காதது ஒரு காரணம் என்று சொல்லப்பட்டது. இது சில காலம் வரையில் உண்மையாக இருந்தது என்றாலும், அத்தகைய தகுதிகளை உருவாக்க உடனே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதா என்பதற்கு ஆதாரமில்லை. அவ்வகையான வாதங்களையே தலித் அரசியல் கட்சி / இயக்கங்களுமே வைக்கக் கூடுமானால் அது நகைப்புக்கிடமானதாகும். தலித் பெண்களை அவர்களது பல்வேறு பிரச்சினைகளினூடே கூடுதல் பொறுப்புகளை ஏற்றுக்கொள்ளச் செய்வது சிரமம் என்றாலும், பொறுப்புகளின்றி அதிகாரம் இல்லை என்பதையும் உணரச் செய்யவேண்டும். அஃதோடு அவர்களது வேலைப் பளுவை பகிர்ந்துகொள்ள முன்வரவேண்டும்.

- பெண்களுக்கு தன்னம்பிக்கை ஏற்படும் வகையில் அவர்களுக்கு கராத்தே, ஜூடோ போன்ற உடற்பயிற்சிகளை அளிப்பது அவசியம். இது உடல் வலுவுக்கும், தாழ்வு மனப்பான்மையைக் களையவும் உதவும்.
- பெண்கள் இயக்கங்களில் தலைமைத்துவமும் பிரதிநிதித்துவமும் பெறுவதோடு, தலித் பெண்களது பிரச்சினைகளும் மய்யப்படுத்தப்பட வேண்டும்.
- தலித் அரசியல் இயக்கங்களிலுள்ள ஆண்களுக்கு 'தலித் பெண்ணியம்' பற்றிய கருத்தரங்குகளும், பயிற்சிகளும் நடத்தப்படவேண்டும். இக்கருத்தரங்குகளில் பெண்களை பயிற்றுநர்களாகவும், உரையாளர்களாகவும் பங்கேற்கச் செய்ய வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

- தலித் ஆணாதிக்கம் குறித்த சிந்தனைகளும், பிரச்சினைகளும் பெண்களால் முன்வைக்கப்படும் போது, கட்சி பொதுக்குழு அநீதிக்கெதிரான கண்டனத் தீர்மானங்களை நிறைவேற்றி மேல் நடவடிக்கைகள் தொடர வேண்டும்.

**தலித் பெண்கள் அமைப்புகளுக்கான செயல்திட்டங்கள்**

- பெண்விடுதலை என்பது பிரசாதிப் பெண்களைப் பின்பற்றி இந்துத்துவத்தை நடைமுறைப்படுத்துவதல்ல என்பதை தலித் பெண்கள் தெள்ளத் தெளிவாக உணரும்படி செய்தல் வேண்டும்.

- தலித் பெண்களின் வாழ்வியலின் சிறப்புக் கூறுகளான உடல் உழைப்பு, அறுத்துக்கட்டுதல், சிறுதெய்வ வழிபாடுகளில் பெண்களுக்கு முக்கியத்துவம் அளிப்பது இவற்றை வலியுறுத்தி அவற்றை வளர்த்தெடுக்க அக்கறை காட்டவேண்டும்.

- இந்து சடங்கு முறைகள், தங்களிடம் ஊடுருவியுள்ள வரதட்சிணை, சிசுக்கொலை போன்றவற்றிற்கெதிரான பிரச்சாரங்களை தலித் வாழ்வியலை முன்வைத்து மேற்கொள்ள வேண்டும்.

- உடல்ரீதியான தீட்டு, மாதவிலக்கு, குழந்தைப் பேறு ஒட்டிய தீட்டு இவற்றைப் புறந்தள்ளி விஞ்ஞான அணுகுமுறைகளைப் பின்பற்ற நடவடிக்கைகள் எடுத்தல்.

- இந்துப் பெண்கள் போல் உடை/அலங்காரம் செய்வதைத் தவிர்த்து வசதியான உடைகளுக்கு மாறிக்கொள்ளுதல். பெரும்பாலும் தலித் பெண்கள் மலிவான விலை காரணமாக சிந்தடிக், பாலியெஸ்டர் புடவைகளையும் ரவிக்கைகளையும் அணிவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். இளம்பெண்களோ சாக்குப் படுதா போன்ற வட இந்திய சர்வார் குர்தா அணிகிறார்கள். கூடவே வால்போல் தொங்கும் துப்பட்டா! இளம்பெண்களாவது வசதியான பாண்ட், சட்டை, கவுன் இவற்றை அணியத் துவங்கலாம்.

- உணவுப் பழக்க வழக்கங்களையும் தலித் சமூகம் மாற்றியமைக்கலாம். மாட்டுக்கறி உண்பதை வழக்கப்படுத்துதல், மாட்டுக்கறியை காய்களோடு கலந்து சமைத்தல், சிறு தானிய [illegible] இவற்றை அதிக அளவில் பயன்படுத்துதல் போன்ற முறைகளுக்கு மாறலாம்.

- கணினி கல்வியைக் கற்றுக்கொள்ளுதல், அம்பேத்கர் நூல்களை வாசித்துக் கருத்துச் சொல்லுதல், ஆங்கிலம் கற்றுக்கொள்ளுதல் போன்றவற்றை மகளிர் சுயஉதவிக் குழுக்கள் மேற்கொள்ளலாம்.

- இளம்பெண்களுக்கு செவிலி, ஆசிரியை, விற்பனைப் பெண், பணிப்பெண் போன்ற நிலைகளைக் கடந்து நவீன விஞ்ஞானப் பாடங்கள், வேலைவாய்ப்புள்ள புதிய துறைகளில் படிப்பு மேற்கொள்ள ஆயத்த வகுப்புகள் இவற்றை தன்னார்வ நிறுவனங்கள் மற்றும் தனியார் துறைகள் உதவியுடன் நடத்தலாம்.

- திருமணத்தை மய்யப்படுத்தாமல், தனிமனித ஆற்றலை வளர்த்தல், அதை சமுதாயப் பணியோடு இணைத்தல், விரும்பினால் பெண் தனியாக வாழக்கூடிய மனத்திட்பத்தை உருவாக்குதல்.

- திருமணம், குழந்தைப்பேறு இவைகளைவிட தனிமனித ஆற்றலை சமூகத்திற்காக வளர்த்தெடுப்பதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் பெண்களின் சாதனைகளை மேன்மைப்படுத்துதல்.

- சாதி மறுப்புத் திருமணம்.com என்ற கணினி வலைப்பரப்பு ஒன்றைத் தொடங்கி தலித்துகளின் பல்வேறு பிரிவுகளுக்கிடையே திருமண பந்தங்களை உருவாக்குதல்.

- தலித் ஆண்கள் சாதி மறுப்புத் திருமணங்கள் அதிகம் செய்து கொள்கிறார்கள். அதேபோல் தலித் பெண்களும் சாதி மறுப்புத் திருமணங்கள் (பிறசாதியரோடு) செய்து கொள்வதை ஆதரித்தல்.

- உட்சாதி முரண்களைக்களையும் வகையில் விவாதங்கள் நடத்தி ஒற்றுமை காணுதல்.

இதுபோன்ற பலநடவடிக்கைகளையும், ஊர் சார்ந்த வளர்ச்சித் திட்டங்களையும் முன்னெடுக்கலாம்.

**தன்னார்வ நிறுவனங்களுக்கான செயல்திட்டங்கள்**

- அம்பேத்கரியத்தை நூல்கள், கருத்தரங்குகள், முகாம்கள் மூலம் பட்டி தொட்டியெங்கும் முன்னெடுத்தல்.

- தலித் பெண்கள் நூறு சதவிகிதம் கல்வி பெறும் வகையில் அவர்களைப் பள்ளியில் சேர்த்தல், அவர்கள் போதாமையை ஈடுகட்ட இரவுப் பள்ளிகள் நடத்துதல்.

- உயர்கல்வி வேலை வாய்ப்புக்கான உதவி மய்யங்களைத் தொடங்கி அரசு - தனியார் துறைகளில் உள்ள உயர்கல்வி வேலைவாய்ப்புத் துறைகளோடு இணைந்து பணியாற்றுதல்.

- அரசின் திட்டங்களை மக்களிடம் முறையாகச் சென்று சேர்க்க இணைப்புப் பாலமாக விளங்குதல்.

- மகளிர் சுயஉதவிக் குழுக்களை


படிப்பகம்

www.padippakam.com

ஒருங்கிணைத்தல், அவர்களுக்கான பொருளியல் திட்டங்கள் வகுக்கவும், நடைமுறைப்படுத்தவும் உதவி செய்தல்.

- அம்பேத்கர் நூலகங்களை உருவாக்குதல்
- பஞ்சமி நிலமீட்பு, நிலப்பகிர்வு, தனிப்பஞ்சாயத்து, சிறப்புக்கூறுத் திட்டம் போன்ற மாநிலம் தழுவிய தலித்துகளின் போராட்டங்களுக்கும், இடஒதுக்கீட்டில் பெண்களுக்கான உள் ஒதுக்கீடு, பெண்களுக்கான ஒதுக்கீட்டில் தலித் பெண்களுக்கான ஒதுக்கீடு இவற்றில் உறுதுணையாக இருத்தல்.
- தங்கள் அமைப்புகளில் பெண்களை அதிக அளவில் ஈடுபடுத்தி மருத்துவம், சுகாதாரம் சார்ந்த செயல்பாடுகளில் ஈடுபடுதல்.

மக்களுக்கு அதிகாரம் பரவலாக்குவதை நோக்க மாகக் கொண்ட தன்னார்வ நிறுவனங்கள், தாங்களே அதிகார மய்யங்களாக மாறுவதை பரிசீலணைக்கு உட்படுத்தி, அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்க தலித் இயக்கங்களுடன், பெண் இயக்கங்களுடன் ஒருங் கிணைப்போடு செயல்படுதல் வேண்டும்.

**குடும்ப அமைப்பில் தலித் பெண்கள் / ஆண்கள் மேற்கொள்ள வேண்டிய செயல்பாடுகள்**

- குடும்பத்தில் வேலைப்பளுவை, நேரவிகிதத்தை, பொறுப்புகளை பெண்கள் அதிகாரம் பெறும் வகையில் பகிர்ந்து கொள்ளுதல்.
- வேலைப் பிரிவில் இழுக்குக் கற்பித்தல் பார்ப்பனியச் செயல்பாடு என்பதால், எல்லா வேலைகளையும் எவரும் செய்திட முடியும் என்ற கருத்தை ஏற்று பெண்கள் செய்யும் வேலைகளுக்கு அதிக மதிப்புண்டாக்குதல் அல்லது பகிர்ந்துகொள்ளுதல். அனைத்து வகை வேலைப் பயிற்சிகளையும் ஆண் பெண் பேதமின்றி பகிர்ந்தளித்தல்.
- ஆணின் பிரத்யேகத் தேவைகளையும், பெண்ணின் பிரத்யேகத் தேவைகளையும் உணர்ந்து அன்பு பாராட்டுதல்.
- பெண் குழந்தைக்கு கல்வி/உயர்கல்வியை அவசியமாக்குதல்.
- குடும்பத்தோடு இணைந்து அம்பேத்கரைப் படித்து; விவாதித்தல்.
- தலித் இதழ்களை தவறாமல் வாசித்தல்
- தினம் ஒரு மணி நேரம், மாதத்தில் குறைந்தது ஒரு நாள் என சமூகப் பணியில் ஈடுபடுதல்.
- கள், புகைவிடித்தல் இவற்றின் ஆதிக்கத்தைத் தவிர்க்க ஆக்கப்பூர்வமான குடும்பம் அல்லது சமூகம் சார்ந்த நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.

இத்தகைய செயல்பாடுகள் பத்தாண்டுகள் தொடர்ந்தால், இவை ஏற்படுத்தும் மாற்றங்கள் குறிப்பிடத்தக்கதாக இருக்கும்.

உடல்மொழி என்பது உடல், தீட்டு என்பதாலும், உடலைக் கீழ்மையாகக் கருதும் போக்காலும் அதிகாரத்திலிருந்து புறக்கணிக்கப்பட்ட மக்களின் மொழி. உடல்சார்ந்த உழைப்பு, எல்லா உடல்களுக்கும் ஒரே மதிப்பு என்ற அளவில் அதிகாரத்தைப் பரவலாக்கும் மொழி. உடலை மய்யப்படுத்தாத அனைத்துக் கருத்தாக்கங்களையும் கேள்விக்குட் படுத்தி வரலாற்றில் புறக்கணிக்கப்பட்ட, ஒடுக்கப் பட்ட மக்களின் கருத்தியல்.

தலித் பெண்ணியம் இதன் அடிப்படையான கூறு. இந்த வகையில் உடல்மொழி தொடர் இத்துடன் நிறைவடைகின்றது.விவாதங்கள் வரவேற்கப்படு கின்றன.

- நிறைவுற்றது

## கவிதையெழுதுவதெப்படி?

■ ராஜா

முழுமதியின் குளிரொளியில்
மாலைக் காற்றின் சுகந்த தடவலில்
கவிதை பிறக்குமென
கடற்கரை சென்றமர்ந்தேன்
எழுதுதாளும் கோலுமாக.
கவிதையை முந்தியது
கண்ணயர்ந்த நித்திரை.

தன்னிலை மாற்றத்தில்
தன்னாலே கவிதை வரும் -
ஆலோசனை உபயம் நண்பன்.
உதவிக்கு வந்தான்
மால்ட் ஜூஸ் வடிவத்தில்
மாவீரன் நெப்போலியன்.
தன்னிலை மாற்றத்திற்குப் பதில்
என்னையே மறக்க நேர்ந்தது
உறக்கத்தின் வடிவத்தில்.

கன்னியின் கட்டணைப்பில்
கற்பனை ஊற்றெடுக்கும்
கவிதையும் வரும் ஊடாலே -
இம்முறை ஆலோசனை
இரு 'மா ஒருவன்.
கட்டணைப்போ களைப்பைத் தந்தது
களைப்பு கண்ணயர்ச்சியைத் தந்தது.

கவிதையெழுதுவதுதான் எப்படி?
கவிஞர்களே
கற்றுத் தாருங்களேன் எனக்கு ●



படிப்பகம்

www.padippakam.com

# பக்கத்து இலைக்கு பாயாசம்...!

■ மா. வேலுசாமி

"நீதிக்கட்சி அரசு பாடுபட்டது யாருக்காக?" என்ற தலைப்பிட்ட பேராசிரியர் முனைவர் பு. இராசதுரை, எம்.ஏ., பி.எச்.டி., அவர்களால் எழுதப்பட்ட புத்தகத்தை படிக்க நேரிட்டது. இப்புத்தகத்தை முழுவதுமாக வாசித்த பின்பு, தனக்கு பாயாசம் வேண்டும் என்பதை மறைத்து, ரொம்ப சத்தமாக பறிமாறுகிறவரை அழைத்து, பக்கத்து இலைக்கு பாயாசம் இடுங்கள் என்று கூறி, பறிமாறுகிறவர் வந்தவுடன் சத்தமாக அழைத்த நபர் புன்ன கைத்து முதலில் அவரது இலைக்குக் கேட்கும் தந்திரமே ஞாபகத்திற்கு வந்தது. தாழ்த்தப்பட்டவர்களை தலைமையோ - இயக்கமோ இல்லாத ஒரு கூட்டம் என்று சித்தரித்து, தாழ்த்தப்பட்டவர்களின் இன்றைய வளர்ச்சி நிலைக்கு வித்திட்ட ஒரே கட்சி 'நீதிக்கட்சி' என்றும், தாழ்த்தப்பட்டவர்களுக்காக உழைத்த தாலேயே நீதிக்கட்சி ஆட்சியினை இழந்தது போலவும் ஆசிரியர் கதைகளையும், ஆணைகளையும் 'திராவிட' இயக்கத்திற்கே உண்டான போலி மருக்குகளையும் மிகைப்படுத்தியுள்ளார்.

அரசியலும், கொள்கைகளும் லாபகரமான தொழிலாகிவிட்டபடியால் யார் வேண்டுமானாலும் என்ன வேண்டுமானாலும் எழுதலாம், பேசலாம். ஆனால் இந்த புத்தகம் தலித்துகளின் வரலாற்றை திரித்து தலித் அரசியலையும் தலித் தலைவர்களையும் இருட்டடிப்பு செய்யும் நோக்கம் கொண்டுள்ளது என்ற வகையில் 'நீதிக்கட்சி அரசு பாடுபட்டது யாருக் காக?' என்ற புத்தகத்தின் எதிர்வினையாக இக் கட்டுரை அமைந்துவிட்டது.

**I. அரசியலும் – தலைமையும்**

"தென்னிந்திய நலவுரிமைச் சங்கமாக 1917-இல் தோன்றிய 'நீதிக்கட்சி' சமுதாயத்தின் அடித்தளத்தில் ஆமைகளாய், ஊமைகளாய், அடிமைகள்போல் கிடந்த கோடானு கோடி மக்களுக்கு புதுவாழ்வு தந்த ஒரு வரலாற்றுப் பெருமைமிக்க இயக்கமாகும்.

அதனை ஏதோ உத்தியோக வேட்டைக்கட்சி என்றும் பிரிட்டிஷ்காரர்களின் கால் பிடித்தோர் கட்சி எனவும, பார்ப்பனரல்லாத மக்களில் கூட தாழ்த் தப்பட்ட மக்களுக்கு ஏதும் செய்யாத - அதில் அடுக்கி வைக்கப்பட்ட சாதி அமைப்பில் மேல்தட்டு வர்க்க சாதியினருக்கே அதிகம் பாடுபட்ட ஓர் ஆட்சி"...[1] என்று மற்றவர்கள் சரியாக கூறியவற்றை, நூலுக்கு முன்னுரை எழுதியவர் தவறு என்று மறைக்க முனைந் துள்ளார். 'ஆரிய ஏடுகளின்' தவறான பிரச்சாரம் என்பதோடு நிறுத்திக்கொள்ளும் முன்னுரையாளர், செயலில் இந்த ஏற்றத் தாழ்வுகளை களைய வராதது தமிழகத்தில் இன்றைய சாபக்கேடு! நம் தேடலில் தலித்துகளின் தனித்தன்மையை பத்திரிக்கையில் வெளிப்படுத்தும் ஒரே மாத இதழாக புதிய கோடாங்கி விளங்குவதால் புதிய கோடாங்கியில் பதிவு செய்ய முன்வந்தேன். இம்முயற்சியை ஏற்கனவே அறிஞர் அன்பு பொன்னோவியம் அவர்கள் துவக்கியிருந்தார். அவர்களது வழியினைப் பின்பற்றி நான் இந்த புத்தகமும் அதன் ஆசிரியரும் எவ்வாறு திரிபு வாதத்தை மேற்கொண்டு தலித்துகளை ஏமாற்ற முனைந்துள்ளனர் என்பதை தெளிவுபடுத்த விழை கிறேன்.

"நீதிக்கட்சி ஆட்சி 1920-ஆம் ஆண்டு ஏற்படாமல் இருந்திருந்தால் அந்த ஆட்சி 16 வருடம் இடைவிடாது ஆட்சி நடத்தாமல் இருந்திருந்தால், அந்த ஆட்சிக்கு 1925 முதல் தம் முழு ஒத்துழைப்பைப் பெரியார் தரா மல் இருந்திருந்தால் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப் பட்ட சமுதாய மக்கள் தலை எடுத்திருக்கவே முடியாது; வளர்ச்சி நிலையை அடைந்திருக்கவே முடியாது"[2]

இப்பகுதியை தனது முன்னுரையிலேயே பதிவு செய்து, தான் திராவிடர் கழகத்திற்கும், பெரியாருக்கும் விசுவாசமானவர் என்பதை நிரூபித்திருக்கின்ற இவர், தேவையில்லாமல் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமுதாயம் என்று குழப்பியிருக்க வேண்டியதில்லை. ஏற்கனவே பலமுறை பல தலித் எழுத்தாளர்கள் பெரியாரின் தவறுகளைச் சுட்டிக்காட்டியிருந்தும், பெரியார் என்பவராலேயே தலித் எழுச்சி நடை பெற்றது என்று பிடிவாதம் பண்ணுகிறார். ஆனால் பெரியார் என்பவரது பிறப்பிற்கு முன்பே பண்டித மணி அயோத்திதாசர் தமிழகத்தில் பகுத்தறிவு இயக்கத் திற்கு வித்திட்டுள்ளார். மேலும் இந்த நீதிக்கட்சி தாழ்த்தப்பட்டவர்களான தலித்துகளுக்கு அப்படி என்ன செய்தது என்று ஆய்வதற்கு முன்பாக முதலில் தலித்துகள் என்ன செய்தார்கள் என்பதைக் காண போம்.

1885-இல் (ஏறக்குறைய 21 ஆண்டுகளுக்கு முன்பே) ரெட்டமலை சீனிவாசனார் இந்திய தேசிய இயக்கம் தலித்துகளுக்கு உகந்ததல்ல என்று கூறி அறிக்கை வெளியிட்டதைத் தொடர்ந்து 1921-இல் பெருந்தலை வர் எம்.சி. ராஜா நீதிக்கட்சி தேவையற்றது என்று குற்றம் சாட்டினார்.[3] அவரே, 1923-இல் குழுவிற்கு தலைமை தாங்கிச் சென்று சென்னை ஆளுநரிடம் அறிக்கை அளித்தபோது நீதிக்கட்சி தலித்துகளுக்கு நீதி வழங்கவில்லை என்று குறிப்பிட்டிருந்தார். இது மட்டுமில்லாமல் கி.பி. 1892-இல் வைரக்கண் வேலா யுதம் பிள்ளை, மதுரைப்பிள்ளை, அயோத்தி தாச பண்டிதர், எம்.சி. ராஜா போன்ற முதுபெரும் தலித்


படிப்பகம்

www.padippakam.com

தலைவர்களுடன் இணைந்து தாத்தா ரெட்டமலை சீனிவாசன் ஆதி திராவிட மகாஜனசபை என்ற அமைப்பை தோற்றுவித்து திறம்பட செயல்பட்டார்" என்ற வரலாற்றிலிருந்து நீதிக்கட்சியின் தோற்றத்திற்கு முன்பே தமிழகத்தில் தலித் எழுச்சி இருந்தது என்பதை அறியமுடிகிறது. எனவே நீதிக்கட்சியும், பெரியாரும் இல்லையென்றால் தலித்துகள் தலையெடுத்திருக்க முடியாது என்ற ஆசிரியரின் கூற்று அப்பட்டமான புளுகு என்பது நிரூபணமாகிறது.

இரண்டாவதாக; "ஜாயின்ட் பார்லிமன்ட்ரி குழுவினரிடம் நீதிக்கட்சித் தலைவர்கள் சாட்சியம் அளித்தபோது, 'திராவிட சங்கம்' சார்பில் சர். ஏ. இராமசாமி முதலியார் குழு முன் சாட்சியம் அளித்த போது, சட்டத்தில் தாழ்த்தப்பட்டவர்களுக்காக சிறப்பான சலுகைகள் மற்றும் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று கூறினார். அதனால் தாழ்த்தப்பட்டவர்கட்கு நியமனம் மூலம் பிரதிநிதித்துவம் கிடைத்தது" என்று அப்பட்டமாக புளுகியிருக்கும் இவர் அதற்கெல்லாம் மகுடம் வைத்தார்போல் மேலும் கூறியதாவது: "அந்தக்கால அளவில் தாழ்த்தப்பட்ட வர்களுக்காக போராடத் தாழ்த்தப்பட்ட இனத்தலை வர்கள் பலராக இல்லை.[5] தாழ்த்தப்பட்டவர்களுள் அரசியல் அறிவு வாய்க்கப்பெற்றிருந்த ஓரிருவர் நீதிக் கட்சியில் சேர்ந்திருந்தனர். செட்டியார், முதலியார், ரெட்டியார், நாயக்கர், நாயுடு இந்தச் சாதிகளின் தொகுப்பே நீதிக்கட்சி என்றாகிவிட்டபின் தலித்து களுக்கு அங்கு என்னவேலை என்பது பொதுவான நம் கேள்வி. சிரமமும் அவசரமும் கொண்டு நீதிக் கட்சியே தலித்துகளின் வளர்ச்சிக்கு வேராக இருந்தது" என்று எழுத முயன்ற ஆசிரியர் வெட்டிய மரத்திற்கு சாணிபூச வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளாகியிருக்கும் நிலையை அறியமுடிகிறது.

தாழ்த்தப்பட்டோர் தலைவர்கள் அனைவரும் தனியாகவும்,தனி அமைப்பினராகவும் நின்று போராடி யவர்கள். இவர்கள் எவரையும் தங்கள் தலைவர்களாக என்றும் ஏற்றுக்கொண்டதில்லை.

1870-இல் உருவாகி 1892-இல் பதிவு செய்யப்பட்ட ஆதி திராவிட மகாஜன சபையும், அதற்குப் பிறகு தனித்து இயங்கிய பல அமைப்புகளும் பிற இனத்தின் தலைமையை நூறு ஆண்டுகளுக்கு மேலாக ஏற்காமல் இருந்தது சிந்தனைக்குரியதாகும். இந்த அமைப்புகளும் இவற்றின் தலைவர்களும் உழைத்ததன் பயனாக கிடைத்த சலுகைகளின் விரிவாக்கமே இன்றைய தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றங்களுக்கு அடிப்படை யாகும். இதில் சிறந்து நிற்போர் முதுபெரும் தலைவர் ரெட்டமலை சீனிவாசனார், பெருந்தலைவர் எம்.சி. ராஜா, அண்ணல் பி.ஆர். அம்பேத்கர் ஆகியோர். இவர்களில் பேரறிஞர் அம்பேத்கரின் பணி தேசம் தழுவியதாகும்.[6] இந்த மாதிரியான இருட்டடிப்பு வர லாற்றை எழுதுபவர்களையும் ஒரு சமூகத்தாலேயே மற்றொரு சமூகத்திற்கு அங்கீகாரம் கிடைத்தது என்றெழுதுவது எவ்வளவு அறிவற்ற செயல் என்பதை மறைந்த திரு. அன்பு பொன்னோவியம் அவர்கள் பின்வருமாறு விவரிக்கிறார்.

"இவ்வாறு வெறுக்கத்தக்க கிறுக்குத்தனமாக கூறுவதன் மூலம் தங்களுடைய அறியாமையைக் காட்டிக் கொள்கிறார்கள். ஒரு சமுதாயத்தின் சமூக, அரசியல் வரலாற்றை அறியும் அறிவில்லாதவர்களா லேயே இப்படி எழுதவும் பேசவும் முடியும். தலைவர் எம்.சி. ராஜாவுக்கு இணையாக சமுதாய அரசியல் அறிவும் அனுபவமும் பெற்றவர்கள் டாக்டர் நாயரைத் தவிர நீதிக்கட்சியில் வேறு யாரும் இருந்ததாகத் தெரிய வில்லை. பதவி ஆசையில்லாமல் பொதுத் தொண் டையே விரும்பிய டாக்டர் நாயரை மட்டுமே தாழ்த் தப்பட்டோரும் அவர்களது தலைவரும் விரும்பினர்.

அன்று தலைவர் எம்.சி. ராஜாவின் தலைமை தனிச் சிறப்பைப் பெற்று இருந்தது. அவர் தலைமையிலான ஆதி திராவிட ஜனசபை தனித்தன்மை வாய்ந்ததாக இருந்தது. அதில் பங்குகொண்டு தொண்டாற்றியவர் கள் வி.ஜி. வாசுதேவப்பிள்ளை, வி. தர்மலிங்கம் பிள்ளை, சுவாமி சகஜானந்தா, ரெட்டமலை சீனி வாசன், ஜான்ரத்தினம், என். சிவராஜ், ஆர். வீரையன், எல்.சி. குருசாமி போன்ற அநேக தலைவர்கள் ஆவர். இவர்கள் நீதிக்கட்சியுடன் கொண்டிருந்த உறவு என்ன வெனில் "எதிரிக்கு (பிராமணருக்கு) எதிரி (பிராமண ரல்லாதார்) நண்பர்" என்றளவிலேயே இருந்தது. ஆனால் நீதிக்கட்சியுடன் ஒருபோதும் இரண்டற கலந்திடவில்லை என்பது வரலாறு"[7] இந்த மேற்கோள் நீதிக்கட்சி காலத்தில் அநேக தலித் தலைவர்கள் தமிழகத்தில் இருந்து உள்ளனர் என் பதையும், அவர் களின் அமைப்பாக ஆதி திராவிட மகாஜன சபை (1893) செயல்பட்டு வந்துள்ளது என்பதையும் உணர்த் துகிறது.

மேலும் 1917-இல் தலைவர் எம்.சி. ராஜா அவர் களது தலைமையில் பிரிட்டிஷாருக்கு இந்தியாவின் செயலாளராக இருந்த மாண்டேகு குழுவினரிடம் சென்னை தாழ்த்தப்பட்டோர் அமைப்பான ஆதி திராவிட மகாஜன சபையர் ஆறுகோடி மக்களின் சார்பாக தங்கள் வாழ்வின் முன்னேற்றத்தைத் தடுக் கின்ற சாதி இந்துக்கள் மீது குறை கூறியதை அறிந்து கொள்வது அவசியமாகும்.[8]

ஆனால் இந்த புத்தகத்தின் ஆசிரியரோ தலித்துகளின் வரலாற்றையோ, சமூக எழுச்சியின் புரிதலையோ உணராமல் அவர்களின் தலைவராக முதலியாரை, ரெட்டியாரை, நாயுடுவை, செட்டியாரை திணிக்க துணிந்துள்ளார். இந்த ஆசிரியரின் துணிவை மன் னித்து இனி இப்போக்கு தொடரக்கூடாது என்பதை உணர்த்த தலித்துகள் கடமைப்பட்டுள்ளோம்.

தலைவர்களில் அயோத்திதாசப் பண்டிதர் பகுத் தறிவை தமிழகத்தில் உருவாக்கி இந்து மதத்தை வேரறுக்க பௌத்தத்தை ஏற்றுக்கொண்டு அம்பேத்கருக்கு முன்பே பௌத்த சங்கத்தை உருவாக்கியவர். ஆனால் தலித் என்ற காரணத்தினாலேயே இருட்டடிப்பு செய்த இவர்கள் நாயக்கரை மட்டும் தலையில் தூக்கிக் கொண்டு ஆடுவதன் நோக்கமென்ன. ஆம், உங்களின் சாதி துவேஷ புத்தி நூலிலும் இப்படி வெளிப்படும் போது மனதளவில் சாதி நாற்றமடிக்காமல் என்ன



படிப்பகம்

www.padippakam.com

செய்யும். பார்ப்போம் இவர்களது சீர்திருத்தத்தை பின்வரும் வரிகளில்: "நீதிக்கட்சி தாழ்த்தப்பட்டவர்களின் உரிமைக்காக போராடிற்று. இதைச் செய்தமைக்காக நீதிக் கட்சியினர் பார்ப்பனர்களால் இழித்துரைக்கப்பட்டார்கள். நீதிக்கட்சி உயர்சாதி இந்துக்களின் பெண்களை பறையர்களுக்குத் திருமணம் செய்து வைக்க விரும்புவதாக அந்த இயக்கத்தை இடைவிடாது எதிர்த்து பார்ப்பனர் பிரச்சாரம் செய்தனர். ஆனால் அது பலிக்கவில்லை"[9]

வெறும் அரசியலுக்காக பல் இளித்த ஓநாய்கள் சமூக மாற்றம் - உறவுப் பரிமாற்றம் என்கிறபோது மட்டும் ஒதுங்கிக் கொண்டன என்றெழுதாமல், பறையருக்கு பெண் கொடுப்பது இழிவு, அந்த அவதூற்றிலிருந்து நீதிக்கட்சி தப்பித்துக் கொண்டது, இறுதிவரை அந்த இழிவை நாங்கள் செய்யவில்லை என்று மார்தட்டும் சாதிவெறியரின் கூற்றாகவல்லவோ ஆசிரியரின் குரல் வெளிப்படுகிறது.

**II. பத்திரிக்கைகளும், உரிமைப்போராட்டமும்**

உரிமைகள் தமக்கும் உண்டு என்பது கூட அறியாராய், தமது உரிமைகள் எவை என்பதை அறியாராய் வாழ்ந்துகொண்டிருந்த தாழ்த்தப்பட்டோர் உரிமைகளுக்காக லண்டன் மாநகரத்திலேயே திராவிட சங்கம் சார்பில் சான்றுரை பகர்ந்தவர் பார்ப்பனரல்லாதாரில் உயர்சாதியினராகிய சர் ஏ. இராமசாமி முதலியார் என்பதையும் அறிகிறோம்.[10] பார்ப்பனரல்லாதாரில் உயர்ந்த சாதியினர் தாழ்ந்த சாதியினர் என பாராது அனைவருக்கும் இடம் தரும் "திராவிடன் ஹோம்" பார்ப்பனரல்லாதாரில் உயர்ந்த சாதியாராகிய சி.நடேச முதலியாரால் உருவாக்கப்பட்டது என்பது அறிகிறோம்.[11]

உயர்ந்த சாதியாராகிய (பார்ப்பனரல்லாதவர்களில்) என்று வார்த்தையை உபயோகப்படுத்திய பின்பு இவர்கள் சாதிவெறி பிடித்த பிராமணர்கள் ஆகிவிட்டனர். பின் இவர்களுக்கு தலித்துகளைப் பற்றி எழுத என்ன யோக்கியதை உள்ளதென்று தெரியவில்லை! இதன்மூலம் யாரை மகிழ்விக்கும் வகையில் இந்நூல் எழுதப்பட்டிருக்கிறது என்றுணர முடிகிறது. இந்த சாதிவெறிக் கும்பலுக்கு சுயமரியாதைக்காரர் தலைவராம் - இந்தக் கும்பலாலும், அதன் தலைவர்களாலும் மட்டுமே தலித்துகள் தங்களது அங்கீகாரத்தை அமைத்துக் கொண்டார்களாம். எழுத்தாளர்களின் குறைந்தபட்ச நாகரீகம் கூட அனுசரிக்க முடியாத இவர் வரலாற்றிலும் மன்னிக்க முடியாத குற்றமிழைத்துள்ளார். இவர்கள் நடத்திய பத்திரிக்கைகளாலேயே தலித்துகளுக்கு உரிமைகள் கிடைத்தனவாம். தலித்துகள் என்ன செய்தார்கள் பார்ப்போம.

"1883-லிருந்து 1935 வரை பத்திரிக்கைகள், கூட்டங்கள் வாயிலாக தாழ்த்தப்பட்டோர்களின் நலனின் கண்காணிப்பு தொடர்ந்து இருந்து வந்துள்ளது. அவற்றில் 'பறையன்' (1893 - 1900), தமிழன் (சென்னை 1907 - 1915), தமிழன் (கோலார் 1926 - 1935) போன்றவை குறிப்பிடத்தக்கவையாகும்."[12] இவை தலித் சமுதாய அரசியல் பணிகள் மற்றும் அவர்களுடைய கோரிக்கைகளை, உரிமைகளை உள்ளடக்கியதாகும். இவ்வாறெல்லாம் தலித் உரிமைகள் விளம்பரங்களில்லாமல் தலித் பத்திரிக்கைகள் மூலம் வென்றெடுக்கப்பட்டுள்ளது.

ஆனால் பத்திரிக்கை தளத்தில் கூட நீதிக்கட்சியும், பிராமணரல்லாதாரின் உயர்ந்த சாதியினரின் தலைவராகிய பெரியார் அவர்களும் எந்தவித முன்னேற்றமும் கண்டிடவில்லை என்பதே வரலாறு.

இதைத்தான் மத்திய தாழ்த்தப்பட்டோருக்கான தீண்டாமை ஒழிப்பு, பொருளாதார, கல்வி வளர்ச்சி குழுமம் இவ்வாறு எழுதுகிறது:

"தாழ்த்தப்பட்டோர்கள் முயன்று முன்னேறும் போது பிராமணரல்லாதாரான சாதி இந்துக்களால் கொடுமையாக தாக்கப்படாமல் இருந்திருந்தால் விரைந்து முன்னேறியிருப்பார்கள். பிறர் உதவி அவர்களுக்குத் தேவைப்பட்டிருக்காது"[13] என்ற உண்மையினை தலித்துகளின் உணர்வாய் வெளிப்படுத்தி நீதிக்கட்சியின் ஆதரவு பத்திரிக்கைகளினால் அல்ல, தலித்துகளின் பத்திரிக்கைகளினால் மட்டுமே தலித்துகளின் உரிமை இன்றுவரை நிலைத்து வருகின்றது என்றுணர்வோம்.

**III. ஆணைகளும் – அவமானங்களும்**

"நான் பெருமையுடன் சார்ந்திருக்கும் நீதிக்கட்சி தாழ்த்தப்பட்டவர்களின் உயர்வுக்காகவும் அவர்கள் துன்பங்களிலிருந்து விடுதலை பெறுவதற்காகவும் கடந்த இருபது ஆண்டுகளாகப் பெரும்பணி ஆற்றி உள்ளது என்பதை இந்த நேரத்தில் நியாயமான பெருமையுடன் குறிப்பிட விரும்புகின்றேன்.

நீதிக்கட்சியால் தாழ்த்தப்பட்டவர்களுக்கு இந்த மாகாணத்தில் விளைந்த நன்மைகளை எழிலார்ந்த சொற்கள் மூலம் ஒப்புக்கொள்ளாத, நன்கு அறிமுகமாகியுள்ள தாழ்த்தப்பட்ட வகுப்புத் தலைவர் ஒருவர் கூட இல்லை என்பதைத் தவிர இந்த இருபது ஆண்டுகளில் ஜஸ்டிஸ் கட்சி மேற்கொண்ட நடவடிக்கைகளை கூறி வீணாக நேரத்தை செலவழிக்க விரும்பவில்லை"[14] எம்.ஏ. முத்தையா செட்டியார் என்கிற அரசர் மேற்கண்டவாறு கூறியிருக்கிறார்.

1921-22 இல் சர் தியாகராய செட்டியார் தீண்டாமை ஒழிப்பிற்கு ஆதரவு தராமல் எதிர்த்தார். தாழ்த்தப்பட்டோர்க்கென ஏற்படுத்திய லேபர் துறையை ஒழித்ததன் மூலம் தாழ்த்தப்பட்டோர்களை காப்பாற்றாமல் கைவிட்டது நீதிக்கட்சி என்று அப்போது லேபர் அட்வைசரி போர்டில் இருந்த ரமணாச்சாரியரோடு இக்குழுவில் இருந்த எம்.சி. ராஜா அவர்கள் அதை எதிரத்துள்ளார் என்பது வரலாறு ஆகும்.[15] இன்றைய நிலையில்கூட தலித்துகளுக்கு ஏதேனும் சிறிய நன்மையைக்கூட வேண்டா வெறுப்புடன் மேற்கொள்ளும் திராவிட அரசியலார்போல் அன்றைக்கு இருந்த வேந்தர்களும், அரசர்களும், ராஜாக்களும், பிரிட்டிஷாரின் வேண்டுகோளுக்கிணங்க செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்தில் செய்துள்ளனர் என்பதும் அதிகாரத்தை தங்களது கைக்குள்

www.padippakam.com

வைக்க முயன்றிருக்கிறார்கள் என்றுமுணரமுடிகிறது. உதாரணமாக, வகுப்புரிமை ஆணைகளின் தீர்மானங் களை உற்று நோக்குவோம். தீர்மானம் 21; 1.4.1921

(ஆ) பப்ளிக் சர்விசஸ் கமிஷன் பரிந்துரைகளுக்குச் செயல் வடிவம் கொடுப்பதற்காக நீதித்துறை நியமனங் கள் வழக்கறிஞர்களிடமிருந்து நேரடியாகவே நடத்தப் பட வேண்டும். நீதித்துறையில் எல்லா சமூகங்களுக் கும் உரிய பிரதிநிதித்துவம் அமையுமாறு அடுத்த ஐந்தாண்டுகளுக்குப் பார்ப்பனரல்லாத இந்துக்கள், கிறித்தவர்கள், முகம்மதியர்கள் ஆகியவர்களிலிருந்தே செய்யப்பட வேண்டும் என்று இக்கவுன்சில் அரசுக்கு பரிந்துரை செய்கிறது.

(ஈ) தலைமைச் செயலகத்தில் உள்ள அலுவலல் நிலைகளை வைத்துக் கொண்டிருக்கும் பார்ப்பனர் - பார்ப்பனர் அல்லாதார் இவர்களுக்கு இடையே சமநிலையை மூன்றாண்டுக்குள் பெறுவதற்கு ஏதுவாகத் தலைமைச் செயலகத்தில் இந்தியன் சிவில் சர்வீஸ் திட்டப்படி பார்ப்பனரல்லாதாரிடமிருந்து தலைமைச் செயலக அலுவலர்கள், எழுத்தர்கள் நியமிக்கப்பட வேண்டும்.[16]

என்ற இவ்விரண்டு தீர்மானங்களும் தமிழகத்தில் வகுப்புரிமை எவ்வாறு பிராமணரல்லாதார்களின் அரசியல் கட்சியான நீதிக்கட்சியால் தலித்துகளுக்கு எதிராகவும், சாதி இந்துக்களுக்கு உதவும் வகையிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது என்றறிய முடிகிறது. ஏனெனில் நீதித்துறை நியமனங்கள் ஐந்தாண்டுகளும், தலைமைச் செயலக மற்றும் அலுவல் துறைகள் மூன்றாண்டுகளும் பிராமணரல்லாத சாதி இந்துக்களி னால் மட்டுமே நியமனம் செய்ய ஆணை பிறப்பித்து அதை தீர்மானமாக செயலும் படுத்திவிட்டனர்.

ஆனால் 80 ஆண்டுகளுக்குப் பிறகு தலித்துகளில் போதுமான பிரதிநிதித்துவம் இல்லாதபோது ஒட்டு மொத்தமான பார்ப்பனரல்லாத சமூகத்தில் மேற்கண்ட ஆணைகளின் பயனால் யார் பயனடைந்திருப்பார் கள்? பதவி வேட்டைக்காரர்களின் அரசியல் முக மூடியே நீதிக்கட்சி என்பது இதிலிருந்து அறிய முடியும். ஆனால் இன்றுவரை எந்த திராவிடக் கட்சி யாவது அடுத்த ஐந்தாண்டுகளுக்கு செய்யும் நியமனங் கள் அனைத்தும் தலித்துகளுக்கு மட்டுமே என்று சொல்லட்டும்; இல்லையென்றால் நடந்தேறியது பதவி வேட்டை அவமானங்களேயன்றி வேறென்ன?

மேலும் இன்னொரு நாடகத்தை விவரமாகக் காண்போம்.

நீதிக்கட்சி அமைச்சரவை பொது 744, 13.09.1928 நாளிட்ட வகுப்புரிமை ஆணையை நிறைவேற்றியது. எஸ். முத்தையா முதலியார் விடுத்த இந்த ஆணை முதன் முதலாக இன்னின்னார்க்கு இத்தனை இடங்கள் என வரையறை செய்தது. தாழ்த்தப்பட்டவர், பிற்படுத் தப்பட்டவர் ஆகியோருக்காக இந்த ஆணையை உயர்சாதி பார்ப்பனரல்லாதாராகிய எஸ். முத்தையா முதலியார் பிறப்பித்தார்.

**விவரம்**

| | |
|---|---|
| பார்ப்பனரல்லாத இந்துக்கள் | 5 |
| பார்ப்பனர் | 2 |
| முகமதியர் | 2 |
| ஆங்கிலோ இந்தியரும் கிறித்தவரும் | 2 |
| தாழ்த்தப்பட்டவர் உட்பட்ட பிறர் | 1 |
| மொத்தம் | 12 |

இந்த நியமனங்கள் அடியிற்கண்ட சுழல்முறையில் நிகழ்தல் வேண்டும்.

1. பார்ப்பனரல்லாதார் - இந்து
2. முகமதியர்
3. பார்ப்பனரல்லாதார் - இந்து
4. ஆங்கிலோ இந்தியர் அல்லது கிறித்தவர்
5. பார்ப்பனர்
6. பார்ப்பனரல்லாதார் - இந்து
7. மற்றவர்கள் (தாழ்த்தப்பட்டவர்கள்)
8. பார்ப்பனரல்லாதார் - இந்து
9. முகமதியர்
10. பார்ப்பனரல்லாதார் - இந்து
11. ஆங்கிலோ இந்தியர் அல்லது சிறித்தவர்
12. பார்ப்பனர்

உற்றுநோக்கிப் பார்க்கும்போது யாருக்காக பாடுபட்டது நீதிக்கட்சி என்பதை அறியலாம். வகுப் புரிமை வரலாற்றை சாதனையாக சொல்லிக் கொண்டு இருக்கும் அனைவரும் உண்மையாகவே மனமிருந் தால் உற்றுப்பார்த்து சொல்லுங்கள்.

செப்படி வித்தைக்காரன், மோடிமஸ்தான், மந்திர வாதியினை விட, ஜூடுகர் ஆனந்தின் மேஜிக்கைவிட மோசமான கதையாளர் பு. இராசதுறை ஒருபடி மேலேபோய் தலித்துகளின் காதில் பூ சுற்றுகிறார். நியமன சுழற்சியாக மேற்கண்ட விபர அறிக்கையில் தலித்துகளை ஒரு வகுப்பாகவே சேர்க்காமல், மற்றவர்கள் என்ற ஒரு புள்ளியில் தாழ்த்தப்பட்ட வர்கள் என்று சேர்த்துவிட்டு, வேடிக்கை காண்பித்து, தலித்துகளின் உரிமையைப் புறக்கணித்த ஒரு சாதி வெறிக் கூட்டத்திற்கு சப்பைக்கட்டு போடுகிறார். எந்த மகுடிக்கு இந்த விஷப்பாம்பு படமெடுத்து ஆடியது, தெரியவில்லை.

இந்தக் கேடுகெட்ட வகுப்புரிமை தலித்துகளுக்கு எதிரானது என்றறியாத தலித்துகள் நமக்காக பாடுபட்டவர்கள், சொக்கா கொடுத்தவர், கோமணம் கொடுத்தவர், மானம் கொடுத்தவர் என்று துதிபாடும் நிலையை இன்றும் காணமுடிகிறது. மேற்கண்ட நியமன விபரத்தில் கண்ட வகுப்புரிமை வரலாற்றிற் காகவே அதில் பயன்பெறும் பார்ப்பனரல்லாத இந்துக்களின் தலைவர் கொதித்தெழுந்தார் வகுப் புரிமை கிடைக்க பாடுபட்டவர் அதில் இப்படியொரு உண்மையும் பயனும் உள்ளதை அறியாமலா இப்படி பேசியிருப்பார்.

"வகுப்புரிமை வேண்டாதவன் தன் வகுப்பை உணர முடியாதவனோ தன் வகுப்பைப் பற்றிச் சந்தேகப் படத்தக்கவனோ ஆவான் என்று கூறி இந்நாட்டுக் குடி மகன் ஒவ்வொருவனும் வகுப்புரிமை கோரவேண்டும்



படிப்பகம்

www.padippakam.com

என்பதை உணர்த்தினார் பெரியார். அதுமட்டுமா? ஒரு வகுப்பான் தன் வகுப்புரிமை கேட்பது தேசத்து ரோகம் என்று சொல்லப்படுமானால் அப்படிச் சொல்லுகிறவன் ஒரு தேசத்தையும் சேர்ந்திராத நாடோடி, லம்பாடி வகுப்பானாகத்தான் இருக்க முடியும்."

மேலும் வகுப்புரிமை கோரிப் போராடாதவன் மானமற்றவன் என்றும் கோழை என்றும் குறிப்பிட்டார் பெரியார். "ஒவ்வொரு வகுப்புக்கும் அவனது வகுப்பு எண் ணிக்கை அளவுக்கு உத்தியோகம் கொடுக்க ஆட்சே பித்தால் - ஆட்சேபிக்கப்பட்ட வகுப்பை இழிவு படுத்தியதாகவும் கோழைத்தன முள்ள, மானமற்ற, யோக்கியதை அற்ற வகுப்பாகக் கருதியதாகவும் அர்த்தமாகும். எந்த வகுப்பான் தன்னுடைய எண்ணிக்கை அளவுக்குத் தனது நாட்டில் உத்தியோகம் வேட்டையாடிப் பெறவில்லையோ அந்த வகுப்பான் மானமற்ற கோழை வகுப்பானே ஆவான்."[18]

இதை தலைமேற்கொண்டு தங்களது உடலுழைப்பை வழங்கிய தலித்துகள் ஏதோ தங்களுக்கு வகுப்புரிமையாலும், நீதிக்கட்சியாலும் தகுந்த பங்கு கிடைத்துவிடும் என்று நம்பி ஏமாந்ததுதான் மிச்சம்.

**IV. பக்கத்து இலைக்கு பாயாசம்**

வரலாறு முழுவதும் தலித்துகளின் எழுச்சியை சமூக வரலாற்றை, பண்பாட்டு வளர்ச்சியை மறைத்து அவர்கள் ஏதோ அடிமைகள், ஊமைகள், நோயாளிகள் போன்ற அதிகார தோரணையில் இந்நூல் எழுதப்பட்டிருக்கிறது. பிராமணர்கள் நீதிக்கட்சியினரை குறைகூறவே முடியாது. ஏனெனில் அவர்கள் பிராமணர்கள். பிராமணரல்லாத உயர்சாதி இந்துக்களும் (ஆசிரியர் கூறுவது போல) குறைகூறவே முடியாது. ஏனெனில் எண்ணில்லா பயனடைந்தவர்கள் ஆனால் எல்லா நீதிக்கட்சியின் பணிகளும், பயன்களும் தலித்துகளுக்கு மட்டுமே என்று திரித்து (பிராமணரல்லாத உயர்சாதி இந்துக்களே பயனடைந்தனர் என்பதை மறைத்து) "பக்கத்து இலைக்கே பாயாசம்" என்ற கதையை நினைவூட்டுகிறது இந்நூல்.

தலித்துகளை அவமானப்படுத்துவதையே தொழிலாகவும், தலித்துகளின் இழிவுநிலைகளை ஆவணப்படுத்துவதில் முனைப்புடனும் செயலாற்றும் திராவிட கழகத்திற்கும், இந்த புத்தகத்தை எழுதிய ஆசிரியர் அவர்களுக்கும் தலித்துகளின் சார்பில் மிகுந்த கண்டனத்தை தெரிவித்துக்கொள்கிறோம்.

...ணைகள், சட்டத் தொகுப்புகள், போலி தாழ்த்தப்பட்டவர் நலம் என்று இருந்தாலும் புத்தகத்தில் விஞ்சி நிற்பது உயர்சாதி திமிரும், பார்ப்பனரல்லாத உயர்சாதி இந்துக்களின் தூதிபாடலுமே. தலித்துகளின் வரலாறு, அரசியல், பண்பாட்டை எழுதும் போது அருள்கூர்ந்து தலித்துகளைப் பற்றிய விபரங்களை தருதல் நலமே. செட்டியார், முதலியார், நாயர், நாயக்கர் என்ற சாதிப் பெயரை உயர்ந்தவர் களாயினும் தவிர்ப்பது இன்றைய சமூக எழுத்தாளர் களுக்கு நன்று.

தலித்துகளின் சமூக வரலாற்று நிகழ்வுகளை முற்றிலும் புறக்கணித்து நீதிக்கட்சி, பெரியார், திராவிட அரசியலாரின் உதவியினாலேயே இந்நிலை அதாவது சமூகளவில் இன்றைய ஏற்றம் கிடைத்தது என்பது போல இந்நூல் எழுதப்பட்டுள்ளது ஒரு மாபெரும் தவறான முன்னுதாரணம் ஆகும். தங்களது வளர்ச்சியை பெருக்கிக்கொள்ள தலித் மக்களின் உணர்வெழுச்சியும், கட்டமைப்பும் இவர்களுக்குத் தேவை என்பதனாலேயே தலித்துகளின் ஒட்டுமொத்த சமூக - பொருளாதார - பண்பாடு - கல்வியினை சீரழித்து தங்களை மட்டும் உயர்த்திக்கொண்ட ராஜாக்கள், வேந்தர்கள், பிரபுக்கள் போன்ற உயர் சாதியினரின் அதிகார போரும் அதனுடைய வெற்றியுமே நீதிக்கட்சியும் அதன் ஆட்சியும். அதற்கு பெரியார் ஒத்துழைப்பும் தலைமையும் தாங்கினார் என்பதனால் அது ஜனநாயகப்படுத்தப்பட்டதுபோல் ஒரு தோற்றம் கொண்டதே தவிர உண்மையல்ல?[18]

எனவே பெரியார் - ஜனநாயகப்படுத்தப்படாத, தலைமையற்ற, ஏறக்குறைய யாரும் இல்லாத ஒரு கட்சியான நீதிக்கட்சி என்ற அமைப்புக்கு தலைவரானார் என்ற சிறப்பைத் தவிர வேறெதும் இந்நூலுக்கு இல்லை. தங்களது உரிமைகள், நிரந்தர சொத்துக்கள், மாளிகைகள் ஆகியன கிடைத்ததும் நீதிக்கட்சி என்ற போர்வையை உதறிவிட்டவர்களை தூக்கிப்பிடித்திருக்கிறார் இந்த நூலின் ஆசிரியர்.

அடுத்துவரும் இதழ்களில் பிராமணரல்லாதார் பற்றி அறிஞர் அம்பேத்கர் - பெரியார் ஆகியோரின் கருத்துக்கள் என்ன என்பதை சற்று விரிவாக காண்போம்.

- தொடர்வோம்

இக்கட்டுரைக்கு துணைநின்ற நூல்கள்


1. பு. இராசதுரை - நீதிக்கட்சி அரசு பாடுபட்டது யாருக்காக? திராவிடர் கழகம் வெளியீடு, 1998, சென்னை.
2. பார்க்க: நீதிக்கட்சி அரசு பாடுபட்டது யாருக்காக?
3. சீனிவாசன் சரித்திர சுருக்கம் (1938), பக். 20
4. M.C Raja's Memorandum to Muddinan Committee, 1924, P. 56
5. விடுதலை மணி - பண்பாட்டுத் தலைவர் தாத்தா ரெட்டமலை சீனிவாசன், 1997, பக்-2
6. அன்புபொன்னோவியம் - எதிர்வினைக்கு ஒரு விளக்கவுரை, 2003 புதிய கோடாங்கி, ஏப்ரல், பக்-45
7. பார்க்க: அன்புபொன்னோவியம், புதிய கோடாங்கி, மே 2003, பக்-9-10, ஏப்ரல் 2003, பக்-46
8. பார்க்க: அன்புபொன்னோவியம், புதிய கோடாங்கி, ஏப்ரல் 2003, பக்9-10
9, 10 பார்க்க: நீதிக்கட்சி பாடுபட்டது யாருக்காக?
11. பார்க்க: பு. இராசதுரை, 1998, பக்-14
12. பார்க்க: அன்பு பொன்னோவியம், புதிய கோடாங்கி, ஜூலை, 2003
13. பார்க்க விடுதலைமணி, பண்பாட்டுத் தலைவர் ரெட்டமலை சீனிவாசன்
14. பார்க்க: பு. இராசதுரை, 1998, ப59
15. பார்க்க: அன்புபொன்னோவியம், புதிய கோடாங்கி
16,17,18 பார்க்க: பு. இராசதுரை, 1998, 64-65




படிப்பகம்

www.padippakam.com

■ ஸ்ரீதரகணேசன்

# இது!

என்னதான் முயன்றாலும் திக்கென்று கொப்பிளிக்கிற பயத்தை கட்டுப்படுத்த முடியவில்லை. யாருக்கும் இது தெரிந்திடுமோ. வேலையை விட்டு நிறுத்திவிடுவார்களோ என்ற பதற்றம் வந்துகொண்டே இருந்தது ரமேசுக்கு. எதைப் பார்த்தாலும் அதிர்வாக இருந்தது. இயந்திரங்கள் ஓடும் இரைச்சலோடு அதுவும் போட்டியிட்டது. ரமேஷ் மனதை இறுகிப் பிடித்துக் கொண்டான். இப்படி பயம், பதற்றம், நடுக்கம் வரும்போதெல்லாம் ஏதாவது ஒரு சாமி பெயரை சொல்லி வேண்டிக் கொண்டான். அந்த சாமி அவனை காப்பாற்ற வேண்டும். இல்லை என்றால் அவ்வளவுதான். 1500 ரூபாய் சம்பளம் நின்று போகும். அந்த மாதச் சம்பளத்தில் எவ்வளவுதான் சிக்கனமாக செலவு செய்தாலும் 800 ரூபாய் ஆகிவிடுகிறது. வீட்டுக்கு 700 ரூபாய். அதுவும் சமயங்களில் குறைந்து போகும். கிராமத்தில் மழை தண்ணீர் இல்லை. வேலை வாய்ப்பும் கிடையாது. வேலை தேடி தூத்துக்குடிக்கு வருகிற ஆட்கள் கூட, அய்யாவும் வர முடியாது. அய்யா ஒரு ஆஸ்துமா வியாதிக்காரர். அய்யாவும் அம்மாவும் படாதபாடு படுகிறார்கள். 'நீ அனுப்பும் பணத்துலதான் சீட்டுக் கட்டுகிறோம். உன்னை நம்பித்தான் இருக்கோம். கவனமாக வேலையைப் பாரு. பணத்தை அனுப்பு' என்று அக்காள் எழுதியிருந்தாள். இந்த நேரத்தில் வேலை போனால் எப்படி இருக்கும்? இந்த அக்காள் இல்லை என்றால் அவன் படித்திருக்கவே முடியாது. அக்காள் காதில் கிடந்த கம்மலை கழற்றிக் கொடுத்தாள். அவன் எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் பண்ணி, ரெண்டு வருசம் தொழில் கல்வி பயின்று, எலக்ட்ரிக் வேலை படித்து, மோட்டார் மெக்கானிசம் பூராவும் தெரிந்து என்ன பிரயோசனம்? இது தெரிந்தால் எல்லாமே போய் விடும்.

அப்பாதான் ரமேஷை செல்வராஜ் சாரிடம் கூட்டிக்கொண்டு வந்தார். செல்வராஜ் சார் தூரத்துச் சொந்தம். வீட்டுக் கஷ்டத்தை சொன்னதும் சார் மனம் இறங்கினார். அவனை வேலையில் சேர்த்து விட்டார். 'யாருக்கும் இது தெரியக் கூடாது. தெரிந்தால் வெளியே தள்ளிடுவாங்க. ஜாக்கிரதை' என்றார். அவர் கண்டிப்புடன் சொல்லவும் அவன் குழம்பினான். ஒரு மாதிரி இருந்தது. ஊரை மறைக்கலாம். வீட்டை மறைக்கலாம். பெயரை மறைக்கலாம். ஆனால் இதை எப்படி மறைக்க முடியும்? என்றைக்காவது ஒரு நாள் உன் எஸ்.எஸ்.எல்.சி. சர்டிபிக்கெட்டை கொண்டு வான்னா என்ன செய்ய முடியும்? அதுதான் இப்பமும் பாரமாக அழுத்தியது. நிற்காத கவலையாக இருந்தது. ஆலை இரைச்சல்களுக்கு இடையில் திணறினான். சிரமத்துடன் தன்னை நிதானப்படுத்திக்கொண்டு வேலையைப் பார்த்தான். குழாய் வழியாக அயோடின் சால்ட் இறங்கிக் கொண்டிருந்தது. பாலி பேக்குகளில் பிடித்தார்கள். மிஷின் தையல் உடனுக்கு உடன். தலையில் சுமந்தார்கள். அந்த தொழிலாளர்கள் சேர்ந்து, வதங்கி, வியர்த்து, விருவிருத்துக் காணப்பட்டாலும், அவர்களின் உடல்கள் என்னமோ இறுக்கம் நிறைந்ததாகவே இருந்தன. அவர்களுக்கு 'பீஸ் ரேட்' கூலி. எல்லோரும் அதை பகிர்ந்து கொள்ள வேண்டும். கரண்ட் கட் ஆகி விடக்கூடாது. மிஷின்கள் எதுவும் 'மக்கர்' ஆகாமல் இருக்க வேண்டும். ஓரளவுக்கு கூலி கட்டுப்படியாக இருக்கும். அந்த கூட்டத்தில் நிறைய ந. புதூர்க்காரர்கள் இருந்தார்கள். அவனுடைய ஊர்க்காரர்கள். மாமா முறையில் ஒரு சொந்தக்காரர். அவர்தான் முதலில் பார்த்தார். அப்பொழுதே ரமேஷ் வயிற்றில் புளி கரைத்தது. மாமா அருகில் வந்தார். "நல்லாயிருக்கியா?" என்று கேட்டார். "நல்லாயிருக்கேன்" என்று ஒரு வரியில் பதில் சொன்னான்.

நல்லவேளை, குடிநீர் வந்தது. இப்பம் இந்த தண்ணீரை விட்டால், பிறகு தாகத்துக்கு அலையணும். போகப் போக வெயில் கூடும். வெக்கை ஜாஸ்தியாகும். ஆஸ்பெஸ்டாஸ் கூரை கிறக்கத்தைத் தரும். அப்போது யாராவது தண்ணீர் கொண்டு வந்தால்தான் உண்டு. ரொம்ப தாகத்துக்கு சம்பில் கெட்டிக் கிடக்கிற பழைய தண்ணீரை ஓட்டை வாளியில் மொந்துக் குடிக்கணும். மாமா போய் விட்டார். பிறகு யாரும் பார்த்துவிடக்கூடாது, எதுவும் கேட்டுவிடக்கூடாது என்ற பயத்திலேயே பிளாண்ட் மேனேஜர் சொன்ன இடத்திலேயே நின்றான். கன்வேயர் பெல்டில் உப்பு வரும் போது, குப்பை கூளம் வந்திடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அங்கிருந்து பார்த்தால் பாதாள அறை தெரியும். அந்த திறப்பு வழியாக எட்டிப்பார்த்து, அங்கு வேலை செய்கிறவர்களிடம், அப்படி எதாவது கிடந்தால் எடுக்கச் சொல்லிக் கொண்டிருந்தான்.



படிப்பகம்

www.padippakam.com

அப்போது குருநாதன் விரசலாக வந்தான். அவன் வேகத்தைப் பார்த்ததும் ரமேஷ் முகம் இருண்டது. ஏதாவது சொல்வானோ என்ற பயம் திரும்பவும் வந்தது. "ரமேஷ் உனக்கு எலெக்ட்ரிக் வேலை தெரியுமா?" என்றான். அதற்குப் பிறகுதான் மூச்சு ஒழுங்காக விட முடிந்தது. கொஞ்சம் தூக்கி விட்ட மாதிரி நிமிர்ந்து பார்த்தான். "அப்பாடி" என்று முணுமுணுத்துக் கொண்டான். "தெரியும் ஸார்" என்று சொன்னான். "சரி வா" என்று குருநாதன் கூப்பிடும்போது கூடப் போனான்.

ரெங்கராஜன் முதலாளி அங்கு நின்றார். டிரைவர் அழகிய தோல் பையைக் கொண்டு வந்து கொடுத்தான். முதலாளி வாங்கி திறந்தார். மினரல் வாட்டர் இருந்தது. நீரை ரெண்டு மடக்கு குடித்தார். பிறகு பையை வாங்கி டிரைவர் வைத்துக் கொண்டான். ஆலை இரைச்சல் விடாமல் கேட்டது. வேலைகள் மும்முரமாய் நடந்துகொண்டிருந்தன. தொழிலாளர்கள் அவரவர் வேலைகளைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

குருநாதன், ரமேஷை கூட்டிக் கொண்டு வந்தான். ரமேசுக்கு இன்னும் அந்த பயம் இருந்தது. ஒவ்வொரு நொடிப்பொழுதும் தப்பிப் பிழைத்த மாதிரி இருந்தது. குருநாதன் அவனை முதலாளிக்கு அறிமுகப்படுத்தினான். ரமேஷ் 'கும்பிடு' போட்டான். அவனும் முதலாளியை இவ்வளவு பக்கத்தில் பார்த்ததில்லை. பேசியதில்லை. தன்னை நிதானப்படுத்திக் கொண்டான். அவர் கேட்ட கேள்விகளுக்கு மட்டும் பதில் சொன்னான். பிறகு ரெங்கராஜனும் பேசவில்லை. அவன் செய்கிற வேலையை கூர்ந்து பார்த்தார். சின்ன வேலைதான். மூன்று வயர்களை தனித்தனியாக எடுத்து, கனெக்ஷன் கொடுத்தான். பத்து நிமிடம் வேலை முடிந்து போனது. அந்த பச்சை பட்டனை அமுக்கினான். ஓடாமல் நின்ற மிஷின் ஓடத் தொடங்கியது. இரைச்சல் ஜாஸ்தியானது. ரமேஷ் முதலாளியைப் பார்த்து சொன்னான். "ப்ளக் போர்டு சரியில்லை. மாத்தனும்." உடனே முதலாளி, "ஏய் குருநாதா, போர்டு இருந்தா மாத்து. இல்லன்னா, புதுசா ஒன்ன வாங்கி மாட்டு" என்றார். குருநாதனும் "சரி முதலாளி" என்று கேட்டுக் கொண்டான். பிறகு ரெங்கராஜன் நிற்கவில்லை. காரில் ஏறிப்போய் விட்டார்.

முதலாளி போன உடனேயே குருநாதன், "நீ போய் உப்பு லாரிகளுக்கு சீட்டுக் கொடு" என்றான். 'என்ன ஸார், என்னை ஆப்பரேட்டராகத்தான் இருக்கச் சொன்னாங்க. நீங்க என்னை உப்புல குப்பை பொறுக்கவும் உப்பை எண்ணவும் போடுறீங்களே' என்று சொல்ல நாவு வந்தது. அதற்குள் அந்த பயம் வந்து தடுத்துக் கொண்டது. ஏதாவது கேட்பார், அப்பம் பதில் சொல்லனும். பேச்சு வாக்குல இதைச் சொல்லித் தொலச்சா நிலைமை என்னாகும்? வேலை போகும். திரும்பவும் ஒரு வேலை தேடனும். எம்ப்ளாய்மெண்டில் பதிஞ்சு வைத்து அஞ்சி வருச மாகுது. ஒரு கார்டு கூட வர வில்லை. எல்லாமே தனியார் மயமாகிக் கிட்டிருக்கு. நம்ம மாதிரி ஆட்களுக்கு எங்க வேலை கிடைக்கும்? அப்படிக் கிடைச்சாலும் எவ்வளவு நாட்களுக்கு வேலை ஓடும்?

ரமேசுக்கு நினைத்தாலே பயமாக இருந்தது. அவன் பதில் பேசாமல் குருநாதன் பின்னால் போனான். டிப்பர் லாரிகள் போய் வருகிற கேட் ரெண்டும் திறந்து கிடந்தன. ஆடுகள் பூராவும் குடோனுக்குள் வந்தன. அதுகள் உவத்திரம் தாங்க முடியவில்லை. அங்கன கிடந்த கற்களை எடுத்து வாட்சுமேன் விரட்டிக்கொண்டிருந்தார். வெயிலோடு காற்றும் கிளம்பி இருந்தது. கண்ணைத் திறக்க முடியவில்லை. அப்படி மண்ணள்ளிப் போடுகிறது. ஒரே குப்பை, தூசி. அந்த ஓரமாகத்தான் ஓராள் மேசை, நாற்காலி போட்டு உட்கார்ந்து எழுதிக் கொண்டிருந்தார். அவரிடம்தான், குருநாதன் ரமேஷை கூட்டிக் கொண்டு போனான். அவரை வேறொரு வேலைக்குப் போகச் சொன்னான். அவரும் உடனே போய்விட்டார். இப்படி எழுது, அப்படி எழுது என்று ஒன்றும் சொல்லவில்லை. குருநாதனும் உட்கார்ந்து எழுது என்று போய் விட்டான். அதற்குள் லாரி கிளீனர்மார்கள், சீட்டு சீட்டு என்று நச்சரிக்க ஆரம்பித்துவிட்டார்கள். அவர்களை அமைதியாக இருக்கச் சொன்னான். முந்திய பில்களைப் பார்த்து, அதே மாதிரி எழுதினான். இடையில் போன் வந்தது. இது வரை எத்தனை லாரிகள் வந்திருக்கு என்று கேட்கும்போது, பார்த்துச் சொன்னான். எங்கும் அசைய முடியவில்லை. பொறுமையோடு பில் எழுதி, அதே மாதிரி காப்பி பில்லைக் கிழித்து கிளீனர் கையில் கொடுத்தான். சற்று நேரத்தில் கூட்டம் குறைந்தது.

மணி ஐந்து சுமாருக்கு ரெங்கராஜன் வந்தார். முதலாளி கார் வேகமாக பிளாண்ட்டுக்குள் போயிற்று. அவர் சாதாரணமாக இருந்தார். புதுசாக மாட்டப்பட்ட ப்ளக்கை பார்த்தார். எல்லா மிஷின்களும் ஓடிக்கொண்டிருந்தன. வேலைகளில் எந்த குறையும் இல்லை. குருநாதன் வேகமாக வந்துவிட்டான். "ப்ளக்க யாரு மாட்டினா?" "ரமேஷ்தான் மாட்டினான்" "பெறவு எதுக்கு அந்த பையனை அங்க உக்கார வச்சுருக்க. ப்ளாண்டுல எதுவும் ஆச்சின்னா யாரைப் போய் கூப்பிடுவ? இங்க இருக்கச் சொல்லு. அதுக்கு வேற ஓராளைப் போடு" "சரி முதலாளி"

உடனே ரெங்கராஜன் போய் விட்டார். குருநாதனுக்குத்தான் ஒரே குழப்பம். ரமேஷைப் பார்த்து, "நீ அங்க போப்பா" என்றான். பழைய ஆளைக் கொண்டு வந்து உட்கார வைத்தான். அந்த நேரம் பார்த்து நா. புதூர்க்காரர் ஒருவர் வந்து - சும்மாக் கிடக்காம - "நம்ம சொந்தக்காரப் பையன்தான் ஸார். கொஞ்சம் பார்த்து வேலையைக் கொடுங்க" என்று சொன்னதுதான் வினையாகப் போயிற்று. குருநாதனுக்கு அது போதாதா? தோண்டி துருவி பார்த்துவிட்டான். விபரம் தெரிந்த ஆட்கள், விபரம் தெரியாமலே சொன்னார்கள். இது தெரிந்து போயிற்று. குருநாதன் பெரிய குண்டையே கண்டு பிடித்த மாதிரி, மற்ற ஆபீஸ் ஸ்டாப்பு களிடம் போய் சொன்னான். "இந்த பையன் என்ன சாதி தெரியுமா? பள்ளன்.


படிப்பகம்

www.padippakam.com

நம்ம கம்பெனியிலே சாதியை மறைச்சுசேர்ந்திருக்கான்!" அதோடு குருநாதன் நிற்கவில்லை. அவன் நேராக ஹெட் மேனேஜர்க்கு போன் பேசினான். விசயத்தைச் சொன்னான். "உனக்கு எப்படித் தெரியும்?" என்று அந்த தலைமை நிர்வாகி கேட்டார். "மூடை சுமக் கிறவங்களுல அவன் சொந்தக் காரங்களும் இருக்காங்க. நான் அப்டியே பேச்சுக் கொடுத்து தெரிஞ்சுக்கிட்டேன்" என்றான். "சரி இது நமக்குள்ள இருக்கட்டும். நாளைக்கு உள்ள வர விடாத. வெளியே நிறுத்திடு. நானும் செல்வ ராஜ் ஸார் சொன்னதுனால அவன எடுத்துப் போட்டுட்டேன். இந்த செடூல் காஸ்ட் ஆட்களை வேலைக்கு எடுக்கக்கூடாதுன்னு நம்ம முத லாளியும் சொல்லியிருக்கார். நான் தான் கவனக்குறைவாக இருந்துட் டேன்" என்றார். ஆனாலும் நாளை யில் இருந்து ரமேஷ் வேலைக்கு வரமுடியாதுன்னு நினைக்கும் போது குருநாதனுக்கு சங்கடமாகத் தான் இருந்தது. என்ன செய்ய? எல்லோரும் அவன் சாதியாக இருக்கும்போது, இடையில் ஒரு பள்ளனைச் சொருகினால் எப்படி? நாளை ஒரு பறையன் வேலைக்கு வருவான். பிறகு சக்கிலியன் வந்து நிற்பான். இதை சும்மா விட முடி யுமா என்ன?

மறுநாள் காலையில் ரமேஷ் வேலைக்கு வந்தபோது 'குருநாதன் ஏன் இப்படி தன்னை வேலைக்கு வேண்டாம். நின்னுக்கன்னு சொல் லுகிறார்' என்று விளங்கவில்லை. அப்போது வந்த கோபத்தை அடக் கவும் முடியவில்லை. "நான் என்ன தப்பு செய்தேன். எதுக்கு நிப்பாட் டிறீங்க?" என்று கேட்டான். "நீ எந்த தப்பும் செய்யல. நீ வேண் டாம். நின்னுக்கோ, அவ்வளவு தான்." என்றான் குருநாதன். பிறகு அவன் நிற்கவில்லை. போய்விட் டான். மேனேஜராக இருக்கிற அவனை மீறி உள்ளே போக முடி யாது. இனி வாட்சுமேனும் விட மாட்டார். ரமேஷ் பதறிப் போய் நின்றான். வேலை இழப்பு நிலை குலைய வைத்தது. கவலையாக இருந்தது. துக்கமாக வதைத்தது. குழப்பம் குழப்பமாக வந்தது. இதை யாரிடம் சொன்னாலும், நீதான் தப்பு செய்திருப்பே என்பார்கள். உண்மை என்னவென்று தெரியாது. ஆனாலும் இதற்கு ஒரு முடிவு தெரியாம, இந்த இடத்தை விட்டு நகரக் கூடாது என்ற வீம்போடு அங்கேயே நின்றான் ரமேஷ்.

சரியாக மணி பத்துக்கு முத லாளி வந்தார். காரின் கண்ணாடி இறங்கி இருக்க, ரெங்கராஜன் முதலாளியைப் பார்க்க முடிந்தது. அவர் ரமேசைப் பார்த்தாரோ என் னமோ தெரியவில்லை. கேட்கள் திறக்க கார் விருட்டென்று உள்ளே போய்விட்டது. முதலாளி இறங்கி பிளாண்ட்டுக்குள் போனார். குரு நாதன் ஓடி வந்தான். அன்றைய நிலவரத்தைச் சொன்னான். ரெங்க ராஜன் கேட்டுக்கொண்டார். பிறகு, "என்ன அந்த பையனை வெளியே நிறுத்தி வச்சுருக்க. எதுவும் பண் ணிட்டானா" என்று கேட்டார். குருநாதனும் தான் பேசுவது முதலாளிக்கு மட்டுமே கேட்கிற மாதிரி எச்சரிக்கை உணர் வில் குரலைத் தாழ்த்தி, "தப்பெல் லாம் ஒன்னுமில்ல முதலாளி... சாதியை மறைச்சு, அந்த பள்ளப் பயல் வேலைக்கு சேர்ந்திருக்கான். அது தான் நிறுத்தி வச்சிருக்கேன்" என் றான். "நீ முதலே பார்த்து விசா ரிக்கலாம்ல. ஏன் வேலைக்கு எடுத்த?" என்று முதலாளி கேட் கும்போது, "நான் எடுக்கல முத லாளி. அந்த பையனை நம்ம செல்வ ராஜ் சார்தான் சேர்த்து விட்டா ராம். அதுனாலதான் நம்ம அளத் துல வேலை செய்த பையனை நான் பிளாண்ட்டுல சேர்த்துக்கிட்டேன்" என்றான்.

செல்வராஜ் சார் பெயரைக் கேட்டதுமே ரெங்கராஜன் முத லாளிக்கு 'திக்'கென்றிருந்தது. செல்வராஜ் சார் உதவி இல்லை என்றால், அவருக்கு அரசு உணவுத் தானியக் கிடங்கில் கான்ட்ராக்ட் கிடைத்திருக்காது. ஆளும் கட்சி யில் அதிகாரப் பதவிகளில் இருப்ப வர்கள் போட்டி போடும் தொழில் இது. கான்ட்ராக்டைப் பெறுவதற்கு ரெங்கராஜன் ஒரு குறுக்கு வழி யைக் கண்டுபிடித்தார். அந்த ஊர்களின் வேலை ஒப்பந்தங்கள் பட்டியல் இன சாதியினர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்தன. அதற்கு செல்வராஜை பயன்படுத்திக் கொண்டார். செல்வராஜ் ஒரு பட்டதாரி. அவர் பெயருக்கு பாரங்களை நிரப்பி, ஆட்களைப் பிடித்து அரசு அனுமதி பெற்றார். செல்வராஜ் சார்க்கு மேனேஜர் பதவி. செல்வராஜ் சார்க்கு முத லாளி பத்தி தெரியாதா என்ன? முதல் முறையாக ரெங்கராஜன் செல்வராஜ் சாரை நினைத்துப் பயந்தார். அவர் நெஞ்சு குறு குறுத்தது. அந்த பட படப்பில் அவர் சொன்னார், "அந்த பையன் ஆளோடு ஆளாக இருக்கட்டும். வேலையை போட்டுக்கொடப்பா"

## அறிவிப்பு

**புதிய கோடாங்கி கிராமங்களிலும் பரவலாகப் பழக்கப்படுவதால், வாசகர்களின் புரியும் திறனைக் கருத்தில்கொண்டு கட்டுரைகளை எழுதுபவர்கள் தங்கள் நடையை எளிமைப்படுத்திக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம். அதேபோல், அனைவருக்கும் வாய்ப்பு கொடுக்கும் வகையில் கட்டுரையாளர்கள் தங்கள் கட்டுரைகளை புதிய கோடாங்கியின் 2 அல்லது 3 பக்கங்களுக்குள் நிறுத்திக்கொள்ளுமாறும் வேண்டுகிறோம்.**

**– ஆசிரியர்**



படிப்பகம்

www.padippakam.com

நூல் மதிப்புரை

# ஏறுதல் சிரமமில்லா கறுப்புச் சிகரம்

ஆசிரியர் : பரிக்கல் சந்திரன்
வெளியீடு : சக்தி நிலையம்
விழுப்புரம்

■ அன்பாதவன்

தமிழிலக்கியத்தில் நவீனங்களின் வரலாறு மிக நெடியது. அதிலும் நவீனங்கள் மிக அதிக அளவில் வெளிவந்துகொண்டிருக்கும் காலமிது.

யதார்த்தவாதம், அநேர் கோட்டு நவீனம், அறிவியல், அமைப்பியல், பின் நவீனத்துவம், பெண்ணியம், தலித்தியம் எனப் பல்வகைத் தளங்களில் தமிழ் நவீனங்கள் முகங்காட்டிக்கொண்டிருக்க, மீண்டுமொரு யதார்த்தவாத நவீனமாக, பரிக்கல் சந்திரனின் 'கறுப்புச் சிகரம்'

இன்றைய விழுப்புரம் மாவட்டத்தில் (பழைய தென்னாற்காடு) உள்ள கிராமம் ஒன்றில் நிகழ்வ தான கதையில் மரண நிகழ்வுளில் பாட்டுப்பாடி ஆடும் ஒருவனது வாழ்க்கை திசைகளை, அவனது நீண்ட நெடிய பயணத்தை 263 பக்கங்களில் சொல்லியிருக் கிறார் ஆசிரியர். கதை மாந்தரின் பின்புலம் தலித் வாழ்வியல், வசிப்பிடப் பின்புலங்கள்தானெனினும், தலித் வாழ்க்கை பெருமளவில் பதிவாகாமல் ஒரு கலைஞனின் வாழ்க்கை நீரோட்டத்திலேயே வேறுபல கதை மாந்தர்களையும் கோர்த்து எளிய மொழி நடையில் சிறப்பாக சொல்லியிருக்கும் நூலிது.

செல்லானின் பாடல்களும், ஆட்டமும் பிரசித்தி பெற்றவை என்றால், நாடகக் கலைஞனாக வரும் வேலுவின் பாத்திரம் மிக முழுமையானதாகவும், கம்பீரத்துடனும் அமைந்துள்ளது.

நவீனத்தின் ஊடாக தந்திருக்கும் நாட்டுப்புறப் பாடல்களும், இயல்பான தென்னாற்காட்டு மொழி நடையும் வாசகனை உள்ளுக்கு இழுக்கும் சிறப்பம் சங்கள்.

மிகப்பெரிய நவீனத்தை இன்னுங்கூட செதுக்கி கட்டமைத்திருப்பின் இன்னமும் நவீனம் கூடுதல் கவனத்தைப் பெறக்கூடும்.

பல்வேறு இடங்களிலும் மிளிரும் கிராமத்து நகைச்சுவை உணர்வுகளின் பதிவு இயல்பாக கைவந்திருப்பது ஆசிரியரின் வெற்றி.

"ஒரு கிராமத்தின் நிலய படம் பிடிக்கணும்னா சாதாரணமில்ல. அவங்களோட ஒன்னா பழகி, ஒன்னா வாழ்ந்து, வழங்கி, பட்டுப்பட்டு, பாடம் படிச்சி, பக்குவமாகி மனசுல பலநூறு தடவ இன்னது இன்னது இப்படித்தான், இது இது இவ்வாறுதான்னு தெரிஞ்சிக் கவும் தெளிஞ்சிக்கவும் பல மாதம், பல வருடம் எடுத்துக்கினேன்" என்று பரிக்கல் சந்திரனின் வெளிப் படையான வார்த்தைகளைப்போலவே, கறுப்புச் சிகரத்தின் கதை மாந்தர்கள் பல மாதம் பல வருடம் வாசகர்களின் நினைவுகளில் வாழ்வார்கள்.

வாசகன் படித்து ஏறுவதற்கு சிரமமில்லா மொழி நடையில் வார்க்கப்பட்டிருக்கும் 'கறுப்புச்சிகரம்' ஆசிரியரின் முதல் முயற்சி. வாழ்த்தி வரவேற்போம். ●

## அறிவிப்பு

### பெண்களுக்கான வன்முறை எதிர்ப்பு மாநாடு

நாள் : 25.11.2004
இடம் : அரக்கோணம்

புதிய கோடாங்கி குழுவினர்
பங்கேற்கிறார்கள்.

தொடர்புக்கு
ஐ.டி. தேவ ஆசீர்வாதம்,
தொலைபேசி : 04177 - 231784

### 'புதிய கோடாங்கி' வாசகர் வட்டம் நிகழ்த்தும் இளைஞர் விழிப்புணர்வு முகாம்

இடம் : வடக்கலூர், பெரம்பலூர் மாவட்டம்
நாள் : 6.11.2004 - சனிக்கிழமை

பெரம்பலூர் மாவட்ட புதிய கோடாங்கி வாசகர்
வட்ட அமைப்பாளர்கள், தலித் எழுத்தாளர்கள்
முகாம் நிகழ்வுகளில் பங்கு கொள்கின்றனர்.

அனைவரும் வருக!

தொடர்புக்கு
திரு. ஆனந்தன்
தொலைபேசி : 04328 - 224661


படிப்பகம்

www.padippakam.com

தங்களின் அக்டோபர் 2004 புதிய கோடாங்கியில் சிறுகதை 'பிணம்' பிரசுரித்திருந்தீர்கள். அது மட்டுமின்றி கதை இடம் பெற்ற இதழை எனது முகவரிக்கும் அனுப்பிவைத்து பேருதவி புரிந்தீர்கள் பெரும்பாலும் மற்ற இதழ்கள் இதனைச் செய்வதில்லை. நன்றி. - பரிக்கல் எஸ். சந்திரன்

திருமாவளவன், ராமதாசு தமிழுக்காக இணைந்திருப்பதால் மேல்சாதி இந்துக்களுக்குத்தான் ஆதாயம். இதனால் சில ஆயிரம் தமிழ் அறிஞர், தமிழாசிரியர்களுக்கு வேலை கிடைக்கும். ஊர்த் தெருக்காரன் எவனும் தமிழ்ப்பெயர் மாற்றிக்கொள்ள வில்லை. தலித்துதான் தமிழ்ப்பெயர் மாற்றிக்கொண்டான். ராமதாசும், திருமாவளவனும் ஒன்றுபட்டால் நல்லது! ஆனால் ஒன்றுபடவில்லை. எண்ணெயும் தண்ணீரும் போல் கலக்காமல், ஒட்டாமல் தற்காலிக மாக சேர்ந்துள்ளனர்.

எனவே மொழிப்பிரச்சினையில் உழைப்பு ஒடுக்கப்பட்ட(தலித்)வனுக்கு, பலன் ஊர்த்தெருக்காரனுக்கு. தமிழ், தமிழமைப்பு, தமிழியக்கம் என்று சொல்லும் நூற்றுக்கணக்கான தமிழியக்கத் தொண்டர்கள், தலைவர்கள் தன் சாதிக்குள்ளே பெண் கொடுத்து பெண் எடுக்கின்றனர். தலித்திடம் பெண் கொடுத்து எடுக்கவில்லை என்றாலும் ஊர்த்தெரு சாதிகளுக்குள் சாதி மறுப்புத் திருமணமும் செய்வதில்லை. ஒடுக்கப்பட்ட (தலித்) சாதியினரை தங்கள் விடுதலைப் பாதையில் இருந்து திசை திருப்ப தமிழ், தமிழ்மொழிப் பாதுகாப்பு என்று கூச்சல் போடும் ஊர்த்தெரு மேல்சாதி, சாதி இந்து சூழ்ச்சியை நாம் புரிந்து கொள்ளல் வேண்டும். ஊர்த்தெரு சாதிகளில் முன்னேறிய சாதியினர் (சைவர்கள்) பிற்பட்ட சாதியின் விடுதலையைத் திசை திருப்பவும் தமிழை பயன்படுத்துகின்றனர். இது பார்ப்பனீயத் தன்மை உள்ள தமிழ் மேல்சாதியினரின் சூழ்ச்சியே!

ஒடுக்கப்பட்டவர்(தலித்)கள் கோயிலில் நுழைவதை பிற்பட்ட, முன்னேறிய சாதித்தமிழன்தானே தடுக்கிறான். பொதுநீர்நிலைத் தீண்டாமையை ஒழிக்க, தேநீர்க்கடைகளில் இரட்டை குவளையை ஒழிக்க, இரட்டைச் சுடுகாட்டை ஒழிக்க, நியாய விலைக்கடை ஊழலை ஒழிக்க, சேரி, ஊர்த் தெரு என்று இரண்டு வாழிடங்களை ஒழிக்க தமிழுக்காக கைகோத்த ராமதாசு தன்னை ஈடுபடுத்துவாரா? ஈடுபடுத்தினால் நம்பலாம். எப்படி சோனியா அன்னியரோ, அதுபோல் ஒடுக்கப் பட்ட ஆதி தொல்தமிழனுக்கு ஊர்த்தெருத் தமிழன் அன்னியன்தான்! ஊர்த்தெருத் தமிழன் பொது இட மரங்களை, பொதுக்குள ஏலத்தை, பொதுவான ஆற்று மணலை தொல்தமிழன் ஏலம் எடுக்க அனுமதிப்பதில்லை. ஆற்றுமணல் திருட்டைத் தட்டிக்கேட்ட கோடீஸ்வரன் (விடுதலைச் சிறுத்தை செங்கை மாவட்ட செயலாளர்) இரும்புத் தடியால் அடித்து கொலை செய்யப்பட்டார். இதைக் கண்டிக்காத ராமதாசு தமிழுக்காக ஒன்று சேர்ந்தது என்பது பம்மாத்து. முதலமைச்சர் பதவி பிடிக்க செய்த நரித்தனம்.

# முகத்தில் முகம்

சிறுபான்மையினரான முன்னேறிய மேல்சாதி தமிழர் பாட்டாளிகளையும், ஒடுக்கப்பட்ட ஆதி தொல் தமிழர்களின் மேல் சவாரி செய்யவும், பதவி, அதிகாரத்தைக் கைப்பற்றவும் மொழி உணர்வைத் தூண்டி விடுகின்றனர். இந்தச் சூழ்நிலைக்கு ஆதி தமிழர் பலியாகக் கூடாது. முதலில் ஒடுக்கப்பட்ட ஆதி தமிழன் விடுதலைக்கு வழி வகுக்கட்டும். பின் மொழி விடுதலைக்கு ஒத்துழைப்போம்.

- கக்கன்நேசன்.

திருவள்ளூர் மாவட்ட பௌத்த சங்கத்தின் சார்பாக வேலூரைச் சார்ந்த திரு. லோகநாதன் அவர்களின் இல்லத் திருமண அழைப்பிதழை பெற்றுக் கொண்ட நான் 22.8.2004 அன்று நடைபெற உள்ள திருமணத்தில் பங்கேற்க வேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்தியதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. அவற்றில் ஒன்று அறிவுப்பூர்வமாக நடைபெறும் பௌத்த திருமண நிகழ்வு. மற்றொன்று செய்தி ஊடகங்களின் வழியாக புதிய கோடாங்கியின் சீரிய சிந்தனைக்குரிய செயற்பாடுகள் பற்றி, குறிப்பாக ஆணாதிக்க சமுதாயத்தில் பெண்ணின் ஒடுக்குமுறைக்கு எதிரான, பல ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக நிறுவனத்தன்மை பெற்றுள்ள இந்து சமூக அமைப்பில் கீழிருந்து மேலாக அடுக்கிவைக்கப்பட்டுள்ள படிநிலை சாதிய சமூக அமைப்பு முறைக்கு எதிரான, சாதி வன்கொடுமைக்கு எதிரான, உலகமயமாக்கலுக்கு எதிரான, பாலியல் பலாத்காரத்திற்கு எதிரான, வர்க்க சுரண்டல் முறைக்கு எதிரான கருத்தியல்களை இலக்கிய வடிவத்தில் படைப்புகளாக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் அடிமை உணர்வுகளை எரிமலையாக வெடிக்கச் செய்யும் எழுத்துக்களுக்குச் சொந்தக்காரரான சிவகாமி அவர்களின் உரையைக் கேட்பது.

புரட்சியாளர் அம்பேத்கர் அவர்கள், பகுத்தறிவுப் பகலவன் பண்டிதர் அயோத்திதாசர், தாத்தா ரெட்டமலை சீனிவாசன் ஆகியோர்களின் அறிவால் தியாகத்தால் விளைந்த உரிமைகளின் வழியாக உயர்கல்வி பெற்று அதன்மூலம் உயர்பதவி பெற்று சாதி இந்துக்களின் பார்ப்பனீய சிந்தனைக்கு கீழ்ப்பணிந்து சுகபோக வாழ்க்கையில் வாழ்ந்துகொண்டு இருக்கும் தலித் இன அதிகாரிகள், தலித் விடுதலைக்கான கருத்தியல்களை முன்னெடுத்துச் செல்லாமல் சாதி இந்து, சமூக அமைப்பில் ஒளிந்துகொண்டு வாழும் காலத்தில், மண்ணின் மைந்தர்களின் மறைக்கப்பட்ட வரலாற்றை மக்களுக்கு எடுத்துச் சொல்லாமலும், சமூக மாற்றத்திற்காக முயற்சி எடுக்காமலும், ஆளும் ஆதிக்கவர்க்க ஆட்சியாளர்களின் அடக்குமுறைக்கு அடிபடிந்து தலித்தியலை வெளிப்படையாக முன்னெடுத்துச் செல்ல முன்வராதவர்கள் முதுகெலும்பு



படிப்பகம்

www.padippakam.com

இல்லாதவர்கள் என்று வடமாநில எழுத்தாளர் எழுதியதை அங்கீகரித்து அவர்கள் முதுகெலும்பு இல்லாதவர்கள் மட்டுமில்லை, சுயநலவாதிகளும் கூட என்று புதிய கோடாங்கி அடையாளப்படுத்தியது பாராட்டுதலுக்குரியது. அதோடுமட்டுமில்லை இம்மக்கள் அவர்கள் தலித் இன மக்களின் துரோகிகள் என்று கூறுவதை இந்த நேரத்தில் தங்களுக்கு நினைவுபயடுத்த விரும்புகிறேன்.

ஆரியர்களின் இந்துசனாதான மனுதர்மத்தை ஏற்க மறுத்த, வீரியமுள்ள பெளத்த நெறியுடன் வாழ்ந்த, பார்ப்பன-பணியா சூழ்ச்சியால் தீண்டத்தகாதவர்கள் என்று சேரிக்குள் சிறை வைக்கப்பட்ட சாதியற்ற பழந்தமிழர்களே, இன்றைய தலித் மக்கள். அம்மக்கள் அரசியல் - சமூக பொருளாதாரத்தில் வாய்ப்புகள் மறுக்கப்பட்டும், ஒடுக்கப்பட்டும், சாதிய வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டும் வருகின்ற இவ்வேளையில், புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களின் பிறந்தநாள் நூற்றாண்டில் ஏற்பட்ட இனஎழுச்சி, தலித் மக்கள் புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களின் கருத்தியலை உள்வாங்கிக்கொண்டு சாதியத்திற்கு எதிராகவும், சாதிய வன்கொடுமைக்கு எதிராகவும், சமூக நீதிக்காகவும், கலகக்குரல் எழுப்பப்பட்டுவரும் இவ்வேளையில், தலித் மக்களை தடம்புரளப்படுத்தி, தமிழ் தேசிய விடுதலையில் சாதியை ஒழிக்க முயற்சிப்பது தலித்திய விடுதலையை முன்னெடுத்துச் செல்வதில் வீழ்ச்சியையும், சைவத்தை மீட்பதுமாகத்தான் அமையும் என்றும் மேலும் அச்செயல் திரிபுவாதமாக அமையும் என்றும் தலித் மக்களை எச்சரிக்கை உணர்வுடன் இருக்குமாறு எச்சரிக்கை செய்தது வரவேற்கத்தக்கதாகும்.

புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களின் சீரிய கருத்துக்களை கிராமந்தோறும் எடுத்துச் சென்றாலே கிராமப்புறத்தில் வாழ்ந்துவரும் தலித் மக்கள் தங்களிடம் உள்ள அடிமைக் குணத்தை தூக்கி எறிந்துவிட்டு சுயமரியாதை உடைய மனிதர்களாக மாறிவிடுவார்கள் என்று புதிய கோடாங்கி கூறி வருவது மிகவும் நடை முறைக்கு ஏற்றதாகும். இத்தருணத்தில் புரட்சியாளர் அம்பேத்கர் பெயரில் அமைப்புகள் தொடங்கி "அம்பேத்கர் என்ற பெயரும், அவரது உருவமும்" தலித்திய விடுதலைக்கான குறியீடு என்பதை மறந்து அக்குறியீட்டை வியாபாரம் செய்துவரும் தலித்திய தலைவர்கள் மத்தியில் சுயநலம் பாராமல் தியாக உள்ளத்தோடு எதிர்கால எதிர்பார்ப்பு ஏதுமின்றி அரசுப் பணியையும், சமூகப் பணியையும், இலக்கியப் பணியையும் அயராமல், அஞ்சாமல் செய்துவரும் புதிய கோடாங்கி குழு, அவர்களின் குரு புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களின் கருத்தியல்களையும், அறிவுக் கரசர் அயோத்திதாசர் மற்றும் மண்ணுரிமை பேரொளி ராவ்பகதூர் ரெட்டைமலை சீனிவாசன் ஆகியோரின் கருத்துக்களையும் தலித் மக்களிடம் எடுத்துச்செல்ல அரசியல் சார்பற்ற சமூக மேம்பாட்டிற்கான அமைப்பு ஒன்றை ஏற்படுத்தி, தலைமைப் பொறுப்பேற்று, தலித் மக்களின் அடிமைக் குணத்தை அகற்றி, அறிவுப் புரட்சி செய்து, விடுதலை உணர்வை மேலோங்கச் செய்யும் முழுமையான தகுதி புதிய கோடாங்கிக்கு உள்ளது என்று மிக அழுத்தமாக கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

'அரசியல் அதிகாரத்தில் பங்கேற்பதே தலித் மக்களின் பிரச்சினைக்கு தீர்வாகும்' என்ற அம்பேத்கர் அவர்களின் கொள்கையை செயலாக்கம் செய்ய வேண்டுமெனில் தலித் மக்களை புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களின் கருத்தியல் மூலம் வென்றெடுத்த பிறகு அரசியல் சார்பற்ற அவ்வமைப்பை அரசியல் சார்புடைய அமைப்பாக மாற்றி, தலித் மக்கள் அரசியல் சமூக பொருளாதார தளத்தில் உயர்வடைய நாமெல்லோரும் முன்முயற்சி எடுக்க வேண்டும் என்ற ஆலோசனையை முன்வைத்து, வரலாறு எழுதும் புதிய கோடாங்கியே இம்மக்களின் வரலாறாக மாறும் காலம் வெகுதூரத்திலில்லை என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

சுந்தரகீதன், திருவள்ளூர்.

பல் மருத்துவர் டாக்டர் என். ஜெயராமன் ஜெயேந்திரர் அவர்களுக்கு எழுதிய கடிதம் மிக முக்கிய ஆவணம். 'பகவானின் அனுக்கிரஹத்தால் அடுத்த பிறவியில் இந்தியாவில் இந்து மதத்தில் ஒரு தலித்தாகப் பிறந்து நான் கூறிய செய்திகளின் உண்மை நிலையை உணருங்கள்' என கூறியிருப்பது ஒரு தலித்தின் அவஸ்தையை பிரதிபலித்தது. க. கலாமோகனின் சிறுகதை அன்னியமாய் இருந்தாலும் முடிவு மனத்தை நெகிழ்த்தியது. 'உலகமயமாக்கல் - ஆயுத எழுத்தாய் ஹைகூ கவிதைகள்' என்னும் கட்டுரை கவிஞர் அன்பாதவனின் ஆவேசத்தையும் ஹைக்கூ குறித்த அவரின் அறிவையும் புலப்படுத்தின. கவிஞர் வீ. ஏழுமலையின் 'கோயில் மாடுகள்' பாவப்பட்ட பெண்களின் குறியீடாயிருந்தது. இது பெண்ணுக்கு இழைக்கப்படும் அநீதி மட்டுமல்ல, தலித்துகளுக்கு தொடரும் கொடுமையும் ஆகும். சுப்ரபாரதிமணியனின் 'மாற்றங்கள்' வித்தியாசமாயிருந்தது. அவரிடம் ஏற்பட்டுள்ள மாற்றம் தெரிந்தது. விழி.பா. இதயவேந்தனின் 'அறம் சொல்லும் முகம்' அநேக முகங்களை அறிமுகப்படுத்தியது. ப்ரதிபா ஜெயச்சந்திரன் ஒரு கவிஞராக 'சும்மாடு' தொகுப்பை அருமையாக விமர் சித்துள்ளார். புதிய மாதவியின் 'கழிவறையின் விலை' நியாயமானதே. பு. ஜார்ஜ் பாரதி மீது வைத்துள்ள விமர்சனம் விவாதத்திற்கானது, எதிர்வினையை உண்டாக்கும்.

- பொன். குமார், சேலம் - 6

தங்களின் தலித்திய பதிவுகள் சிறப்புற இருப்பதை உணர்கிறேன். தலித் சிந்தனையாளர்களுக்கும், பாமர தலித்துகளுக்கும் உள்ள இடைவெளியை நிரப்ப வேண்டிய கட்டாயம் நமக்கிருக்கிறது. அத்தகைய அவசியமான, அவசரமான பணியை புதிய கோடாங்கி செய்துவருவது மகிழ்ச்சியானது; சமூகத்திற்கு பயனளிக்கக்கூடியது.

- ஸ்டாலின், பெ. பொன்னேரி

பல் மருத்துவர் என் ஜெயராமன் அவர்களின் கடிதம் கிழி கிழி என்று கிழித்துக் கந்தலாக்கி விட்டது.


படிப்பகம்

www.padippakam.com

இக்கட்டு ரையினை பல்லாயிரக்கணக்கில் அச்சேற்றி நாடு முழுவதும் இலவசமாக பரப்பலாம்.

- மருத்துவர் காசிபிச்சை, திருமானூர்.

கடந்த மூன்று ஆண்டுகளில் புதிய கோடாங்கியில் வெளிவந்துள்ள சிறுகதைகளைத் தொகுத்து வெளியிடலாம் என்று திட்டமிட்டுள்ளேன். இதற்கான அனுமதி மற்றும் ஆலோசனைகள் குறித்துக் கடிதம் எழுதுங்கள். நீங்கள் இவற்றைத் தொகுத்து வெளியிட்டாலும் பரவாயில்லை.

- டாக்டர் எஸ். சீனுவாசன், டெல்லி.

அக்டோபர் மாத இதழ் படித்து மகிழ்ந்தேன். தமிழகத்தையே உலுக்கிக்கொண்டு இருக்கும் ஜெயலட்சுமியின் திடுக்கிடும் தகவலுக்கு ஏற்றார்போல் இம்மாதம் கலாமோகனின் "வா" என்ற சிறுகதை மிகச் சிறப்பாக அமைந்திருப்பது சூப்பர். எங்கள் ஊர் சுடுகாட்டுப் பிரச்சினைக்கு ஒரு நல்ல தகவல் அறிக்கையாக இருக்கிறது பரிக்கல் சந்திரன் அவர்கள் எழுதிய "பிணம்" சிறுகதை. மிக அருமை. இடம் பெற்ற கவிதைகள் அனைத்தும் நன்று. அதில் விழி.பா. இதயவேந்தன், வலம்புரிஜான் இவர்களின் கவிதை குறிப்பிடத்தக்கவை. "புதிய கோடாங்கி"க்குச் சிறந்த இதழுக்கான 'விருது' கிடைத்திருப்பது மிக்க மகிழ்ச்சியை அளிக்கின்றது. மெமேலும் பாராட்டுகளையும், பரிசுகளையும் பெற்றுத் திகழ நிறைந்த மனதுடன் பாராட்டுகிறேன்.

கா.வ. கன்னியப்பன், அம்மன்குளத்துமேடு.

பேரன்புக்கும், பெருமதிப்புக்கும் என்றும் உரிய தங்களுக்கு வணக்கம். நலமே சேர்க! தாங்கள் கூறுகின்ற பகுதிகளில் இலவசமாக பன்முனை சிறப்பு மருத்துவ சிகிச்சை முகாம்களையும், விழிப்புணர்வூட்டும் பலவித பயிலரங்குகளையும், கருத்தரங்குகளையும் சிறப்புற நடத்தி நன்மை பயப்பதற்கு யாம் ஆர்வமாயும், தயாராயும் உள்ளோம். எங்களது இலவச சேவைகளை தாங்கள் பயன்படுத்தி நலிந்த மக்களுக்கு நன்மை புரியுமாறு யாம் தங்களை கனிவுடன் வேண்டுகிறோம். நன்றி.

- V.L. நாதன், சென்னை.

(ஆ.கு - விரைவில் முகாம்கள் நடத்த ஆவன செய்யப்படும்.)

## மக்கள் பகுதி

புதிய கோடாங்கி ஆசிரியருக்கு,

● அயன்பேரையூர் கிராமம், வேப்பந்தட்டை வட்டம், பெரம்பலூர் மாவட்டத்திலுள்ள அரிசன பொதுமக்கள் திருவள்ளுவர் படிப்பகம் ஒன்றை கட்ட அனுமதி கோரியதற்கு அவ்வூராட்சி மன்றத் தலைவர் தன்னுடைய வசதிக்காக அவ்விடத்தில் கட்டக்கூடாது என்று மறுப்பு தெரிவித்ததையும் மீறி மாவட்ட ஆட்சியரின் அனுமதி பெற்று கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. அதற்காக நீதிமன்றத்தில் அரிசன காலனியைச் சேர்ந்த மூவர் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது. நல்ல தீர்ப்பை வழங்கித் தருமாறு கோருகிறோம்.

*இங்ஙனம்*

*அரிசன பொதுமக்கள்*

***ஆ.கு. அரிசன என்ற வார்த்தையை தயவுசெய்து பயன்படுத்த வேண்டாம். தகுந்த ஆவணங்களை நகலெடுத்து அனுப்பினால் தகுந்தவாறு ஆலோசனை வழங்கப் பெறும்.***

● என்னுடைய வயலிலுள்ள கிணற்றை தூர்ந்தெடுக்க கடன் வசதி பெற்றுத்தருமாறு கோருகிறேன்.

*பூசமுத்து, வி. களத்தூர்*

***ஆ.கு. உங்கள் விண்ணப்பம், பெரம்பலூர் மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பப்பட்டுள்ளது.***

● நான் ஏற்கனவே பழங்குடியினர் ஆய்வு மையம், உதகையில் புலனாய்வாளராக பணியாற்றினேன். ஆனால் தற்பொழுது என்னை வேலையை விட்டு நீக்கி ஓராண்டு காலமாகியுள்ளது. பழங்குடி நலத்துறை மூலம் எனக்கு ஒரு வேலைவாங்கித்தருமாறு வேண்டுகிறேன்.

*அதிசயம், மேலகோபாலபுரம், விருதுநகர்*

***ஆ.கு. விண்ணப்பம் பழங்குடிநல இயக்குநருக்கு அனுப்பி பதில் கோரப்பட்டுள்ளது.***

● எனக்கு விவசாயம் செய்ய மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் நிலம் வாங்கித்தருமாறு கோருகிறேன்.

*ப. இராசமாணிக்கம், மேட்டுச்சேரி, வி. களத்தூர்*

***ஆ.கு. மாவட்ட ஆட்சியருக்கு விண்ணம் அனுப்பப் பட்டுள்ளது.***

● வண்ணாரம்பூண்டி, வி. களத்தூர், வேப்பந்தட்டை பெரம்பலூர் மாவட்ட தலித் மக்களாகிய நாங்கள் உடல்களை மயானத்திற்கு எடுத்துச் செல்ல பாதை தற்போது எதுவும் இல்லாததால் பாதை ஒன்றை ஏற்படுத்தித் தருமாறு கேட்கின்றோம்.

*பொதுமக்கள், வண்ணாரம்பூண்டி.*

ஆ.கு. உரிய நடவடிக்கைக்கு மாவட்டஆட்சியருக்கு விண்ணப்பம் அனுப்பப்பட்டுள்ளது.

பின்குறிப்பு
மக்கள் பகுதிக்கு உங்கள் வேண்டுகோள்கள், பிரச்சினைகளை எழுதலாம். ●



படிப்பகம்

www.padippakam.com




Postal Regn. No. TN/PMG(CCR)/842/03-05
Registrar of Newspapers for India Regn. No. TNTAM /2001/4926

படிப்பகம்

www.padippakam.com

## எச்.ஐ.வி பரிசோதனை

ஏன்?

எதற்கு?

எங்கு?



ஆணுறையே எய்ட்ஸ்க்கு
முடிவுரை !!

ஆரோக்கியமான வாழ்விற்கு
முன்னுரை !!

பாதுகாப்பற்ற முறையில் பலருடன் உடலுறவுப் பழக்கத்தில் ஈடுபட்டு உங்களுக்கு எச்.ஐ.வி. தொற்று இருப்பதாக சந்தேகம் இருக்குமானால் உங்களின் நிலையைத் தெரிந்து கொண்டு சந்தேகத்தைப் போக்கிக் கொள்வது நல்லது.

எச்.ஐ.வி. தொற்று ஏற்பட்டிருந்தால் உங்களின் நலவாழ்விற்கும், மன அமைதிக்கும் அதனை மற்றவர்களுக்கு பரவாமல் இருக்கவும், பாதுகாப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், உங்கள் மூலம் வாழ்க்கைத் துணைக்கு தொற்று பரவாமலும் அவர்கள் மூலம் குழந்தைக்குப் பரவாமல் இருக்கவும், தொற்று இல்லாத பட்சத்தில் மேலும் தொற்று ஏற்படாமல் இருக்க ஆலோசனை பெறுங்கள்.

ஆலோசனை மற்றும் பரிசோதனை மையங்கள் அனைத்து அரசு தலைமை மருத்துவமனைகளிலும், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் செயல்பட்டு வருகிறது. ரூ. 10/– மட்டுமே செலுத்தி பரிசோதனையும் இலவச ஆலோசனையும் பெறுங்கள்.

**ஒவ்வொரு உடலுறவு இடைவெளியின் போதும் ஆணுறையை பயன்படுத்துங்கள்**

**தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம்**
**சென்னை 600 008.**

Postal Regn. No. TN/PMG(CCR)/842/03-05
Registrar of Newspapers for India Regn. No. TNTAM /2001/4926

படிப்பகம்